In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஜகத்குரு பதிலளிக்கிறார்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஜகத்குரு பதிலளிக்கிறார்

ஸ்ரீ வித்யாதீர்த்த ஃபவுண்டேஷன்
சென்னை

புதிய பதிப்பு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

First Edition : 1981
Second Edition : 1983
Third Edition : 1998
Fourth Edition : 2003

Kind courtesy : **Sri Sharada Peetam**
Sri Sharada Trust

Published by :

Sri Vidyatheertha Foundation
G-B, Sai Karuna Apartments
49, Five Furlong Road,
Guindy
Chennai - 600 032.
✆ : 22 44 74 51

Price : Rs. 40/-

Computer Design & Printing : **Sudarsan Graphics**
27, Neelakanta Mehta Street,
T. Nagar,
Chennai - 600 017.
✆ : 2434 40 38

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொருளடக்கம்

			பக்கம்
	முன்னுரை	--	(i)
1.	குரு	--	1
2.	இறைவன்	--	8
3.	உருவமுள்ள இறைவனின் பூஜை	--	13
4.	திருமணம்	--	14
5.	கங்கை	--	16
6.	லௌகீகச் சட்டங்கள்	--	17
7.	மதமாற்றம்	--	18
8.	காரியம் செய்யச் சரியான முறை	--	19
9.	மறுபிறவி	--	21
10.	சாஸ்திர தர்மங்கள்	--	23
11.	சாஸ்திரக் கட்டளைகள்	--	25
12.	உபநயனம்	--	27
13.	விதியும் முயற்சியும்	--	30
14.	தர்மம்	--	34
15.	அஹிம்சை	--	41
16.	ஆசை	--	44
17.	கோபத்தை வெல்வது	--	46
18.	இந்து மதம்	--	47
19.	மானஸீக பூஜை	--	52
20.	கர்மாவின் பங்கு	--	54
21.	பக்தி	--	60
22.	சாஸ்திரங்களைப் படித்தல்	--	69
23.	வேதங்கள்	--	73
24.	ஜபம்	--	81
25.	பிரஹ்மசர்யம்	--	85

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

26.	ஸந்யாஸி	--	90
27.	மனதை அடக்குதல்	--	93
28.	தியானம்	--	98
29.	நிர்விகல்ப ஸமாதி	--	107
30.	நாதானுஸந்தானம்	--	112
31.	லம்பிகா யோகம்	--	115
32.	குண்டலினி	--	119
33.	அமனஸ்க யோகம்	--	122
34.	மாயை	--	125
35.	விழிப்பு நிலையும் ஸ்வப்ன நிலையும்	--	132
36.	சாஸ்திரமும் விஞ்ஞானமும்	--	137
37.	பந்தத்தின் ஸ்வரூபம்	--	141
38.	மோக்ஷத்திற்குக் காரணம்	--	143
39.	அத்வைத நூல்களில் பலவிதமான கருத்துக்கள்	--	145
40.	ஞானி	--	147
41.	ஸித்திகள்	--	154

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முதற்பதிப்பிற்கான முன்னுரையின் முக்கிய பகுதி

தத்வித்திப்ரணிபாதேன பரிப்ரச்னேன ஸேவயா |
உபதேஷ்யந்தி தே ஞானம் ஞானின: தத்வ தர்சின: ||

(அதை நமஸ்காரம், கேள்விகள் மேலும் சேவை மூலமாகத் தெரிந்துகொள். தத்துவத்தைக் கண்டவர்களான ஞானிகள் உனக்குத் தத்துவத்தைப் பற்றிச் சொல்லிக் கொடுப்பார்கள்) என்று ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா கூறியிருக்கிறார். நமது ஆசார்யாளான சிருங்கேரி ஜகத்குரு சங்கராச்சார்ய மஹாஸ்வாமிகளைக் காட்டிலும் தலைசிறந்த ஜீவன்முக்தரை வையகத்தில் காணுதல் இயலாது. நம்முடைய சந்தேகங்களைத் தீர்க்க அத்தகைய மஹானைத் தவிர வேறு யார் தான் தகுதி வாய்ந்தவர்கள்! சிலர் இங்கே ஒரு கேள்வி எழுப்பலாம். 'நமது சந்தேகங்களைப் போக்க சாஸ்திரப் புத்தகங்கள் பல இருக்கையில், அவரிடம் நமது சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்வதில் ஏதாவது சிறப்பு இருக்கிறதா?' என்ற கேள்வியே அது. இதற்குப் பதிலாக முண்டகோபநிஷத்தில்,

தத்விக்ஞானார்த்தம் ஸ குரு மேவாபி கச்சேத்

(அதைத் தெரிந்து கொள்வதற்காகக் குருவினிடம்தான் செல்ல வேண்டும்) என்று கூறப்பட்டிருக்கிறது. ஆதிசங்கரபகவத்பாதாளும் இதற்குப் பாஷ்யம் எழுதுகையில்,

சாஸ்திரக்ஞோऽபி ஸ்வாதந்த்ர்யேண ப்ரஹ்மக்ஞானான்-
வேஷணம் ந குர்யாத்

(சாஸ்திரங்களை அறிந்தவனும் தானாகவே ப்ரஹ்மத்தைத் தெரிந்து கொள்வதற்கு முயற்சி செய்யக்கூடாது) எனக் கூறியுள்ளார். ஆகவே சாஸ்திரப் புத்தகங்கள் பல்வேறு இருப்பினும் ஆசார்யாளின் உபதேசம் மிகவும் அவசியம் என்பதை நாம் உணரலாம். நம் குருநாதர் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பொழிந்தாற்போல், புத்தகத்தில் கூறப்பட்டதுடன் தமது சொந்த அனுபவத்தையும் எடுத்துத் தரும் நளினமே தனி. தியானம் போன்ற விஷயங்களில் தம் அனுபவத்தையே ஆதாரமாக வைத்துக் கொண்டு அவர் பதிலளிக்கிறார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சில சமயங்களில், நாம் வினாக்களை விடுத்தாலும் அவர் விடையளிக்காமலேயே நமக்கு பதிலை உணர்த்தி விடுகிறார். வேறு சில சமயங்களில் நாம் வினாக்களை விடுக்கும் முன்னரே அவர் விடையளித்து விடுகிறார். மனதிலெழும் ஆசையை நாம் சொல்லாமலேயே அவர் பூர்த்தி செய்வதுண்டு. இத்தருணத்தில் எனது சொந்த வாழ்க்கையில் நடந்த ஒரு மறக்க முடியாத நிகழ்ச்சியை உங்களுடன் பகிர்ந்துகொள்ள விழைகிறேன். பல வருடங்களுக்கு முன் சிருங்கேரியிலிருந்து அருளாட்சி புரியும் நம் ஆசார்யாளை தியானத்திலேயே உயர்நிலையான நிர்விகல்ப ஸமாதியில் காண என் உள்ளம் ஆவலாயிருந்தது. ஆயினும், ஆசார்யப் பெருந்தகையிடம் என் ஆசையை நான் கூறவில்லை. ஆனால் ஸர்வக்ஞரிடத்திலிருந்து எதையாவது மறைக்க முடியுமா? என்றைய தினம் எனக்கு இவ்வாறு ஆசையெழுந்ததோ, அன்று என்னை ஆசார்யாள் தன்னுடன் காலபைரவர் ஆலயத்திற்கு கூட்டிச் சென்றார். விண்ணைமுட்டும் மலைகளினிடையே, வெள்ளியாறாம் துங்கையின் மருங்கில் அமைதி நிலவும் அழகிய காடுதான் நரஸிம்ம வனம். அங்குள்ள ஒரு மலை மீது அழகிய சிறு கோவிலொன்றில்தான் ஸ்ரீ காலபைரவர் குடிகொண்டுள்ளார். மலை ஏறிய பின் ஆசார்யாள் ஆலயத்தின் சிறு கதவுகளைத் திறந்து உள்ளே சென்றார். காலபைரவரின் விக்ரஹத்தை நமஸ்கரித்து அங்கேயே அமர்ந்தார். எங்கும் ஒரே அமைதி. காற்றின் சலசலப்புக்கூட ஆசார்யாளின் புகழ் பாடுவது போலிருந்தது. அவர் என்னை நோக்கி வீணை இசையையும் தோற்கடிக்கும் இனிய சொற்களால் தனக்கு மிகவும் அருகில் அமரும்படி கட்டளையிட்டு, ''நாம் சற்று நேரம் தியானத்தில் அமருவோம்'' என்று மொழிந்தார். அவரது சொற்கள் என் காதுகளில் தேனருவியாய்ப் பாய்ந்தன. அவர் தமது கண்களைத் தியானம் செய்வதற்காக மூடிக் கொண்டுவிட்டார். ஆச்சரியத்துடன் அவரைக் கவனித்த வண்ணமிருந்தேன் நான். அவரது சுவாசம் சிறிது சிறிதாகக் குறைந்து கொண்டே வந்தது. மிகவும் அருகில் அமர்ந்திருந்தபோதிலும் சற்று நேரத்திலெல்லாம் அவர் சுவாசம் விடுகிறார் என்பதையே என்னால் உணர முடியவில்லை. ஆனந்தப் பரவசத்தோடு அவர் முகத் தாமரையை உற்று நோக்கினேன். உலகை அருளும் அவரது கண்கள் அப்போது பாதி மூடியிருந்தவாறிருந்தன. அவர்தம் உடல் நிமிர்ந்து, அசைவே இல்லாமலிருந்தது. முகம் ஒளி வீசுவதைப் போலிருந்தது. அவர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அமைதியை எங்கும் பரப்பிக் கொண்டிருந்தார் என்பது முற்றிலும் உண்மை. தன்னைச் சுற்றியிருப்பவன ஒன்றையுமே அறியாமல் அவர் ஆழ்ந்து தியானம் செய்கிறார் என்பதையும் கருணைக் கடலான அவர் எனது ஆசையைப் பூர்த்தி செய்து விட்டார் என்பதையும் அப்போது நான் உணர்ந்தேன். திடீரென்று ஏதோ ஒரு சக்தி என்னையும் ஆழ்ந்த தியானத்திற்கு இழுத்துச் சென்றதை அனுபவித்தேன். பிறகு என்ன நடந்ததென்பதை என்னால் வார்த்தைகளால் வர்ணிக்க இயலாது. இன்பக்கடலில் மூழ்கினேன் நான் என்பதைத்தான் என்னால் கூற முடியும். அவ்வனுபவம் ஒரு நொடி நீடித்ததைப் போலிருந்தது. சூழ்நிலையைப் பற்றிய அறிவு வந்து நான் விழித்தால் ஏற்கெனவே அரை மணி நேரத்திற்கு மேலாகிவிட்டது என்று தெரிந்தது. இதன்பின் குருநாதரைக் கவனத்துடன் நோக்கினேன். அவர் சுவாசம் சிறிது சிறிதாக அதிகமாகிக் கொண்டு வருவதைக் கவனித்தேன். பிறகு கண்களைத் திறந்த அவர் இறைவனின் விக்ரஹத்தை மௌனமாகச் சில நிமிடங்கள் நோக்கியவாறு இருந்து விட்டுப் பின் ‘கால பைரவா’ என்று உரத்துக் கூறினார். அவரது குரல் சூழ்நிலையின் அமைதியைக் கிழித்துக்கொண்டு அப்பிரதேசமெங்கும் எதிரொலித்தது. பின் நமஸ்கரித்து விட்டு வெளியே வந்து ‘நிர்விகல்ப ஸமாதி மிகவும் நன்றாக இருக்கிறது’ என்று என்னிடம் கூறி மேலே நடந்தார் ஆசார்யாள். அதற்குப் பிறகு அவரருளால் பல தடவைகள் அவரை அந்த உயர்ந்த நிலையில் காணும் பேறு எனக்குக் கிட்டியிருக்கிறது.

ஆசார்யாள் தமது சிறு வயதிலிருந்தே இக்கோவிலுக்கு வந்து தியானப் பயிற்சி செய்வது வழக்கம். சிறு வயதில் தாம் தியானத்தில் பல்வேறு முறைகளில் பயிற்சிப்பதாக இவர் பரமாச்சார்யாளிடம் கூறியபோது பரமாச்சார்யாள் மிக்க மகிழ்ச்சியுற்றதாக ஆசார்யாளே என்னிடம் கூறியிருக்கிறார். சில சமயங்களில் ஆசார்யாள், சிஷ்யர்கள் தம்மிடம் தியான விஷயத்தில் சந்தேகம் கேட்கும்போது உடனேயே பதில் கூறிவிடுவார். சில சமயம், அவ்வாறு தாம் செய்ததாகவும் அதில் மேற்கொண்டு முன்னேற வழி என்ன என்று தானே முன்பு சோதித்துப் பார்த்ததாகவும் கூறி வழி காட்டுவார். வேறு சில நேரங்களில், சிஷ்யர்கள் விவரிப்பதுபோல் தாம் தியானம் செய்து பார்த்து மேற்கொண்டு எப்படி அம்முறையில் முன்னேறுவது என்பதையும் அத்தருணத்திலேயே விளக்கிவிடும் ஆற்றலுடையவர் அவர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிலபோது ஆசார்யாளிடம் செல்லும்போது அவர் எதற்காக ஒருவிதமான உபதேசத்தை அருளினார் என்பது சிலருக்குப் புரிந்துகொள்வது கஷ்டமாக இருக்கும். ஆனால் பிறகுதான் அவ்வாறு செய்வது பொருத்தம் என்று தெரியும். ஒருமுறை ஒரு மனிதன், ஆசார்யாளது திருக்கரங்களிலிருந்து தீர்த்தம் பெற்றுச் செல்வதற்காக வந்திருந்தான். அவனைக் கண்ட ஆசார்யாள் 'உன் வீட்டிற்கு விரைந்து செல்' என்றார். எதற்காகத் தன்னை தன் வீட்டிற்கு ஆசார்யாள் போகச் சொல்கிறார் என்று வந்த மனிதனுக்குச் சற்றும் புரியவில்லை. எனினும், குருநாதரின் கட்டளைப்படி அவன் வீடு சென்றான். பார்த்தால் அங்கு அவன் மனைவி, உதவிக்கு யாரும் இல்லாத நிலையில் பிரசவ வேதனையால் துடித்துக் கொண்டிருந்தாள். அம்மனிதனுக்கு அப்போதுதான் ஆசார்யாளின் அருளுபதேசத்தின் அர்த்தம் தெளிவாயிற்று. தான் இல்லம் வந்தடைந்தது நல்லதாயிற்று என்று அப்போது அவன் உணர்ந்தான்.

சிருங்கேரிக்குச் சென்று ஜகத்குருவை நேரில் தரிசித்தால்தான் அவர் நமது சந்தேகங்களைத் தீர்த்தருள்வார், உபதேசம் தந்தருள்வார் என்பதில்லை. அது சம்பந்தமாக எனக்கே நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சி இங்கு குறிப்பிடத்தக்கது. சுமார் எட்டு வருடங்களுக்கு முன்பு ஒரு நள்ளிரவு எனக்கு ஒரு கனவு ஏற்பட்டது. கனவில் ஆசார்யாள் எனக்கு பகவத்கீதையின் ஆறாவது அத்யாயத்திற்கு சங்கர பாஷ்யத்துடன் அர்த்தம் சொல்லிக் கொடுப்பதாகக் கண்டேன். சற்றளவு பாடம் முடிந்த பின் அன்று கனவு முடிந்து விட்டது. ஆச்சரியம் என்னவென்றால், மறுநாளிரவும் எனக்கு ஒரு கனவு. அதில் ஆசார்யாள், அந்த அத்யாயத்தின் பொருளை முன்பு விட்ட இடத்திலிருந்து தொடங்கினார். இவ்வாறு ஆறாவது அத்யாயம் முடியும் வரை ஒவ்வொரு நாளிரவும் கனவுகள் தொடர்ந்து வந்தன. காலையில் எழுந்த பின்னரும் இவை நன்கு ஞாபகத்தில் இருந்தன. அச்சமயத்தில் நான் பகவத்கீதைக்கு, சங்கரர் எழுதிய பாஷ்யத்தைப் படித்திருக்கவில்லை. சில வருடங்களுக்கு முன்பு ஆசார்யாளிடமே நேரில் சிருங்கேரியில் பகவத் கீதா பாஷ்யத்தைப் பாடம் கேட்க எனக்கு வாய்ப்புக் கிட்டியது. அப்போதுதான் நான், கனவில் ஆசார்யாள் நடத்தியது நேரில் நடந்ததுபோல் 'பகவத் கீதா பாஷ்ய பாடம்' என்பதை உணர்ந்தேன்.

ஆசார்யாள் தமது பக்தகோடிகள் விஷயத்தில் எண்ணற்ற அற்புதச் செயல்களைச் செய்திருக்கிறார். ஒருவர் தனது கனவில் ஆசார்யாள் ஏதோ ஒரு மந்திர உபதேசம் செய்வதாகக் கண்டார். காலையில் விழித்தவுடன் அவரால்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆசார்யாள் உபதேசித்த மந்திரம் என்ன என்று ஞாபகம் செய்து கொள்ள இயலவில்லை. ஆவலின் மிகுதியால் அவர், சிருங்கேரிக்கு இது விஷயமாக ஒரு கடிதம் எழுதிக் கேட்டார். ஆசார்யாளின் ஸந்நிதியில் இவ்விஷயம் தெரிவிக்கப்பட்டது. குருநாதர் 'க்லீம் க்ருஷ்ண க்லீம்' என்பதே அம்மந்திரம் என்றும் அது ஜபிக்கப்படும் முறை முதலியவற்றையும் அப்பக்தருக்கு எழுதி யனுப்பச் செய்தார். இதிலிருந்து, நமது குருநாதர் விழிப்பு நிலையில் மட்டு மின்றி கனவிலும்கூட வந்து பக்தர்களுக்கு அருள்கிறாரென்றும் நாம் தெரிந்து கொள்ளலாம்.

அடுத்ததாக, நம் ஆசார்யாள் தம் சிஷ்யர்களுக்கு ஏதாவது செய்யும்படி கூறினாரென்றால், அதைச் செய்யத் தேவையான சக்தியையும் அவரே அருள் கிறார். ஒருமுறை ஒரு பெண்மணி, ஆசார்யாளைத் தரிசனம் செய்துபோக வந்திருந்தாள். அவ்வளவு கூட்டத்திலும் ஆசார்யாள் அவளை அழைத்து 'நாளை உன் கணவனுடன் வா' என்று கூறினார். அப்பெண் திடுக்கிட்டு நின்றாள். ஏனென்றால், எங்கோ சென்றிருந்த அவளது கணவன் வெகுநாட்க ளாகத் திரும்பி வராமலிருந்தான். கணவன் வீடு திரும்ப வேண்டும் என்பதற் காக ஆசார்யாளின் ஆசி பெறத்தான் அவள் அன்று அங்கு வந்திருந்தாள். ஆசார்யாளது கட்டளையை நிறைவேற்ற வேண்டும் என்ற எண்ணம் கொண்ட அவள் அதற்கு என்ன செய்வது என்று குழம்பியவளாய்க் கவலையு டன் வீடு சென்றாள். ஆனால் ஆசார்யாளின் அருள், அம்மனிதனை அன்றே வீடு திரும்பச் செய்தது. ஆகவே, அடுத்த நாள் அப்பெண்மணி மகிழ்ச்சி யோடு தன் கணவனை அழைத்துக்கொண்டு ஆசார்யாளைத் தரிசனம் செய் யச் சென்றாள்.

ஆசார்யாளின் தலைசிறந்த குணம் அவர் காட்டும் அளவற்ற தயையே யாகும். அவரை நாடிவரும் பல்லாயிரக்கணக்கான பக்தர்களுக்கு 'இவன், அவன்' என்ற வித்யாசமில்லாமல் அவர் கருணை காட்டுகிறார் என்பதை அனைவரும் உணரலாம். ஒருவன் அவரை வைதால், அவனுக்கும் அவர் கருணை காட்டுகிறார். ஒருவன் அவரை வாழ்த்தினால், அவனுக்கும் அவர் சமமான கருணை காட்டுகிறார். மனிதரிடம் மட்டுமின்றி பிராணிகளிடத்தும் அவர் செலுத்தும் கருணைக்கு ஓர் ஒப்புமையே இல்லை. ஒரு சமயம் ஜகத் குரு யாத்திரை செய்து கொண்டிருக்கையில், ஓர் ஏழை பிராஹ்மணர் பாத பூஜை செய்ய மடத்திற்கு வந்தார். ஆனால், அதற்காகச் செலவு செய்வதற்கு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவரிடம் போதிய அளவு பணம் இருந்திருக்கவில்லை. பாதபூஜை தன்னால் செய்ய இயலாமற் போனதற்காக வருந்திய அவர், அடுத்த வீட்டுக்காரர்கள் தங்கள் இல்லத்தில் பாதபூஜை செய்வதை ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டு நின்றிருந்தார். ஆச்சரியத்திற்கிடமாக ஆசார்யாள், குறிப்பிட்ட இம்மனிதரை அழைத்து அவர் முகத்தில் தெரியும் கவலைக்குறிக்குக் காரணத்தை வினவி னார். ஏழை மனிதர் தனது ஏக்கத்தின் காரணத்தைக் கூறினார். ஜகத்குருவின் மனம் கருணையால் நெகிழ்ந்தது. திடீரென்று ஜகத்குரு அம்மனிதரின் இல் லம் சென்று அம்மனிதரைப் பாதபூஜையைத் தொடங்குமாறு கூறினார். தன் னிடமே தெரிவிக்காமல், தனது இல்லம் வந்து கருணை வெள்ளத்தால் திளைக்கச் செய்த ஆசார்யாளின் தன்மையை எண்ணி எண்ணி உருகியவாறு, தன் மனதிற்குத் திருப்தியாகும்படி பாதபூஜை செய்தார் அந்த ஏழை மனிதர். கடைசியில் இதுமட்டுமல்லாமல் ரூபாய் இருநூற்று ஐம்பதையும் அந்த ஏழை மனிதருக்குக் கொடுக்கச் சொல்லிச் சென்றார் நம் ஆசார்யாள். திக்கற்றவர்க ளுக்கு நம் ஜகத்குருவல்லவோ துணை?

ஆத்ம குணங்களனைத்தும் ஒருங்கே அமையப்பெற்றவரும், கரு ணைக்கடலும், பிறவிப் பெருங்கடலைக் கடக்க நமக்குதவி செய்யும் படகு போன்றவரும், ஈடில்லாத சான்றோரும், இறைவனின் அவதாரமுமான இத்த கைய ஆசார்யாளின் தரிசனம் ஒருவன் பெற்றால் வாழ்க்கையில் அவன் வேறென்ன அடைய வேண்டியிருக்கிறது? ஒன்றும் இல்லையே. இதுவரை யும், ஆசார்யாளைப்பற்றி ஏதோ எனக்குத் தெரிந்த அளவிற்குக் கூறினேன். அவரைப் பற்றியும் அவர்தம் குணநலன்கள் பற்றியும் யாரால்தான் வர்ணிக்க இயலும்? ஒரு சிற்றெறும்பிற்கு பெருங்கடலின் ஆழத்தை எங்ஙனம் உணர முடியும்? அதேபோலத்தான் என் விஷயத்திலும் இவ்வுதாரணம் பொருந்தும் என்றே நான் கருதுகிறேன். ஆகவே என்னால் நமது ஜகத்குருவைப் பற்றி முழுவதும் வர்ணனை செய்ய முடியவே முடியாது.

தவ தத்த்வம் ந ஜானாமி கீத்ருசோஸி மஹேச்வர |
யாத்ருசோஸி மஹாதேவ தாத்ருசாய நமோ நம: ||

(உத்தமமான நாயகரே! உம்முடைய தத்துவத்தை நான் அறியவில்லை. நீங்கள் எப்படிப்பட்டவர் என்பதும் எனக்குத் தெரியாது. உத்தமமான தேவரே! நீங்கள் எப்படிப்பட்டவராக இருந்தாலும் உங்களுக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரம்) என்றுதான் நான் கூற முடியும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தஞ்சம் புகுந்த நெஞ்சங்களின் துன்பத்தை நீக்கும் நம் ஜகத்குருவின் சரணாரவிந்தங்களில் அடைக்கலம் புகுவதைத் தவிர வாழ்க்கையில் வேறெதுவும் ஒருவன் செய்யத் தேவையில்லை என்பதே என் உறுதியான எண்ணம்.

இப்புத்தகத்தில் இடம் பெற்றுள்ள ஆசார்யாளின் பதில்கள், அவர் வெவ்வேறு சமயங்களில் வெவ்வேறு பக்தர்களுக்குப் பகர்ந்த அருள்மொழிகளே யாகும். ஒரே தலைப்பின் கீழ் கொடுக்கப்பட்ட கேள்விகள், ஒரே சமயத்தில் தொடர்ந்து கேட்கப்பட்டன என்றில்லை. இந்த அரிய புத்தகம் வாசகராம் தங்களின் கைகளில் அமர்ந்திருக்கும் இவ்வேளையில் நான் ஒன்று கூறிக் கொள்ள விழைகிறேன். அது என்னவென்றால்,

யதத்ர ஸௌஷ்டவம் கிஞ்சித்
தத்குரோரேவ மே ந ஹி |
யதத்ராஸௌஷ்டவம் கிஞ்சித்
தன்மமைவ குரோர் ந ஹி ||

(இங்கு எது நல்லவையாக இருக்கின்றனவோ, அதற்குக் காரணம் என் குருநாதர்தான், நானில்லை. இங்கு எவையெல்லாம் தவறாக இருக்கின்றனவோ அதற்குக் காரணம் நானேதான், என் குருநாதரில்லை.) இந்த முன்னோர்களின் வாக்கியங்களையேதான் நானும் கூற விரும்புகிறேன்.

கருணைக்கடலாம் நம் ஜகத்குருவின் பாதாரவிந்தங்களை மனதில் நினைத்து இம்முன்னுரைக்கு முற்றுப்புள்ளி வைக்கிறேன்.

இரா.மு.உமேஷ்
சிருங்கேரி ஜகத்குரு
சங்கராச்சார்ய மஹாஸ்வாமிகளின்
பத்திரிகைச் செயலாளர்

சென்னை
15.11.1981

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நான்காவது பதிப்பிற்கான முன்னுரை

எத்தனையோ ஜென்மங்களில் நிறைய புண்ணியம் செய்திருந்தால் தான் ஓர் உயர்ந்த குருவின் அனுக்ரஹமும், உபதேசமும் ஒருவனுக்குக் கிடைக்கும். **ஜகத்குரு ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகளின்** தரிசனமும், உபதேசமும் பெற்றவர்கள் உண்மையில் மஹா பாக்யசாலிகள்.

ஞான மார்க்கத்தில் காலடி வைத்து முன்னேற தீவிர விருப்பம் கொண்ட பக்தர்களின் சந்தேகங்களுக்கு **ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹா ஸ்வாமிகள்** அருளிய பதில்களின் தொகுப்புத்தான் இந்நூல். தர்மசாஸ்திரம், கர்மானுஷ்டானங்கள், ஆசிரம தர்மங்கள், தியான யோகம் போன்ற பல்வேறு துறைகளில் பக்தர்களுக்கு இம்மஹான் அளித்த பல அரிய விளக்கங்கள் இதில் இடம் பெற்றுள்ளன. இவ்வரிய புத்தகத்தை அனைவரும் படித்துப் பயன் பெறலாம்.

குருவருட்செல்வர் ஸ்ரீ இரா. மு. உமேஷ் அவர்கள் ஜகத்குருவின் சொல் அமுதத்தைத் திரட்டி நமக்கு அளித்துள்ளார்கள். அவருக்கு நாம் மிகவும் கடமைப் பட்டிருக்கிறோம்.

இந்தப் புத்தகத்தின் முதல் பதிப்பு 1981ல் **ஸ்ரீ சிருங்கேரி சாரதா பீடம்** மூலமாகவும், இரண்டாவது பதிப்பு 1983ல் ஸ்ரீ சாரதா டிரஸ்ட் (சிருங்கேரி) மூலமாகவும் வெளியிடப்பட்டன. வெகு காலமாக பிரதிகள் கிடைக்காததால் மூன்றாவது பதிப்பை வெளியிட விருப்பம் கொண்டு, தக்ஷிணாம்னாய ஸ்ரீ சாரதா பீடாதிபதியாக இப்போது அருள்பாலித்து வரும் **ஜகத்குரு ஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகளிடம்** நேரில் விண்ணப்பித்துக் கொண்டோம். அவர்கள் தங்களுடைய அனுக்ரஹபூர்வமான ஆசிச்சொல் வழங்கி அனுமதியும் தந்தார்கள்.

இப்புத்தக்கத்தின் மூன்றாவது பதிப்பு 1998 ஆம் ஆண்டு வெளியிட்ட போது, இப்புத்தகத்தின் பழைய வடிவம் மாற்றி அமைக்கப்பட்டு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தற்போதுள்ள வடிவத்திற்கு கொண்டு வர திரு. E.R. இரவிக்குமார் அவர்கள் பெரிதும் உதவி புரிந்தார். அவருக்கு எங்களது நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். அழகிய முறையில் இப்புத்தகத்தை, இம்முறையும் அச்சிட்ட திரு. N. சுப்பிரமணியன் அவர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றி.

இப்புத்தகத்தின் வாயிலாக வெளியான ஆச்சார்யாளின் விளக்கங்கள் எக்காலத்திற்கும் பொருந்தக்கூடியன. எனவே இப்பொழுதும் இப்புத்தகம் எல்லோராலும் மிக விரும்பி படிக்கப்பட்டு வருகிறது. தேவை அதிகரித்திருப்பதால் இந்த நான்காவது பதிப்பை வெளியிட முடிவு செய்து, ஸ்ரீ ஸ்ரீ மஹாஸன்னிதானத்தின் எண்பத்தியாறாவது ஜெயந்தி மஹோத்ஸவத்தில் இதை அவரது பொற்பாத கமலங்களில் சமர்ப்பித்து வெளியிடுகிறோம்.

சென்னை நிர்வாகிகள்
13.11.03 ஸ்ரீ வித்யாதீர்த்த ஃபவுண்டேஷன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பதிலளிக்கிறார்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குரு

சிஷ்யன் : மோக்ஷத்தை விரும்புபவனுக்குக் குரு தேவையா?

ஆசார்யாள் : மிகவும் தேவை.

சி : *குருவின் லக்ஷணம் என்ன?*

ஆ : குருவானவர், தத்துவத்தை அறிந்த ஞானியாகவும், சிஷ்யனின் நன்மையை விரும்புபவராகவுமிருக்க வேண்டும்.

சி : *இக்காலத்தில் பலர் மஹான்களைப் போல் நடிக்கிறார்கள். இப்படியிருக்கும்போது உண்மையான குருவை எப்படித் தேர்ந்தெடுப்பது?*

ஆ : இவ்வாறுதான் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று கூற முடியாது. ஒருவன் மிகுந்த சிரத்தையுடன் இருந்தானானால், ஈச்வரன் அவனை ஸத்குருவை அடையும்படிச் செய்வான். நாம் யாரை குருவாகக் கருதுகிறோமோ அவர் ஞானியாகவும், நம் நன்மையை விரும்புபவராகவும் இருக்கின்றாரா என்று நாம் பார்த்துக் கொள்ளலாம். ஒருவரை அவர் ஞானியா என்று தீர்மானிப்பது கடினமானாலும், பகவத் கீதையில் கூறப்பட்ட ஞானியின் வர்ணனைகளை ஓரளவுக்கு உபயோகப்படுத்தலாம். ஆனால், இவ்வாறு செய்யும்போது ஞானிகளைத் தேர்ந்தெடுப்பதற்காக அந்த வர்ணனைகள் கூறப்படவில்லை என்பதை ஞாபகம் வைத்துக்கொள்ள வேண்டும்.

சி : *குருவைப்பற்றி சிஷ்யனின் மனப்போக்கு எவ்வாறிருக்க வேண்டும்?*

ஆ : குருவும், ஆத்மாவும், ஈச்வரனும் வேறு என்று கருதக் கூடாது.

'ஈச்வரோ குருராத்மேதி'

ஈச்வரனும், குருவும், ஆத்மாவும் ஒன்று என்று கூறப்பட்டிருக்கிறது. குருவின் ஆக்ஞையின்படியே எப்போதும் நடந்துகொள்ள வேண்டும். மற்றவர் வேறுவிதமாகக் கூறினாலும், குருவின் உபதேசத்தையே எந்த விஷயத்திலும் முடிவாகக் கருத வேண்டும்.

சி : *ஞானம் அடையாதவர், மற்றொருவரிடம் ஆத்ம ஞானத்தை உண்டாக்க முடியுமா?*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆ : **"ந நரேணாவரேண ப்ரோக்த ஏஷ ஸுவிக்ஞேயோ பஹுதா சிந்த்யமான: அனன்ய ப்ரோக்தே கதிரத்ர நாஸ்தி"**

"ஆத்மாவை அறியாதவன் உபதேசித்தால் மிகவும் ஆராய்ந்தாலும், ஆத்மாவை அறிந்து கொள்ள முடியாது. ஆத்மாவை அறிந்தவன் உபதேசம் செய்தால், ஒருவன் மோக்ஷத்தை அடைகிறான்" என்று கடோபநிஷத்தில் கூறப்பட்டுள்ளது.

சி : ***ஆன்மீக வாழ்வில் ஈடுபாடுள்ளவன் தன் குருவைப் பற்றியோ ஈச்வரனைப் பற்றியோ பிறர் நிந்திப்பதைக் கேட்பது தவறா?***

ஆ : ஆம்.

சி : ***அச்சூழ்நிலையில் அவன் என்ன செய்ய வேண்டும்?***

ஆ : நிந்தனை செய்பவன் யுக்தியை ஒப்புக்கொள்பவனாக இருந்தால் அவனிடம் அவ்வாறு நிந்தனை செய்ய வேண்டாம் என்று கூறலாம். அப்படியில்லாவிட்டால் நிந்தனை செய்யப்படுமிடத்திலிருந்து அந்த சிஷ்யன் விலகிச் சென்று விடலாம்.

சி : ***குருவை அடைவதிலும், ஆன்மீக வாழ்வை நடத்துவதிலும் விருப்பமுள்ளவன் குருவை அடைவதற்கு முன்பு ஆன்மீக ஸாதனையைச் செய்ய விரும்பினால் என்ன செய்யலாம்?***

ஆ : உபநயனமாகியிருந்தால் அவன் எவ்வளவிற்கு முடியுமோ அவ்வளவிற்கு காயத்ரீ ஜபத்தைச் செய்யலாம். மனதால் ஈச்வரனின் பூஜையைச் செய்யலாம். இதற்கு நியமங்களில்லை. ம்ருத்யுஞ்ஜய மானஸ பூஜா ஸ்தோத்ரம், சிவ மானஸ பூஜா ஸ்தோத்ரம் முதலியவைகளில் பூஜை செய்யும் முறை தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. எல்லாச் செயல்களின் பலன்களையும் இறைவனுக்கு அர்ப்பணித்து இறைபக்தியை வளர்ப்பது நலம். விவேகம் மூலமாகத் தீவிரமான வைராக்யத்தைப் பெற வேண்டும். சிரத்தையுடன் ஈச்வரனைப் பிரார்த்தித்தால் ஸத்குருவை அடையும்படி அவன் செய்வான்.

சி : ***எந்த வயதில் ஆன்மீக ஸாதனைகளைத் தொடங்க வேண்டும்?***

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆ : எவ்வளவு சீக்கிரத்தில் ஆரம்பிக்கின்றோமோ அவ்வளவு நல்லது. பிரஹ்லாதனும், த்ருவனும் ஆன்மீக ஸாதனைகளைத் தொடங்கும் போது சிறுவர்களாகத்தானே இருந்தார்கள்?

சி : *லௌகீக வாழ்வில் ஈடுபாடுள்ளவனுக்குக் குருவின் உபதேசம் தேவையா?*

ஆ : வியாதியால் பாதிக்கப்பட்டவனுக்கு வைத்தியர் தேவை தானே?

சி : *ஆம்.*

ஆ : லௌகீக வாழ்வில் சுகத்தை விரும்புகிறானே, அவன் விரும்பிய அளவுக்கு அவனுக்கு இன்பம் கிடைக்கிறதா? இல்லையே! அந்த இன்பம் பெறுவதற்கு லௌகீக வாழ்வு வாழ்பவனுக்கும் ஒருவர் வழிகாட்டுவதாக இருந்தால் அவர் தேவையல்லவா? தத்துவத்தை அறிந்து கொண்டவரின் ஆசிக்கு மிகவும் சக்தியிருக்கிறது. ஆகை யால் எவ்வாறு வாழ விரும்பினாலும் ஒரு மஹானின் அருளும் உபதேசமும் பெறுவது நல்லது.

சி : *சிலர் குருவின் ஆக்ஞைப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று கருதினாலும் எப்போதும் அவ்வாறு நடந்து கொள்வதில்லை. வேறு விதமாக நடந்து கொண்டால் இன்பம் பெறலாம் என்ற தவறான அபிப்ராயமும் அவர்களுக்கு ஏற்படுகிறது. இம்மாதிரி எண்ணங் களை எவ்வாறு தடுப்பது?*

ஆ : லௌகீகமாக வாழ்பவனுக்கும் ஒரு மஹானைப்பற்றி "இவருக்கு என்னைக் காட்டிலும் அறிவு அதிகமாக இருக்கிறது" என்ற எண்ணம் உண்டா, இல்லையா?

சி : *அவசியம் இருக்குமே.*

ஆ : ஒருவர் குருவாக வேண்டுமென்றால் அவர் சிஷ்யனின் நன்மையை யும், சிஷ்யனின் கஷ்டங்களையும் கருத்தில் கொண்டிருப்பார் அல் லவா?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சி : ஆம்.

ஆ : ஒருவர் நம் நன்மையைக் கருதுகிறார். நம்மைக்காட்டிலும் அறிவு அதிகம், நம் கஷ்டங்களையும் புரிந்து கொண்டிருக்கிறார். இப்படிப் பட்டவர் நமக்கு ஏதாவது உபதேசம் கொடுத்தால் அது நமது நன்மைக்காகத் தானேயிருக்கும். ஆகவே, அவர் உபதேசப்படித்தான் நடந்து கொள்ள வேண்டும். இவ்வாறு எண்ணத்தை மனதில் உறுதிப்படுத்திக் கொண்டால், சிஷ்யன் அவசியம் குருவின் உத்தர வின்படி நடந்து கொள்வான். அவர் கட்டளையின்படி நடப்பதில் கஷ்டங்கள் ஏற்பட்டாலும் "நான் அவர் சொற்படி நடந்தால்தான் எனக்கு நல்லது" என்று நினைத்து அவர் கட்டளைப்படி நடந்து கொள்வான்.

சி : *தன் மனதிலுள்ளது எல்லாவற்றையும் குருவிடம் சொல்வதற்கு மக்களுக்குத் தயக்கம் உள்ளது. இப்படியிருக்கும்போது சிஷ்யன் தன் மனதில் தோன்றிய கஷ்டங்கள் எல்லாவற்றையும் குருவிடம் கூறுவ தில்லை. 'குரு என் நன்மைக்காகவே இந்த உபதேசத்தைக் கொடுத்து விட்டார். ஆனால் அதன்படி நடந்து கொள்வதில் சில கஷ்டங்கள் இருக்கின்றனவே. எனது சக்தியும் மிகக் குறைவாக இருக்கிறதே. இந்த உபதேசம்படி எப்படி நடந்து கொள்வது' என்று, உபதேசத்தின் படி அனுஷ்டிக்கக் கடினமாக இருந்தால் மக்கள் மனதில் சந்தேகமி ருக்கலாமே?*

ஆ : ஒரு வைத்தியரிடம் செல்லும்போது தன் வியாதியைப் பற்றி மறைத்து வைத்தால் அது முட்டாள்தனமாக இல்லையா? ஆதலால் சிஷ்யன், குருவிடம் செல்லும்போது தனது கஷ்டங்களைத் தயக்க மில்லாமல் கூற வேண்டும். அது அவன் கடமை. அவ்வாறு செய்யாவிட்டாலும் குரு தத்துவத்தை அறிந்தவராதலால் அவரின் வாக்கு ஈச்வரனின் விருப்பப்படித்தான் இருக்கும். இப்படியிருக்கும் போது அவர் எதைக் கூறினாலும் நமக்குப் பொருத்தமாகத்தானிருக் கும். நமக்கு சாமர்த்தியமில்லாவிட்டால் அவர் அனுக்ரஹத்தினால்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அந்த சாமர்த்தியமும் கிடைக்கும். உத்தமமான சிஷ்யன், குருவின் ஆக்ஞையின்படியே நடந்து கொள்வானே தவிர, அதைப்பற்றி "நான் இவர் கூறியதைச் செய்ய முடியுமா? முடியாதா? வேறு ஏதாவது செய்யலாமா?" இம்மாதிரி யோசனைகளுக்கு இடமே கொடுக்கமாட்டான். குருவின் கட்டளையின்படியே ஒருவன் நடந்து கொள்கிறானென்றால் அவனுக்குச் சொந்த புத்தியில்லை என்று அர்த்தமில்லை. தன்னைக்காட்டிலும் உத்தமமான சக்தியிடம் தன் நன்மைக்காகச் சரணம் அடைந்திருக்கிறான் என்றுதான் பொருள்.

சி : *குருவின் அருளிருந்தால் மஹாபாவியும் முன்னேற்றமடைய முடியுமா?*

ஆ : இறைவன் மற்றும் குருவின் அனுக்ரஹம் கிடைத்தால் எப்படிப்பட்டவனும் முன்னேற்றமடையலாம். ஆனால், மஹானின் அனுக்ரஹத்தாலேயே வாழ்க்கையில் முன்னேற்றமடையலாம் என நினைத்து, கவனக்குறைவாக இருந்துவிடக் கூடாது.

சி : ***சிலர் பலவிதமான தவறுகள் செய்திருந்தாலும் ஒரு மஹானின் அனுக்ரஹம் அவர்களுக்குக் கிடைக்கிறது. அதனால் அவர்கள் நன்மை அடைகிறார்கள். மற்ற சிலர் அவ்வளவு தவறு செய்யாமல் இருந்திருக்கலாம். ஆனாலும் அவர்களுக்கு மஹான்களின் அனுக்ரஹம் கிடைப்பதில்லை. மஹான்களுக்கு 'இவன் எனக்கு வேண்டியவன், இவன் எனக்கு வேண்டாதவன்' என்ற எண்ணமில்லாவிட்டாலும் இம்மாதிரி வித்யாசங்கள் ஏன் ஏற்படுகின்றன?***

ஆ : காரியத்தைக் கண்டு காரணமென்ன இருந்திருக்கும் என்று சிந்திக்க வேண்டும். ஒருவன் மற்றவனைக் காட்டிலும் பாவியாக இருக்கிறான். ஆனால், அவனுக்கு கிருபை விசேஷமாகக் கிடைப்பதைப் பார்க்கலாம். இதற்குக் காரணமிருந்திருக்க வேண்டும். அது என்னவாயிருக்கும்? பாவியின் இப்பிறவி வாழ்க்கையைச் சிந்தித்துப் பார்த்தால் காரணம் கிடைக்காமல் போகலாம். அவ்வளவு மட்டும் ஆராய்ந்தால் போதாது. ஏனென்றால், முற்பிறவி இருந்தது. அதில் அவன் விசேஷ

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மான நல்ல காரியங்களைச் செய்திருக்கலாம். அதனால்தான் அவன் இப்பிறவியில் ஒரு மஹானின் கருணைக்கு ஆளாகிறான். ஆதலால் ஒருவன் இப்போது நல்ல வாழ்க்கை நடத்தாமலிருந்தாலும் அவனுக்கு இப்போது மஹானின் அனுக்ரஹம் கிடைக்கிறதென்பதால், அவன் முற்பிறவியில் புண்ணியம் செய்திருந்தான் என்று அனுமானம் செய்து கொள்ளலாம். இவ்வாறு ஆராய்வதை விட்டுவிட்டு ஒரு மஹான் பாரபட்சமாக நடந்து கொள்கிறார் என நினைப்பது தவறு. ஜீவன்முக்தருக்கு அடைவதற்கு ஒன்றுமில்லை. "இவன் எனக்கு வேண்டியவன், ஆகவே இவனுக்கு அருள்புரிய வேண்டும். இவன் எனக்கு வேண்டாதவன், ஆகவே இவனுக்கு க்ருபை வேண்டாம்" என்றெல்லாம் ஒரு மஹான் நினைக்கமாட்டார். ஒருவனுக்கு அனுக்ரஹம் செய்தாலும், செய்யாவிட்டாலும் மஹான்களுக்குப் பயன் ஒன்றுமில்லை. ஏனென்றால், அவர்கள் அடைய வேண்டியதை அடைந்தவர்கள்.

சி : *ஒருவன் முற்பிறவியில் செய்த புண்ணியத்தினால்தான் பகவானின் அருளைப் பெறுகிறானென்றால் அருளும் புண்ணியத்தால் வாங்கப்படும் பொருள் போலல்லவா ஆகிவிடும்?*

ஆ : ஒரு தீபத்தின் ஒளி சுற்றியுள்ள இடங்களில் விழுகிறது. ஒருவன் அந்த ஒளியை உபயோகப்படுத்தி சாஸ்திரங்களைப் படித்துக் கொள்ளலாம். மற்றொருவன் அதில் கவனம் செலுத்தாமல் தூங்கிக் காலம் கழிக்கலாம். இதேபோல் மஹான்கள் எப்போதும் அருள்புரிந்து கொண்டு வருகிறார்கள். அவனவன், அவனவனது மனநிலையைப் பொறுத்துப் பயனடைவான். ஒருவன் குளத்திற்குப் பெரிய குடம் கொண்டு சென்றால், அதிக அளவு நீர் எடுத்து வரலாம். சிறிய குடம் கொண்டு சென்றால் நீர் சற்றுக் குறைவாகவே கிடைக்கிறது என்று சொன்னதால் குளத்திற்குக் குடமே ஓர் அளவு என்று கூற முடியாது. முற்பிறவியில் புண்ணியம் செய்திருந்தால் ஒருவனுக்கு மஹானின் ஸஹவாசம் கிடைக்கலாம். அதேசமயம் அவன் அதை உபயோகப்படுத்தாமலும் இருக்கலாம். ஆனால் மற்றவனுக்கு அவ்வளவுக்குச்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சந்தர்ப்பம் கிடைக்காவிட்டாலும் முடிந்த அளவிற்கு உபயோகப்படுத்திக் கொண்டு சிறிது காலத்தில் மஹானின் அனுக்ரஹத்திற்கு விசேஷமான பாத்திரமுமாகலாம்.

சி : *குரு, சிஷ்யன் ஒருவனுக்குத் தன் பாதுகையை அனுக்ரஹித்து அருளியிருந்தால், பாதுகையை அந்த சிஷ்யன் எவ்வாறு பூஜிக்க வேண்டும்?*

ஆ : ஸாக்ஷாத் குருவிடம் எந்த மரியாதையைக் காட்டுவானோ அதே மரியாதையைப் பாதுகையிடம் காட்ட வேண்டும். முழு சிரத்தையுடன் பாதுகையை வணங்கிப் பாதுகையின் மேல் சந்தனமும், புஷ்பமும் வைக்க வேண்டும். தினந்தோறும் பாதுகைக்கு அபிஷேகம் செய்வது ஒருவகையில் நல்லது என்றிருந்தாலும், அந்தப் பாதுகை மரத்தால் செய்ததாக இருந்தால், சிஷ்யனும் அந்தப் பாதுகை தன்னிடம் நீண்டகாலம் இருக்க வேண்டுமென்று கருதினால், தினந்தோறும் அப்பாதுகையை அபிஷேகம் செய்தால் அது எவ்வளவுக்குச் சரி என்பதை அவனே தீர்மானம் செய்து கொள்ளலாம். குருவின் பாதுகையை சிரத்தையுடன் வணங்கினாலோ, குருவின் பாதுகையிடம் சிரத்தையுடன் பிரார்த்தித்தாலோ, ஸாக்ஷாத் குருவிடம் அவ்வாறு செய்து கொண்ட பலன் கிடைக்கும். ஆதலால் பாதுகை விஷயத்தில் கவனக்குறைவாக ஒருபோதும் இருக்கக் கூடாது.

சி : *குருவின் பாதுகையின் மேல் தியானம் செய்ய வேண்டுமென்று ஒரு சிஷ்யன் கருதினால் எவ்வாறு செய்யலாம்?*

ஆ : குரு பாதுகையை அணிந்து கொண்டிருக்கிறார் என்று கருதி பாதுகையுடன் அவர் பாதங்களைச் சிந்திக்கலாம்.

சி : *குருவின் ஸந்நிதியில் சிஷ்யன் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்?*

ஆ : குருவிடம் பணிவுடன் நடந்து கொள்ள வேண்டும். சந்தர்ப்பம் கிடைக்கும்போது குருவின் சேவையைச் செய்துவர வேண்டும். ஆனால் அதற்குமுன், அவரது அனுமதியைப் பெற்றுக் கொள்ள

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வேண்டும். மனதில் ஏதாவது சந்தேகம் ஏற்பட்டால் குரு வேறு காரியங்களில் ஈடுபடாதிருக்கும் நேரத்தில் அவரிடம் கேட்கலாம். அவரிடம் பாடம் கற்றுக் கொள்வது நமது பெரிய பாக்யம் என்று கருதி பாடத்தில் மிகுந்த சிரத்தை வைத்துக்கொள்ள வேண்டும். அவர் தரும் உபதேசங்களை மறக்காமல் மனதில் வைத்துக்கொண்டு, அதன்படி வாழ்க்கையை நடத்திக் கொள்ள வேண்டும்.

இறைவன்

சிஷ்யன் : ஈச்வரனைப் பார்க்க முடியாததால் சிலர் உண்மையில் ஈச்வரன் இருக்கிறானா, இல்லையா என்பதில் சந்தேகமடைகிறார்கள். அவர்களின் மனதில் சிரத்தையை உண்டாக்குவதற்காக இறைவன் எப்படியாவது தானிருப்பதை அவர்களுக்குக் காட்ட முடியாதா?

ஆசார்யாள் : இறைவனே ஒரு சிக்கலில் மாட்டிக் கொண்டிருக்கிறான் போலிருக்கிறது. அவன் ஒருவனுக்குக் காட்சியளிக்க விரும்பினால், ஏதோ ஓர் உருவத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும். உருவத்தைக் கண்டவுடன், சந்தேகமுள்ளவன் 'உனக்கு உருவம் இருக்கிறது. நீ எல்லா இடத்திலும் இல்லை. அதனால் நீ இறைவனாக இருக்க முடியாது' என்று கூறிவிட வாய்ப்பு இருக்கிறது. அதேசமயம், இறைவன் அவர்களுக்கு முன்பு உருவத்தைப் பெற்றுக் கொண்டு தரிசனம் தராமலிருந்தால் சந்தேகமிருப்பவர்களில் வேறு சிலர், 'நாம் இறைவனைக் காண முடிவதில்லை. ஆகையால் இறைவன் என்று ஒருவன் இல்லை' என்று நினைத்துக் கொள்ளலாம். ஆக, இறைவன் உருவத்தைப் பெற்றுக் கொண்டாலோ, பெற்றுக்கொள்ளாவிட்டாலோ இப்படி சிலர் ஈச்வரன் இருப்பதை நம்பாமலிருக்கிறார்கள். இச்சூழ்நிலையில் இறைவன் என்னதான் செய்ய முடியும்?

உலகில் வேற்றுமையிருக்கிறது. ஆகையால் நாஸ்திகர்களின் கோஷ்டியும் இருக்கிறது. சிரத்தையை மக்களிடம் உண்டாக்கலாம். மேலும் வளர்க்கலாம். ஆனால், பலாத்காரமாக ஒருவன் மனதில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிரத்தையை உண்டாக்குவதற்காக முயற்சி செய்வதில் பிரயோஜன மில்லை. யுக்திகளைக் கூறலாம். பல பக்தர்களின் உண்மையான அனுபவங்களை எடுத்துக் காட்டலாம். பல அபூர்வமான உண்மை நிகழ்ச்சிகளையும், உதாரணங்களையும் கொடுக்கலாம். சாஸ்திரங்க ளில் தெரியப்படுத்தப்பட்டதையும் கூறலாம். ஆனாலும் இறைவன் இருக்கிறான் என்று ஒருவன் நம்பாவிட்டால் யார் என்ன செய்ய முடியும்?

சி : *இறைவனைப் பக்தன் காண முடியுமா?*

ஆ : உருவத்துடன் காணலாமா என்று கேட்கிறாயா?

சி : *ஆம்.*

ஆ : இறைவனுக்கு உருவமில்லாவிட்டாலும் பக்தர்களுக்காக அவன் உருவத்தைப் பெற்றுக் கொள்ளலாம். ஆதலால் அளவில்லாத பக்தியி ருந்தால் இறைவன் பெற்றுக்கொண்ட உருவத்தை நாம் நிச்சயமாகப் பார்க்கலாம். இங்கு சந்தேகத்திற்கிடமில்லை.

சி : *இறைவன் பெற்றுக்கொண்ட உருவத்தை வெறும் மனதால் பார்க்க முடியும் என்று சொல்கிறீர்களா, அல்லது கண்களாலும் காணமுடியும் என்று சொல்கிறீர்களா?*

ஆ : இரண்டு வகைகளிலும் காட்சியளிப்பதற்கு இறைவன் சாமர்த்திய முள்ளவன்.

சி : *அதாவது இறைவனைப் பார்க்கலாம், இறைவனிடம் பேசலாம், இறைவனைத் தொடலாம் என்பதையா ஆசார்யாள் கூறுகிறார்கள்?*

ஆ : ஆம். அவ்வளவு பக்தியிருந்தால் இறைவன் காட்சியளிப்பார். காட்சிய ளித்தால் அவனிடம் ஏன் பேச முடியாது?

சி : *கலியுகத்திலுமா இவ்வாறு செய்யலாம்?*

ஆ : இறைவனைப் பக்தியுள்ளவன் காண்பதற்கும் கலியுகத்திற்கும் என்ன சம்பந்தம்?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சி : *எவன் இறைவனின் தரிசனத்தைப் பெறலாம்?*

ஆ : எவன் இறைவனைத் தவிர வேறொன்றையும் விரும்பவில்லையோ அவன் இறைவனைக் காணலாம். அளவில்லாத பக்தி இறைவனை நம்மிடம் வரும்படிச் செய்கிறது.

சி : *இறைவன் விஷயத்தில் ஒருவனுக்கு ஏற்பட்ட அனுபவம் உண்மையா இல்லையா என்பதை ஒருவன் எவ்வாறு அறிய முடியும்?*

ஆ : எவனுக்கு உண்மையான அனுபவம் ஏற்பட்டிருக்கிறதோ அவனுக்கு இதுபோன்ற சந்தேகம் ஏற்படாது.

சி : *மற்றவர்கள் இருக்கிறார்களே, அவர்களுக்கு அவனுடைய அனுபவம் சித்தப் பிரமையினாலோ தனக்குத் தானே ஏமாற்றிக் கொண்டதாலோ இருக்கலாம் என்று கருதலாமே?*

ஆ : எவனுக்கு அனுபவம் ஏற்பட்டிருக்கிறதோ, மற்றவர்கள் அதை ஏற்றுக் கொண்டாலோ, ஏற்றுக் கொள்ளாவிட்டாலோ அவனுக்கு என்ன நஷ்டம்? மக்கள் ஒப்புக் கொள்வதோ, மக்கள் ஒப்புக் கொள்ளாமலிருப்பதோ, அனுபவம் அடைந்தவனின் அனுபவத்தை ஒருவகையிலும் பாதிப்பதில்லை. இப்படியிருந்தாலும் உன் கேள்விக்குச் சற்று நேரடியான பதிலையே கூறுகிறேன். இறைவன் பக்தனுக்குக் காட்சியளிக்கும்போது பக்தனிடம் பழமோ மற்ற பொருட்களோ கொடுத்துவிட்டுப் போகிறான் என்று வைத்துக் கொள்வோம். இறைவன் மறைந்த பிறகும் பழம் சிஷ்யனுக்கிருந்தால் அவ்வனுபவம் உண்மையானது என்று அறிந்து கொள்ளலாம். இதுபோன்ற அனுபவம் பக்தனுடைய மனநிலையை மாற்றிவிடும். அனுபவம் சற்று நேரத்திற்கே இருந்தாலும் அதன் பலன் நீண்ட காலம் இருக்கிறது. மேலும் இறைவனின் விஷயத்தில் அனுபவம் பெற்றுக் கொண்டவர்கள் மற்றவர்களுக்கு ஊக்கமளிப்பதற்குச் சாமர்த்தியம் உள்ளவர்களாக ஆகிவிடுகிறார்கள்.

இறைவன் விஷயத்தில் அனுபவம் பெற்ற ஒருவன் நல்ல ஆரோக்யத்துடனும், மனநிலையுடனும் இருக்கிறான் என்று வைத்துக்கொள்வோம். அவனுக்குத் திடீரென்று சித்தப்பிரமை ஏன் வர வேண்டும்?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஒருவன் தனக்குத் தானே ஏமாற்றிக் கொள்ள வேண்டுமென்றால் எப்போது வேண்டுமானாலும் ஏமாற்றிக் கொள்ளலாம். ஒருவனுக்கு விசேஷமான அனுபவங்கள் எப்போது வேண்டுமானாலும் கிடைப்ப தில்லை. இம்மாதிரி ஆராய்வதன் மூலம் உண்மையான அனுபவத் திற்கும், தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்வதற்கும் உள்ள வித்யாசத் தைக் காணலாம்.

சி : *இவ்வுலகில் இவ்வளவு துன்பங்கள் எதற்காக இருக்கின்றன? இவ்வு லகை இறைவன் படைத்ததால் துன்பங்களுக்கு அவன் காரணமாக மாட்டானா?*

ஆ : ஒருவன் தான் செய்த செயல்களால்தான் துன்பங்களை அனுபவிக்கி றான். ஒருவனது செயல்கள் பலனளித்தே தீர வேண்டும். இம்மாதிரி முற்பிறவியில் செய்யப்பட்ட கர்மா பலனளிப்பதால் ஒருவன் இப்பிற வியில் துன்பங்களை அனுபவிக்கிறான். மனிதர்களுக்கு சாஸ்திரங்க ளின் கட்டளையைப் பின்பற்றி வாழ்வதற்கோ, சாஸ்திரங்களின் கட்டளையை மீறுவதற்கோ, சுதந்திரம் இருப்பதால், இறைவன் துன்பங்களுக்குக் காரணம் என்று சொல்வது தவறு. மனிதன் தன் செயல்களின் பயனாக புண்ணியத்தையோ, பாவத்தையோ அடைகி றான். இறைவன் செயல்களின் பலன்களை அளிக்கிறான். அவ்வளவு தான்.

முற்பிறவியில் செய்த பாவம்தான் நமக்கு இப்பிறவியில் துன்பம் உண்டாக்குகிறது எனச்சொன்னால் முற்பிறவியில் ஒருவன் துன்பம் அனுபவித்ததற்குக் காரணம் என்னவென்று கேட்கலாம். இதற்குப் பதில் 'அதற்கும் முன் பிறவியில் செய்த கர்மா' என்பதேயாகும். ஸம்ஸாரத்திற்கு (பிறப்பு - இறப்புச் சக்கரத்திற்கு) ஆரம்பமில்லாத தால், நாம் ஒருவிதமான கர்மாவும் செய்யாமல் வாழ்க்கையை ஆரம்பித்த போதிருந்த முதல் பிறவி எது எனக் கேட்பது சரியாகாது. முன் கல்பத்தில் இருந்ததை இறைவன், ஒவ்வொரு கல்பத்தைப் படைக்கும்போதும் வெளிப்படுத்துகிறானே தவிர, புதிதாகத் தானா கவே ஒன்றும் உண்டாக்குவதில்லை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சி : இறைவன் நடந்ததையும், நடப்பதையும், நடக்கப்போவதையும் அறிந்தவனென்று கூறப்பட்டுள்ளது. இறைவன் மனிதர்களுக்கு வருங்காலத்தில் என்ன நடக்கும் என்று தெரிந்து கொண்டவனாகியிருந்தால் மக்கள் என்ன செய்வார்கள் என்பதும் இப்போதே தீர்மானமாகியிருக்க வேண்டும். அப்படியிருந்தால் விதியின் கட்டளையின்படித்தானே மனிதன் நடந்தாக வேண்டும்? விதியின் கட்டளைப்படி நடக்காமல் மீறி நடந்து கொள்ளலாமென்றால் இறைவனால், நடக்கப் போவதைத் தீர்மானிக்க முடியாது என்று ஆகும். அப்படியிருந்தால் இறைவனை எல்லாவற்றையும் அறிந்தவனென்று எப்படிக் கூறுவது?

ஆ : உண்மையில் உலகம் மாயையால் ஏற்பட்டிருக்கிறது. இறைவன் மாயையை ஆள்பவன். எல்லாம் இறைவன் விரும்பியபடியே நடைபெறுவதால், அவன் விருப்பத்திற்கு இணங்கித்தானிருக்கிறது. அவனின் விருப்பம்தான் மனிதர்களின் சொந்த இச்சையைப்போலும், விதியைப் போலும் தெரிகிறது. இவ்வாறு கருதினால் இறைவன் எல்லாவற்றையும் அறிந்து கொண்டவன், மேலும் விதியின்படியே எல்லாம் நடைபெற வேண்டியதுமில்லை என்ற இரண்டையும் குழப்பமில்லாமல் புரிந்து கொள்ளலாம்.

ஒருவன் தன் பரீட்சைக்காகப் படிக்கவேயில்லை என்று வைத்துக் கொள்வோம். அப்படிப்பட்டவன் தேர்வில் வெற்றி பெறமாட்டான் என்பதை நிச்சயமாகக் கூற முடியாதா? இதுபோல் ஒருவன் கூற முடியும் என்பதால் மாணாக்கனுக்கு, தேர்வுக்கு முன்னர் படிப்பதற்கோ அல்லது படிக்காமலிருப்பதற்கோ சுதந்திரம் இல்லை என்று கூற முடியுமா? நிச்சயம் முடியாது. அதேபோல்தான் இறைவன் தான் படைத்தது அனைத்தையும் நன்கு புரிந்து கொண்டிருக்கிறானென்று கருதினாலும் இறைவன் எல்லாவற்றையும் அறிந்தவனென்று கூறுவதில் கஷ்டமொன்றுமிருக்காது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உருவமுள்ள இறைவனின் பூஜை

வெளிநாட்டவர் : இந்துக்கள் பல தெய்வங்களைப் பூஜிப்பதுண்டா?

ஆசார்யாள் : அனைத்துப் படைப்பின் ஆக்கல், காத்தல், அழித்தல் ஆகியவற்றிற்குக் காரணமான, உருவமற்ற ஒரே இறைவன்தான் இருக்கிறான் என்று நாம் கருதுகிறோம். ஆனால் அந்த இறைவன் தன்னுடைய பக்தர்களை அருள்வதற்காகப் பலவிதமான உருவங்களைப் பெற்றுக்கொள்கிறான். எந்தப் பெயருடனும், உருவத்துடனும் மக்கள் இறைவனை விரும்புகிறார்களோ அவ்வகையில் அவர்கள் அவனை ஆராதிக்கிறார்கள். இந்திரன் போன்ற பெயர்களை நீங்கள் கேட்டிருக்கலாம். இவைகள் புண்ணியம் செய்த ஜீவன் வெவ்வேறு சமயங்களில் அடையும் பதவிகள். முன்பு கூறப்பட்ட இறைவனுடன் இதுபோன்ற பதவிகளையும் சேர்த்து நாம் குழப்பப்படலாகாது.

வெ : சிலைகளைப் பூஜிப்பது பற்றி ஆசார்யாள் சற்றுக் கூறுவார்களா?

ஆ : நாம் வெறும் கற்களைப் பூஜிப்பதில்லை. வெறும் கல்லை நாம் பூஜிப்பதாக இருந்தால் உருவத்தைப் பார்த்து 'கல்லே!' என்று கூறுவோம். 'இறைவா!' என்று இல்லை. மூர்த்திகளில் இறைவன் இருக்கின்றான் என்று கருதி மூர்த்திகளை, நம் ஆராதனைக்குத் துணையாக வைத்துக்கொண்டு இறைவனைப் பூஜிக்கிறோம். மூர்த்திகளைப் பிரதிஷ்டை செய்வதற்காகச் செய்யும் 'கும்பாபிஷேகத்தாலும்' பூஜை செய்பவர்களின் சிரத்தையாலும் தவத்தாலும் சில மூர்த்திகளின் விசேஷத்தாலும் கோவில்களில் இருக்கும் மூர்த்திகளில் விசேஷமாக தெய்வ ஸாந்நித்யம் ஏற்படுகிறது. இறைவன் உருவமற்றவனானாலும் தன் கருணையால் பக்தர்களுக்குக் காட்சியளிப்பதற்குச் சக்தியுள்ளவனாகவும் இருக்கிறான். அவ்வாறு செய்யவும் செய்கிறான்.

வெ : ஆசார்யாள் பூஜை செய்யும்போது நீர், பால் போன்றவைகளை ஊற்றுவதைப் பார்த்தேன். அதன் தாத்பர்யம் என்ன?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆ : பூஜை செய்யும்போது இறைவனை நாம் ஸேவிக்கிறோம். நீங்கள் கண்ட அபிஷேகம் மூலமாக நாம் இறைவனைக் குளிப்பாட்டுகிறோம். அதற்குப் பிறகு அவனைத் துடைக்கிறோம். பிறகு அவனை உணவும் அருந்தச் செய்கிறோம். அளவற்ற, உருவமற்ற இறைவனுக்கு எதுவும் தேவைப்படாவிட்டாலும் நம் பக்தி நாம் அவனை மூர்த்தியில் கண்டு பூஜிக்கும்படிச் செய்கிறது. உங்களுக்குப் பழக்கமுள்ள ஒப்புமை கூற வேண்டுமென்றால் அபிஷேகம் என்பது இறைவனுக்கு நாம் கொடுக்கும் "ஷவர் பாத்".

திருமணம்

சிஷ்யன் : வரதட்சிணை கொடுக்க வேண்டியதால் திருமணங்களில் செலவு அதிகமாகிறது. ஆதலால் பல தாய் தந்தையர்கள் துன்பத்தை அனுபவிக்கிறார்கள். வரதட்சிணையைப் பற்றி ஆசார்யாளின் உபதேசம் என்ன?

ஆசார்யாள் : வரதட்சிணை சரியென்று சாஸ்திரங்களில் கூறப்படவேயில்லை. 'கன்யாதானம்' என்பதே ஒரு பெரிய தானம். அந்த தானத்தை முழுமையாக்குவதற்காக மற்றொரு தானமாக வரதட்சிணை தேவையில்லை. ஒரு பெண்மணியின் தந்தை இறந்த பிறகு இருக்கும் ஒரு வருட அசௌச காலத்திலும் கன்யாதானம் செய்யலாமென்றால் அது எவ்வளவு சிறப்பான தானம் என்று தெரிந்து கொள்ளலாம். வரதட்சிணை வாங்கும் பழக்கம் பேராசையால்தான் ஏற்படுகிறது. அதை நீக்கிவிட வேண்டும்.

சி : ஆசார்யாள், சிஷ்யர்களுக்கு 'வரதட்சிணை வாங்க வேண்டாம்' என்ற உபதேசம் கொடுப்பதுண்டா?

ஆ : அந்த உபதேசத்தை நான் எல்லோருக்கும் கொடுப்பேன். அவர்கள் பக்தர்களானாலும் சரி, பக்தர்கள் இல்லாவிட்டாலும் சரி. இக்காலத்தில் பலர் வரதட்சிணை வாங்கக்கூடாது என்று சொல்கிறார்கள். ஆனால், சிலர்தான் செயலில் அவ்வாறு நடந்து கொள்கிறார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மக்கள் இவ்வாறு செய்யும் கெட்ட பழக்கத்தை என்று விடுவார்களோ அப்போதுதான் வரதட்சிணை வாங்கும் பழக்கம் நிற்கும்.

சி : *கல்யாணத்திற்காக அதிகமாகச் செலவழிப்பதைப் பற்றி ஆசார்யா வின் கருத்து என்ன?*

ஆ : சாஸ்திரங்கள், திருமணத்தின்போது சரியான முறையில் மந்திரங் களை உச்சரிக்க வேண்டும் என்று கூறுகின்றன. எங்கேயும் சாஸ்திரங் கள் ஒரு பெரிய 'ரிசப்ஷன் பார்ட்டி' வைக்க வேண்டும் என்றோ, அதிக விலையுள்ள பட்டுப் புடவைகளையோ பலவிதமான நகைக ளையோ வாங்க வேண்டுமென்றோ கூறுவதில்லை. புத்தாடை என்றால் அதிக விலையுள்ள ஆடை என்று அர்த்தமில்லை. திரும ணங்களில் அதிகம் செலவாகிறதென்றால் அதற்கு சாஸ்திரங்கள் காரணமல்ல. மக்கள் வீணாகப் பணத்தைச் செலவழித்தால் அது அவர்களின் தவறுதானே?

சி : *பிராஹ்மணர்களில் வடமாள், பிரஹச்சரணம் போன்ற உட்பிரிவுக ளைச் சேர்ந்தவர்களில், ஓர் உட்பிரிவைச் சேர்ந்தவர் மற்றொரு உட்பிரிவினரைத் திருமணம் செய்து கொள்ளலாமா?*

ஆ : இம்மாதிரி உட்பிரிவுகளைப்பற்றி சாஸ்திரங்கள் ஒன்றும் கூற வில்லை. சாஸ்திரங்களைப் பொருத்தவரையில் ஒரே கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் திருமணம் செய்துகொள்ளக் கூடாது. ஆனால் உட்பிரி வுகளில் ஒருவருக்கொருவர் திருமணம் செய்துகொள்வது தவ றென்று சாஸ்திரங்களில் கூறப்படவில்லை.

சி : *சில ஊர்களில் ஒரு பெண் தன் மாமாவையோ, மாமாவின் மக னையோ அல்லது வேறு உறவினரையோ திருமணம் செய்யும் பழக்கமிருக்கிறது. சில விஞ்ஞானிகள் இதுபோன்ற திருமணம், பிறக்கப் போகும் குழந்தையின் உடல் நிலைக்கு நல்லதில்லை என்று கூறுகிறார்கள். இம்மாதிரி திருமணம் செய்துகொள்ள வேண்டு மென்று சாஸ்திரங்களில் ஏதாவது கட்டளை இருக்கிறதா?*

ஆ : வேதங்களில் உபநயனத்திற்கும், ஸந்யாஸம் பெறுவதற்கும் தெளி வான கட்டளைகளிருக்கின்றன. ஆனால் திருமணம் செய்து கொள்ள

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வேண்டும் என்ற தெளிவான கட்டளையே இல்லையே. திருமணம் சம்பந்தப்பட்ட வேத மந்திரங்களைப் பார்த்த பிறகும், ஸ்ம்ருதி புத்தகங்களைப் பார்த்த பிறகும் அனுமானம் செய்து, 'வேதங்களில் திருமணம் செய்து கொள்வதற்கு அனுமதியிருக்கிறது' என்று தெரிந்து கொள்ள முடிகிறது. உறவினர்களைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்ற கட்டளை சாஸ்திரங்களிலில்லை. அதே போல், உறவினர்களுக்குள் செய்துகொள்ளக் கூடாது என்ற கட்டளை யுமில்லை. மாமாவைத் திருமணம் செய்து கொள்வது அவ்வளவு பொருத்தமில்லையென்பது என் கருத்து. இம்மாதிரி உறவினர்களைத் திருமணம் செய்து கொள்வது பழக்கத்தினால் ஏற்பட்டிருக்கிறது. இம்மாதிரி செய்ய வேண்டுமா, வேண்டாமா என்பதை ஜனங்கள் தாமாகவே தெரிந்து கொள்ளலாம்.

கங்கை

சிஷ்யன் : கங்கை ஒருவனின் பாவங்களைப் போக்குகிறது என்று நம்பப்படுகிறது. இது உண்மையாகவே அவ்வாறு ஆகிவிடுமா?

ஆசார்யாள் : ஆம். அதுபற்றிச் சந்தேகமேன்?

சி : அப்படி ஒருவனின் பாவத்தைக் கங்கை போக்கிவிடும் என்றால், எந்தப் பாவத்தை வேண்டுமானாலும் செய்துவிட்டு அதற்குப் பிறகு கங்கையில் ஸ்நானம் செய்து போக்கிக் கொள்ளலாமே!

ஆ : கங்கையில் செய்த ஸ்நானம் அறியாமையால் செய்யப்பட்ட பாவங்க ளைப் போக்கிவிடும். மேலும், அறிந்து எப்போதாவது செய்யப்பட்ட எந்தப் பாவங்களுக்காக வருந்துகிறோமோ அந்தப் பாவங்களையும் போக்கிவிடும். 'கங்கையில் ஸ்நானம் செய்து பாவங்களைப் போக்கிக் கொள்வேன்' என்ற எண்ணத்தோடு வேண்டுமென்றே செய்யப்பட்ட பாவங்களிலிருந்து கங்கை விடுதலை தருவாள் என்று எதிர்பார்ப்பது நியாயமில்லை. இவ்வாறு கூறுவதிலிருந்து கங்கையின் மஹிமை யைப் பற்றிச் சற்றும் சந்தேகப்பட வேண்டாம். கோடிக்கணக்கான

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மக்கள் வெகுதூரம் பிரயாணம் செய்து 'கங்கை என்னைப் புனிதமாக்குவாள்' என்று தீவிரமான சிரத்தையுடன் செல்கிறார்கள். இறைவன் அவர்களுடைய சிரத்தையை வீணாக்குவதற்கு விரும்பமாட்டான். இது சம்பந்தமாக ஒரு கதையும் சொல்லப்படுவதுண்டு. பார்வதி ஒரு சமயம் பரமசிவனிடம் 'எல்லோருடைய பாவங்களையும் கங்கை நீக்கி விடுவாளா' எனக் கேட்டாளாம். சிவன், பார்வதியை அழைத்துக் கொண்டு ஒரு கிழவர் வேடம் பூண்டு வந்தாராம். தான் ஆற்றில் மூழ்குவதாக நடிப்பதாயும், பார்வதியை, தன்னைக் காப்பாற்ற அங்கு போவோர் வருவோரை அழைக்குமாறும் கூறினாராம். மாறுவேடத்திலிருந்த பார்வதியும், ஆற்றில் (மூழ்கியவாறு நடிக்கும்) தன் கணவனைக் காக்க யாரேனும் வருவார்களா எனக் கூக்குரலிட்டாள். மக்கள் அங்கு வந்தனர். அன்னை 'யாருக்குப் பாவம் சிறிதுகூட இல்லையோ அவர்தான் என் கணவரைத் தொடலாம்' எனக் கூறினாள். வந்த ஒரு மனிதர் சற்றும் தயங்காமல் ஆற்றில் நீந்திச் சென்று அவரைக் காப்பாற்றினார். பார்வதி ஆச்சரியத்துடன், வந்த மனிதரை நோக்கி 'உங்களுக்குப் பாவங்களே இல்லையா' என வினவ 'நான் உங்கள் கணவரைக் காப்பாற்றுவதற்கு முன், கங்கையில் மூழ்கித்தானே சென்றேன். அப்பொழுதே என் பாவங்கள் போய்விட்டன' என்று சொல்லிச் சென்றாராம். பார்வதியிடம் பரமசிவன், 'இவரைப்போன்று சிரத்தையிருந்தால் பாவங்களெல்லாம் போய்விடும் என்பதில் என்ன சந்தேகம் இருக்க முடியும்?' எனப் பதிலுரைத்தார். கங்கையின் மஹிமை அத்தகையது.

லௌகீகச் சட்டங்கள்

சிஷ்யன் : லௌகீகச் சட்டங்களுக்குக் கட்டுப்படாமல் இருப்பதால் பாவம் வருவதில்லையாதலால் ஆன்மீக வாழ்வில் ஈடுபாடுள்ளவன் லௌகீகச் சட்டங்களில் கவனம் செலுத்துவது தேவையா?

ஆசார்யாள் : சாஸ்திர சட்டங்களைப் போல் லௌகீகச் சட்டங்களையும் சிரத்தையுடன் அனுஷ்டிக்க வேண்டும். நாம் நம் நன்மைக்காகவே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

லௌகீகச் சட்டங்களை ஏற்படுத்துகிறோம். ஆதலால் அவைகளுக்குக் கட்டுப்படாமல் இருப்பது புத்திசாலித்தனமாகாது.

சி : லௌகீகச் சட்டங்களுக்குக் கட்டுப்படாமல் இருப்பதால் பாவம் எப்படி ஏற்படும்?

ஆ : பாவம் ஏற்படாமல் இருக்கலாம். ஆனால் லௌகீகச் சட்டங்களை மீறினால் லௌகீகத் தண்டனை கிடைக்கும். உதாரணத்திற்கு இடது பக்கத்தில் செல்ல வேண்டும் என்ற சட்டம் இருக்கிறது. இதை மீறி நாம் நடந்து கொண்டோமானால், அதுவே ஒரு விபத்தை ஏற்படுத்தும். ஆகவே அவ்வாறு நடப்பதே ஒரு தண்டனை வடிவாகியிருக்கிறதே!

மதமாற்றம்

சிஷ்யன் : இந்து மதத்தை விட்டு வெளியேறி வேறு மதங்களை ஒப்புக் கொண்டவர்கள் பலர் இருக்கின்றார்கள். இவர்களில் சிலர் திரும்பவும் இந்து மதத்திற்குச் சேர வேண்டும் என்று விரும்பினால் அவர்களை இப்போது சேர்த்துக் கொள்ள முடியுமா?

ஆசார்யாள் : சாஸ்திரங்களில் கூறப்பட்டவை நமக்கு வழிகாட்டியாக இருக்கின்றன. இந்து மதத்தை விட்டு ஒருவன் வெளியேறி விடமுடியும் என்று சாஸ்திரங்களில் கூறப்படவில்லை. ஆகவே சாஸ்திரங்களின் கட்டளைக்குக் கட்டுப்படாதவன் 'பிரஷ்டன்' (தவறியவன்) ஆகிறான். ஆகையால் ஒருவன் இந்து மதத்தை விட்டுச் செல்லும் பிரச்னையே ஏற்படுவதில்லை.

சி : ஒருவன் மீண்டும் இந்துவாக வாழ வேண்டுமென்று விரும்பினால் என்ன செய்ய வேண்டும்?

ஆ : வெவ்வேறு பாவங்களுக்காகப் பொருத்தமான பிராயச்சித்தங்கள் நம் சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. நம் ஸநாதன தர்மத்தை அனுஷ்டிக்காமல் இருந்ததற்காகப் பொருத்தமான பிராயச்சித்தங்களை ஒருவன் முதலில் மேற்கொள்ளலாம். உதாரணத்திற்குப் புனித

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மான கங்கையில் ஸ்நானம் செய்து, நம்முடைய சாஸ்திரங்களில் சிரத்தை வைத்துக் கொண்டால், அவர்களை மீண்டும் இந்துக்களாகக் கருதுவதில் நமக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை.

சி : *அவர்களை இந்துக்களாக ஒப்புக் கொள்வதற்காக நியமங்களுடன் கூடிய "மதம் மாற்றும் முறை" ஒன்று இருந்தால் நன்றாக இருக்காதா?*

ஆ : நன்றாகவே இருக்காது. ஏனென்றால் "அவர்கள் இந்து மதத்தை விடவேயில்லை" என்ற சாஸ்திரங்களுக்கிணங்க இருக்கும் நமது கருத்துக்கு, அது முற்றிலும் முரண்பாடாக இருக்கும்.

சி : *வெளிநாட்டவர்கள் எந்நாளும் இந்துக்களாக இருக்கவில்லை. அவர்களை இந்து மதத்திற்குச் சேர்த்துக் கொள்வதற்காக ஏதாவது செய்ய முடியுமா?*

ஆ : "நமது ஓரரசன் வெளிநாட்டை வென்றால், அந்நாட்டு மக்களும் நம் சாஸ்திரங்களில் உபதேசிக்கப்பட்ட சாமான்ய தர்மங்களை அனுஸரிப்பதற்குத் தகுதி உள்ளவர்களாக இருக்கிறார்கள்" என்று மனு கூறியிருக்கிறார். இதன்படி வெளிநாட்டைச் சேர்ந்த எவர்கள் நம் இந்து மதத்தில் நம்பிக்கை வைத்திருக்கிறார்களோ அவர்களை இந்துக்களாகக் கருதுவதற்கு நாம் தயாராக இருக்கிறோம். அவர்களும் சாமான்ய தர்மங்களைப் பின்பற்றுவதற்குத் தகுதியுடையவர்களாக இருக்கிறார்கள்.

காரியம் செய்யச் சரியான முறை

சிஷ்யன் : *பல சமயங்களில் என்ன செய்யவேண்டும் என்பது நமக்கு நிச்சயமாகத் தெரிவதில்லை. எது சரி, எது சரியில்லை என்கிற குழப்பமும் சில தடவை ஏற்படுகிறது. இம்மாதிரிச் சூழ்நிலைகளில் என்ன செய்ய வேண்டும்?*

ஆசார்யாள் : சில சமயங்களில் எது சரி, எது தவறு என்று தெரிந்தும் மனதில் குழப்பமாக இருக்கும். இது ஏனென்றால் கெட்ட வழி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எளிதாக இருக்கும், நல்ல வழி கடினமாக இருக்கும். அதனாலேயே அவ்வித குழப்பமேற்படும். ஆனால் நாம் அச்சமயத்திலும் சரியான வழியைத்தான் கடைப்பிடிக்க வேண்டும். நமக்குச் சௌகர்யம் ஏற்பட்டாலும், ஏற்படாவிட்டாலும் நல்வழியே சிறந்தது. வேறு சில சமயங்களில் ஒரு வழியில் செய்தாலும், அதற்கு மாறாகச் செய்தாலும், அது சாஸ்திரத்திற்கும் சம்பிரதாயத்திற்கும் எதிராக இருக்காது. இம்மாதிரிச் சூழ்நிலைகளில் எப்படிச் செய்தாலும் தவறில்லை.

எது சரி, எது தவறு என அறிந்து கொள்ள நாம் சாஸ்திரங்களின் கருத்துக்களைத் தெரிந்து கொள்ள வேண்டும். கிருஷ்ணபரமாத்மா,

''ஞாத்வா சாஸ்த்ரவிதாநோக்தம் கர்ம கர்துமிஹார்ஹஸி''

(சாஸ்திரங்களின் கட்டளைகளைத் தெரிந்து கொண்டு இங்கு காரியங்களைச் செய்ய வேண்டும்.) என்று கூறியிருக்கிறார். சாஸ்திரங்களின் விஷயத்தில் நமக்கு அறிவு அவ்வளவு இல்லாவிட்டாலும் மஹான்கள் இதுபோன்ற சூழ்நிலையில் எவ்வாறு நடந்தார்கள் என்று கவனித்து நாமும் அதுபோல் நடந்து கொள்ள வேண்டும்.

யதா தே தத்ர வர்தேரன்| ததா தத்ர வர்தேதா:|

(மஹான்கள் இதுபோன்ற சூழ்நிலையில் எவ்வாறு நடந்து கொண்டார்களோ அதேபோல் நடந்து கொள்) என உபநிஷத் கூறுகிறது.

ஒருவனுக்குச் சந்தேகமிருந்தால் குருவிடம் சென்று சந்தேகத்தைப் போக்கிக்கொள்ள வேண்டும். அப்படி குரு ஸந்நிதிக்குச் செல்ல இயலாதென்றால் புனிதமான சான்றோரிடம் சென்று என்ன செய்ய வேண்டுமென்று தெரிந்து கொள்ள வேண்டும். சில விசேஷமான சமயங்களில் ஒருவனுக்கு அந்தச் சமயத்திலேயே முடிவு செய்ய வேண்டி வரும். அச்சமயத்தில் மனதிலும் குழப்பமிருக்கலாம். கேட்பதற்கும் தகுந்தவர்கள் இல்லாமலிருக்கலாம். இதுபோன்ற சமயங்களில் இறைவனைப் பிரார்த்தித்துக் கொண்டு பிறகு எது செய்ய வேண்டுமென்று தோன்றுகிறதோ, அதுபோல் செய்யலாம். ஆனால், இச்சமயத்தில் நம் மனம் ஆசையினால் தூண்டப்பட்டு நம்மைத் தவறான வழிக்கு அழைத்துச் செல்கிறதா என்பதில் கவனத்துடனிருக்க வேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மறுபிறவி

சிஷ்யன் : *சாஸ்திரங்கள் மறுபிறவி இருக்கிறது என்று கூறுகின்றன. இதற்கு ஏதாவது யுக்திகளும் இருக்கின்றனவா?*

ஆசார்யாள் : ஆம். பலவிதமான யுக்திகள் இருக்கின்றன. உலகத்தில் ஒருவன் துன்பப்படுகிறான், மற்றொருவன் சந்தோஷமாக வாழ்கிறான். இதற்குக் காரணமென்ன? இந்தப் பிறவியில் செய்த கர்மாக்கள் காரணமான பலனில்லாவிட்டாலும் சிலர் துன்பங்களையும், மற்ற சிலர் இன்பங்களையும் அடையக் காரணம் என்ன? சிறு குழந்தைகளிடத்தும் இது போன்ற நிலை இருப்பதைப் பார்க்கிறோம். இதற்கெல்லாம் பதில் கூற, மறுபிறவி என்று ஒன்று இருப்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். சென்ற பிறவியில் நாம் செய்த பாவச்செயல்களின் விளைவாகவே நாம் துன்பங்களையும், புண்ணியச் செயல்களின் பலனாக நாம் இன்பங்களையும் தற்போது அனுபவிக்கிறோம் என்று கூறுவதே பொருத்தமாக இருக்கும். மேலும், சில மக்கள் தமது முற்பிறவியைப் பற்றிய ஞாபகம் பெற்றிருக்கிறார்கள். சில விஞ்ஞானிகளும் இது விஷயமாக ஆராய்ச்சி செய்கிறார்கள் என்று கேள்விப்பட்டேன். முற்பிறவியை ஞாபகம் செய்து கொண்ட சிலர், சில நிகழ்ச்சிகளையும் சில காட்சிகளையும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவைகள் நிரூபிக்கப்பட்டும் இருக்கின்றன.

நமக்கு அனுபவம் என்று ஒன்று இல்லாமலிருந்தால், தற்போது ஞாபகம் என்பது எப்படி வரும்? ஆகவே, இதற்கு முன்பு ஒரு பிறவியென்றிருந்து அதில், அவ்வனுபவங்கள் ஏற்பட்டிருக்க வேண்டும்.

நம் சாஸ்திரங்கள், சில நோய்கள் நீங்குவதற்காகச் சில பிராயச்சித்தங்களைக் கூறுகின்றன. மேலும், முற்பிறவியில் செய்த சில பாவச்செயல்கள் பற்றியும் பிராயச்சித்தங்களைக் கூறுகின்றன. அப்பிராயச்சித்தங்களைச் செய்தால், அவ்வியாதிகள் தீர்ந்து விடுகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முற்பிறவியில் செய்த பாவச் செயல்களுக்கான பிராயச்சித்தங்கள், முற்பிறவி என்பதே இல்லாமலிருந்தால் வியாதியை எப்படிப் போக்க முடியும்?

வெறும் சிரத்தைதான் காரணம் என்றால், சிரத்தையுடன் பிராயச்சித் தங்களை, அறியாமையினால் தவறான வழியில் செய்தால் அவை பலனளிப்பதில்லை என்பதையும் நாம் பார்க்கிறோம். பிறகு அந்த நோய்களும் குணமடைவதில்லை.

சில குழந்தைகள், தம் சிறுவயதிலேயே சில சாமர்த்தியங்களைக் காட்டுகின்றன. அவை இப்பிறவியிலேயே அச்சிறுவயதிற்குள், அவ் வளவு சாமர்த்தியங்களையும் பெற்றுக் கொண்டிருக்க முடியாது. குழந் தையின் தந்தை, தாத்தா முதலியவர்களிடத்தும் அவ்விதமான திறனை நாம் காணாமலிருந்திருக்கலாம். இதிலிருந்து, குழந்தைக்கு முற்பிறவியிருந்தது என்றும், அதில்தான் அச்சாமர்த்தியங்களைப் பெற் றுக்கொண்டது என்றும் தெரிகின்றன.

மறுபிறவியை நாம் ஒப்புக்கொள்ளாவிட்டால், இறைவன் பாரபட்ச மாக நடந்து கொள்கிறான் என்றுதான் முடிவுக்கு வர வேண்டும். ''சிலருக்கு இறைவன் இன்பத்தையும் மற்றவர்களுக்குத் துன்பத்தை யும் அளித்திருக்கிறான். மேலும் இறைவனுக்குக் கருணையே கிடை யாது. ஏனெனில் சிலர் எப்போதும் துன்பத்தையே அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்'' - இம்மாதிரி இறைவனைப் பற்றிக் கூறுவதை எவரும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். மறுபிறவி இருப்பதையே ஒப்புக் கொள்வர்.

பிறந்த குழந்தைக்கு யாரும் ஒன்றும் சொல்லிக் கொடுக்காமலிருந் தாலும் அது தாயின் பாலைக் குடிக்கிறது. ஏனெனில், தாய்ப்பாலிலி ருந்து திருப்தி கிடைக்கும் என்ற அறிவு அதற்கு இருந்திருக்க வேண் டும். பிரயோஜனம் என்பது இல்லாமல், முட்டாள்கூட ஒரு செயலில் ஈடுபடமாட்டான். தாய்ப்பாலைக் குடிக்க முயற்சி செய்யும் குழந்தைக் கும் அதிலிருந்து திருப்தியுண்டு என்ற அறிவு இருந்திருக்க வேண் டும். அத்தகைய அறிவு இப்பிறவியில் ஏற்பட்டிருக்க முடியாது. ஏனென்றால், இதற்கு முன் குழந்தை இப்பிறவியில் தாய்ப்பாலைக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குடிக்கவில்லை. ஆகவே அந்த அறிவை, குழந்தை முற்பிறவியில் தான் அடைந்திருக்கவேண்டும். இதுவும் முற்பிறவி இருந்ததைக் காட்டுகிறது.

மறுபிறவியை நாம் ஒப்புக் கொள்ளாமலிருந்தால், மனிதன் இறந்த பிறகு அவன் எப்போதும் ஸ்வர்கத்திலோ, அல்லது நரகத்திலோ வாழ்வான் என்று கூற வேண்டி வரும். இது சரியாகுமா? ஏனெனில், எதற்கு ஆரம்பமிருக்குமோ அதற்கு முடிவுமிருக்க வேண்டும். ஸ்வர்கத்தில் போய் வாழ்வது என்ற நிலைமையை எடுத்துக்கொண்டால் ஆரம்பித்த ஸ்வர்கத்திற்கு ஒரு முடிவும் இருக்க வேணடும்.

மேலும், ஒருவிதமான பாவமோ புண்ணியமோ செய்யாத ஒரு குழந்தை இறந்தபின் எங்கு செல்லும் என்ற கேள்வி எழும். இதற்குப் பதிலாக 'நரகம்' என்று சொன்னால் செய்யாத குற்றங்களுக்கு அது தண்டனை அனுபவிக்க வேண்டும் எனப்பொருள் வரும். 'ஸ்வர்கமே செல்லும்' என்றால் அதற்கு, செய்யாத புண்ணியங்களுக்காகப் பலன் கிடைக்கிறது என்று பொருள் வரும். ஆகவே புண்ணியமும், பாவமும் செய்யாத ஒரு குழந்தை இறந்தால் ஸ்வர்கத்திற்குத்தான் செல்ல வேண்டுமென்றால் ஒவ்வொரு தாயும் தன் குழந்தையைப் பிறந்தவுடன் கொன்று விடலாமல்லவா? அப்படிச் செய்தால்தான் அது எப்போதும் ஸ்வர்க இன்பம் அனுபவிக்கும் என்பதற்காகக் கொன்று விடலாமல்லவா? இது போன்ற பைத்தியக்காரத்தனமான கருத்துத்தான் கிடைக்கும், நாம் மறுபிறவியை ஒப்புக்கொள்ளவில்லையெனில்.

நான் மேற்கூறியவை, சில காரணங்களே. மேலும் பல காரணங்கள் உள்ளன. அத்தகைய யுக்திகளாலும் மறு பிறவியென்பது உண்டு என்று நாம் தெரிந்துகொள்ளலாம்.

சாஸ்திர தர்மங்கள்

சிஷ்யன் : காலத்தின் போக்கினால் சாஸ்திரங்களின் சொற்படி நடப்பது தற்போது கடினமாயிருக்கிறது. காலங்களிற்கேற்ப சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருப்பவைக்கும் சற்று மாறுதல் உண்டாக்க முடியுமா?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆசார்யாள் : இலட்சியத்தை என்றுமே குறைக்கக் கூடாது. பல மக்கள் லஞ்சம் வாங்குவதைப் பார்க்கிறோமே, இதற்காக லஞ்சம் வாங்குவது சரி என்று ஒரு சட்டம் இயற்றி விட முடியுமா? இப்படி நாம் செய்தால் இப்போதிருக்கும் லஞ்சத்தைக் காட்டிலும் பின்னால் அது அதிகமாகி விடும். அதேபோல் சாஸ்திரங்கள் விஷயத்திலும் மாறுதல் வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கக் கூடாது. சாஸ்திரங்கள் காலங்களின் தன்மையைப் பொருத்தே இருக்கின்றன. ஆதலால்தான் அவைகளிலேயே 'எந்த அளவிற்கு முடியுமோ அந்த அளவிற்குச் செய்' என்றிருக்கிறது. ஆதலால் நாமும் இப்போதிருக்கும் சூழ்நிலையில் நமக்கு எந்த அளவிற்கு முடியுமோ அந்த அளவிற்கு மேற்கொள்ள வேண்டும். ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா,

''ஸ்வல்பமப்யஸ்ய தர்மஸ்ய த்ராயதே மஹதோ பயாத்''

(இந்த தர்மத்தைச் சிறிது பயிற்சி செய்தாலும் அது பெரும் பயத்திலிருந்தும் காப்பாற்றும்) என்று கூறியிருக்கிறார். ஆகவே சாஸ்திரங்களையே மாற்ற வேண்டும் என்று கூறுவது எவ்வாறு சரி ஆகும்?

மேலும், இக்காலத்தில்கூட ஸந்தியாவந்தனம் செய்ய முடியாது என்று யாரும் கூற முடியாது. இதைத்தவிர சாஸ்திரங்களை மாற்ற வேண்டுமென்றால், நடந்தது, நடப்பது, நடக்கப்போவது இவை மூன்றைப் பற்றியும் ஒருவனுக்குத் தெரிந்திருக்க வேண்டும். கர்மா எப்படிப் பலனளிக்கும் என்பதே தெரியாமலிருந்தால் எப்படி நாம் சாஸ்திரங்களின் கட்டளைகளை மாற்ற முடியும்? மேலும், ''ஒரு காரியத்தை இப்போது கஷ்டமானாலும் செய், பின்னால் நல்ல பலனடைவாய்'' என்று எவ்வாறு கூற முடியும்? அடுத்த பிறவியில் நடக்கப்போவது என்ன என்பது நமக்குத் தெரியாது. முற்பிறவியில் நடந்ததும் தெரியாது. ஆதலால் முக்காலமும் தெரிந்த ஸர்வக்ஞன்தான் இது சரி, இது தவறு எனக் கூற முடியும். நமக்கு அதுபோல் அறிவு இல்லாததால் சாஸ்திரங்களை மாற்றுவதற்கு நமக்குத் தகுதியில்லை.

சி : பல இடங்களில் யாகங்கள் நடைபெறுகின்றன. யாகங்களுக்கு அதிகமாகப் பணம் செலவழிகிறது. இப்பணத்தை ஏழைகளுக்குக் கொடுத்தி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ருந்தால் அவர்கள் நன்மை அடைந்திருப்பார்கள் என்று சிலர் யாகத்தைப்பற்றி எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள். இது சரியா?

ஆ : யாகத்தின் மேல் நாம் செலவழிப்பது, ஜனங்கள் லௌகீகப்பொருட்கள் மேல் செலவழிப்பதில் ஒரு சிறு பகுதிகூட ஆகாது. சிறிதளவு நெய் யாகத்தில் விடுகிறோம். இதற்கு என்ன ஆட்சேபணை இருக்க முடியும்? யாகத்தின் மூலம் இறைவன் திருப்தியுற்று அவன் கிருபையால் நாம் செலவிட்ட பொருட்களைக் காட்டிலும் அதிக பலன் கிடைக்கும். உதாரணமாக, இறைவன் யாகத்தினால் திருப்தியடைந்து தக்க காலங்களில் சரியான அளவு மழை போன்றவற்றைத் தருகிறான். ஆதலால் யாகங்களை வீண் செலவென்று கூற முடியாது. விதைகளை நாம் நிலத்தில் இட்டால் பின் நல்ல விளைச்சல் கிடைக்கும். இதை விடுத்து விதைகளை வீணாகப் போடுகிறோமே, அப்படியே சாப்பிடலாமே என்று கூறுவது பொருத்தமா? விதைகளை வயலில் இட்டால்தான் தானியங்கள் கிடைக்கும். அதேபோல் யாகத்திற்காகச் சிறிது நாம் கஷ்டப்பட்டாலும் உத்தமமான பலன் கிடைக்கும். சாஸ்திரங்களும் எந்த அளவிற்கு ஒருவனுக்குச் சாமர்த்தியம் உண்டோ, அவ்வளவிற்கு ஒருவன் யாகத்தைச் செய்ய வேண்டுமென்று கூறுவதிலிருந்து மிகவும் செலவாகும் ஒரு யாகத்தை ஏழை செய்யுமாறு சாஸ்திரம் கூறவில்லை என்பதைக் கவனிக்க வேண்டும். ஆதலால் நாம் யாகத்தில் செலவழிப்பது நம் நன்மைக்காகத்தான். அதை வீண் செலவாகக் கருதுவது தவறு.

சாஸ்திரக் கட்டளைகள்

சிஷ்யன் : தொலைதூரம் ரயிலில் பயணம் செய்கையில் எப்படி ஸந்தியா வந்தனம் செய்வது? ஸந்தியாவந்தனம் செய்யும்போது நாம் ஒரே திசையில் போய்க் கொண்டிருக்கமாட்டோமே!

ஆசார்யாள் : வண்டி நடுநடுவில் நிற்குமல்லவா?

சி : நின்றால்?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆ : நீண்டகாலம் ஒரு ரயில் நிலையத்தில் வண்டி நின்றால் அங்கு ஸந்தியாவந்தனம் செய்து கொள்ளலாமே?

சி : *இம்மாதிரிப் பொறுத்தமாக நிற்குமிடங்கள் இல்லாவிடில் என்ன செய்வது?*

ஆ : அச்சூழ்நிலையில் வேறு வழியில்லாததால் மனதாலேயே செய்து கொள்ளலாம்.

சி : *பூஜைக்கும் அதே நியமம் தானே?*

ஆ : ஆம்.

சி : *பயணம் செய்யும்போது தியானம் செய்து கொள்ளலாமா?*

ஆ : ஒருவனுக்குத் தகுந்த மனவடக்கம் இருந்தால் எங்கு வேண்டுமானாலும் தியானம் செய்யலாம்.

சி : *பயணம் செய்யும்போது ஹோட்டல் சாப்பாடுகளைச் சாப்பிடுவது சரியா?*

ஆ : நாம் சாப்பிடுவதற்கும், நம் மனதின் நிலைமைக்கும் மிகவும் சம்பந்தம் இருக்கிறது. ஆதலால் பயணங்களில் மட்டுமின்றி எப்போதுமே ஹோட்டல் உணவுகளைச் சாப்பிடாமல் இருப்பது நல்லது. பழங்கள் போன்றவற்றைச் சாப்பிட்டு நம் யாத்திரையை மேற்கொள்ளலாம்.

சி : *புது இடத்திற்குச் சற்றுக் காலத்திற்கு சென்று அங்கு சாமான்யமாகச் செய்வதைப் போல் அனுஷ்டானங்களைச் செய்வது கடினம். இச்சூழ்நிலைகளில் நாம் எவ்வாறு செய்ய முடியும்?*

ஆ : இச்சூழ்நிலைகளில் எவ்வளவு முடியுமோ அவ்வளவுக்கு அனுஷ்டானம் செய்யலாம். சாஸ்திரங்களும் இதைத்தான் கூறுகின்றன.

சி : *ஆன்மீக வழியில் ஈடுபாடுள்ளவன், எம்மாதிரி உணவைச் சாப்பிட வேண்டும் என்று ஆசார்யாள் உபதேசிப்பார்கள்?*

ஆ : ஸாத்விகமான உணவையே உண்ண வேண்டும். மனதிற்கு அமைதி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

யையும், உடலுக்குப் பலத்தையும் அளிக்கும் ஆகாரம் ஸாத்விக ஆகாரம் என்ற வகைக்குச் சேரும். வெங்காயம், காப்பி, டீ, கள், பூண்டு போன்றவைகளை எந்நாளும் சாப்பிடக் கூடாது. நமக்குத் தேவைப்படுவதைக் காட்டிலும் அதிகமாகச் சாப்பிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இதிலிருந்து, நம்முடைய பலமெல்லாம் குறையுமளவிற்கு உபவாசம் இருக்க வேண்டும் என்று பொருளில்லை.

இறைவன் நமக்கு ஆகாரத்தைக் கொடுத்திருக்கிறான் என்று கருதி, உடலுக்காகச் சாப்பிட வேண்டுமே தவிர, ருசிக்காக தாம் விரும்பியவற்றைச் சாப்பிடுதல் ஆன்மீக வாழ்வில் ஈடுபட்டிருப்போருக்கு நல்லதல்ல.

உணவிற்கு மூன்று விதமான தோஷங்கள் ஏற்படலாம். வெங்காயம் போன்றவை தாமாகவே நல்லதல்ல. மயிர், அழுக்கு போன்றவைகளால் உணவிற்கு தோஷமேற்படலாம். இது இரண்டாவது தோஷம். சமையல் செய்பவர் மற்றும் பரிமாறுபவனின் மனநிலைமை மற்றொரு காரணம். பாவங்கள் செய்து கொண்டிருப்பவர்கள் சமைத்ததைச் சாப்பிடுவது ஆன்மீகப் பாதையில் இருப்பவனுக்கு அவ்வளவு நல்லதல்ல. தன் வீட்டில் ஒழுங்காகச் சமைக்கப்பட்ட புனிதமான ஆகாரத்தை மட்டும் சாப்பிடுவதே நல்லது.

சி : *சில நாட்களில் உபவாசம் வைத்துக் கொள்வது நல்லதா?*

ஆ : ஆம். ஏகாதசீ போன்ற நாட்களில் பலகாரத்துடன் மட்டுமிருப்பது நல்லது என்று கூறப்பட்டிருக்கின்றது. ஆதலால், அது போன்ற நாட்களில் உபவாசத்துடன் இருந்தால் புண்ணியமும் கிடைக்கும்.

உபநயனம்

சிஷ்யன் : *உபநயனத்தைத் தக்ஷிணாயனத்தில் செய்யலாமா? (தக்ஷிணாயனம் என்பது ஸூர்யன் தென்திசை செல்லும் காலம்)*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆசார்யாள் : பிராஹ்மணர்களுக்கு அச்சமயத்தில் உபநயனம் செய்யக் கூடாது.

சி : *சாமான்யமாக அண்ணா, தம்பி ஆகிய சகோதரர்களுக்கு ஒரே சமயம் உபநயனம் நடைபெறுவதைப் பார்க்கிறோம். ஒரு பையனுக்கு அவன் தந்தை உபதேசம் செய்கிறார். மற்றவனுக்கு வேறு ஓர் உறவினர் உபதேசம் செய்கிறார். சிலர் இதைத் தவறென்று கருதுகின்றனர். இது பற்றி ஆசார்யாளின் கருத்து என்ன?*

ஆ : இம்மாதிரி இரண்டு பேராகச் சேர்ந்து அண்ணா, தம்பிகளுக்கு உபநயனம் நடக்கும்போது ஒருவனுக்கு அப்பாவும், மற்றவனுக்கு வேறு உறவினரும் உபதேசம் செய்வது சாஸ்திரத்திற்கு சம்மதமில்லை.

சி : *எப்போது உபநயனம் செய்ய வேண்டும்?*

ஆ : எப்போது பையன் சிறுவனாக இருக்கிறானோ அப்போது. பிராஹ்மணனிற்கு கர்ப்ப காலத்திலிருந்து எண்ணினால் எட்டாவது வயதில் உபநயனம் செய்ய வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. விசேஷமாக பலன்கள் ஏற்படுவதற்குச் சில வயதுகள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஐந்தாவது வயதில் செய்தால் விசேஷமாகப் பிரஹ்மவர்ச்சஸ் கிடைக்கும். காலத்தைத் தள்ளிப் போடுவது உபநயன விஷயத்தில் நல்லதேயில்லை. ஆனால், இந்தக் காரணத்தினால் "ஒருவனுக்கு அதிக வயதாகி விட்டது. இதுவரை பூணூல் போடவில்லை. அதனால் இனி மேலும் செய்ய வேண்டாம்" என்று எவரும் கருத வேண்டாம்.

சி : *காலை ஸந்தியாவந்தனத்தைத் தொடங்குவதற்கு எது சரியான காலம்?*

ஆ : ஸூர்யோதயத்திற்குச் சற்று முன்பு.

சி : *காலையில் சீக்கிரமாக எழுந்திருக்க வேண்டும் என்று ஆசார்யாள் உபதேசிக்கிறாரா?*

ஆ : ஆம். காலை வேளையில், ஸூர்யோதயத்திற்கு முன்புதான் அனுஷ்டானத்திற்கு மிகவும் பொருத்தமான காலம். இதுபோல் செய்ய முடியா

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விடில் அது வேறு விஷயம். இரவு 10 - 11 மணிக்குள் தூங்கி காலை 4 - 5 1/4 க்குள் எழுந்திருப்பது மிகவும் நல்லது.

சி : ***ஏதாவது காரணத்தினால் ஸந்தியாவந்தனம் செய்ய நேரமாகி விட்டது, தாமதமாகி விட்டது என்றால், அப்போது அந்த வேளைக்கான ஸந்தியாவந்தனத்தை விட்டு விடலாமா?***

ஆ : சாமான்யமாக எவ்வளவு நேரமானாலும் ஸந்தியாவந்தனத்தை விடக் கூடாது. பிராயச்சித்த அர்க்யம் கொடுத்தாவது செய்ய வேண்டும். காலத்தை மீறினாலும் செய்ய வேண்டும் என்பதால், காலத்தில் செய்ய வேண்டியதில்லை என்று அர்த்தமில்லை. முயற்சி செய்து எப்போதும் பொருத்தமான காலத்தில் செய்ய வேண்டும். அப்படிச் செய்ய முடியா விட்டால், எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் செய்ய வேண்டும். ஆனால் விட்டுவிடக் கூடாது.

சி : ***ஒருவனுக்கு வியாதியிருந்தால்?***

ஆ : ஒருவனுக்குத் தன் மனம் வசத்திலிருந்து, மயக்கம் முதலியவை இல்லாமலிருந்தால், வியாதியிருந்தாலும் மானஸீகமாகப் பண்ணலாம்.

சி : ***காலையில் ஸந்தியாவந்தனத்திற்கு முன்பு ஸ்நானத்தைச் செய்ய வேண்டுமா?***

ஆ : ஆம். காலை ஸந்தியாவந்தனத்திற்கு முன்பு ஸ்நானம் கட்டாயமாகச் செய்ய வேண்டும். ஆனால் ஒருவனுக்கு வியாதி ஏதாவது இருந்தால், மந்திர ஸ்நானமாவது செய்து கொள்ளலாம். வியாதி மிகவும் அதிகமாக இருந்தால், மானஸீகமாக ஸந்தியாவந்தனம் மட்டுமாவது செய்ய வேண்டும்.

சி : ***காயத்ரீ மந்திரத்தை எவ்வளவு முறை ஜபிக்க வேண்டும்?***

ஆ : எவ்வளவு முடியுமோ அவ்வளவு; ஆனால், காலையில் 108 என்று சாஸ்திரத்தில் குறைந்தபட்ச எண்ணிக்கை இருக்கிறது. அதற்கும் குறைவான எண்ணிக்கை மட்டும் செய்யக் கூடாது. வேறு வழியில்லையென்றால், அவர்கள் விஷயமே வேறு. சாதாரணமாக, நாம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சாஸ்திரத்தில் சொல்லப்பட்ட குறைந்தபட்ச எண்ணிக்கைக்கு மட்டும் குறைத்து ஜபிக்கக் கூடாது.

சி : பிரஹ்மசாரிக்கு ஸமிதாதானமும், பிரஹ்மயக்ஞமும் நித்ய கர்மாக் களா?

ஆ : ஆம்.

சி : கல்லூரி, அலுவலகம், பள்ளி முதலியவற்றிற்குப் போக வேண்டியி ருப்பதால் மாத்யாஹ்னிகத்தை சரியான காலத்தில் செய்ய முடிவ தில்லை. ஆசார்யாள் இதை எப்படிச் செய்ய வேண்டுமென்று கருதுகி றார்கள்?

ஆ : காலை ஸந்தியாவந்தனத்துடனே, மாத்யாஹ்னிகத்தையும் செய்து விடலாம். வேறு வழியில்லையென்றால் இவ்வாறு செய்யலாம்.

விதியும் முயற்சியும்

சிஷ்யன் : விதியை வெல்வதற்கு ஒருவனிடம் சக்தியிருக்கிறதா? இதை நான் கேட்பதற்குக் காரணம் என்னவென்றால் சாஸ்திரத்தில் ஒரு பக்கம் 'விதியை வெல்லலாம்' என்று காண்கிறோம். உதாரணத்திற்கு யோக வாஸிஷ்டத்தில்,

சுபா சுபாப்யாம் மார்காப்யாம் வஹந்தீ வாஸநாஸரித் |
பௌருஷேண ப்ரயத்னேன யோஜநீயா சுபே பதி ||

(வாஸனைகளென்னும் ஆறு ஒருவனை, சுபம், அசுபம் என்ற மார்க் கங்கள் வழியாக அழைத்துச் செல்கிறது. முயற்சியினாலும், பௌரு ஷத்தினாலும் ஒருவன் நல் வழிக்குச் செல்ல வேண்டும்.) என்பதை நாம் காண்கிறோம். இது விதியைக் காட்டிலும் முயற்சிக்கு அதிக பலமிருக்கிறது எனக் காட்டுகிறது. மற்றொரு பக்கம்,

உபபோகேனைவ சாம்யதி
(பிராரப்தம் பலனைக் கொடுத்துத்தான் தீரும்) என்றும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

யதபாவீ நதத்பாவீ பாவீ சேன்னததன்யதா

(எது நடைபெற வேண்டாமோ அது நடைபெறாது. எது நடைபெற வேண்டுமோ அது அப்படித்தான் நடைபெறும்) என்றும் நாம் காண்கி றோம். ஆகவே, எனது சந்தேகத்தை ஆசார்யாள் தெளிவுபடுத்துவார் களா?

ஆசார்யாள் : முதலாவதாக, 'பிராரப்தம்' என்றால் என்ன? அது எப்படிச் செயல்களைச் செய்கிறது என்பதைக் கவனிக்க வேண்டும். முற்பிறவி களில் செய்த எந்தக் கர்மாக்கள் தற்போது பலனைத் தருகின்றனவோ, இவைதான் இப்பிறவிக்கு நேர்க் காரணமாக இருக்கின்றன. இதையே நாம் பிராரப்தமென்று அழைக்கிறோம். பிராரப்தமானது வலுக்கட்டாய மாக ஒருவனை நல்வழியிலோ, தீயவழியிலோ இழுத்துச் செல்வ தில்லை. அவை படிப்படியாக இம்மாதிரி வழிகளில் இழுத்துச் செல் கின்றன. எப்படியென்றால் அவை, மனதில் விருப்பு, வெறுப்பு என்ற வாஸனைகளைக் கிளப்பி விடுகின்றன. அதனால்தான் கிருஷ்ண பகவான்,

ஸத்ருசம் சேஷ்டதே ஸ்வஸ்யா: ப்ரக்ருதேர் ஞானவானபி |
ப்ரக்ருதிம் யாந்தி பூதானி நிக்ரஹ: கிம் கரிஷ்யதி ||

என்று கூறியுள்ளார்.

இச்சுலோகத்தின் வியாக்யானத்தின் போது சங்கரர் தானே ஓர் எதிர்க் கேள்வியைக் கிளப்புகிறார். அது என்னவென்றால் ''இதுபோல் ஒவ்வொருவனும் தன் ஸ்வபாவம் போல் செயல்களைச் செய்வா னென்றால் சாஸ்திரங்களுக்கே இடமில்லை. இதற்குக் காரணம் 'நடக்க வேண்டியதே நடக்கும்' என்று கூறுவதேயாகும். இப்படியிருக் கும்போது சாஸ்திரங்களில், 'நல்வழியில் நட' என்று கூறுவதில் என்ன பிரயோஜனம்?'' இம்மாதிரி ஒரு எதிர்க் கேள்வியொன்றை அவரே எழுப்பி, இது தவறு என்று கூறி, அடுத்து வரும் சுலோகத்தையே உதாரணமாகக் காட்டுகிறார். அங்கு,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்த்ரியஸ்யேந்த்ரியஸ்யார்த்தே ராகத்வேஷௌ வ்யவஸ்திதௌ|
தயோர்ன வசமாகச்சேத்தௌ ஹ்யஸ்ய பரிபந்தினௌ ||

என்று கூறியுள்ளார்.

இதிலிருந்து விருப்பு வெறுப்புகளை வென்றால் நாம் அவைகளின் வசம் விழமாட்டோம் என்று தெரிகிறது. ஆகவே, சாஸ்திரங்களை ஆதாரமாக வைத்துக்கொண்டு விருப்பையும் வெறுப்பையும் நாம் விட்டுவிட்டால், எப்போதும் நல்வழியிலேயே செல்வோம். 'பிராரப் தத்தை வெல்ல முடியுமா' என்று நீ கேட்டாயே அதற்கு 'நிச்சயமாக வெல்லலாம்' என்பதே பதிலாகும். பிராரபத்தத்தை வெல்ல முடியாது என்று சொன்னால் மனிதனை அவன் செய்த செயல்களுக்குப் பொறுப்பாளி என்று கூற முடியாது. ஏனென்றால், அவன் அப்படித் தான் செய்ய வேண்டியதாக இருந்தது என்று கூறிவிடலாம்.

முன்பு செய்யப்பட்ட எக்கர்மா இப்போது பலனளிக்குமோ அதுவே பிராரப்தம் என்று நான் கூறினேன். அது முற்பிறவியில் செய்த நம் முயற்சிகளினால் ஏற்பட்ட கர்மா. ஆதலால் முயற்சியைக் காட்டிலும் அதிக பலமுள்ளதாக பிராரப்தம் என்றுமே இருக்க முடியாது. ஒருவன் முன் செய்த செயல்களின் வழியை இப்பிறவியில் முயற்சியால் மாற்ற லாம். ஆனால் முற்பிறவியில் செய்யப்பட்ட கர்மாவின் வாஸனை மிக அதிகமாயிருந்தால் அதை மாற்ற நாம் மிகவும் அதிகமாக முயற்சி செய்ய வேண்டியிருக்கலாம். இது முக்கால்வாசி விஷயங்களிலும் உண்மை. இதற்கு உதாரணம் தூணில் கட்டப்பட்டிருக்கும் ஒரு பசு மாடே ஆகும். கட்டப்பட்டிருக்கும் கயிறு எவ்வளவு நீளமோ, அது வரை பசுமாடு சுதந்திரமாகச் சுற்றலாம். ஆனால் அதைத் தாண்டிச் செல்ல முடியாது. அதேபோல் நாட்டின் விதியும், மற்றவர்களின் விதி யும், நம் செயல்களும் நமது சுதந்திரத்திற்கு ஓர் எல்லையை வைக்கின் றன.

ஒரு மனிதன் ஓரிடம் செல்வதற்காக ஒரு ரயில் வண்டியில் ஏறிச் செல்லலாம். ஆனால், அவ்வண்டி விபத்துக்கு ஆளாகலாம். அதே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

போல் ஒருவன் சில சமயங்களில் தேர்வில் நன்கு எழுதியிருந்தாலும் வர வேண்டிய மதிப்பெண் வராமலிருக்கலாம். இதெல்லாம் கண்டு வருத்தத்திற்கு இடங்கொடுக்கக் கூடாது.

ஆன்மீக வாழ்வில் ஏறக்குறைய எதனையும் முயற்சியால் அடைந்து கொள்ளலாம். பிராரப்தத்தின் வசப்படி ஒருவன் க்ரஹஸ்தனாக இருக்க வேண்டும் என்றிருக்கலாம். ஆனால், அவன் குருவின் அனுக்ரஹத்தாலும், முயற்சியாலும் பிரஹ்மசர்ய வாழ்க்கையையே கடைப்பிடித்து மேலும் ஸந்யாஸ வாழ்வும் பெறலாம். முன் செய்த செயல்களின் பலனை அனுபவித்துத்தான் தீர வேண்டுமென்றாலும் பிராரப்தத்தின் சக்தியை இறைவனருளால் மிகவும் குறைத்து விடலாம். ஜபம், ஹோமம், தியானம், பூஜை, நல்லோர்களின் சேர்க்கை போன்றவைகளால் பிராரப்தத்தின் கெட்ட பலனை அதிக அளவிற்குக் குறைத்துவிடலாம்.

சி : ***ஒருவனின் ஜாதகத்தில் ஒருவன் 80 வயது இருப்பான் என்றிருந்தால் அவன் அதற்கு முன் இறக்கமாட்டான் என்று அர்த்தமா? அதேபோல் இளமையிலேயே ஒருவன் இறக்க வேண்டுமென்று இருந்தால், அவன் அவ்வயதுக்கு மேல் உயிர் வாழ மாட்டானா?***

ஆ : இரண்டு கேள்விகளுக்கும் 'இல்லை' என்பதே பதில்.

சி : ***ஜாதகத்தைத் தவறாகக் குறித்ததாலோ அல்லது ஒழுங்காகப் படிக்காததாலோதான் இவ்வாறு ஏற்படுமா?***

ஆ : இல்லையே.

சி : ***அப்படியென்றால் 'ஜாதகத்தை ஆதாரமாக வைத்துக்கொண்டு கூறப்பட்டதெல்லாம் பிரயோஜனமில்லை. மேலும் கைரேகையைப் படிப்பதிலும் அர்த்தமில்லை. ஆகவே ஜோதிஷ சாஸ்திரத்திற்கே பிரயோஜனமில்லை' என்பதா ஆசார்யாளின் கருத்து?***

ஆ : இல்லையே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சி : ஆசார்யாள் சற்று விளக்கம் கூறுவார்களா?

ஆ : ஜாதகம் ஒருவன் முற்பிறவியில் செய்த கர்மாவின் பலனைக் காட்டுகிறது. ஆதலால் அதன்படிச் சொல்லப்பட்ட பலன், முற்பிறவியில் செய்யப்பட்ட கர்மாவினால் வரக்கூடிய பலன். இந்தப் பிறவியில் நம் சுதந்திரச் செயல்களினால் அதை நிச்சயமாக மாற்றிவிடலாம். மார்க்கண்டேயனைப் போல் நாம் இறைவனின் அருளைப் பெற்றால் நாம் வாழ வேண்டிய காலத்திற்கும் மேல் அதிகமாக வாழலாம். அதேபோல் கெட்ட வழிகளில் சென்று உடல்நலத்திற்குக் கெடுதல் செய்து கொண்டு வாழவேண்டிய காலங்கூட வாழாமல் மரணமடையலாம். இதெல்லாம், ஜோஸ்யப் புத்தகத்தில் இல்லாமல் நாமாகவே பார்க்கலாம். ஆகவே, முயற்சியினால் முடிந்த அளவிற்கு மாற்றிக்கொள்ளலாம். மேலும் ஜோஸ்யர்களும் 'இம்மாதிரி செய்தால் அக்கர்மாவின் பலன் குறையும்' என்று கூறுவதை நாம் பார்த்திருக்கிறோம். ஜாதகத்தின்படியேதான் நடக்க வேண்டுமென்றால், அம்மாதிரி பிராயச்சித்தங்களுக்கு என்ன பிரயோஜனம்? ஆதலால் முயற்சியால் விதியை வெல்லலாமென்பதும் தீர்மானம்தான். ஜாதகத்தைக் கண்டு ஒருவனும் பயப்பட வேண்டிய தேவையில்லை. அது வரப்போவதற்கு முன் அறிவிப்பாக இருக்கும். ஆனால் அதையே நாம் மாற்றிவிடலாம்.

தர்மம்

சிஷ்யன் : எது தர்மம் எது அதர்மம் என்று எவ்வாறு தீர்மானம் செய்வது?

ஆசார்யாள் : சாஸ்திரங்களில் 'இதைச் செய்' என்று சொன்னால் அது தர்மம் ஆகும். 'இதைச் செய்ய வேண்டாம்' என்று சொன்னால், அது அதர்மமாகும். தர்மத்தை எவ்வாறு தீர்மானம் செய்ய வேண்டும் என்பதற்கு மனு,

வேத: ஸ்ம்ருதி: ஸதாசார: ஸ்வஸ்ய ச ப்ரியமாத்மன: |
ஏதச்சதுர்விதம் ப்ராஹு: ஸாக்ஷாத்தர்மஸ்ய லக்ஷணம் ||

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(வேதம், வேதத்தைக் கொண்டு இயற்றப்பட்ட ஸ்ம்ருதி புத்தகங்கள், மஹான்களின் ஆசாரம், நம் மனச்சாட்சியின் திருப்தி ஆகிய இவை நான்கும் தர்மத்தின் லக்ஷணமாக இருக்கின்றன) என்று கூறுகிறார்.

அனைத்துத் தர்மத்திற்கும் மூலகாரணம் வேதமாகும். வேதத்தின் ஆதாரமாக ஸ்ம்ருதி இருப்பதால் அதுவும் பிரமாணமாகும். இதை அனுஸரித்து வந்திருக்கும், பரம்பரை ஆசாரமும் பிரமாணமாகும். இது எல்லாவற்றையும் தவிர நம் ஆத்ம திருப்தியும் பிரமாணமாகும். இவையே எது தர்மம் எது அதர்மம் என்று தீர்மானம் செய்ய, நமக்கு உதவும் பிரமாணங்கள்.

சி : *ஒரே விஷயம், ஒரு சமயத்தில் தர்மமாகவும், மற்றொரு சமயத்தில் அதர்மமாகவும் இருக்கிறது. இம்மாதிரி சமயங்களில் எப்படித் தீர்மானம் செய்வது?*

ஆ : உண்மைதான். சில சமயங்களில் ஒரே செயல் தர்மமாகவும் இன்னொரு சமயத்தில் அதர்மமாகவும் தோன்றலாம். இவையெல்லாம் நாம் தீர்மானம் செய்ய, சாஸ்திரங்களையே நாட வேண்டும். பின் எது சரியென்று தோன்றுகிறதோ, அவ்வாறு செய்ய வேண்டும். ஒரு வீட்டில் திருடிய ஒருவன், கைது செய்யப்பட்டால் 'நான் ஒரு பணக்காரன் வீட்டிலிருந்துதான் திருடினேன். அதனால் அவனுக்கும் ஒருவிதமான துன்பமுமிருக்காது. அதிகமான நஷ்டமுமில்லை. எனக்கோ அதனால் உணவு கிடைக்க வாய்ப்பும் கிடைத்தது. ஆதலால் இவ்வாறு திருடியதால் என்ன தவறு' என்று வாதாடலாம். இதை நீதிபதி ஏற்றுக் கொள்வாரா? மாட்டார். ஏனென்றால், அது சட்டப் புத்தகத்தில் எழுதப்பட்டதற்கு நேர்மாறானது. அது சட்டப் புத்தகத்தின்படி தவறு. ஆதலால், அவனுக்குத் தண்டனை அளிக்கத்தான் செய்வார். அதேபோல், நம் வேதத்தில் எது சரி என்று சொல்லப்பட்டிருக்கிறதோ, அதுதான் தர்மமாகும். எது தவறென்று அதில் சொல்லப்பட்டிருக்கிறதோ அது அதர்மமாகும். நாமே தீர்மானம் செய்துகொள்ள நமக்கு அதிகாரம் இல்லை. ஏனென்றால், நமக்கு அந்த அளவிற்கு ஞானமில்லை. 'அடுத்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிறவியில் இதைச் செய்தால், அது சுகம் கொடுக்கும், இது துன்பத்தை விளைவிக்கும்' என்ற அறிவு நமக்கு இல்லாததால் நாம் தர்ம, அதர்மம் பற்றி தீர்மானம் செய்ய முடியாது.

சி : *ஒருவன் தன்னையே அறியாமல் ஒரு தவறு செய்தால் அவன் அதற்குப் பொறுப்பாளியா?*

ஆ : பொறுப்பாளி என்றால் எந்த வகையில்?

சி : *அவன் அதன் காரணமாக பாவத்தை அடைவானா?*

ஆ : அவனுக்கு அதைச் செய்யும்போது தவறென்று தெரியாமலிருந்தால் அவ்வளவு பாவம் கிடையாது. இவ்வாறு நாம் தெரியாமல் தவறு செய்வதெல்லாம் நாம் செய்யும் ஸந்தியாவந்தனத்தின் மூலமாகவே நாசமடைகிறது. அதற்கொன்றும் விசேஷமாகப் பிராயச்சித்தம் செய்ய வேண்டிய தேவையில்லை. ஆனால் ஒருவனுக்கு ஒன்று தவறு என்று தெரிந்து கொள்வதற்கு வாய்ப்பிருந்தும் வேண்டுமென்றே தெரிந்து கொள்ளாமல் இருந்தானானால், இதுபோன்று பாவமில்லை என்று சொல்வது அவ்வளவு பொருத்தமாகாது. ஒருவன் ஓரளவிற்கு இது சரி, இது தவறு எனத் தெரிந்துகொள்ள முயற்சி செய்ய வேண்டும். தன்னையறியாமல் ஏதாவது தவறு செய்தால், இறைவனைப் பிரார்த் தித்தால் அவன் மன்னித்து விடுவான் என்று வைத்துக் கொள்ளலாம்.

சி : *எல்லோருக்கும் சமமாக தர்மங்கள் இருந்தால் சௌகர்யமாக இருக் காதா? ஒருவனுக்கு இது தர்மம், மற்றவனுக்கு அது தர்மம் என்பது தேவையா?*

ஆ : ஆம், எல்லோருக்கும் ஒரே சட்டையைக் கொடுத்து நீங்களனைவரும் இதை அணிந்து கொள்ளுங்கள் என்று சொன்னால் அணிந்து கொள்ள முடியுமா? ஆகவே வெவ்வேறு அதிகாரிகளுக்கு வெவ்வேறு விதமான தர்மம் கூற வேண்டும். ஆதலால்தான் சாஸ்திரங்களில் வெவ்வேறு ஜனங்களுக்கு வெவ்வேறு விதமான தர்மம் கூறியிருக்கிறார்கள். ஆனால் எல்லோருக்கும் சாமான்ய தர்மங்கள் இருக்கின்றன. விசேஷ

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மான தர்மங்களில் வித்யாசமிருக்கலாம். 'சிலர் விசேஷ தர்மத்தையும் சாமான்ய தர்மத்தையும் அனுஷ்டிக்க வேண்டும்' என்றிருக்கும். சாமான்ய தர்மம் எல்லோருக்கும் சமமாக இருக்கிறது.

சி : *சாமான்ய தர்மம் என்றால் என்ன?*

ஆ : மனுவே இதற்கு விளக்கம் கூறி,

அஹிம்ஸா ஸத்யமஸ்தேயம் சௌசமிந்த்ரிய நிக்ரஹ: |
ஏதம் ஸாமாஸிகம் தர்மம் சாதுர்வர்ண்யேऽப்ரவின்மனு: ||

(அஹிம்சை, உண்மை பேசுதல், திருடாமலிருத்தல், சுத்தமாக இருப்பது, இந்திரியங்களை அடக்குவது என்பவை மனு தெரிவித்தபடி எல்லோருக்கும் உள்ள சாமான்ய தர்மங்களாகும்) என்று தெளிவுபடுத்தியிருக்கிறார். ஒருவன் மனதாலும் மற்றொருவனுக்குக் கஷ்டத்தை நினைக்கக் கூடாது. அப்படி நினைத்தால் அது அஹிம்சை ஆகாது. அடித்தால்தான் ஹிம்சை என்று அர்த்தமில்லை. மனதால் கேடு நினைத்தலும் தவறுதான். அடுத்தது ஸத்யம். எவ்விஷயம் ஒருவனுக்குக் கஷ்டம் உண்டாக்குவதில்லையோ, மேலும் எவ்விஷயம் உண்மையாக இருக்கிறதோ அதுதான் ஸத்யமாகும். சிலர் உண்மை பேசினாலும், மற்றவர்களுக்குத் துன்பமுண்டாக்கும் வகையில் பேசினால் இது உண்மை என்ற வகைக்குச் சேராது. சிலர் கேட்பதற்கு இனிமையாய் இருப்பதைப் பேசினாலும், அது பொய்யென்றால், அதுவும் உண்மை என்ற வகைக்குச் சேராது. ஆகவே உண்மை என்பது மற்றவர்களின் நன்மைக்காகவும் மேலும் அது ஸத்யமாகவும் இருக்க வேண்டும் அடுத்தது அஸ்தேயம் - மற்றவரின் பொருளைத் திருடாமலிருப்பது அஸ்தேயம் எனப்படும். திருடக் கூடாதென்றால் மனதாலும் பிறர் பொருளை விரும்பக் கூடாது. 'எவனிடம் எது இருக்கிறதோ, அது அவனிடத்திலேயே இருக்கட்டும். நம்மிடத்தில் இருப்பது நம்மிடம் இருக்கட்டும். விருப்பமிருந்தால் பிறருக்குக் கொடுப்போம்' என்ற எண்ணம் வேண்டும். ஒன்றைத் திருட வேண்டும் என மனதால் நினைத்தாலும் அது அஸ்தேயமாகாது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'சௌசம்' என்பது சுத்தமாக இருப்பது. இதை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். ஒன்று உடல் தூய்மை. ஸ்நானம், புனிதமான ஆடைகளைத் தரிப்பது போன்றவை உடல் தூய்மைக்குச் சேரும். இரண்டாவது மனத்தூய்மை. ஆடைகள் நன்றாக இருக்கலாம். ஆனால், உள் மனம் தூய்மையாக இல்லாவிட்டால், அது உண்மையான சௌசமாகாது.

'இந்த்ரிய நிக்ரஹம்' என்பது அடுத்தது. ஒரு பொருளைப் பார்த்தாலோ, ஓர் ஓசையைக் கேட்டாலோ மனது அங்குப் போக வேண்டுமென நினைக்கலாம். ஆனால், அதைப் போகவிடாமல் தடுப்பதுதான் இந்த்ரிய நிக்ரஹம். இந்திரியங்கள் அல்லது புலன்களின் அடக்கமே இந்த்ரிய நிக்ரஹம் என்று கூறப்படுகிறது. மேற்சொல்லப்பட்ட தர்மங்கள் அனைவருக்கும் சமம். 'இவன் அவன்' என்று வித்யாசம் இல்லாதது.

சி : *சாமான்ய தர்மத்தை அனுஷ்டித்தால் ஏதாவது பலனிருக்குமா?*

ஆ : ஆம். தர்மத்தை அனுஷ்டித்தால் பலன் அவசியம் இருக்கும். யார் கடைப்பிடித்தாலும் பலனுண்டு. ஆகவே மனிதனாய்ப் பிறந்த யாவரும் சாமான்ய தர்மத்தை அவசியம் அனுஸரிக்க வேண்டும்.

சி : **எவ்வளவோ மனிதர்கள் அதர்மத்தைச் செய்வதை நாம் காண்கிறோம். ஆனால் தற்போது அவர்கள் நன்மையே அடைந்து கொண்டிருப்பதையும் காண்கிறோம். இதற்குக் காரணம் முற்பிறவியில் செய்த கர்மாவென்று சொல்லலாம். ஆனால் அவர்கள் செய்யும் அதர்மம் அவர்களுக்குப் பலனளிப்பதாகவே தெரியவில்லையே!**

ஆ : செய்த அதர்மம் பலன் தருவதேயில்லை என்று சொல்வது தப்பு. அது பலன் தரும். ஆனால், சிறிது காலத்திற்குப் பிறகு தரும். இறைவனுக்குக் கருணை அதிகம். ஒருவன் திருந்துவதற்குச் சமயம் தருகிறான். அப்படியும் திருந்தாவிட்டால் தண்டிக்கிறான். தர்மமும், அதர்மமும் உடனே பலன் தருவதில்லை. இதனால்தான் மனு,

நாதர்மச்சரிதோ லோகே ஸத்ய: பலதி கௌரிவ |
சனைராவர்தமானஸ்து கர்துர்மூலானி க்ருந்ததி ||

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(செய்யப்பட்ட அதர்மம் பால் கறப்பதற்குத் தயாராயிருக்கும் பசுவைப் போல் உடனடியாகப் பலனளிப்பதில்லை. ஆனால் நிலத்தில் தெளிக் கப்பட்ட விதைகளைப் போல் கிரமமாகப் பலனளித்து அதர்மம் செய்த வனை அடியோடு அழிக்கிறது) என்று கூறியிருக்கிறார். அதர்மம் செய் தால் பலன் கிடைப்பதில்லை என்று நீ சந்தேகப்பட்டாயே, இதற்கு பதிலை நம் ஸ்ம்ருதியை இயற்றியவர்களே கூறியுள்ளனர். மனுவே,

அதர்மேணைததே தாவத்ததோ பத்ராணி பச்யதி |
தத: ஸபத்னாஞ்ஜயதி ஸமூலஸ்து விநச்யதி ||

(துரோகம் போன்ற அதர்மத்தினால் ஒருவன் நன்மை அடைந்தவன் போலிருக்கிறான். பிறகு செல்வமெல்லாம் பெற்றுச் செழிப்பான வாழ்வை அடைகிறான். பிறகு எதிரிகளை வெல்கிறான். கடைசியில் அடியோடு அழிவடைகிறான்) என்று கூறியிருக்கிறார்.

சி : *தர்மம் செய்வது மிகவும் கடினமாக இருந்தால் என்ன செய்வது?*

ஆ : எவ்வளவு துன்பமிருந்தாலும் மனதை அதர்மம் பக்கம் போகவிடக் கூடாது. முயற்சி செய்தாவது தர்மத்தைச் செய்ய வேண்டும். ஏனென் றால், தர்மம் இப்பொழுதோ பிறகோ பலனளித்து நமக்கு நன்மையைக் கொடுக்கும். நாம் இறந்த பிறகு நம் உடலை விட்டுவிட்டு நம் உறவி னர்கள் சென்று விடுவார்கள். அதற்குப் பின்னும் நம்முடன் வருவது நாம் செய்த தர்மமும் அதர்மமுமாகும். அதேபோல் பரலோகத்திலும், மறுபிறவியிலும் நம்மைக் காப்பது தர்மம்தான். தர்மத்தைக் காப்பாற்றுப வன் என்றும் கைவிடப்பட மாட்டான். ஆதலால்தான்,

"தர்மோ ரக்ஷதி ரக்ஷித:"

(தர்மத்தைச் செய்பவனை, தர்மம் காப்பாற்றுகிறது) என்று சொல்லப் பட்டுள்ளது. இது மிகவும் ஸத்யமானது. இப்போது பலன் தெரியாவிட் டாலும் பின்னர் பலன் அவசியமிருக்கும். மேலும் தர்மம் செய்ய வேண் டியது நம் கடமை. "இறைவன் நமக்கு எல்லாவிதமான வசதிகளையும் நன்மைகளையும் அளித்திருக்கிறானே! தாய் வயிற்றில் எவ்விதமான உதவி இல்லாத சமயத்திலும் என்னைக் காப்பாற்றினானே! அவனுக்கு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நான் நன்றியுள்ளவனாக இருக்க வேண்டாமா?'' என்று கருதியாவது ஒருவன் வேதத்தில் கொடுத்துள்ள உபதேசப்படி நடக்க வேண்டும். அதுவே தர்மம். இந்தக் கண்ணோட்டத்தோடாவது தர்மத்தை ஒருவன் அனுஸரிக்க வேண்டும்.

சி : *யாகம் போன்றவற்றைச் செய்வதற்கு நிறைய செல்வம் தேவைப்படுகிறது. ஆதலால் ஏழையானவனுக்கு தர்மத்தைச் செய்ய அதிகம் வாய்ப்பு இல்லை என்று பொருளா?*

ஆ : இல்லை. சாஸ்திரங்களில் எவ்வளவு ஒருவனுக்குச் சக்தியிருக்கிறதோ, அவ்வளவுக்கு ஒருவன் தர்மத்தைச் செய்ய வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது. தர்மத்தைச் செய்ய, விசேஷமாகச் செல்வமுள்ளவன் ஒரு ஆலயத்தைக் கட்டலாம். ஒருவனுக்குச் செல்வமில்லை என்றால், அவன் செல்வந்தர்கள் கட்டிய கோவிலுக்குச் சென்று கடவுளின் ஸந்நிதியில் நமஸ்காரம் செய்து புண்ணியம் சம்பாதிக்க வேண்டும். ஆகவே இரண்டு விதமான மக்களுக்கும் தர்மம் செய்ய வாய்ப்பிருக்கிறது. அது எவ்விதமான தர்மம் என்பதில்தான் வேறுபாடுள்ளது. பணமில்லாதவன் ஒருவன் ஒரு ரூபாய் தானம் செய்தால், அவனுக்கு உத்தமமான பலன் கிடைக்கும். ஆனால், இலட்ச ரூபாய் உள்ள ஒரு செல்வந்தனும் தானும் எட்டணாவோ, ஒரு ரூபாயோ தானம் செய்கிறேன் என்று சொன்னால், அவனுக்கு அந்த அளவிற்குப் பலன் கிடைக்காது.

சி : *நாம் உலகில் சிலரைப் பார்க்கிறோம். அவர்கள் அனுஷ்டானம் முதலியவற்றை மேற்கொண்டிருக்கிறார்கள். ஆனால் மற்றவர்களைத் துன்புறுத்துகிறார்கள். இப்படிச் செய்தால் இது தர்மமா?*

ஆ : இல்லவே இல்லை. அப்படிச் செய்தால், அவர்கள் வேஷம் போடுவது போல்தானிருக்கும். சாஸ்திரத்திலேயே

ச்லோகார்தேன ப்ரவக்ஷ்யாமி யதுக்தம் க்ரந்த கோடிபி: |
பரோபகார: புண்யாய பாபாய பரபீடனம் ||

(நான் பாதிச் சுலோகத்தில், கோடிக்கணக்கான புத்தகங்களில் சொல்லப்பட்டவற்றைத் தெரிவிக்கிறேன். பிறருக்கு உதவியளிப்பது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

புண்ணியமாகும். பிறரைத் துன்புறுத்துவது பாவமாகும்) என்று கூறப் பட்டுள்ளது. ஆதலால் மற்றவனுக்கு ஒருவன் துன்பம் உண்டாக்கிக் கொண்டிருந்தால், அது பாவத்தையே நிச்சயம் தரும். ஆனால் ஒரு வன், 'தர்மம் செய்வது அவனுக்குச் சகிக்கவில்லை. நான் தர்மம் செய் யாவிட்டால்தான் அவனுக்குச் சந்தோஷம்' என நினைத்து தர்மத்தை செய்யாமலிருந்தால் அதுவும் பொருத்தமில்லை. ஏனென்றால் "ஒருவ னுக்கும் துன்பம் உண்டாக்காமல் தர்மம் செய்ய வேண்டும் எனச் சாஸ்திரம் சொல்கிறதே" என்று அவன் கூறலாம். ஆனால் 'ஒருவனுக் கும்' என்பது 'எந்த நல்ல மனிதனுக்கும்' என்ற பொருளில் இங்கு வருகிறது. இதனால் மற்றவனுக்குத் துன்பம் உண்டாக்க வேண்டும் என்பதும் அர்த்தமில்லை. நாம் செய்யும் பகவத் பூஜை நாஸ்திகன் ஒருவனுக்குப் பிடிக்காமல் இருக்கலாம். அக்காரணத்திற்காக நாம் பூஜையை விடக்கூடாது. செய்துகொண்டே போகலாம். அவனையும் வீணாகத் திட்டாமல் இருந்து விடலாம். இவ்வாறு நடந்து கொள்வதே சரி.

அஹிம்சை

சிஷ்யன் : அஹிம்சை சாஸ்திரங்களில் உபதேசிக்கப்பட்டிருக்கிறதே, எப்போதும் அதை அனுஷ்டிக்க வேண்டுமா?

ஆசார்யாள் : சாஸ்திரங்களில் விரதங்கள், மஹா விரதங்கள் என்று இரு வகைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. மஹா விரதமென்பது எல்லாச் சமயங்களிலும் எந்தச் சூழ்நிலையிலும் அனுஷ்டிக்கப்பட வேண்டி யது. சாமான்ய விரதங்களை, கால நியமங்களும், சூழ்நிலை நியமங்க ளும் பார்த்து அனுஸரிக்க முடியும். ஸந்யாஸிகள் அஹிம்சையை மஹா விரதமாக அனுஸரிக்க வேண்டும். மற்ற அனைவருக்கும் அஹிம்சை என்பது சாமான்ய தர்மம். கருணை இல்லாதவன் மனிதனேயில்லை. எல்லோரும் மற்றவர்களுக்கு அவசியம் கருணை காட்ட வேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சி : *சில பூச்சிகளை நம்மை அறியாமலேயே கொன்று விடுகிறோம். இது போன்ற சமயத்தில் அஹிம்சையை எவ்வாறு முழுவதும் அனுஸரிப் பது?*

ஆ : அஹிம்சையைப் பற்றி நான் கூறியது வேண்டுமென்றே பிறருக்கு இழைக்கப்படும் துன்பம் பற்றித்தான். மனதால் ஒருவருக்குத் துன்பம் தர நினைத்தாலும் அதுவும் அஹிம்சையைக் கடைபிடிக்காதது போல் தானாகும்.

சி : *அஹிம்சை என்பதற்காக, ஒரு தேளோ, பாம்போ ஒருவனை விஷம் கொண்டு துன்புறுத்த வந்தால், அதையும் ஒருவன் பார்த்துக் கொண்டி ருக்க வேண்டுமா?*

ஆ : இல்லை. அப்பாம்பையோ, தேளையோ நம் உடலை விட்டு உதறி அவற்றை விலக்கிவிடலாமே!

சி : *அப்படிச் செய்தால் அஹிம்சைக்கு விரோதமாக நடந்து கொண்டது போலாகாதா?*

ஆ : இல்லை. ஏனென்றால், ஒருவன் தன் உடலைக் காப்பாற்றிக் கொள்வ தற்காகத்தான் அவ்வாறு செய்தான். எந்தப் பிராணியையும் வீணாக ஹிம்சை செய்யவில்லை.

சி : *ஒருவன் மிகவும் சாதுவாக இருந்து விட்டானானால் மற்ற மனிதர்கள் இதைப் பயன்படுத்தி அவனை ஏமாற்றமாட்டார்களா? அவனுக்குப் பலவிதமாகத் துன்பம் கொடுக்கமாட்டார்களா?*

ஆ : மிகவும் சாதுவாக இருந்துவர வேண்டும் என்றும் கூறவில்லை. ஸந் யாஸி எல்லாவற்றையும் பொறுத்துக்கொள்ள வேண்டும். லௌகீக வாழ்வில் ஈடுபட்டுள்ளவன் இம்மாதிரி நடந்துகொள்ள முயற்சி செய் தால் துன்பத்தில் மாட்டிக் கொள்ளலாம்.

சி : *அப்படியென்றால் ஒருவன் மற்றொருவனுக்கு வீணாகத் துன்பம் கொடுத்தோ, வெறுப்பு உண்டாக்கவோ செய்தால், அவனை என்ன செய்ய வேண்டும்?*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆ : ஒருவன் மனதில் முழுமையான அமைதியுடன்தான் இருந்து கொள்ள வேண்டும். ஆனால் ஏதோ சற்று எதிர்ப்பதுபோல் நடிக்கலாம். சில சமயங்களில் கோபம் வந்தாற்போல் நடிக்கலாம். ஆனால் மனதில் கோபத்திற்குச் சிறிதளவும் இடம் கொடுக்கக் கூடாது. இப்படி நான் சொல்வதிலிருந்து எப்போதும் கோபம் வருவதைப்போல் நடித்துக் கொண்டே இருக்க வேண்டும் என்று பொருளில்லை. முடிந்த அளவிற்கு பொறுத்துக் கொண்டு, ஓரளவுக்குமேல் போனால் கோபம் வந்ததைப்போல் நடிக்கலாம். அவ்வளவுதான்.

சி : போரிலிருந்து வந்த நான் யுத்தத்தில் பலர் இறக்கக் காரணமாய் இருந்தால் பாவத்திற்கு ஆளாவேனா?

ஆ : இல்லை.

சி : கொல்வது கூடாதல்லவா?

ஆ : நீ ஒருவனை உனது வெறுப்பினால் கொன்றாயா?

சி : இல்லை.

ஆ : நீ உன் கடமையைத்தான் செய்தாய். உனக்கு இடப்பட்ட உத்தரவின்படி நடந்து கொண்டாய். நாட்டுக்காக அச்செயல் புரிந்தாய், உனக்காக அல்ல, அப்படித்தானே?

சி : ஆம்.

ஆ : அதனால்தான் அப்பாவம் உன்னைச் சேராது என்று கூறினேன். நீ வெறுப்பினாலோ, உனது சொந்த நன்மைக்காகவோ ஒருவனைக் கொன்றால், உனக்கு பாவம் நிச்சயமாக வந்திருக்கும். நாட்டுக்காக உன் கடமையைச் செய்தாய். ஆகையால் பாவம் உன்னைச் சேராது. இதைத்தான் கிருஷ்ணபரமாத்மாவும், கீதையில் அர்ஜுனனை நோக்கி, 'க்ஷத்ரியனுக்கு யுத்தம் செய்வது மிக நல்லது, பாவமில்லை' என்று கூறியுள்ளார். நீங்களெல்லாம் க்ஷத்ரிய ஸ்தானத்தில் அல்லவா இருக்கிறீர்கள்!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆசை

சிஷ்யன் : பலருக்கு ஆன்மீக வாழ்வில் ஈடுபட வேண்டும் என்ற எண்ணம் இருந்து, அவர்கள் ஆசையை வெல்ல வேண்டும் என முயற்சி செய்கி றார்கள். ஆனால், ஆசைகள் மீண்டும் மீண்டும் வந்து கொண்டிருக்கின் றன. இதற்குக் காரணம் என்ன?

ஆசார்யாள் : ஆசையை அடக்குவதற்கு முதலாவது 'நாம் ஆசையை வெல்ல வேண்டும்' என்ற எண்ணம் தீவிரமாக இருக்க வேண்டும். பிரஹ்மச் சாரி ஒருவனை 'மதியத்தில் தூங்க வேண்டாம்' என்று கூறலாம். அவனுக்கே மதியத்தில் தூங்குவது தவறென்று படவில்லையென் றால் சற்று நாட்களுக்குத் தூங்காமல் இருப்பான். பிறகு இன்னொரு நாள் தூங்கினால் என்ன தவறு என்று அவனுக்குத் தோன்றும். ஆகவே, முதலில் நாம் ஆசையை வெல்ல வேண்டும். சிலர் விவேகத்திற்கு இடம் கொடுக்காமல் இருப்பார்கள். ஆனாலும் ஆசை போக வேண் டும் என்று சொல்லிக் கொண்டிருப்பார்கள். காரணம் வைராக்யம் இல்லை. ஏன்? அதை உண்டாக்கும் விவேகம் இல்லை. விவேகம் இல்லாமல் இருந்தால் ஒருவனுக்கு எப்போதுதான் வைராக்யம் உண் டாகும்? ஆகவே எப்போதும் விவேகத்திற்கு இடம் கொடுக்க வேண் டும். விவேகத்தினால் வைராக்யம் வரும். வைராக்யத்தினால் ஆசைய டங்கும். மேற்கொண்டு ஆன்மீக வாழ்விற்குரிய ஸாதனைகளைச் சிரத் தையுடன் செய்ய வேண்டும். முதலில் அவைகளில் ருசியில்லாமல் இருக்கலாம். அதற்காக அவைகளை நாம் விட்டு விட்டால் ஆசைகள் எப்படி அடங்கும்? கர்மயோகம், மானஸீக பூஜை, இறைவனின் சிந் தனை போன்றவற்றை எப்போதும் செய்து கொண்டே வர வேண்டும். தியானமும் செய்தால் மிகவும் நல்லது. சாஸ்திரங்களைப் படிப்பது மிகவும் அவசியம்.

சி : இம்மாதிரி ஸாதனைகளை அனுஷ்டித்தால் சில சமயங்களில் ஆசை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கள் வராமல் இருக்கலாம். ஆனால், திடீர் என்று ஆசைகள் வந்து விடுகின்றனவே, இதற்கு ஏதாவது காரணமிருக்கிறதா?

ஆ : ஓர் உதாரணம் கூறுகிறேன். ஒரு ஸ்பிரிங் இருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். அதன் ஒரு பாகத்தை ஒரு சுவற்றில் இணைத்துக் கொள் வோம். மற்றொரு பாகத்தை நாம் பிடித்து இழுத்துக் கொண்டே போனால், அந்த ஸ்பிரிங்கும் நெகிழ்ந்து நீளம் கொடுக்கும். எப்போது இழுப்பதை நாம் விடுவோமோ, உடனே அந்த ஸ்பிரிங் பின் இழுத்துக் கொள்ளும். மனம் என்கிற ஸ்பிரிங்கை உலகம் என்கிற சுவரில் கட்டி விட்டோமானால் ஆன்மீக முயற்சியால், அந்த ஸ்பிரிங்கை இழுத்துக் கொண்டே போனாலும், விட்டு விட்டால் அது பழைய நிலைமைக்கே போய்விடும். ஆதலால், ஆசைகளை ஒழிப்பதற்கு வழி பார்க்க வேண் டுமே தவிர, அந்த சமயத்தில் மட்டும் அடக்கி வைத்தால் போதாது. சிலர் ஆசையை முழுவதும் ஒழிக்க மாட்டார்கள். ஓர் ஆசை வந்தால், 'ஐயோ இப்போது இடம் கொடுக்கக் கூடாது' என்று எண்ணி அதனை அடக்கி விடுவார்கள். இப்படிச் செய்தால், அந்த ஆசை உள்ளேயே இருக்கும். அதற்குப் பிறகு திடீரென்று வந்துவிடும். அந்த ஆசையைப் புரிந்து கொண்டு, அதனால் நமக்கொரு நன்மையும் இல்லை என்பதை யும் புரிந்து கொண்டபின் அதைப்போக்க வழி தேட வேண்டும். இது போல் செய்தால் ஆசை திடீரென்று எழுவதற்கு வாய்ப்பில்லை. ஆசையை வெல்வதற்கு ஒருவன் முயன்றாலும், அது கடினமாக இருக் கிறதென்றால் அப்படிப்பட்டவனுக்கு ஸத்ஸங்கம் மிகவும் அவசியம். மஹான்களின் ஸந்நிதியிலாவது ஆசை அடங்கும். அடிக்கடி சாஸ்திரங் களைப் படிப்பது நல்லது. சாஸ்திரங்கள், 'லௌகீகப் பொருட்களால் நமக்கு இன்பம் இல்லை' என்று கூறுகின்றன. சாஸ்திரத்தில் நமக்கு விச்வாசம் இருந்தாலும் அந்த விச்வாசம் பூரணமாக இருப்பதில்லை. ஆதலால் சில சமயங்களில் 'இப்படிச் செய்தால் என்ன?' என்ற தவறான எண்ணம் ஏற்படலாம். இவ்வெண்ணத்தைப் போக்குவதற் கும் மீண்டும் மீண்டும் சாஸ்திரங்களைப் படிப்பதுதான் நல்லது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கோபத்தை வெல்வது

சிஷ்யன் : கோபத்தை எப்படி வெல்வது?

ஆசார்யாள் : "இதனால் எனக்கு எவ்விதப் பிரயோஜனமும் இருக்கப் போவதில்லை. மற்றொருவன் என்னைத் திட்டுகிறான். அதனால் எனக்கு ஏதாவது நஷ்டம் ஏற்படுகிறதா? ஒன்றும் இல்லையே! ஆதலால் நான் ஏன் கோபத்திற்கு இடம் கொடுக்க வேண்டும்?" இவ்வாறு நினைத்து வந்தால் கோபம் அடங்கி விடும்.

சி : இவ்வாறு நினைப்பது மட்டும் போதுமா?

ஆ : இல்லை, மேற்கொண்டும் யோசிக்க வேண்டும். "இப்போது நான் கோபத்தினால் ஒருவனைத் திட்டி விட்டேன் என்றால், நான் பெரிய காரியத்தைச் சாதித்து விட்டதாகத் தோன்றலாம். உண்மையில் நான் என் கோபத்திற்கு அடிமையாகிவிட்டேனல்லவா? ஒரு எதிரியை வெல்லச் சென்று விட்டு இன்னொரு பெரிய எதிரியால் வெல்லப் பட்டு விட்டேனே. கோபம் என்னை நாசம் செய்கிறது. என் புத்தியைக் கெடுத்து விடுகிறது. எதை நான் செய்யக்கூடாதோ அதைச் செய்யத் தூண்டுகிறது. இக்கோபத்திற்கு நான் ஏன் அடிமையாக வேண்டும்? மற்றொருவனைத் திட்டியதால் ஏற்படும் திருப்தியைவிட கோபத்தை அடக்கியதால் சிரேயஸ்ஸூம் திருப்தியும் அதிகமாகக் கிடைக்கும்." இம்மாதிரி சிந்திக்க வேண்டும். கோபம் வருவதற்கு முன்பே சற்றுக் கவனத்துடன் பார்த்தால் கோபம் வருகிறது என்று தெரியும். இதைத் தெரிந்து கொண்டால் அதன்பின் கோபத்தை அடக்க முயற்சி செய்யலாம். இம்மாதிரி தெரிந்த மறுகணமே பாதிக் கோபம் அடங்கி விடும். பல மக்களுக்குக் கோபம் வந்த பிறகே தெரியும். அவர்களும் வருமுன் அறிந்து கொண்டு, 'நான் பொறுமைக்கு இடம் கொடுத்தால் எனக்குத் தான் சிரேயஸ். மேலும் கோபம் தேவையா? இவனை மன்னித்தால் நான் கோபத்தை வென்றது போலாகும். அதுவே உத்தமமானது' என்று சிந்திக்கலாம். அவ்வாறு சிந்திப்பதன் மூலம் கோபம் இறங்கிவிடும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சி : *கோபத்தினால் ஆன்மீக வாழ்விற்கு இடையூறுகள் ஏற்படுமா?*

ஆ : ஆம். காமம், கோபம், லோபம், இவை மூன்றையும் பகவான் கீதையில் நரகத்திற்குக் கதவுகளாகக் கூறியிருக்கிறார். கோபம் வந்தவன், தான் என்ன செய்கிறான் என்பதை யோசிக்க மாட்டான். விபரீதமான செயல்களையும் செய்து விடுகிறான். ஆதலால் அவனுக்குப் பாவம் ஏற்படுகிறது. பாவம் மூலமாக கோபம் ஒருவனை நாசமாக்கி விடுகிறது. ஆதலால் கோபத்திற்கு இடம் கொடுக்கக் கூடாது.

சி : *கோபத்திற்கு இடம் கொடுக்கக் கூடாதென்றால் பிறரைக் கண்டிப்பதற்காகச் சப்தமே போடக்கூடாது என்று அர்த்தமா?*

ஆ : கட்டளைகளை எங்கு கொடுக்க வேண்டுமோ அங்கு கொடுக்கலாம். அப்படியில்லாவிட்டால் அலுவலகங்களில் காரியங்கள் நடக்காது. கோபம் வரவேண்டாம் என்று சொன்னால் மனதில் 'இவனை நான் துன்புறுத்த வேண்டும். பழிவாங்க வேண்டும்' என்ற எண்ணங்களுக்கு இடங்கொடுக்கக் கூடாது என்பதேயாகும். முதலில் சாந்தமாகச் சொல்ல வேண்டும். அவ்வாறு நடக்காவிட்டால், கண்டிப்பாக இப்படித்தான் நடக்க வேண்டும் என்று சொல்லலாம். ஆனால் மனதில் கோபத்திற்கு இடம் கொடுக்கக் கூடாது.

இந்து மதம்

சிஷ்யன் : நம் 'இந்து மதம்' என்றால் என்ன?

ஆசார்யாள் : நாம் பயன்படுத்தும் 'இந்து' என்ற சொல் பழக்கத்தின் காரணமாக ஏற்பட்டது. 'ஸநாதன தர்மம்' என்றுதான் நம் மதத்திற்குப் பெயர். நமது வேதத்தில் சொல்லப்பட்டதை அனுஸரித்து வாழ்பவனையே 'வைதிகன்' என்று சொல்வோம்.

சி : *'வைதிகன்' என்றால் யார் என்பதைச் சற்று விவரமாக ஆசார்யாள் கூறுவார்களா?*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆ : வேத மதத்தை அனுஸரிப்பவன் வைதிகன். அவன் ஸாங்க்ய மதத்தையோ, நையாயிக மதத்தையோ, இல்லை வைசேஷிகத்தையோ, மீமாம்ஸகத்தையோ, வேதாந்தத்தையோ அனுஸரிக்கலாம். வேதத்தைப் பிரமாணமாக வைத்து அதில் சொன்னபடி நடக்க வேண்டும் என்றிருப்பவனே வைதிகன்.

சி : பல மக்கள் வேதங்களைப் படிக்கவில்லையே. அவர்களுக்கு வேதத்தில் என்ன சொல்லியிருக்கிறது என்பது தெரியாது. அப்படியிருக்கும் போது அவர்களை எல்லாம் 'வைதிகர்கள்' என்று எப்படி அழைப்பது?

ஆ : அவர்கள் வேதத்தைப் படிக்காமல் இருக்கலாம். ஆனால் வேதத்தில் சொல்லப்பட்டவற்றைப் பிரமாணம் என்று நம்பலாமே.

சி : வேதத்தைப் பற்றிச் சிலர் அதிகமாகக் கேட்காமலே இருந்திருக்கலாமே! அவர்களையும் நாம் வைதிகர்களென்று கூறுவது எப்படி?

ஆ : வேதத்தில் சொன்னபடி வாழ்கிறார்களா? இல்லையா?

சி : அப்படியென்றால்?

ஆ : சம்பிரதாயத்தின்படி சில செயல்களைச் செய்கிறார்கள் அல்லவா? அந்தச் சம்பிரதாயம் எவ்வாறு ஏற்பட்டது? ஒரு தர்ம - அதர்ம விவேகம் மூலமாக முன்னோர்கள் ஏற்படுத்தினார்கள். ஆதலால், ஒருவன் 'நான் பொய்யைச் சொல்லக் கூடாது, பிறருக்குத் துன்பம் உண்டாக்கக் கூடாது. இவ்வாறுதான் வாழ வேண்டும்' என்ற சில நியமங்களைக் கடைப்பிடித்து வரலாம். இதற்குக் காரணம், அவனுடைய தாய், தந்தையர் அவனுக்கு அவ்வாறு சொல்லிக் கொடுத்ததுதான். அவன் தந்தைக்கு, அவனது தாத்தா சொல்லிக் கொடுத்திருக்கலாம். இவ்வாறு கிரமமாக அப்பரம்பரையில் வந்துள்ளது. ஆகவே வேதத்தில் சொல்லப்பட்டவை நேராக இல்லாவிட்டாலும், மறைமுகமாகவாவது தெரிந்து கொள்ளப்பட்டுதான் வருகின்றது. ஆகவே, அவனையும் 'வைதிகன்' என்றே சொல்லலாம்.

சி : வேதத்தில் ஒருவனுக்கு விச்வாசமேயில்லை என்றால் அவன் வைதிகனில்லையா?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆ : எவனுக்கு நம் வேதத்தில் விச்வாசம் இருக்கிறதோ, அவனை வைதிக னென்று சொன்னோம். ஒருவனது பரம்பரை வேதத்தை ஒப்புக் கொண்டு வந்திருந்தாலும், இவன் ஒப்புக் கொள்ளாவிட்டால், இப்ப டிப்பட்டவனை நாம் 'பிரஷ்டன்' (தவறியவன்) என்று கூறுவோம். அவ்வளவுதான்.

சி : *சிலர், ''பொது மக்களுக்கென ஏற்படுத்தப்பட்ட கிணறு, குளம், பிரார்த்தனைக் கூடங்கள் முதலியவற்றைச் சிலர்தான் உபயோகப்படுத் தலாம், மற்ற சிலர் உபயோகப்படுத்தக் கூடாது'' என்று கட்டுப்பாடு செய்கின்றனர். இதனால் எவ்வளவோ மக்களுக்குக் கஷ்டம் உண்டாகி றது. இது சரியாகுமா?*

ஆ : பொதுமக்களுக்கென இருக்கும் கிணறு, குளம், பிரார்த்தனைக் கூடங் கள் முதலியவற்றை இன்னார்தான் உபயோகிக்கலாம், இன்னார் உப யோகிக்கக் கூடாதென்று தடுக்கக் கூடாது. அதுபோன்று தடுப்பவர்க ளுக்குத் தண்டனை அளித்தாலும் தவறில்லை.

சி : *சிலர் 'இவன் கீழ் ஜாதிக்குச் சேர்ந்தவன்' என்று சொல்லிக் கொடுமைப் படுத்துகிறார்கள். இப்படிச் செய்வது ஆசார்யாளுக்குச் சிறிதளவாவது 'சரி' என்று படுகிறதா?*

ஆ : நான் முன்பே கூறியதுபோல் யாருக்கு யார் துன்பம் உண்டாக்கினாலும் அது தர்மம் ஆகாது. தன்னுடைய தர்மத்தை ஒவ்வொருவனும் அனுஸ ரிக்க வேண்டும். சாமான்ய தர்மமாகட்டும், விசேஷ தர்மமாகட்டும், மற்றொருவனுக்குத் துன்பம் செய்தால், தன் தர்மத்தையே விட்டது போலாகும். ஆகையால் ஒருவனும், இன்னொருவனுக்குத் துன்பமி ழைக்கக் கூடாது. அப்படிச் செய்தானேயானால் அவன் தர்மத்தை மீறி நடக்கிறான் என்றுதான் பொருள்.

சி : *சில இடங்களில் அரசாங்கம் கோயில்களின் நிலத்தை எடுத்துக் கொண்டு விடுகிறது. இதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்?*

ஆ : நான் என்றும் அமைதியில்லாத போராட்டங்களை அனுமதிப்ப தில்லை. அவ்வாறு செய்தது அநியாயம் என்று தோன்றினால், அதை நாம் அரசாங்கத்திற்கு தெரியப்படுத்தலாம். அரசாங்கத்தில் இருப்பவர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

களும் மனிதர்கள் தானே? அவர்களுக்கும் புரியும்படி சொன்னால் ஏன் புரிந்து கொள்ள மாட்டார்கள்? கோயிலுக்குரிய நிலங்களை அரசாங்கம் எடுத்துக் கொண்டால், அங்கு நடைபெறும் பூஜை முதலியவற்றிற்கு இடையூறு வராமல் அந்த அரசாங்கம்தான் பார்த்துக்கொள்ள வேண் டும். கோயில் நிலங்களை எடுத்துக் கொண்டால், இவ்விஷயங்களை அதுவே கவனித்துக் கொள்ள வேண்டும். இப்படிச் செய்யுமாயின் அரசாங்கத்தின் இச்செயலுக்கு நம் ஆட்சேபணை இல்லை. நிலத்தை எடுத்துக் கொண்டும் கவனிக்காமல் இருக்கிறது என்றால், அரசாங்கம், பக்தர்கள் எழுப்பிய ஆலயத்திற்கு துரோகம் செய்வது போல் ஆகி விடும். இவ்விஷயத்தை அரசாங்கத்திற்குத் தெரியப்படுத்தி நிலை மையைச் சரி செய்ய வேண்டுமே தவிர, அமைதியில்லாத போராட்டங் களில் ஈடுபட்டால் மற்ற மக்களுக்கும் கஷ்டம். அரசாங்கமும் சம்மதிப் பதற்கு பதிலாக நிலைமை இன்னும் மோசமாகி விடும்.

சி : *இந்துக்கள் பசுவைப் புனிதமான பிராணியாகக் கருதுகிறார்கள். ஆனா லும் நாட்டில் பசுக்கொலை நடந்து கொண்டு வருகிறது. இதற்காக போராட்டத்தில் ஈடுபடுதல் நல்லதா?*

ஆ : பசு புனிதமான பிராணி என்பதை நாம் எல்லோரும் ஒப்புக் கொள்கி றோம். மேலும் அஹிம்சையினால்தான் நாம் நன்மையடைகிறோம் என்பதையும் ஒப்புக் கொள்கிறோம். பசுவே சாந்தமான ஒரு பிராணி. நமக்கு பசு, பாலையும் தருகிறது. அதன் சாணிகூட உபயோகப்படுவ தில்லையா? ஆகவே அதை வைத்துக் கொள்வது நன்மையே பயக்கும். ஆனால், பசுக்கொலையைத் தடுக்க அமைதியில்லாத போராட்டங்க ளில் ஈடுபாடு வைத்துக் கொள்வதால் எல்லாம் சரியாகப் போய் விடுமா? இல்லையே. ஒவ்வொருவனும் தன்னிடத்தில் உள்ள பசுவை தானே காப்பேன், வயதானாலும் காப்பேன் என்று உறுதிமொழி எடுத் துக் கொண்டாலே இப்பசு வதை நீங்கும். 'பால் கொடுக்கும் காலம் கழிந்து விட்டது. இதற்கு வயதாகி விட்டது' என்று ஒருவன் விரட்டி விட்டால், அப்பசுவின் கதி என்னவாகும்? போராட்டத்தில் ஈடுபடுவ தைக் காட்டிலும், பசுவைக் காப்பது என்னும் உறுதிமொழி எடுப்பதே மேல். ''பசுவைக் காக்க வேண்டும், பசுவைக் காக்க வேண்டும்'' என்று பலரும் கூக்குரல் எழுப்புகின்றனர். ஆனால் அது பெயரளவுக்குத்தான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அதேசமயம் சிலர் வெளியில் ஒன்றும் கூக்குரல் எழுப்பாது, தாங்களே ஒரு கோசாலை போன்று அமைத்து பசுக்களை காத்து வருவதையும் நாம் பார்க்கலாம். இந்த இருவகை மனிதர்களிலும் இரண்டாவதாக சொல்லப்பட்ட வகையினரே சிறந்தவர்கள் என்று கூற வேண்டும். பசு வதை செய்வது கட்டாயமாக நீங்க வேண்டும். ஆனால், அதை நீக்கும் சரியான வழி எது என்பதில்தான் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

சி : *இந்து மதத்தில் ஒவ்வொருவனும் தான் என்ன செய்ய வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. இது தனக்காக மட்டும் செய்வது போலாகாதா? பிறருக்கு என்று ஒன்றும் செய்வது போலில்லையே. இதுவே கிறிஸ் துவ மதத்தில் மற்றவர்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்றெல் லாம் கூறப்பட்டிருக்கிறது. இவ்விஷயத்தில் ஆசார்யாளின் கருத்து என்ன?*

ஆ : அப்படிச் சொல்வது தவறு என்பதே என் கருத்து. நாம் நம் மோக்ஷத் திற்கு முயற்சி செய்வது எப்படி? மனதைத் தூய்மையாக்கிய பிறகு அந்த நிலையை அடையலாம். மனதைத் தூய்மைப்படுத்தக் கருணை மிகவும் தேவை என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆதலால் கருணை இருந்தால், மனதைச் சுத்தமாக்கிக் கொண்டு தியானத்தைப் பெறலாம். கருணை என்றால் மற்றவனுக்கு ஏற்பட்ட துன்பத்தைக் கண்டு சகிக்கா மல் இருப்பதுதானே? ஆகையால், இந்து மதத்தில் மற்றவன் விஷயத் தில் கருணையே காட்டச் சொல்லவில்லை என்று கூறுவது மிகவும் தவறு. நாம் அஹங்காரத்தை விட்டுவிட வேண்டுமென்றுதான் நமது சாஸ்திரம் எப்போதும் கூறுகிறது. அஹங்காரம் என்பது உடல், மனம் - இவைகளில் நான் என்ற எண்ணம். அஹங்காரத்தைப் போக்குவது தானே எல்லா மதங்களிலும் கூறப்பட்டுள்ளது? இதைப் போக்குவ தற்கு கருணை தேவைதானே? ஆகவே இந்து மதம் மற்றவர்களுக்குச் சேவை செய்யச் சொல்லவில்லை என்று சொல்வது தவறு. இங்கும் கருணைக்கு உரிய இடம் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் பகவானு டைய அவதாரங்களைப் பற்றி நம்முடைய இந்து மதத்தில் இருக்கிறது. பகவான் எதற்காக அவதாரம் எடுத்துக் கொண்டான்? அவனுக்கு ஏதா வது தேவையா? இல்லையே. அவன் மற்றவர்களின் நன்மைக்காகத் தான் அவதாரங்களை எடுத்துக் கொண்டான். அவனையே நாம் நமது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

லக்ஷியபுருஷனாக வைத்துக் கொண்டிருக்கிறோம். அவன் காட்டிய வழியில் போவதையே லக்ஷியமாகக் கருதுகிறோம். கீதையைப் பாருங்கள்.

அத்வேஷ்டா ஸர்வபூதானாம் மைத்ர: கருண ஏவ ச |
நிர்மமோ நிரஹங்கார: ஸமது: கஸுக: க்ஷமீ ||

என்ற சுலோகத்தில் 'எவன் விஷயத்திலும் வேற்றுமை இருக்கக் கூடாது. கருணை இருக்க வேண்டும்' என்று கூறப்பட்டிருக்கிறது. நம்முடைய பிரார்த்தனையும் **''லோகா: ஸமஸ்தாஸ் ஸுகினோ பவந்து''** (உலகங்களில் அனைவரும் சுகமாக வாழட்டும்) என்றல்லவா இருக்கிறது? எதிரி, வேறு மதத்திற்குச் சேர்ந்தவன், வேண்டாதவன் என்ற வேறுபாடே கிடையாது. எல்லோரின் நன்மைக்காகவே நமது பிரார்த்தனை இருக்கிறது.

ஒரு ஞானியானவன் சில சமயங்களில் பரோபகாரம் செய்யவில்லை என்றால், அவன் ஆன்மீக நிலையிலேயே இருக்கிறான். அவனுக்கு உலகம் என்பதே உண்மையில் இல்லை. அவன் உலகத்தை மீறிச் சென்றவன். அப்படிப்பட்டவனுக்கு நியமமே இல்லை. ஆனாலும் ஞானிகள் சாமான்யமாகக் கருணையே வடிவமாக இருப்பார்கள். ஞானிகளில் சிலர் தம்முடைய உடல் மூலமாகப் பரோபகாரம் செய்யவில்லையே என்றால், அவர்கள் இவ்வுலகத்தில் இருப்பதன் மூலமே, உலகிற்கு நன்மை பயக்கிறார்கள். உடல் சேவை ஒன்று மட்டும்தான் சேவையா? ஆகவே ஞானிகளும் பிறர் நலங்கருதியே இருக்கிறார்கள்.

மானஸீக பூஜை

சிஷ்யன் : சிலருக்கு, பூஜை செய்ய வேண்டும் என்ற ஆசை இருக்கிறது. ஆனால் அதைச் செய்வதற்குச் சரியான வாய்ப்பில்லை. தியானத்திலேயே காலத்தைக் கழிக்கலாம் என்றால் அவர்களுக்குத் தியானமும் சரியாக வருவதில்லை. இப்படிப்பட்டவர்கள் மனதை ஒரு நிலைப்படுத்த என்ன செய்யலாம்?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆசார்யாள் : அவர்கள் மானஸீக பூஜையைச் செய்யலாமே.

சி : *மானஸீக பூஜை என்றால் என்ன?*

ஆ : மானஸீக பூஜை என்றால் மனதால் செய்யப்படும் இறைவனின் பூஜை என்று பொருள். சாமான்யமாகப் பூஜை செய்வதற்குப் புஷ்பம், தூபம், தீபம் போன்றவை தேவைப்படுகிறது. எவ்வாறு வெளிப் பூஜையில் நாம் செய்வோமோ, அந்த உபசாரங்களை மனதாலேயே கற்பனை செய்து இறைவன் வந்திருக்கிறான் என்று கருதி எல்லா உபசாரங்களும் செய்தால் அதுவே மானஸீக பூஜையாகும்.

சி : *மானஸீக பூஜை செய்யும்போது தியான சுலோகங்கள் இவைகள் எல்லாம் எப்படிச் செய்வது?*

ஆ : 'இறைவன் நம்முன் வந்திருக்கிறான், அவனை நாம் வரவேற்க வேண்டும், அவனுக்கு ஓர் ஆஸனம் தர வேண்டும்' எனக்கருதி ஓர் ஆஸனத்தைக் கொடுப்போம். அவன் ஆஸனத்தில் அமர்ந்த பிறகு நாம் அவன் கால் கைகளை அலம்பி, ஆசமனம் செய்யும்படிச் செய்த பிறகு சுத்தமான ஜலத்தைத் தருவோம். அவன் அதை ஏற்றுக் கொள்வான். மேலும் அவனுக்கு ஸ்நானம் செய்து வைப்போம். இதுபோல் நாம் மனதாலேயே எல்லாவற்றையும் செய்து கொண்டே போகலாம். இவைகளை எல்லாம் அவன் ஏற்றுக் கொள்கிறான் எனக் கருதிச் செய்து கொண்டே போகலாம்.

சி : *இறைவனது உருவம் அவன் மானஸீக பூஜை செய்கையில் நிலையாக நிற்காவிட்டால் என்ன செய்வது?*

ஆ : அவன் மானஸீக பூஜை செய்யும் பொழுது அவனது இஷ்டதேவதையின் சித்திரத்தை எதிரில் வைத்துக் கொள்ளலாம். சித்திரத்தைக் கவனித்தவாறு கண்களைத் திறந்து சிறிது நேரம் செய்யலாம். சற்று நேரம் கழிந்த பிறகு இறைவன் அங்கு அமர்ந்திருக்கிறான் என்று கருதிப் பூஜையைத் தொடரலாம். முடியவில்லையென்றால், மற்றொரு முறை கண்களைத் திறந்து பூஜையைத் தொடரலாம். இங்கு எல்லாமே மனதால் செய்யப்படுகின்றது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சி : *மானஸீக பூஜை செய்வதற்கு ஏதாவது நியமம் இருக்கிறதா?*

ஆ : மானஸீக பூஜை செய்வதற்கு எந்த விதமான நியமமும் இல்லை. எந்நேரத்திலும் செய்யலாம். எந்த முறையில் வேண்டுமானாலும் செய்யலாம். இறைவனை மானஸீகமாகப் பூஜை செய்தால் விசேஷ மான பலனுண்டு, மனதும் புனிதமாகும். அவனுடைய அருளையும் பெறலாம். மானஸீக பூஜையைத் தெரிந்து கொள்வதற்கு சிவ மானஸ பூஜை அல்லது ம்ருத்யுஞ்ஜய மானஸ பூஜா ஸ்தோத்ரம் போன்ற ஸ்தோத்ரங்களைப் பார்த்தால், அதைப்பற்றிப் புரிந்து கொள்ளலாம்.

சி : *மானஸீக பூஜையை 'இன்னார்தான் செய்ய வேண்டும்' என்ற தகுதி வேறுபாடுகள் உள்ளனவா?*

ஆ : மானஸீக பூஜையை எல்லோரும் செய்யலாம். இவன் செய்ய வேண் டும், அவன் செய்யக் கூடாது என்று கிடையாது.

சி : *மானஸீக பூஜையை எவ்வளவு நேரத்திற்குச் செய்ய வேண்டும்?*

ஆ : எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் செய்யலாம். மானஸீக பூஜை செய்வது பழக்கத்திற்கு வரும் வரையில், நீண்ட காலம் அமருவதென் பது சற்றுக் கடினமாயிருக்கலாம். பழகப் பழக அதில் ருசியும் அதிகமாக ஒருவன் பெறுவான்.

கர்மாவின் பங்கு

சிஷ்யன் : *ஆன்மீக வாழ்வில் கர்மாவின் பங்கு எவ்விதத்தில் இருக்கிறது?*

ஆசார்யாள் : கர்மாவைப் பற்றுதலில்லாமல் இறைவனுக்காகச் செய்தால் மனத்தூய்மை ஏற்படுகிறது.

சி : *ஒருவனுக்குப் பலன்களில் பற்றுதல் இல்லாவிட்டால் செயல்களை ஒழுங்காகச் செய்யமாட்டான் என்று அர்த்தம் வருமா?*

ஆ : இல்லை, வராது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சி : *அப்படித்தானே யுக்திக்குப் பொருத்தமாக இருக்கிறது. ஏனென்றால், எப்போது ஒருவனுக்கு வெற்றி, தோல்விகளில் கவனமில்லையோ, அப்போது தனக்கு சாமர்த்தியம் உள்ள அளவிற்குக் (அதிகபட்ச அள விற்கு) காரியங்களைச் செய்யமாட்டான் என்றுதானே வருகிறது?*

ஆ : இதற்கு எதிர்மாறான கருத்துத்தான் உண்மை. எவனுக்குப் பற்றுதலே யில்லையோ அவன் செயல்களை ஒழுங்காகச் செய்வான். ஏனென் றால், அந்தச் செயலை அவன் இறைவனின் ஆராதனையாகக் கருதுகி றான். எந்தப் பக்தனாவது இறைவனுக்குத் தீமை வாய்ந்த ஒன்றை அர்ப்பணிக்க விரும்புவானா? மாட்டான். கர்மயோகம் செய்பவன் தீய செயலைச் செய்ய மாட்டான். மேலும் எல்லாச் செயல்களையும் இறை வனுக்கே அர்ப்பணிப்பான். அவன் மேல் உள்ள பக்தியினால் எல்லாக் காரியங்களையும் நல்ல காரியங்களாகவே செய்வான். இதைக் காட்டி லும் நேர்மாறாக, செயல்களின் பலன்களில் பற்றுதலுள்ளவன் ஒழுங் காகச் செயல்களைச் செய்ய முடியாது.

சி : *இவ்விஷயத்தை சாஸ்திரத்திலும் கூறியிருக்கிறார்களா?*

ஆ : ஆம். ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா,

முக்தஸங்கோऽனஹம்வாதீ
த்ருத்யுத்ஸாஹஸமன்வித:।
ஸித்யஸித்யோர்நிர்விகார:
கர்தா ஸாத்விக உச்யதே ॥

'பற்றுதலில்லாமலும், அஹங்காரமில்லாமலும், தீர்மானத்துடனும், உற் சாகத்துடனும் இருந்து வெற்றியிலும் தோல்வியிலும் ஒரு நிலையுடை யவன் ஸாத்விகமாகச் செய்பவன் என்று அழைக்கப்படுகிறான்' என்று கூறுகிறார். இதிலிருந்து கிருஷ்ணர், "ஒழுங்காகக் காரியம் செய்யாத வர்களைப் பற்றிப் பேசவில்லை" என்று தெரிகிறது.

சி : *ஒருவன் தான் எல்லாச் செயல்களையும் இறைவனுக்கு அர்ப்பணிப்ப தன் மூலம் அக்காரியங்கள் வெற்றிகரமாக நடைபெறும் என நினைத் துச் செய்வானேயானால், அவன் கர்மயோகத்தை அனுஷ்டித்தான் என்று அர்த்தமாகுமா?*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆ : இல்லை, ஏனெனில் அம்மனிதன் காரியத்தின் பலனில் பற்றை விட வில்லை.

சி : *கர்மயோகத்தின் அனுஷ்டானத்தை எது கடினமாக்குகிறது?*

ஆ : பொருட்களில் இருக்கும் பற்றுதலும் இறைவனைக் குறித்து வேண் டிய அளவிற்கு பக்தியில்லாமல் இருப்பதும் கர்மயோகத்தை ஒருவன் பயிற்சி செய்வதைக் கடினமாக்குகின்றன. பற்றுதலிருப்பவன் பலனை அர்ப்பணித்தேன் என்று கூறலாம். ஆனால் உண்மையில் அதிலேயே ஆசை வைத்திருப்பான். இறைவனிடத்தில் விசேஷமாக பக்தியில்லா விட்டால், எல்லாவற்றையும் அர்ப்பணம் செய்ய வேண்டும், அது என் கடமை என்று தோன்றாது. மேலும் அவனால் முழுமனதோடு கர்மயோ கத்தை அனுஷ்டிக்க முடியாது.

சி : *பலனில் பற்றுதலில்லாமல் இருந்தால் மட்டும் போதுமா? அல்லது இறைவனிடம் எல்லாவற்றையும் அர்ப்பணிக்க வேண்டுமா?*

ஆ : கர்மயோகம் ஆக வேண்டுமென்றால் எல்லாவற்றையும் இறைவ னுக்கு அர்ப்பணித்தேயாக வேண்டும். பற்றுதல் இல்லாமல் இருந்தால் மட்டும் போதாது.

சி : *கர்மயோகத்தில் ஈடுபடுபவன் செயல்களை நன்கு செய்வான் என்ப தற்கு ஆசார்யாள் ஏதாவது உதாரணம் கூறுவார்களா?*

ஆ : ஒரு பரீட்சையை ஒருவன் எழுதுகிறானென்று வைத்துக் கொள்வோம். அவனுக்கு மனதில் மிகவும் பற்றுதலிருக்கிறது. அவன் அன்றைய பரீட்சையை நன்கு எழுதாவிட்டால் என்ன ஏற்படும்? கவலையே ஏற்பட்டு அதன் காரணமாக அடுத்த நாள் பரீட்சையையும் நன்கு எழுத மாட்டான். ஏனென்றால், "தான் நன்கு செய்யவில்லையே, தான் நன்கு செய்யவில்லையே" என்ற கவலையே காரணம். ஆக, அடுத்த நாளும் சரியாக எழுதமாட்டான். பற்றுதல் இல்லாமல் இருப்பவன் பலனை ஈச்வரனுக்கு அர்ப்பணித்து மனது வைத்துச் சரியாகப் படித்து விடு வான். அவன் இரண்டு தேர்வுகளுக்கும் படித்து விடுவான். கவலையே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

யில்லாது படிப்பதால், அவன் செயல்களில் நன்கு ஈடுபாடு வைத்துக் கொள்வான். மேலும், ஒரு மனிதன் ஒரு செயலில் தனக்கு விருப்பமில் லாததால் நன்கு செய்யாமல் போய் விடலாம். ஆனால், கர்மயோகத் தைக் கடைப்பிடிப்பவன் 'ஈச்வரனுக்காக இதைச் செய்கிறேன். ஆதலால் என் கடமையாகவாவது கருதி நான் நன்கு செய்ய வேண் டும்' என்ற எண்ணத்துடன் தனது செயலில் நன்கு கவனம் செலுத்து வான்.

சி : *கர்மயோகம் செய்வதற்கு யாருக்கெல்லாம் தகுதி இருக்கிறது?*

ஆ : எல்லோரும் கர்மயோகத்தை அனுஷ்டிக்கலாம். கர்மயோகத்தை அனுஷ்டித்தால் மனம் மிகவும் சுத்தமாகி விடும். மேலும் இறைபக்தி யும் வளரும். சுத்தமான மனதில்தான் ஞானோதயம் ஏற்படும். ஆகை யால் எல்லோரும், எப்போதும் கர்மயோகத்தை அனுஷ்டித்து வர வேண்டும். அப்படிச் செய்தால் அனைவரும் நன்மை பெறலாம்.

சி : *இறைவனிடம் செயல்களின் பலன்களை மட்டும் அர்ப்பணம் செய் தால் போதுமா? அல்லது செயல்களையே அர்ப்பணம் செய்ய வேண் டுமா?*

ஆ : செயல்களையே அர்ப்பணம் செய்வது சாலச் சிறந்தது. அது முடியா விட்டால் பலன்களையாவது அர்ப்பணம் செய்ய வேண்டும். கிருஷ் ணபரமாத்மா கீதையில்,

மய்யேவ மன ஆதத்ஸ்வ மயி புத்திம் நிவேசய |
நிவஸிஷ்யஸி மய்யேவ அத ஊர்த்வம் ந ஸம்சய: ||

(உன் மனதை என்னிடமே வை, உன் புத்தியை என்னிடமே வை. இப்படிச் செய்தால் என்னிடமே வாழ்வாய். இதைப்பற்றிச் சந்தேகம் வேண்டாம்) என்றும்,

அத சித்தம் ஸமாதாதும் ந சக்னோஷி மயி ஸ்திரம் |
அப்யாஸயோகேன ததோ மாமிச்சாப்தும் தனஞ்ஜய ||

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இம்மாதிரி என்னிடத்திலேயே மனதை வைக்க முடியவில்லையென்றால் பயிற்சியினால் என்னை அடைவதற்கு முயற்சி செய்) என்றும்,

அப்யாஸேப்யஸமர்த்தோஸி மத்கர்ம பரமோ பவ |
மதர்த்தமபி கர்மாணி குர்வன்ஸித்திமவாப்ஸ்யஸி ||

(பயிற்சியினாலும் செய்ய முடியவில்லையென்றால், எல்லாவற்றையும் எனக்காகவே செய். எனக்காகவே காரியங்களைச் செய்தாலும் ஸித்தியை அடைவாய்) என்றும்,

அதைததப்யசக்தோஸி கர்தும் மத்யோக மாச்ரித: |
ஸர்வகர்ம பலத்யாகம் தத: குரு யதாத்மவான் ||

(இதுவும் செய்ய முடியவில்லையென்றால், என்னிடத்திலேயே அடைக்கலம் அடைந்து எல்லாச் செயல்களின் பலன்களைக் கட்டுப்பாடுள்ள மனதுடன் அர்ப்பணம் செய்) என்றும் கூறியிருக்கிறார்.

சி : ***ஒருவன் கர்மயோகத்தில் ஈடுபட்டுள்ளானென்றால் அவன் செயல்களை அதிகமாகச் செய்வானா?***

ஆ : அப்படி அர்த்தமில்லை. செயல்களை நான்கு விதமாகவோ அல்லது ஆறு விதமாகவோ பிரிக்கலாம். ஆறு விதமாகப் பிரித்தால் அவை: 1.நித்ய கர்மா, 2.நைமித்திக கர்மா, 3.காம்ய கர்மா, 4.நிஷித்த கர்மா, 5.உபாஸனா கர்மா, 6.பிராயச்சித்த கர்மா என்பவையாகும். முன்பே தீர்மானிக்கப்பட்டவாறு எந்தக் கர்மா பொருத்தமான காலத்தில் மீண்டும் மீண்டும் வருமோ அது நித்ய கர்மாவாகும். ஸந்த்யாவந்தனம் இதற்கு உதாரணம் ஆகும். நைமித்திக கர்மாவின் காலம், ஒரு நிச்சயமான நியமத்திற்குக் கட்டுப்படவில்லை. கிரஹணத்தின்போது செய்யப்பட வேண்டிய சில கர்மாக்கள் இதற்கு உதாரணம். கிரஹணத்தின் காலம் நிச்சயமாக இல்லை. ஆனால் ஸந்த்யா வேளையில் செய்யப்படும் ஸந்தியாவந்தனத்தின் காலம் நிச்சயித்துக் குறிக்கப்பட்டுள்ளது. அடுத்ததாக, எக்கர்மாவை ஒருவன் ஆசையுடன் செய்கிறானோ, அது காம்ய கர்மா. சாஸ்திரத்தில், இவைகளைச் செய்ய வேண்டும் என்று

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கூறப்படவில்லை. ஒருவன் தனது ஆசையினால்தான் இவைகளைச் செய்கிறான். எது செய்யப்படக் கூடாது என்று சாஸ்திரங்களில் கூறப் பட்டிருக்கிறதோ அது நிஷித்த கர்மாவாகும். அடுத்ததாக, உபாஸனை சம்பந்தப்பட்ட கர்மாக்கள் உபாஸனா கர்மாவின் கோஷ்டிக்குச் சேர்கின் றன. எதன் மூலமாக, செய்த ஒரு கர்மாவின் பலம் நாசமடையுமோ அது பிராயச்சித்த கர்மா எனப்படும். இந்த ஆறு வகைகளைச் சுருக்கி நித்ய, நைமித்திக, காம்ய, நிஷித்த கர்மாக்கள் என்றும் நான்கு வகையாகக் கூறலாம். இவற்றில் நிஷித்த கர்மாவை ஒருபோதும் ஒருவன் மேற் கொள்ளக் கூடாது. காம்ய கர்மாவை முடிந்த அளவிற்கு விட்டுவிட வேண்டும். ஆனால் நித்ய, நைமித்திக கர்மாக்களைச் செய்தே தீர வேண்டும். இவைகளைச் செய்யும்போதும் பலனில் பற்றுதல் இல்லா மல் செய்ய வேண்டும். ஆகவே, ஒருவன் கர்மயோகம் செய்கிறானென் றால், வீணாக எல்லாச் செயல்களிலும் ஈடுபடுகிறானென்று அர்த்த மில்லை. எக்கர்மா தேவையோ அதைப் பற்றுதலில்லாமல் செய்வான். அதுவே கருத்து.

சி : ***இறைவனின் அருளைப் பெறுவதற்காக ஒருவன் கர்மாக்களை இறை வனிடம் அர்ப்பணிக்கிறான். இந்நிலைமையில் அவனுக்கு பலனில் பற்றுதலில்லை என்று எப்படிச் சொல்ல முடியும்? 'இறைவனின் அருள்' என்பதின்மேல் அவனுக்குப் பற்றுள்ளதே. அது கிடைக்க வேண்டும் என்னும் குறிக்கோளுடன் அல்லவா அவன் செயலைச் செய்கிறான்?***

ஆ : ஒரு விதத்தில் பார்த்தால் நீ சொல்வது சரிதான். ஆனால், லௌகீகப் பலன்களில் ஆசை வைப்பதைவிட இறைவனிடம் ஆசை வைத்தால் ஒருவிதமான பந்தமும் ஏற்படாது. அதுபோல் இறைவனிடம் பற்று வைத்துக் கொண்டால், அது பந்தத்திலிருந்துதான் நம்மை நீக்கும். ஆனால் உத்தமமான கர்மயோகம் என்பது, இறைவனின் அருளைக் கூட விரும்பி செய்யப்படுவதில்லை. இறைவனுக்கு அளிப்பது என் கடமை என்று கருதிச் செய்வதேயாகும். இதனால்தான் சங்கர பகவத் பாதாள் கீதா பாஷ்யத்தில் ***'ஈச்வரார்த்தம் கரிஷ்யே'*** (இறைவனுக்காகச்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

செய்கிறேன்) என்று கருதிச் செய்ய வேண்டுமே தவிர *'ஈச்வர ப்ரீத்யர்த்தம் கரிஷ்யே'* (இறைவனின் ப்ரீதிக்காகச் செய்கிறேன்) என்று கருதிச் செய்யக் கூடாது என்கிறார். ஸந்த்யாவந்தனம் போன்ற கர்மாக்களில் *'பரமேச்வர ப்ரீத்யர்த்தம்'* என்று சொல்கிறோம். இவ்வாறு சொல்வதில் தவறுள்ளது என்று சொல்ல முடியாது. ஏனெனில், இங்கும் 'இறைவனுக்காகச் செய்கிறேன்' என்று நினைத்தே செய்யலாம். மேலும், இது சம்பிரதாயத்தில் வந்துள்ளது. ஆகவே உத்தமமான கர்மயோகம் என்பது இறைவனுக்காகச் செய்யப்பட வேண்டுமே தவிர அவனது ப்ரீதிக்காகவுமில்லை.

சி : **ஒருவன் கர்மயோகம் பயிற்சி செய்து கொண்டிருக்கையில், தான் முன்னேற்றம் அடைந்துள்ளானா என எப்படித் தெரிந்து கொள்ளலாம்?**

ஆ : பலனில் பற்றுதல் இல்லாமலிருக்க வேண்டும் என்று நான் சொன்னேன். ஒருவன் தான் கர்மயோகம் செய்வதில் முன்னேறியுள்ளானா இல்லையா எனத் தெரிந்து கொள்ள ஆசைப்படுவதுதான் பலனில் பற்றுதலில்லாமல் இருப்பதா? ஆயினும், ஒருவனுக்கு 'நான் ஆன்மீக வழியில் நன்கு முன்னேறிக் கொண்டிருக்கிறேனா, கர்மயோகம் ஒழுங்காகச் செய்கிறேனா' என்ற சந்தேகம் ஏற்படுமாயின், 'தன் மனது புனிதமாயிருக்கிறதா, அமைதியாக இருக்கிறேனா, கவலையில்லாமல் எல்லாச் செயல்களையும் இறைவனுக்காக என்று செய்து கொண்டிருக்கிறேனா' என்று பார்த்துக் கொள்ளலாம். அதுவே ஒருவனுக்கு அவன் கர்மயோகத்தை நன்கு செய்கிறானா என்று காட்டிவிடும்.

பக்தி

சிஷ்யன் : சிலர் பஜனை செய்வதை பக்தி என்று சொல்கிறார்கள். மற்ற சிலர் நித்ய கர்மாவைச் செய்வதைத்தான் பக்தி என்று சொல்கிறார்கள். இதில் உண்மையான பக்தி எது ஆகும்?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆசார்யாள் : ஆதிசங்கரபகவத்பாதாள் விவேகசூடாமணியில்,

மோக்ஷகாரணஸாமக்ர்யாம் பக்திரேவ கரீயஸீ

(மோக்ஷத்தை அடையக்கூடிய ஸாதனங்களில் பக்திதான் தலைசிறந்தது) என்று கூறியுள்ளார். அவரே பக்தியென்றால் என்ன என்றும் சொல்லியிருக்கிறார்.

ஸ்வஸ்வரூபானுஸந்தானம் பக்திரித்யபிதீயதே

தன்னுடைய ஸ்வரூபத்தை அனுஸந்தானம் செய்வதே பக்தி என்று கூறியிருக்கிறார். அதாவது ஆத்ம ஸ்வரூபத்திலேயே லீனமாக இருப்பது பக்தி. இதுவே உத்தமமான பக்தியின் லக்ஷணம். ஆனால், இம்மாதிரியான உத்தமமான பக்தியை எல்லோரும் கடைப்பிடிக்க முடியாது. அவர்களுக்குச் சற்றே குறைந்த வகையான பக்தியைக் கூற வேண்டும். மதுஸூதன ஸரஸ்வதி விளக்கம் கூறும்போது பக்தி மூன்று வகையாக இருக்கிறதென்று சொல்லியிருக்கிறார். முதல் வகை 'நான் இறைவனுக்குச் சேர்ந்தவன்' என்றிருப்பது. இரண்டாவது வகை 'இறைவன் எனக்குச் சேர்ந்தவன்' என்றிருப்பது. இதற்கு உதாரணம் யசோதையே ஆகும். இறைவனிடத்தில் அதிகமான அன்பு வைத்தால் 'இறைவன்' எனக்குச் சேர்ந்தவன் என்ற எண்ணம் ஏற்படலாம். அதைக் காட்டிலும் உத்தமமானது 'நானேதான் அந்தப் பரம்பொருள்' என்பதேயாகும்.

சி : *'நானேதான் பரம்பொருள்' என்பதை எப்படிப் பக்தியென்று கூறலாம்?*

ஆ : சாமான்யமான பக்தன் இறைவனைக் காட்டிலும் தான் வேறானவன் என்பதை ஒத்துக்கொள்ளத் தயாராக இருக்கிறான். ஆனால், உத்தமமான பக்தன் அந்தப் பிரிவைக்கூடத் தாங்கிக் கொள்ளாமல் 'நானே அந்தப் பரம்பொருள் ஆகிவிடுவேன்' என்று கருதி இந்த ஞானத்தைப் பெற்றுக் கொள்கிறான். ஆகவே அதை உத்தமமான பக்தியென்று சொல்லத்தான் வேண்டும். இப்படிப்பட்ட பக்தனையே உத்தமமான பக்தனென்று கிருஷ்ணர் கூறியிருக்கிறார். ஏன் என்றால் அவர் ஞானியைத்தான் மிகச் சிறந்த பக்தன் என்று கருதுகிறார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சி : *சாமான்யமான மக்கள் எவ்வாறு பக்தி செலுத்த வேண்டும்?*

ஆ : எதுவரைக்கும் 'உடல்தான் நான்' என்ற எண்ணம் இருக்குமோ அது வரைக்கும் தான் இறைவனுடைய தாஸன் என்று கருதுவதே உத்தமமானதாகும். அவ்வாறிருப்பவன் இறைவனிடமிருந்து ஒன்றும் விரும்ப மாட்டான். இறைவனின் சேவை செய்வதையே தன் கடமை என்று கருதுவான். பிரஹ்லாதனுக்கு பகவான் 'ஏதாவது நான் வரம் தருவேன்' எனக் கூறியபொழுது பிரஹ்லாதன்,

யஸ்த ஆஸிஷ ஆசாஸ்தே நஸப்ருத்ய: ஸ வை வணிக்

(எவனுக்கு இறைவனிடமிருந்து ஏதாவது வேண்டுமோ அவன் தாஸனில்லை, வியாபாரி) என்று பதிலளித்தான். எனவே, உத்தமமான பக்தன் இறைவனிடம் இருந்து ஒன்றும் விரும்பமாட்டான். இறைவனிடம் பக்தி செலுத்துவது கடமை என்று கருதி பக்தி செலுத்துவான்.

சி : *அப்படியென்றால் பஜனை செய்வதைப் பக்தியென்று கருதுவது தவறா?*

ஆ : தவறில்லை. அதெல்லாம் பக்திதான். நாரதர் பக்தியைப் பற்றிக் கூறும் பொழுது, *''ஸாத்வஸ்மின் பரம ப்ரேம ரூபா''* அதாவது 'இறைவனிடத்தில் உள்ள தீவிரமான ப்ரீதியே பக்தியாகும்' என்று கூறியிருக்கிறார். இறைவனிடத்தில் எந்தவிதமான வழியில் ப்ரீதியைக் காட்டினாலும், அதெல்லாம் பக்தி என்ற கோஷ்டிக்குத்தான் சேரும். சங்கரபகவத் பாதாள் சிவானந்த லஹரியில்,

அங்கோலம் நிஜபீஜஸந்ததி
ரயஸ்காந்தோபலம் ஸூசிகா
ஸாத்வீ நைஜவிபும் லதா க்ஷிதிருஹம்
ஸிந்துஸ் ஸரித்வல்லபம் |

ப்ராப்னோதீஹ யதா ததா பசுபதே:
பாதாரவிந்தத்வயம்
சேதோவ்ருத்திருபேத்ய திஷ்டதி
ஸதா ஸா பக்திரித்யுச்யதே ||

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(எப்படி ஓர் அங்கோல மரத்தின் விதை அம்மரத்திடம் செல்கிறதோ, எப்படி ஓர் இரும்புத் துண்டு காந்தத்திடம் செல்கிறதோ, எப்படி ஒரு பதிவிரதையான பெண்மணி தன் கணவன் விஷயத்தில் அபிமானம் வைத்திருக்கிறாளோ, எப்படி ஒரு கொடி மரத்தைச் சுற்றிக் கொள்கிறதோ, எப்படி ஓர் ஆறு கடலைச் சென்றடைகிறதோ, அதேபோல் மனதின் எண்ணங்கள் இறைவனின் பாதார விந்தங்களில் இருப்பதற்கு பக்தி என்று பெயர்) என்று கூறுகிறார். கொடுக்கப்பட்ட முதல் உதாரணம் என்னவென்றால், அங்கோலத்தின் விதை அங்கோலம் மரத்திடம் செல்வது. அங்கோல மரத்தில் உள்ள கோந்தைப் போன்ற ஒன்றில் போய் விதை ஒட்டிக் கொண்டு விடும். அதேபோல் முதல் நிலையில் பகவான், பக்தனுக்கு ஆதரவு கொடுத்து அவன் பக்கம் பக்தனது மனதைத் திருப்புவான். இரண்டாவது உதாரணம் *'அயஸ் காந்தோபலம் ஸூசிகா'*. முதல் உதாரணத்தில் பக்தன் ஏதாவது முயற்சி செய்ய வேண்டியிருந்தது. இரண்டாவதில் பக்தனின் மனம் இறைவனிடம் இயற்கையாகவே செல்கிறது. காந்தத்தின் பக்கம் எப்படி இரும்புத் துண்டு போகுமோ அதேபோல் பக்தி விஷயத்திலும் சற்றுப் பயிற்சியாகி விட்டால் இறைவனைப் பற்றி நினைத்துக் கொண்டேயிருந்தால் மனம் தானாகவே அங்குச் செல்லும். உதாரணத்தில் காந்தம் எவ்வாறு இரும்பை இழுத்துக்கொள்கிறதோ, அதேபோல் இறைவன் பக்தனைத் தானாகவே இழுத்துக் கொள்வான். மூன்றாவது *'ஸாத்வீ நைஜ விபும்'*. அப்யாஸமாகிவிட்டு இறைவனிடம் மனம் தானாகவே சென்று கொண்டிருந்தால் அவனைப் பற்றியே கவனம் இருந்து கொண்டேயிருக்கும். அதாவது பதிவிரதை எவ்வாறு தன் கணவனைப் பற்றி நினைத்துக் கொண்டிருப்பாளோ அதுபோலாகும். நான்காவது வகை *'லதா க்ஷிதிருஹம்'*. லதை அல்லது கொடி, மரத்தைச் சுற்றிக் கொண்டிருந்தால் அம்மரத்திற்கே ஓர் அழகு ஏற்படும். அதேபோல் பக்தன் உத்தமமான பக்தியைச் செலுத்தி வந்தால், பக்தனுக்கு மட்டுமின்றி இறைவனுக்கே ஒரு சோபை போல் ஏற்படும். அடுத்தது உத்தமமான பக்தியைப் பற்றியுள்ளது. *'ஸிந்துஸ்ஸரித் வல்லபம்'* - எப்படி ஒரு நதி, கடலில் போய்ச் சேர்ந்தவுடன், 'இது நதி'

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்று கூற முடியாதோ, அதேபோல் இறைவனிடம் அளவு கடந்த பக்தி வைத்தால், அவன் அதிலேயே ஐக்கியமாகி விடுவான். அதுதான் உத்தமமான பக்தியாகும். ஆதலால் பக்திக்கு வெவ்வேறு தரங்கள் இருக்கின்றன. ஆகவே பஜனை செய்வதை பக்தியில்லை என்று கூற முடியாது.

சி : *சிலர் பஜனை செய்தால் போதும், நித்ய கர்மா ஏன் செய்ய வேண்டும் என்று கேட்கிறார்கள். இது சரியா?*

ஆ : இல்லை. இது சற்றும் சரியில்லை. நித்ய கர்மாவைச் சரிவரச் செய்து வருவதே சிறந்த பக்தியாகும். ஒரு யஜமானனும், அவனுக்கு ஒரு வேலையாளும் இருப்பதாக வைத்துக் கொள்வோம். அந்த வேலைக்கா ரன், யஜமானன் சொல்லும் வேலையையே செய்யாமல் வெறுமென யஜமானனைப் போற்றிக் கொண்டிருந்தால் அவனிடம், யஜமானனுக் குத் திருப்தி ஏற்படுமா? இறைவன்தான் நமக்கு இங்கு யஜமானன். அவன் வேதம் மூலமாகவும், ஸ்ம்ருதி மூலமாகவும், நாம் எப்படி வாழ வேண்டும் என்று கூறியிருக்கிறான். அதை விடுத்து, வெறுமென அவனைப் போற்றிக் கொண்டேயிருந்து, தன்னைப் பக்தன் என்று வேறு சொல்லிக் கொண்டால், அவனது கட்டளைகளை மீறிய ஒரு வன் தன்னைப் பக்தன் என்று சொல்லிக் கொள்வதைப் போலாகும். அது அவ்வளவு பொருத்தமில்லை. ஆகையால் நாம் நித்ய கர்மாவைச் செய்து வர வேண்டும். அதைத் தவிர பஜனை முதலியவற்றைத் தாராளமாகச் செய்து வரலாம்.

சி : *இறைவனிடம் நம் பக்தியை எவ்வாறு வளர்ப்பது?*

ஆ : நமக்கு எந்த விஷயத்திலும் எப்படி பற்று ஏற்படுகிறது? அதைப்பற்றி நினைத்துக் கொண்டேயிருந்தால் அவ்விஷயத்தில் பற்று ஏற்படும். ‘இதைச் செய்ய வேண்டும்’ என்று ஒரு செயலிலோ, பொருளிலோ நினைத்து வந்தால் அங்கு பற்றுதல் ஏற்படுகிறது. அதேபோல் இறைவ னிடமும், ‘இவன் உத்தமமானவன், இவனைச் சிந்திப்பதில் இன்பம் இருக்கிறது’ என்று நினைத்துக்கொண்டு வந்தால் பக்தி நன்கு வளரும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சி : *பக்தன் எதற்காக இறைவன் விஷயத்தில் பக்தி வைத்துக்கொள்ள வேண்டும்?*

ஆ : இறைவனருளால்தான் எல்லா நன்மையும் கிடைக்கும். லௌகீக நன்மையாயிருந்தாலும், அதற்கு இறைவன் விஷயத்தில் பக்தி வைத்துக் கொள்ள வேண்டும். சாமான்யமாகப் பார்த்தால் இப்படிக் காரணம் கூறலாம். ஆனால் உயர்வானது எதுவென்றால், இறைவனிடம் பக்தி வைப்பது தனது கடமை எனக் கருதி இறைவன் விஷயத்தில் பக்தி வைப்பதே ஆகும். இறைவனிடம் நாம் செலுத்தும் பக்தி இயற்கையாகவே வர வேண்டும். அதுதான் உண்மையான பக்தியாகும்.

சி : *ஒருவனுக்கு தன் இஷ்ட தெய்வத்தின் மீது அதிகமாக ப்ரீதி இருந்தால், மற்ற தெய்வங்களிடம் அவ்வளவு ப்ரீதி இருக்காது என்பது ஸகஜம். அதனால் சிவனையே விரும்பும் ஒருவன் விஷ்ணுவின் பேரில் துவேஷம் வைத்துக் கொள்ளலாமா?*

ஆ : துவேஷம் வைத்துக் கொள்வது நல்லதுமில்லை, சாஸ்திரத்திற்கு சம்மதமுமில்லை. உருவமே இல்லாத கடவுள், பக்தனுக்கு அருள் புரியத் தான் உருவம் பெற்றுக் கொள்கிறான். ஆகவே, இறைவனைப் பொருத்தவரையில் அந்த உருவத்தில் தாத்பர்யம் இல்லை. பக்தன் எப்படி விரும்புகிறானோ, அப்படி இறைவன் காட்சியளிக்கிறான். ஆகவே இறைவன் விஷயத்தில் சிவன் வேறு விஷ்ணு வேறு என்பதுபோல் வித்யாசம் நினைப்பது தவறு. ஒருவனின் மனதில் தன் இஷ்ட தேவதையிடம் ப்ரீதியிருந்தாலும் மற்ற தேவதைகளைத் துச்சம் என்று கருதி துவேஷம் வைத்துக்கொள்ளக் கூடாது.

சி : *பக்தி வழிக்கு ஏதாவது சிறப்பு உள்ளதா?*

ஆ : எல்லோரும் பக்தியைச் செய்யலாம். தகுதி வித்யாசமே கிடையாது. மேலும், அதைச் செய்வதும் எளிது. ஒருவனுக்கு இயற்கையாகவே ப்ரீதி என்ற ஒன்று இருக்கும். அதை இறைவனிடம் திருப்பி விட்டால் அது பக்தியாகிவிடும். தவிர ஞானமார்க்கம் மூலமாகவோ, தியானத்தின் மூலமாகவோ ஒருவன் ஸித்தியடைய வேண்டுமெனில், செய்யும் போது அது கடினமாக இருக்கும். ஓரளவுக்கு முன்னேற்றம் அடைந்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிறகுதான் அவன் இன்பத்தை அனுபவிப்பான். ஆனால் பக்தி அப்படி யில்லை. பக்தி மார்க்கத்தில் செல்லும் போதே இன்பமிருக்கும். 'என் கடவுளை நான் நினைத்துக் கொண்டிருக்கிறேன்' என எண்ணினா லேயே ஓர் இன்பம் ஏற்படும். அதனால் பக்தி மார்க்கத்தில் முதலிலி ருந்தே இன்பமிருக்கும். பக்தியின் பலன் வடிவாகவே பக்தி இருக்கும். இதுவும் ஒரு விசேஷம்.

சி : *சில தடவை ஸ்தோத்ரங்களைப் பாராயணம் செய்யும் பொழுது ஏதா வது தவறுகள் ஏற்படலாம். அதைப் பாராயணம் செய்பவன் கவனிக்கா மல் இருந்திருக்கலாம். அப்படியிருந்தால் மிகவும் தோஷமுண்டா?*

ஆ : ஓரளவுக்கு ஸ்தோத்ரத்தைத் தெரிந்து கொண்டு சொல்வது விசேஷம். அப்போதுதான் விசேஷ பக்தி ஏற்படும். சில சமயங்களில் நம்மையறி யாது தவறுகள் ஏற்பட்டால் அதனால் குற்றமில்லை. ஏனென்றால், இறைவன் உள்ளத்தில் உள்ளதைத்தான் கவனிக்கிறான். வெளியில் இருப்பவற்றைக் கவனிப்பதில்லை.

மூர்க்கோ வததி விஷ்ணாய
வித்வான் வததி விஷ்ணவே |
உபயோ: ஸத்ருசம் புண்யம்
பாவக்ராஹீ ஜனார்தன: ||

பதத்தை உச்சரிக்கத் தெரியாதவன் 'விஷ்ணவே' என்பதற்குப் பதி லாக 'விஷ்ணாய' என்று கூறலாம். இருவருக்கும் ஒரேவிதமான புண் ணியம்தான் கிடைக்கும். ஏனென்றால் ஜனார்தனன் உள் எண்ணத் தைத்தான் க்ரஹிக்கிறான். நீலகண்ட தீக்ஷிதர் ஓர் உதாரணம் மூலமா கவே காட்டியுள்ளார். இறைவன் மேல் நாம் புஷ்பத்தைப் போட்டால் நாம் நன்மையை அடைவோம் என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால், அதைப் போடும்போது நல்ல பக்தி பாவனையுடன் செய்ய வேண்டும். மன்மதனும் சிவன் மேல் புஷ்பத்தால் செய்யப்பட்ட பாணத்தைத்தான் விட விரும்பினான். ஆனால், அவரின் தபஸைக் கெடுக்க வேண்டுமென்று எண்ணங்கொண்டு, விடுவதற்குச் சித்தமா யிருந்தான். ஆனால் பகவான் அதற்குச் சம்மதிக்கவில்லை. அவனை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எரித்து விட்டார். பக்தனும், மன்மதனும் பகவான் மேல் புஷ்பம் போடத் தான் சென்றார்கள். ஆனால் பக்தனுக்கு உத்தமமான பலன், மற்றவனுக்கு நாசம். ஆகவே மன எண்ணம்தான் முக்கியம்.

சி : *இறைவனிடம் எனக்கு ஆரோக்யம் வேண்டும். நான் பரீட்சையில் நன்கு எழுத வேண்டும் என்றெல்லாம் பிரார்த்தனை செய்வது தவறா?*

ஆ : பிரார்த்திப்பது தவறு என்று நான் கூறுவதில்லை. ஆனால் அது தேவையேயில்லை. இறைவனுக்கு எல்லாம் தெரியும். நமக்கு எப்படி நன்மை செய்ய வேண்டும் என்று தெரியும். அவரிடம் 'அதைக் கொடு, இதைக் கொடு' என்று நாம் உபதேசம் செய்ய வேண்டியதில்லை. ஆதலால் 'நீ எப்படி வேண்டுமானாலும் நடத்திக் கொள்' என்று அவனிடம் சொல்வதே ச்ரேஷ்டமாகும். ஆனால் அதிகமாக ஆசை வந்தால் - இறைவனைப் பிரார்த்தனை செய்தால் அது தவறென்று சொல்வதற்கில்லை. ஒரு காமதேனு ஒருவனுக்குக் கிடைத்தால், அதை அவன் உழுவதற்காகப் பயன்படுத்தினால், அதை நல்லதென்று சொல்வோமா? அதேபோல் இறைவன் எல்லாவற்றையும் கொடுக்கும் சாமர்த்தியம் உள்ளவன். மேலும் அவனுக்கு எது நல்லது, எது கெட்டதென்பது தெரியும். அவன் கருணாமூர்த்தி. அவன் ஸர்வக்ஞன். அப்படியிருக்கும்போது, 'நீ என் உள்ளத்தில் இருக்கிறாய். அது போதும்' என்று சொல்வது நல்லதா, அல்லது 'இதைக் கொடு, அதைக் கொடு' என்று உபதேசிப்பது நல்லதா?

சி : *இறைவனுக்கு ஒன்றும் தேவையில்லை. அப்படியிருந்தாலும், எல்லாவற்றையும் அவனுக்குக் கொடுக்க வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. இதற்குக் காரணமென்ன?*

ஆ : இறைவனுக்கு ஒன்றும் தேவையில்லைதான். ஆனால் அவனுக்கு நம் மனதைக் கொடுக்க வேண்டும் என்று நமக்கு கடமையிருக்கிறதா இல்லையா? இருக்கிறது. ஆதலால் நம் மனத்தை இறைவனிடத்திலே எப்போதும் கொடுக்க வேண்டும். அதாவது இறைவனையே எப்போதும் நினைத்துக் கொண்டிருக்க வேண்டும். பகவான் கிருஷ்ணர்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மாமனுஸ்மர யுத்ய ச

(என்னைச் சிந்தித்து யுத்தத்தில் ஈடுபடு) என்று கூறுவதின் மூலம் எல்லாக் காலங்களிலும் நாம் இறைவனையே சிந்திக்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தி இருக்கிறார். மேலும், நாம் எல்லாவற்றை யும் இறைவனுக்கு அர்ப்பணிக்க வேண்டும். அவ்வாறு செய்தால் அவன் அவசியம் ஏற்றுக் கொள்வான். பகவானே, ''பத்ரம் (இலை), புஷ்பம், பழம், ஜலம் இவற்றில் எதை பக்தியுடன் நீ தருகிறாயோ அதைப் பக்தியுடன் ஏற்றுக் கொள்கிறேன்'' என்றும், ''எதைச் செய்கி றாயோ, எதைச் சாப்பிடுகிறாயோ, எதை யாகத்தில் தருகிறாயோ, எதைத் தானம் செய்கிறாயோ, எந்த தவத்தைச் செய்கிறாயோ அவை எல்லாவற்றையும் குந்தியின் மகனே! எனக்கு அர்ப்பணமாகச் செய்'' என்றும் கூறியுள்ளார்.

சி : ***சில சமயங்களில் மனக்கவலைகள் போன்றவை நம் மனதை இறைவ னிடம் திருப்ப விடாமல், மற்றொரு பக்கம் திருப்பி விடுகின்றன. இதற்கு என்ன செய்வது?***

ஆ : உண்மையான பக்தனுக்குக் கவலை எதற்காக இருக்க வேண்டும்? ரயிலில் பிரயாணம் செய்யும்போது சுமையைத் தலையில் வைத்துக் கொள்ள வேண்டுமா அல்லது கீழே வைத்துக் கொள்ள வேண்டுமா? முதல் வழியில் நடந்தால் அவனை முட்டாள் என்று நாம் கூறுவோம். இவ்வுலகில் எது நடைபெற்றாலும் அது இறைவனுடைய இச்சையின் படித்தான் நடைபெறுகிறது. இறைவன் நம் நன்மைக்காகவே எதையும் இயற்றுகிறான் என்று கருதிக் கவலையில்லாமல்தானே இருக்க வேண் டும்? நாமே நம் விஷயத்தில் கவலை கொள்வது 'இறைவன் நம்மைக் காக்கிறான். நமக்கு எது நல்லதோ அதைத் தருகிறான்' என்பதில் நம்பிக்கையில்லாததுபோல்தானே ஆகிறது!

சி : ***இப்படி உண்மையாக இருந்தாலும் சில சமயங்களில் கவலை தானா கவே வருகின்றது. அது எதனால்?***

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆ : அது உண்மைதான். பக்தி அந்த அளவிற்குப் பக்குவமாகவில்லை என்று அர்த்தம். அந்தப் பக்தியை வளர்ப்பதற்கும் கவலையை விடுவதற்கும் ஒருவன் முயற்சி செய்ய வேண்டும். இவ்வாறு செய்து இறைவனிடமே அத்தனை பாரத்தையும் ஒப்படைத்துவிட்டால் ஒருவன் சுகமாக வாழலாம். சந்தோஷமாகவும் இருக்கலாமே!

சாஸ்திரங்களைப் படித்தல்

சிஷ்யன் : சாஸ்திரங்களை முழுவதுமாக நன்கு படிக்க வேண்டுமென்பது மோக்ஷத்தையே விரும்பும் ஒருவனுக்குத் தேவையா?

ஆசார்யாள் : எவ்வளவு தூரத்திற்கு அது அவன் சந்தேகங்களைத் தீர்க்க வேண்டியிருக்கிறதோ, பிறகு அவனுக்கு தத்துவ அறிவை உண்டாக்க எந்த அளவிற்குத் தேவைப்படுகிறதோ அவ்வளவிற்குச் சாஸ்திரங்களைப் படிப்பது தேவையாகிறது.

சி : ஆசார்யாள், மோக்ஷத்தை விரும்பும் சிஷ்யனுக்கு எந்தெந்தப் புத்தகங்களைப் படிக்கும்படி கட்டளையிடுவீர்கள்?

ஆ : ஆன்மீக வாழ்வில், முன்னேற்றம் அடைந்தவனுக்கு மாண்டூக்ய உபநிஷத் ஒன்றே போதும். அதைப் படிக்கும்போது கௌடபாதரின் காரிகையையும் சங்கர பாஷ்யத்தையும் படிக்கலாம். மாண்டூக்ய உபநிஷத்தைப் பற்றி முக்திகோபநிஷத்தில்

மாண்டூக்ய மேகமேவாலம்
முமுக்ஷுணாம் விமுக்தயே

(மாண்டூக்யமொன்றே எவன் மோக்ஷத்தை விரும்புகிறானோ அவனுக்கு மோக்ஷம் கொடுப்பதற்குப் போதும்) என்று கூறப்பட்டிருக்கிறது. யோக வாஸிஷ்டமும் உத்தமமான புத்தகம். மாண்டூக்ய உபநிஷத் வேதத்தின் பாகமானதினால் தகுதியுள்ளவர்களே அதைப் படிக்க முடியுமென்றாலும் யோக வாஸிஷ்டத்தை எல்லோரும் படிக்கலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இதை உபநயனமாகி இருந்தால்தான் படிக்கலாம் என்ற நியமமில்லை. மேலும் பகவானே உபதேசித்த உத்தமமான பகவத் கீதையைப் படிக்கலாம். மேற்கொண்டு சங்கரரின் புத்தகங்களோ, வித்யாரண்யரின் பஞ்சதசீயோ படிக்கலாம்.

சி : *சாஸ்திர அத்யயனம் எதற்காக உபதேசம் செய்யப்பட்டிருக்கிறது?*

ஆ : சந்தேகங்களைத் தீர்ப்பதற்காக. சந்தேகங்கள் நாம் சாஸ்திரங்களின் அபிப்ராயங்களைப் புரிந்து கொள்ளாமல் இருந்தால் மட்டுமின்றி, மற்றவர்களிடம் பேசுவது முதலியவற்றால் ஏற்படலாம். ஆகவே சாஸ்திரங்களைப் படிப்பது இதுபோன்ற சந்தேகங்களைத் தீர்த்துவிடும். மேலும் தத்துவத்திலும் விச்வாசம் உறுதியாக ஏற்படும். அத்யயனம் செய்வதினால்தான் குரு உபதேசிக்கும் தத்துவத்திலும் முன்சொன்னதுபோல் சாஸ்திரங்கள் உபதேசிக்கும் தத்துவத்திலும் விச்வாசம் தீர்மானமாக ஏற்படும்.

சி : *ஒருவனுக்கு, குரு சொல்வதில் தீவிரமான சிரத்தையிருந்து அவர் சொல்வதையே கேட்டுக் கொண்டிருந்தால், அவனுக்கும் சாஸ்திர அத்யயனம் தேவையா?*

ஆ : அவ்வளவு தீவிரமான சிரத்தையிருந்தால் அம்மாதிரி சிஷ்யனுக்கு சாஸ்திரங்களைத் தெரிந்து கொள்வதென்பது தத்துவத்தையறிய அவ்வளவு தேவையில்லை.

சி : *எவ்வளவு நாட்களுக்கு ஒருவன் சாஸ்திரத்தை அத்யயனம் செய்து கொண்டிருக்க வேண்டும்?*

ஆ : எதுவரையில் ஒருவனுக்குத் தத்துவத்தில் விச்வாசம் வரவில்லையோ அதுவரை செய்து கொண்டிருக்க வேண்டும். அந்த நிலையடைந்த பிறகு,

பலாலமிவ தான்யார்த்தீ த்யஜேத் க்ரந்த மசேஷத:

(எப்படி நெல்லை விரும்புபவன், உமியை எறிந்து விடுகிறானோ, அதேபோல் ஓர் அளவுக்கு மேல் வந்த பிறகு ஒருவன் புத்தகங்களை விட்டு விடலாம்.)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சி : *லௌகிக பந்தங்கள் பலவிதமாக இருப்பவர்கள் எவ்விதமான புத்தகங்கள் படிக்க வேண்டுமென்பது ஆசார்யாளின் கருத்து?*

ஆ : அவர்கள் தினந்தோறும் பகவத்கீதையின் ஓர் அத்யாயத்தையாவது பாராயணம் செய்து வரலாம். மேற்கொண்டு வித்யாரண்யரின் பஞ்சதசீயையும் சிறிதளவு பாராயணம் செய்து வரலாம். விஷ்ணு ஸஹஸ்ரநாம பாராயணம் மிகவும் நல்லது. தினமும் அதைப் பாராயணம் செய்பவர்கள் சிரேயஸ்ஸை அடைவார்கள்.

சி : *பகவத்கீதையில் ஆசார்யாளுக்குப் பிடித்தமான சில சுலோகங்களைக் கூறுவார்களா?*

ஆ : *அத்வேஷ்டா ஸர்வபூதானாம் மைத்ர: கருண ஏவ ச|*
நிர்மமோ நிரஹங்கார: ஸமது:கஸுக: க்ஷமீ ||
ஸந்துஷ்ட: ஸததம் யோகீ யதாத்மா த்ருட நிச்சய:|
மய்யர்ப்பிதமனோபுத்திர் யோ மத்பக்த: ஸ மே ப்ரிய: ||

(எவன், ஒருவன் விஷயத்திலும் துவேஷம் வைத்துக் கொள்வதில்லையோ, எல்லோரிடத்தும் மித்ர பாவத்துடனும் கருணையுடனும் இருக்கின்றானோ, எவன் பற்றுதலும் அஹங்காரமும் இல்லாமல் இருக்கின்றானோ, சுகத்திலும் துக்கத்திலும் சமமாக இருக்கிறானோ, எவன் எல்லோரையும் க்ஷமிக்கிறானோ, எவன் திருப்தியுடன் இருக்கின்றானோ, எவன் மனவடக்கத்துடனும் இருக்கின்றானோ, மேற்கொண்டு திடமான தீர்மானத்துடன் இருக்கிறானோ, எவனது புத்தியும் மனமும் என்னிடத்திலேயே இருக்கின்றனவோ அப்படிப்பட்ட பக்தன் எனக்கு மிகவும் பிரியமானவன்.) இச்சுலோகங்களின் மூலமாக பகவானுக்கு எப்படிப்பட்ட பக்தன் மிகவும் பிரியமானவன் என்று பார்க்கலாம். நாமும் அதுபோல் இருக்க முயற்சி செய்ய வேண்டும்.

சி : *இச்சுலோகங்கள் ஒரு ஞானியின் லக்ஷணங்களை அல்லவா குறிக்கின்றன? இப்படியிருக்கும்போது எவன் மோக்ஷத்தை விரும்புகிறானோ அவனுக்கு இச்சுலோகங்கள் பிரயோஜனம் அளிக்குமா?*

ஆ : ஞானிக்கு என்று சொல்லப்பட்ட தன்மைகள் மற்றவர்களை அந்நிலையை அடையச் செய்ய காரணமாக இருக்கின்றன என்று சங்கரரே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தெளிவாகக் கூறியிருக்கிறார். மேலும் பகவான் கூறிய உபதேசப்படி அனைவரும் துவேஷம் இல்லாமல் கருணையுடன் இருப்பார்களேயா னால் உலகம் அமைதியுடன் இருக்கும்.

சி : சாஸ்திரங்கள் கலியுகத்தில் சில செயல்களைச் செய்ய வேண்டா மென்று சொல்கின்றன. ஆனால் க்ருதயுகம் போன்றவற்றில் இவற் றைச் செய்யக் கூடாதென்று கூறவில்லை. இதற்குக் காரணமென்ன?

ஆ : சாஸ்திரங்கள் கூறுகின்றன, அவ்வளவுதான். நாம் சாஸ்திரங்களில் கூறியதற்கு பொருள் கூறுவதற்குத் தகுதியுள்ளவர்கள் ஆனாலும், சாஸ் திரங்களில் கூறப்பட்டிருப்பவற்றை மாற்றுவதற்கும், அதில் கூறப்பட் டிருப்பவைக்குக் காரணம் கூறவும் நமக்கு அதிகாரமுமில்லை, சாமர்த் தியமுமில்லை. நான் இந்தப் பீடத்தில் இருப்பதால் கிட்டத்தட்ட ஒரு நீதிபதியின் நிலையில் உள்ளேன். நீதிபதி, உலகிலிருக்கும் சட்டங்க ளின்படித்தான் தீர்ப்புக் கூற முடியும். அவன் தானாகவே சட்டங்களை உண்டாக்க முடியாது. அதேபோல் நான் புதிதாக சாஸ்திரக் கட்டளை களை உண்டாக்கவில்லை. ஆனால் அங்குக் கூறப்பட்டு இருப்பவற் றின் அர்த்தம்தான் கூற முடியும். ஏன் இப்படி இருக்கிறது என்ற கேள்வியை என்னிடம் கேட்டுப் பயனில்லை. ஸ்ம்ருதி புத்தகங்களை எழுதியவர்களைத்தான் கேட்க முடியும்.

சி : எவர்களுக்கு உபநயனம் ஆகவில்லையோ அவர்கள் உபநிஷத்துக்க ளின் மொழிபெயர்ப்புக்களையாவது படித்துப் புரிந்து கொள்ளலாமா?

ஆ : ஆம். அதில் தவறொன்றும் இருப்பதாகத் தெரியவில்லை.

சி : யோக வாஸிஷ்டம், புராணம், இராமாயணம் போன்ற புத்தகங்களை எல்லோரும் படிக்கலாமா?

ஆ : எல்லோரும் படித்துப் பயனடையலாம்.

சி : உபநயனமானால்தான் வேதங்களைக் கற்க முடியும். பலர் பிராஹ்ம ணர்களாக இல்லாததால் அவர்களும் வேத அத்யயனம் செய்வதற்கு வாய்ப்பில்லை. ஆதலால் அவர்கள் மோக்ஷமடைவதற்கு வாய்ப் பில்லை. இம்மாதிரி சிலர் எதிராகக் கேள்வி எழுப்புகிறார்கள். இது சரியா?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆ : எவனுக்கு உபநயனமாகி இருக்கிறதோ அவன்தான் ஞானம் பெற முடியும் என்று யார் சொன்னார்கள்? விதுரர் ஒரு மஹாத்மாவாக இருந் தார். அவர் த்விஜர் (இரு பிறவி பெற்றவர்) இல்லையே. (அதாவது உபநயனம் செய்வதையே இரண்டாவது பிறவியென்பர்) வேத அத்ய யனம் செய்யக் கூடாதென்பதற்காக மோக்ஷ வழியில் செல்லக் கூடாது என்று பொருளில்லை. உபநிஷத்துக்களில் உள்ள கருத்தை நாம் யோக வாஸிஷ்டம், விசாரஸாகரம் போன்ற புத்தகங்களில் காணலாம். எல் லோரும் இம்மாதிரிப் புத்தகங்களைப் படித்து ஞானத்தை அவசியம் பெறலாம். எல்லோருக்கும் ஞானம் பெறத் தகுதியுண்டு. சங்கரபகவத் பாதாள் இவ்விஷயத்தைத் தீர்மானமாகக் கூறியிருக்கிறார்.

சி : எல்லோருக்கும் கர்மயோகம் செய்வதற்கும், பக்தியில் ஈடுபடுவதற் கும் தகுதியுண்டா?

ஆ : 'இவன், அவன்' என்று வேறுபாடில்லாமல் எல்லோருக்கும் கர்மயோ கம் செய்வதற்கும் பக்தியை வளர்த்துக் கொள்ளவும் தகுதியுண்டு. எல்லோரும் தம் மனதைப் புனிதமாக்கிக் கொண்டு ஞானத்தைப் பெறலாம்.

வேதங்கள்

சிஷ்யன் : வேதம் ஆரம்பமில்லாதது என்று சொல்வதுண்டு. அப்படியா?

ஆசார்யாள் : ஆம், அது பரம்பொருளின் மூச்சுக் காற்றைப் போல் விளங்குகிறது.

சி : சிலர் 'வேதங்கள் பல ஆயிரம் வருடங்களுக்கு முன் ஆரியர்களால் இயற்றப்பட்டது. மேலும் உபநிஷத்துக்கள் அதற்குப் பின்பு இயற்றப் பட்டன' என்று கூறுகிறார்கள். இந்தக் கருத்தை ஒப்புக்கொள்வதில் ஏதாவது தவறுதல் இருக்கிறதா?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆ : இந்த அபிப்ராயம் எங்களுக்குச் சம்மதமில்லை. உபநிஷத்துக்கள் வேதங்களுக்குப் பிறகுதான் இயற்றப்பட்டன என்று வைத்துக் கொண்டாலும், இப்போது எல்லா இடங்களிலும் தைத்திரீய உபநிஷத், கிருஷ்ண யஜுர் வேதத்தின் ஆரண்யகத்தின் 7வது, 8வது, 9வது பிரச்னங்களாக இருக்கிறது என்று ஏன் கருதப்பட வேண்டும்? தைத்திரீய உபநிஷத் ஏதோ ஓர் ஊரில் வேதங்கள் இயற்றப்பட்டதற்குப் பின்பு எழுதப்பட்டது என்று வைத்துக் கொண்டால், அதை எல்லா மக்களும் ஏன் வேதத்தின் பகுதியாகக் கருத வேண்டும்? மேலும் வேதத்தின் அதே பகுதிக்குச் சேர்ந்தது என்றும் ஏன் ஒப்புக்கொள்ள வேண்டும்?

வேதம் பல வருடங்களுக்கு முன்பு இயற்றப்பட்டதென்று வைத்துக் கொள்வோம். அவைகளை இயற்றியவர்கள் சிரத்தையுடன் இருந்தார்களா? அல்லது மற்றவர்களை ஏமாற்ற வேண்டும் என்ற ஒரே குறிக்கோளுடன் இருந்தார்களா? எவ்விதமான யாகங்களைச் செய்தால், ஸ்வர்கத்தைப் பெறலாம் என்று வேதங்களில் கூறப்பட்டுள்ளன. இவ்விஷயத்தை நாம் சாஸ்திரங்கள் மூலமாகத்தான் தெரிந்து கொள்ள வேண்டும். ஆதலால் வேதத்தை இயற்றியவர்கள் சிரத்தையுடன் இருந்தார்களென்று வைத்துக் கொண்டால், ஸ்வர்கத்தைத் தரும் யாகத்தைப் பற்றி தாமாகவே எழுதியிருக்க முடியாது. அவர்கள் அதைப்பற்றி எழுத வேண்டுமென்றால், அவர்களுக்கு அது தெரியப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். அவர்கள் சிரத்தையில்லாதவர்களாக இருந்தால், இந்த யாகங்களைத் தாமாகவே எதற்காகப் பல வருடங்கள் செய்து வந்திருக்க வேண்டும்?

சம்பிரதாயத்தின்படி வேதத்தைக் கற்றுக் கொடுப்பவர்கள் வேதத்தை உச்சரிக்கும்போது அக்ஷரத்திலேயோ, ஸ்வரத்திலேயோ ஒரு விதமான தவறும் ஏற்படக் கூடாது என்கிற விஷயத்தில் மிகவும் தீவிரமாக இருப்பார்கள். அவர்கள் ஏன் அவ்வளவு தீவிரமாக இருக்கிறார்கள்? ஏனென்றால், அவர்களுக்கு வேதத்தைக் கற்றுக் கொடுத்தவர்கள் "அக்ஷரம் மற்றும் ஸ்வரங்களில் பிழை நேரக் கூடாது. அவ்வாறு நேர்ந்தால் நன்மை ஏற்படாது" என்று கூறியிருந்தனர். இவ்வாறு, குரு,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவருடைய குரு என்று விசாரித்துக் கொண்டே போனால், வேதத்தை இயற்றியவர்கள் என்று யாராவது இருந்திருந்தால் அவர்களுக்கும், 'ஸ்வரம் மற்றும் அக்ஷரங்கள் விஷயத்தில் கவனம் தேவை' என்ற நம்பிக்கையே இருந்திருக்கும் என்று தீர்மானம் செய்யலாம். ஸ்வரமில்லாமல் வேதத்தைக் கற்றுக் கொள்வது சுலபமாய் இருந்தபோதிலும், "ஸ்வரங்களைத் தவறாக உச்சரிக்கக் கூடாது; சரியாகச் சொல்ல வேண்டும்" என்று அவர்கள் ஏன் தீர்மானமாக இருந்தார்கள்? வேதம் புனிதமானது. அதை உச்சரிப்பதில் தவறொன்றும் ஏற்பட்டுவிடக் கூடாது என்று தெரிந்திருந்ததால்தானே அவர்கள் தீர்மானமாக இருந்து தத்தம் சிஷ்யர்களுக்குக் கட்டளை ஏற்படுத்தி இருந்தார்கள்? வேதத்தை இயற்றியவர்கள் என்று யாராவது இருந்திருந்தால், தாம் இயற்றிய வேதத்தை மிகவும் புனிதமானது என்று தாமே கருதுவதற்கு அவகாசமில்லை. ஆகையால், மனிதர்கள் வேதங்களை இயற்றியிருக்க முடியாது.

இராமாயணம் பல வருடங்களுக்கு முன்பு இயற்றப்பட்டதென்று பலர் ஒப்புக்கொள்கிறார்கள். இராமர் வேதத்தை அறிந்தவர் என்றும் நாம் காண்கிறோம். இராமனைப்போல, இலங்கையை ஆண்ட இராவணனும் வேதத்தை அறிந்தவன் என்று தெரிந்து கொள்கிறோம். அவ்வளவு வருடங்களுக்கு முன்பு வேதம் எப்படி இவ்வளவு தூரத்திற்குப் பரவியிருக்க முடியும்? ஒரே ஒரு சாகையைக் கற்றுக் கொள்வதற்கே பல வருடங்களாகின்றன. பழைய காலத்தில் புத்தகங்கள் உபயோகப் படுத்தாமல்தான் வேதத்தை அத்யயனம் செய்து கொண்டு வந்தார்கள். அதனால் அவ்வளவு தூரம் பரவியிருக்க வேண்டுமென்றால், வேதத்தை எல்லோரும் புனிதமென்று கருதி ஒரே வகையில் மனப் பாடம் செய்து கொண்டு வந்திருந்தால்தான் அதே வகையில் தொடர்ந்து வந்திருக்க முடியும். இராமர் ஸந்தியாவந்தனம் செய்து வந்தார் என்று கூறப்பட்டுள்ளது. இராவணனும் ஸந்தியாவந்தனம் செய்து வந்தான் என்றும் பார்க்கிறோம். ஆதலால் அதே மந்திரங்கள் தான் பாரதத்திலும், இராவணன் வாழ்ந்த இடத்திலும் இருந்தன என்று தெரிகிறது. கன்னியாகுமரியிலிருந்து காஷ்மீர் வரையிலும் கிருஷ்ண

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

யஜுர் வேதம் ஒன்றாகத்தான் இருக்கிறது என்பதை நாம் காணலாம். வருடங்கள் ஆகிய பிறகு மாறுதல் ஏற்பட்டிருக்க வேண்டுமா? வேண் டாமா? ஆனால் மாறுதல் ஏற்படவில்லை. காரணம் என்ன? குரு-சிஷ்யர் இவர்கள் இரண்டு பேர்களும் கொஞ்சம் கூட மாற்றாமல் கற்றுக் கொண்டு வருகிறார்கள். அதுவேதான் காரணம்.

சிலர், வேதங்கள் பல வருடங்களுக்கு முன்பு மனிதனால் இயற்றப் பட்டன என்று கூறுகிறார்கள். அவர்களிடம் இக்கேள்வியைக் கேட்க நாம் விரும்புகிறோம். வேதம் மனிதனால் இயற்றப்பட்டதென்றால் வேத மந்திரங்களுக்கு இவ்வளவு சக்தியும் பலமும் எப்படியிருக்கின் றன? பல வியாதிகள், வைத்தியர்களால் குணப்படுத்த முடியாதிருந்தா லும் அவைகளும் வேத மந்திரங்கள் மூலமாகக் குணமாகின்றன. இம் மாதிரி சம்பவங்களைப் பலர் கண்டிருக்கிறார்கள். வேதங்கள் பிராசீன காலத்தில் இயற்றப்பட்ட சாமான்யப் புத்தகங்கள் என்றால், இம்மாதிரி சக்தி வந்திருக்காது. ஆதலால், நாம் வேதத்தைப் பரம்பொருளால் உபதேசிக்கப்பட்டது என்றே கருதுகிறோம்.

சி : ***இப்படியிருந்தால் பல மந்திரங்களுக்குப் பல ரிஷிகள் இருக்கிறார்கள் என்று எப்படிக் கூற முடியும்? ஏனென்றால், ரிஷிகள் மந்திரங்களை இயற்றி இருந்தால், அவர்கள்தானே மந்திரங்களுக்குக் கர்த்தாக்களா வார்கள்?***

ஆ : ரிஷிகள் மந்திரங்களை உண்டாக்கியவர்களில்லை. முக்கியமாக, மந்தி ரத்தைப் பிரசாரம் செய்த முனிவரின் பெயரை அவ்வாறு கூறுகிறோம். முனிவர் மந்திரத்தின் மஹிமையைப் புரிந்து கொண்டு அதைப் பிரசா ரம் செய்தாரே தவிர அந்த மந்திரத்தைத் தானாகவே உண்டாக்க வில்லை. பிரஹ்மா வேதத்தை, உலகத்தை ஸ்ருஷ்டி செய்யும்போது உபதேசம் செய்தார். காலம் ஆக ஆக சில மந்திரங்கள் அத்யயனக் கிரமம் விட்டுப் போனதால் லோபமாகி விட்டன. வேதவியாசர் பகவா னின் அவதாரமானதால் முதலிலிருந்த வகையிலேயே மறுபடியும் ஜனங்களுக்கு உபதேசம் செய்தார். இவ்வளவுதான் விஷயம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சி : **வேதத்தில் நாம் பல கதைகளைக் காண்கிறோம். இவைகள் உண்மையாக நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றி இருக்கின்றனவா?**

ஆ : இல்லை. இவைகள் உண்மையாக நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றி இல்லை. பரம்பொருளின் மூச்சுக் காற்றைப் போலிருக்கும் வேதத்திற்கு ஆரம்பமேயில்லை. ஆகவே உண்மையாகவே நடந்த நிகழ்ச்சிகளை அங்குக் கூறியிருப்பதற்குச் சாத்யமேயில்லை. ப்ருஹதாரண்யக உபநிஷத்தில், யாக்ஞவல்க்யருக்கும், ஜனகருக்கும் நடந்த ஒரு பேச்சைப்பற்றி இருக்கிறது. ஏதோ ஒரு காலத்தில் வாழ்ந்த மனிதர்களைப் பற்றி ஸம்வாதம் இல்லை. இதுபோன்று உண்மையாகவே ஒரு சம்பவம் ஏற்பட்டிருக்கலாம். ஆனால் இதுதான் உபநிஷத்தில் வர்ணிக்கப் பட்டு இருக்கிறதென்று கூற முடியாது. வேதத்தில் உள்ள கதைகள் ஒரு விஷயத்தை நன்கு புரியும்படிச் செய்வதற்காகத் தானிருக்கிறது.

சி : **'முதலில் உலகம் உண்டான பிறகு மனிதன் குகையில் வசித்து வர ஆரம்பித்திருக்கலாம். சில காலம் சென்ற பிறகு அவனது அறிவும் வளர்ந்திருக்கலாம். அதற்குப் பிறகு பகவான் வேதத்தை உபதேசம் செய்திருக்கலாம்'. இம்மாதிரி கருதுவதில் ஏதேனும் தவறிருக்கிறதா? இவ்வாறு வைத்துக் கொண்டால், நாம் விஞ்ஞானத்திற்கும் எதிர்மாறான கருத்தை வைத்துக் கொள்ளாமல் இருக்கலாம். வேதமும் இறைவனால் உபதேசிக்கப்பட்டது என்றும் கருதலாம். ஆகவே இதுபற்றி ஆசார்யாள் என்ன கூறுகிறார்கள்?**

ஆ : இது சரிவராது. ஏனென்றால், எப்போது பகவான் மனிதனை உண்டாக்கினானோ அப்போதே அவன் வேதத்தையும் உபதேசித்திருந்திருக்க வேண்டும். பகவத்கீதையில் கிருஷ்ணபரமாத்மா,

ஸஹ யக்ஞா: ப்ரஜா: ஸ்ருஷ்ட்வா புரோவாச ப்ரஜாபதி:|

(முன்பு யக்ஞங்களுடன் ப்ரஜைகளை ஸ்ருஷ்டி செய்து ப்ரஜாபதி கூறினார்) என்று கூறியுள்ளார்.

யக்ஞம் என்றால் வேதத்தில் சொல்லப்பட்ட யக்ஞம். யக்ஞத்தைச் செய்ய வேண்டுமானால், அதற்கு முன்பு வேதம் இருந்திருக்க

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வேண்டும். ஆகவே இதிலிருந்து வேதத்தையும் இறைவன் உலகத்தை ஸ்ருஷ்டித்த சமயத்திலேயே உபதேசித்தான் என்று நமக்குத் தெரிகி றது. இதை நாம் ஒப்புக் கொள்ளாவிட்டால் நமக்கு எந்தக் கேள்விக்கும் பொருத்தமான பதில் கிடைக்காது. வேதத்தில் சொல்லப்பட்டதையே நாம் தர்மம் என்கிறோம். ஆதிமனிதனுக்கு, வேதம் உண்டாவதற்கு முன்பு அவன் இருந்திருந்தானானால், எது தர்மம் எது அதர்மம் என்று அவன் எடுத்துக்கொள்ள வேண்டியிருந்தது? ஆகவே அவன் வேதத் திற்கும் முன்பு வாழ்ந்திருந்தானேயானால், அவனுக்கு தர்மம், அதர்மம் என்பதே தெரிந்திருக்காமல் இருந்திருக்க வேண்டும். அதாவது, அப் போது அவன் எதைச் செய்திருந்தாலும், அது அவனுக்கு, 'எல்லாம் நல்ல பலன்கள் அல்லது எல்லாம் கெட்ட பலன்கள்' என்பதாகவே தந்திருக்க வேண்டும். அவன் செய்த எல்லாக் காரியங்களும் நல்ல பலனையே தந்தன என்ற கூற்றை ஆராய்ந்தால், 'வேதம் வருவதற்கு முன் ஒருவன் எது செய்திருந்தாலும் நல்ல பலன் கிடைத்தது. ஆனால் வேதம் வந்தபின், அவனுடைய செயல்களுக்குக் கெட்ட பலன்களும் கிடைக்கலாம்' என்றல்லவா முடிவு வரும்? இது நியாயமா? ஆகவே வேதம் உண்டாவதற்கு முன் ஒருவனுக்கு எப்போதும் நல்ல பலன் களே இருந்தால், நரகமே செல்லத் தேவையில்லையென்றும், வேதம் தோன்றிய பின்னர் ஒருவனுக்கு நரகம் செல்லவும் வாய்ப்பிருக்கிறது என்றும் சொன்னால் அதை ஒப்புக்கொள்ள முடியுமா?

அதேபோல் வேதம் தோன்றும் முன் எல்லாமே தீய பலன்களாகத் தந்தன என்ற கூற்றை எடுத்துக் கொண்டாலும் அதுவும் நியாய மில்லை. ஆகவே எப்போது பகவான் உலகத்தைப் படைத்தானோ, அப்போதே அவன் வேதத்தையும் உபதேசித்திருக்க வேண்டும். அதா வது தர்ம, அதர்ம விஷயங்களில் உபதேசம் பெற வழியிருந்திருக்க வேண்டும். இந்த உபதேசங்களையே நாம் வேதத்தில் காண்கிறோம். ஆதலால் முதலில் மனிதன் படைக்கப்பட்டு, பிறகுதான் வேதம் வந்தது என்பது சற்றும் சரியில்லை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சி : *வேத அத்யயனம் செய்ய வேண்டுமென்பது சாஸ்திரங்களின் கட்டளையா?*

ஆ : ஆம். தகுதியுள்ளவர்கள் (அதிகாரிகள்) கட்டாயமாக வேத அத்யயனம் செய்ய வேண்டும்.

ஸ்வாத்யாயோ அத்யே தவ்ய:

(தன்னுடைய சாகையை அத்யயனம் செய்ய வேண்டும்) என்பது சாஸ்திரங்களின் கட்டளை. வேதங்களைக் குருமுகமாகத்தான் கற்றுக் கொள்ள வேண்டும். ஒரு டேப்ரிக்கார்டர் மூலம் வேத அத்யயனம் செய்து கொண்டால், அது வேத அத்யயனமாகாது. ஒரு கிளி ஒரு மனிதனைக் கூப்பிட்டால், அம்மனிதன் செல்வானா? அதே வார்த்தைகளை இன்னொரு மனிதன் கூறி இம்மனிதனைக் கூப்பிட்டால், அவன் கட்டாயமாகச் செல்வான். அதாவது வேறுபாடு என்பது வார்த்தைகளில் இல்லை. அவற்றைச் சொல்பவனில்தான் உண்டு. அதேபோல் வேத அத்யயனம் என்பது குரு சொல்லக் கேட்டு, அதை சிஷ்யன் மீண்டும் உச்சரிப்பதே ஆகுமே தவிர, டேப்ரிக்கார்டர் முதலியவற்றின் மூலம் கற்பது வேதமாகாது, வேத மந்திரங்களைக் கூறிய பலனையும் தராது.

சி : *வேத அத்யயனம் செய்வதால் ஏதாவது பிரயோஜனம் இருக்கிறதா?*

ஆ : ஆம். பலவிதமான நன்மைகள் உண்டு. வேதத்தை அத்யயனம் செய்வது என்பது அதிகாரிகளுக்கு (தகுதியுள்ளவர்களுக்கு) கடமையானதால், அவர்கள் வேதத்தைக் கற்றுக் கொள்வதன் மூலம் தம் கடமையைச் செவ்வனே செய்து முடிக்கலாம். மேலும் வேதத்திலும், இவ்வுலகத்திலும், பரலோகமாம் மறு உலகத்திலும் நன்மை அடைய வழிகள் சொல்லப்பட்டுள்ளன. ஆகவே நன்மையை அடைய வேத அத்யயனமே நமக்கு வழி காட்டும். மோக்ஷமடைய வேதத்தில்தான் சரியான வழி காட்டப்பட்டுள்ளது. ஆகவே லௌகீக இன்பமோ, ஸ்வர்க இன்பமோ அல்லது மோக்ஷமோ, இவற்றில் எதை நாம் விரும்பினாலும்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வேதத்தின் பக்கமே கவனம் செலுத்த வேண்டும். வேத மந்திரங்களை உச்சரித்தாலே புண்ணியம் ஏற்பட்டு அது நமக்கு நன்மையளிக்கும். எல்லாவற்றிற்கும் மேலாக வேத மந்திரங்களுக்கு அபாரமான சக்தியிருக்கிறது. சில மந்திரங்கள், வியாதிகள் போன்றவற்றையும் நீக்கும் சக்தி வாய்ந்தவை.

சி : **இக்காலத்தில் பலர் வேத அத்யயனம் செய்வதில்லை. ஏனென்றால், அவர்களுக்குச் சரியான வாய்ப்பு கிடைப்பதில்லை. அலுவலகம், பள்ளிக்கூடம் முதலியவற்றிற்குச் செல்ல வேண்டியிருப்பதால், தக்க சமயமும் கிடைப்பதில்லை. அத்யாபனம் செய்து வைக்கும் புரோஹிதர்களும் சிரத்தையுடன் இருப்பதில்லை. இம்மாதிரி சூழ்நிலைகளில் வேதத்தை அத்யயனம் செய்யத் தகுதியுள்ளவன் என்ன செய்ய வேண்டும்?**

ஆ : முடிந்த அளவிற்கு அத்யயனம் செய்ய வேண்டும். பூஜை போன்ற காரியங்களுக்கு மிகவும் தேவைப்படும் ருத்ரம், சமகம், ஸூக்தங்கள் போன்றவைகளையாவது அவசியம் கற்றுக்கொள்ள வேண்டும். காலையிலோ, மாலையிலோ சிறிது நேரமாவது வேதம் கற்பதற்கு ஒதுக்கி வைப்பது கடினமில்லை. ஒவ்வொருவனும் தன் சாகை முழுதும் அத்யயனம் செய்வது உத்தமம். அப்படி முடியாவிட்டால் முடிந்த அளவிற்காவது அத்யயனம் செய்ய வேண்டும். புரோஹிதர்கள் மேலேயே பழியைப் போடுவது அவ்வளவு பொருத்தமாகாது. அவர்களும் வாழ வேண்டுமல்லவா? இது லௌகீகக் கல்வி பயிலுதலே நிறைய பணம் சம்பாதிக்க வழி என்று அனைவரும் எண்ணும் காலம். வேத அத்யயனம் செய்பவனுக்கும், தான் சுகவாழ்வு வாழ வேண்டும் என்ற எண்ணம் ஏற்படுவது சகஜம்தானே? ஆகவே அவர்களும் செல்வம் பெற்று வாழ விரும்பினால், அதைத் தவறு என்று கூற வாய்ப்பில்லை. ஆனால் பேராசை என்பது இருக்குமாயின், அது நிச்சயமாகத் தவறுதான். புரோஹிதர்களுக்கு நாம் ஆதரவு கொடுக்கத்தான் வேண்டும். நாமே பொருளும் ஊக்கமும் தராமலிருந்தால், அவர்கள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எப்படித்தான், வேத அத்யயனம் செய்ய வேண்டும் என்று இறங்குவார்கள்? ஆகவே, நாம் வேதம் கற்றுத் தருபவர்களை மரியாதையுடன் நடத்தி, ஆதரவளிக்க வேண்டும். மேலும், அவர்களும் கர்வத்திற்கும் பேராசைக்கும் இடங்கொடாமல் சிரத்தையோடு வேத அத்யயனம் செய்வதில் உதவ வேண்டும்.

ஜபம்

சிஷ்யன் : *மந்திர ஜபம் செய்யும்போது, அந்த மந்திரத்தின் சந்தம், தேவதை முதலியவைகளை நன்கு தெரிந்துகொள்ளவேண்டுமா?*

ஆசார்யாள் : ஆம்.

சி : *ஜபம் செய்வதற்கு முன்னும் பின்னும் நாம் ந்யாஸங்களைச் செய்ய வேண்டுமா?*

ஆ : ஆம். செய்துகொள்ள வேண்டும்.

சி : *தியான சுலோகத்தில் கூறியபடியே தியானம் செய்வதுதான் நல்லதா?*

ஆ : ஆம். சாமான்யமாக அப்படித்தான் செய்ய வேண்டும். ஆயினும், குரு வேறு வகையில் செய்யச் சொல்லி உபதேசம் கொடுத்தால் அவ்வகையில் செய்யலாம்.

சி : *குருவின் உபதேசம் பெற்ற பிறகுதான் ஜபம் செய்வது சரியா?*

ஆ : ஆம். குருவின் உபதேசம் மிக அவசியம்.

சி : *மனதாலேயே ஜபம் செய்வதற்கு ஏதாவது நியமங்கள் இருக்கின்றனவா?*

ஆ : இல்லை.

சி : *நாம் எவ்வளவு முறை ஜபிக்க வேண்டும்?*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆ : எவ்வளவு முறை ஜபிக்கிறோமோ அவ்வளவுக்கு நமக்கு அது நலம் பயக்கும். சிறிது பழகிவிட்டால் நம்மை அறியாமல், ஜபத்தை நாமாகவே செய்து கொண்டிருப்போம். பிறகு கனவின் போதும் இது போன்று ஏற்படலாம்.

சி : *காயத்ரீ ஜபத்தை மனதாலேயே ஜபிக்கும்போது, அம்மந்திரத்தின் ஸ்வரத்தில் கவனமாக இருக்க வேண்டும் என்பது தேவையா?*

ஆ : உதடுகளை அசைத்து ஜபித்தால், ஸ்வரத்தில் கவனம் வைக்க வேண்டும். ஆயினும், மனதால் காயத்ரீ மந்திரத்தை, ஒருநிலைப்படுத்திச் சொன்னால், ஸ்வர விஷயத்தில் அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்காமல் இருக்கலாம். மானஸீகமாகச் செய்கையில் வெறும் மந்திரத்தை ஜபிப்பதே போதுமானது.

சி : *மனதை ஒருநிலைப்படுத்தாது ஜபம் செய்து வருவதும் பலனளிக்குமா?*

ஆ : ஜபம் எப்போதும் பலனளிக்கும். ஆனால் மனதை ஒருநிலைப்படுத்திச் செய்தால்தான் அது விசேஷமாகப் பலனளிக்கும். இல்லாவிட்டால் பலன் சற்றளவிற்குத் தானிருக்கும்.

சி : *வேத மந்திரங்களை எப்போதும் சரியான ஸ்வரத்துடன்தான் சொல்ல வேண்டுமா? தவறாகச் சொன்னால் பாவமுண்டா?*

ஆ : ஆம். ஸ்வரங்களை ஒழுங்காக உச்சரிக்க வேண்டும்.

சி : *ஒருவன் தானாகவே வேத மந்திரங்களைக் கற்றுக் கொள்ளலாமா?*

ஆ : இல்லை. குரு ஒருவரிடமிருந்து, அவர் சொல்லிய பின்னரே வேத மந்திரங்களைக் கற்க வேண்டும். ஆதலால்தான் குமாரிலபட்டர் ***'வேதஸ்யாத்யயனம் ஸர்வம் குர்வத்யயன பூர்வகம்'*** (குருவிடம் கற்ற பிறகுதான், வேதத்தின் அத்யயனம்) என்று கூறினார்.

சி : *வேத மந்திரங்களைச் சரியாக உச்சரிப்பதால் என்ன பிரயோஜனம்?*

ஆ : ஒருவனுடைய மனது புனிதமாகி விடும். பாவங்கள் போய்விடும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சி : *உபநிஷத்துக்கள் எல்லாமே வேதங்களின் பகுதிகள் என்பதே சம்பிரதாயம். ஆனால், பல உபநிஷத்துக்களுக்கு எவ்வாறு ஸ்வரம் கூற வேண்டும் என்பது சம்பிரதாயத்திலேயே இல்லையே. இம்மாதிரிச் சூழ்நிலைகளில் என்ன செய்ய வேண்டும்?*

ஆ : அந்த உபநிஷத்துக்களிலும் ஸ்வரம் முன்பிருந்திருக்க வேண்டும். ஏனென்றால், அவை வேதத்தின் பகுதிகள். ஆனால் காலப்போக்கில், அந்த ஸ்வர நியமங்கள் விட்டுப் போயிருக்கின்றன.

சி : *பிறகு அம்மாதிரி உபநிஷத்துக்களை எவ்வாறு பாராயணம் செய்வது?*

ஆ : எந்த உபநிஷத்துக்களில் சம்பிரதாயத்திலேயே ஸ்வரங்கள் விட்டுப் போயிருக்கின்றனவோ, பாராயணம் செய்யும்போது அங்கு ஸ்வர நியமங்களைக் கவனிக்க வேண்டிய அவசியமில்லை. அதனால் பாவமொன்றும் வராது.

சி : *எவ்வேத மந்திரங்களைத் தகுதியுள்ளவர்கள் அனைவரும் கற்றுக் கொள்ள வேண்டும் என்று ஆசார்யாள் அறிவுரை கூறுவார்கள்?*

ஆ : ருத்ரம், சமகம், ஸூக்தங்கள் இவைகளைத் தகுதியுள்ள எல்லோரும் நிச்சயமாகக் கற்றுக்கொள்ள வேண்டும். ஏனென்றால், பூஜைக்கு இவை மிகவும் உபயோகப்படுகின்றன.

சி : *ருத்ரத்தின் சில பாகங்களில் லௌகிகப் பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்காகப் பிரார்த்தனைகள் இருக்கின்றன. அதேபோல்தான் சமகத்திலும்.*

ஆ : அதனாலென்ன?

சி : *மோக்ஷம் ஒன்றையே விரும்பும் முமுக்ஷு அப்பொருட்களைப் பற்றி விருப்பம் கொள்ளாமல் இருந்தாலும், அவனும் அம்மந்திரங்களை ஜபிக்கலாமா? ருத்ரத்தை ஸந்யாஸிகளும் ஜபிக்கலாம் என்றுதான் சாஸ்திரம் கூறுகிறது. ஸந்யாஸிகள் லௌகிகப் பொருட்களை விரும்பக் கூடாதென்பது அனைவரும் அறிந்ததே. அப்படியென்றால், அவர்கள் எவ்வாறு ருத்ரத்தை ஜபிக்கலாம்?*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆ : எப்பொழுதெல்லாம் ஒருவன் வேத மந்திரங்களை ஜபிக்கிறானோ, அப்பொழுதெல்லாம் அங்குக் கூறப்பட்ட பொருட்களை அவன் விரும்புகிறானென்று அர்த்தமில்லை. ருத்ரம் போன்ற மந்திரங்கள் மிகவும் புனிதமானவை. அவைகளை ஸ்வரத்துடன் ஜபித்தால் இறைவனின் அருள் கிடைக்கும். மனதும் புனிதமாகும். ஆதலால், வேத மந்திரங்களில் பொருட்களுக்குப் பிரார்த்தனை இருந்தாலும், ஒருவனின் மனம் அப்பக்கம் செல்லவில்லையென்றால், அப்பலன் கிடைத்தே தீரும் என்ற நியமமில்லை.

சி : *வேதங்களின் சில பகுதிகள் குரு சிஷ்ய பரம்பரையில் வரும்போது ஏதாவது விட்டுப் போயிருக்கின்றனவா?*

ஆ : ஆம். யஜுர் வேதத்திற்கு பல சாகைகள் இருந்தன என்று கூறுவோம். இப்போது நமக்கு அவ்வளவு கிடைப்பதில்லை.

சி : *அனத்யயனத்தின்போது சாஸ்திரங்களை அத்யயனம் செய்வது கூடாது என்று சொல்வார்களே, ஆசார்யாளின் கருத்தும் அதுதானா?*

ஆ : ஆம். அனத்யயனம் என்று கருதப்படும் நாட்களில் ஸாம்ப்ரதாயிகமான பாடங்கள் நடைபெறக் கூடாது.

சி : *அப்படியென்றால் அன்றைய தினம், ஒருவன் தான் கற்ற வேதங்களைத் தனக்குத்தானே சொல்லிக்கொள்ளக் கூடாது, அதேபோல் தானாகவே சாஸ்திரப் புத்தகங்களையும் படிக்கக்கூடாது என்றா அர்த்தம்?*

ஆ : இல்லை. அம்மாதிரி அர்த்தமில்லை. ஸாம்ப்ரதாயிகமான பாடங்கள் நடைபெறக் கூடாது என்றே நான் கூறுகிறேன். முக்கியமாக பௌர்ணமி நாளுக்கும், அமாவாசை நாளுக்கும் அடுத்து வரும் நாளான ப்ரதிபத் அன்று இத்தகைய பாடங்கள் நடைபெறக் கூடாது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிரஹ்மசர்யம்

சிஷ்யன் : மோக்ஷத்தையே விரும்புகின்ற ஒருவன் தனது ஆயுள் முழுவதும் பிரஹ்மசாரியாக வாழ வேண்டும் என்பது தேவையா?

ஆசார்யாள் : எவன் வைராக்யமிருந்து, மோக்ஷத்திலேயே ஈடுபாடு வைத்து உள்ளானோ அவனுக்கு பிரஹ்மசர்யம் மிகவும் அவசியம். பார்க்கப்போனால், திருமணம் செய்து கொண்டு வாழ்வதென்பது ஒரு பெரிய பந்தமாகும். எவன் உண்மையான பிரஹ்மசாரியாக வாழ்க்கை நடத்துவானோ, அவன் தனது மனதைப் பரம்பொருளை அறிவதற்காகவே பயன்படுத்தலாம். இதைக்காட்டிலும் மாறுபட்ட வழியில் வாழும் க்ருஹஸ்தர்களுக்குப் பலவித பொறுப்புகள் இருப்பதால், இதுபோன்று நடந்து கொள்வது சற்றுக் கடினமானது. மேலும், அதுபோன்ற வாழ்க்கையே தீவிரமாக ஒருவன் அனுஷ்டானம் செய்ய விடாமல் கெடுதல் விளைவிக்கும்.

சி : இப்படியிருக்கும்போது சாஸ்திரங்கள் எதற்காகத் திருமண வாழ்விற்கு அனுமதி கொடுத்தன?

ஆ : பிறந்தவர் அனைவரும் மோக்ஷத்தையே விரும்புவதில்லை. மேலும், பிரஹ்மசர்யத்தையே ஆயுள் முழுவதும் கடைப்பிடிக்கச் சிலருக்கு மட்டுமே தகுதியிருக்கிறது. ஆகவே, மீதமுள்ள மக்களும் நல்வழி வாழ்ந்து உத்தம நன்மை அடையவும், மோக்ஷத்திற்காக முயற்சி செய்யவும், சாஸ்திரங்கள் க்ருஹஸ்தாச்ரமத்தைப் பற்றிச் சொல்கின்றன. சாஸ்திரங்களில், அங்கும் பல நியமங்கள் கூறப்பட்டிருக்கின்றன. ஆகவே, நியமத்தோடு உள்ள க்ருஹஸ்தாச்ரம வாழ்வையே சாஸ்திரம் அனுமதித்திருக்கிறது என்பதை நாம் நினைவுகூர வேண்டும்.

சி : ஒருவனுக்குப் பிரஜை அல்லது வாரிசு தேவை என்று சாஸ்திரங்களில் சில இடங்களில் கூறப்பட்டிருக்கின்றது. இதற்கு ஆசார்யாள் காரணம் கூறுவார்களா?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆ : யாருக்கெல்லாம் மோக்ஷம் ஒன்றே வேண்டும் என்ற தீவிரமான விருப்பமும், காமமே இல்லாத மனமும் இருக்கின்றனவோ, அப்படிப்பட்ட அவர்களைத் தவிர உள்ள மற்ற ஜனங்களுக்காகத்தான் இதுபோன்ற வாக்கியங்கள் கூறப்பட்டுள்ளன என்பதை சாஸ்திரங்களைப் படிக்கும் ஒருவன் அறிந்து கொள்ளலாம். தீவிரமான வைராக்யம் பெற்றுள்ள ஒருவன் திருமண வாழ்க்கையைப் பெற்றுக்கொள்ளத் தேவை யில்லை என்பதை சாஸ்திரங்கள் வாயிலாக நாம் அறியலாம். உப நிஷத்தில்,

யதஹரேவ விரஜேத் ததஹரேவ ப்ரவ்ரஜேத்

(என்றைய தினம் தீவிரமான வைராக்யத்தை அடைகிறானோ, அன்றைய தினமே அவன் ஸந்யாஸம் பெற்றுக் கொள்ளட்டும்)

ப்ரஹ்மசர்யாதேவ ப்ரவ்ரஜேத் க்ருஹாத்வா வனாத்வா

(பிரஹ்மசர்யத்திலிருந்தோ, க்ருஹஸ்தாச்ரமத்தில் இருந்தோ, வானப் பிரஸ்த ஆச்ரமத்தில் இருந்தோ அவன் ஸந்யாஸி ஆகட்டும்) என்றும்,

கிம் ப்ரஜயா கரிஷ்யாம:

(பிரஜைகளை வைத்துக்கொண்டு நாம் என்ன செய்வோம்) என்ற வாக்கியங்களையும் நாம் உபநிஷத்துக்களில் காணலாமே?

சி : **எல்லோரும் பிரஹ்மசர்யத்தை மேற்கொண்டு விட்டால் உலகம் எவ்வாறு இயங்கிக் கொண்டிருக்கும்? என்பதைப் போன்ற கேள்வியை சிலர் எழுப்புகின்றனர். இதுபற்றி ஆசார்யாளது கருத்து என்ன?**

ஆ : ஆயிரக்கணக்கான ஜனங்களில் ஏதோ ஒருவன்தான் மோக்ஷத்தை மிகவும் தீவிரமாக விரும்புகிறான். அப்படிப்பட்டவர்களிலும் ஒரு சிலர் தான் தாம் பிரஹ்மசர்ய வாழ்வைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று கருதுகிறார்கள். ஆகையால்; நீ சொன்ன இந்தக் கேள்விக்கு இடமே யில்லை.

சி : **பிராஹ்மணரல்லாத மற்ற மக்களும் ஆயுள் முழுவதும் பிரஹ்மசர்யத்தை மேற்கொள்ளலாமா?**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆ : அவ்வாறு செய்யலாமே. இதிலென்ன சந்தேகம்?

சி : மோக்ஷத்தை மட்டுமே விருப்பமாகக் கொண்டிருந்தால், பெண்களும் திருமணம் செய்து கொள்ளாமல் இருப்பதை ஆசார்யாள் தவறென்று கருதுகிறார்களா?

ஆ : தீவிரமான வைராக்யமிருந்தால் பெண்களும் திருமணம் செய்து கொள்ளாமல் இருந்து விடலாம். இங்கு இரு விஷயங்களைக் கவனத்தில் கொள்ள வேண்டும். 1. அவர்களின் மனவடக்கம், 2.சூழ்நிலை சரியாக இருக்கிறதா என்று கவனித்துக் கொள்ளுதல்.

சி : க்ருஹஸ்தர்கள் அனைவரும் ஞானத்தைப் பெற்று மோக்ஷம் அடைய முடியாது என்றா ஆசார்யாள் கருதுகிறார்கள்?

ஆ : இல்லவேயில்லை. அவர்கள் நிச்சயமாக மோக்ஷம் பெறலாம். ஆனால், அவர்களது வழி சற்றுக் கடினமான வழியாகும். வெறும் மோக்ஷத்தையே விரும்புபவன் அதற்காகவே ஸந்யாஸம் பெற்று வாழ்க்கை நடத்தலாம். ஆனால், இங்கு அவ்வாறு செய்வது கடினம். ஆயினும், அவர்கள் ஞானம் பெற முடியாது என்று சொல்வது தவறு. ஜனகர் போன்றவர்கள் க்ருஹஸ்தர்களாய் இருந்தாலும், ஞானிகளாகவே இருந்தார்கள். இதை வைத்துக்கொண்டு, யாரும் பிரஹ்மசாரியாக வாழத் தேவையில்லை என்று கூறினால் அது தவறு.

சி : நாம் இதிகாஸ புராணங்களில் ரிஷிகளைப் பற்றிப் படிக்கின்றோம். அவர்கள் க்ருஹஸ்தர்களாக இருந்தனர் என்றும் கேள்விப்படுகிறோம். ஆகவே, க்ருஹஸ்தர்களிலும் எவ்வளவோ பேர் ஞானிகளாக இருந்தனர் என்றுதானே அர்த்தமாகிறது?

ஆ : 'ரிஷி' என்ற சொல் 'ஞானி' என்ற பொருளை மட்டுமே குறிக்கிறது என்று சொல்ல முடியாது. மேலும் நாம் கேள்விப்படும் எல்லா ரிஷிகளும், ஞானிகளாகவே இருந்தனர் என்றும் கூற முடியாது. இன்னும் ஒரு கேள்வி. அந்த ரிஷிகள் க்ருஹஸ்தாச்ரமத்தை மேற்கொள்வதற்கு முன் ஆத்ம ஞானம் பெற்றனரா அல்லது பிரஹ்மசாரியாக இருக்கும் போதே பெற்றனரா? மேலும் எல்லா ரிஷிகளும் க்ருஹஸ்தர்கள் என்று

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சொல்வதும் மிகத்தவறு. சுகர், ஸனகர் போன்றவர்கள் தலைசிறந்த ரிஷிகளென்று அனைவரும் ஒப்புக்கொள்வர். அவர்களெல்லாம் ஞானிகள் என்கிற விஷயத்திலும் சிறிதும் சந்தேகமில்லை. ஆனால், அவர்கள் திருமணம் செய்துகொள்ளவில்லை என்பதையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

சி : **ஒருவன் நைஷ்டிக பிரஹ்மசாரியாக வாழ விரும்புகிறானென்றால், அதற்குத் தகுந்த விரதத்தை எடுத்துக் கொள்வது நல்லதா?**

ஆ : ஒருவன், தான் எடுத்த முடிவில் தீவிரமாக இருந்து, வைராக்யமிருந்து, காமம் இல்லாமலிருந்தால், அம்மாதிரி விரதத்தை அவன் எடுத்துக் கொள்ளலாம். அவ்வாறு எடுத்துக் கொள்ளப்பட்ட விரதம் அவனுக்கு ஒரு பலத்தைக் கொடுக்கும். ஆனால், இதுபோன்ற விரதங்களை எடுக்கும் முன்பு நாம் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஏனென்றால், நைஷ்டிக பிரஹ்மசர்ய விரதத்திற்குப் பங்கம் ஏற்பட்டால் அது பெரியதொரு பாவமாகும்.

சி : **பிரஹ்மசாரி ஒருவனது மனதில் தீய எண்ணங்கள் ஏற்பட்டால், அது அவனது பிரஹ்மசர்யத்திற்குப் பங்கம் விளைவிக்கும் என்று ஆசார்யாள் கருதுகிறார்களா?**

ஆ : நிச்சயமாக பங்கம் விளைவிக்கும். தன்னையறியாமல் ஏதேனும் கெட்ட எண்ணம் ஏற்பட்டால், அதுகூட நல்லதல்ல. அறியாமல் ஏற்பட்ட தீய எண்ணம் பிரஹ்மசர்யத்திற்கு நேரடியாகப் பங்கம் விளைவிக்கும் என்று கூற முடியாது. ஆனால் தெரிந்து கொண்டே கெட்ட எண்ணத்திற்கு இடங்கொடுத்தால், அது பிரஹ்மசர்யத்திற்கு பங்கமாகும் என்றுதான் கருத வேண்டும். அடுத்ததாக, கெட்ட கனவுகள் நேரடியாகப் பங்கம் விளைவிக்கும் எனச் சொல்ல முடியாது. ஆனால், ஒருவன் தன் வசத்தில் இருக்கும்போதே ஏதாவது ஒரு கெட்ட எண்ணத்திற்கு இடங்கொடுத்தால், அதற்கொன்றும் சலுகை தர முடியாது.

சி : **சிலர் யோகத்தை மிகவும் விரும்புகிறார்கள். ஆனால் ஆசைகளையெல்லாம் முழுவதும் அகற்றியவர்களாக இருப்பதில்லை. இம்மாதிரி மக்களும் நைஷ்டிக பிரஹ்மசாரியாக வாழ முடிவு செய்து கொள்ளலாமா?**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆ : அவர்களுக்குத் தம் மனதின்மேல் தீவிர நம்பிக்கையும் இருந்து, குரு உபதேசமும் அருளும் பெற்று, தீவிரமாக அனுஷ்டானமும் செய்து வந்தால், நைஷ்டிக பிரஹ்மசாரியாக வாழலாம். ஆனால் 'நைஷ்டிக பிரஹ்மசாரியாக வாழ்வேன்' என்று எடுத்துக்கொள்ளப்பட்ட விரதத் திற்குப் பங்கம் ஏற்படுமாயின், அது பெரிய பாவமாகும்.

சி : *ஒருவனை, அவன் ஊர்த்வரேதனாக இருக்க விடாமல் தடுப்பவை எவை?*

(எவனது வீர்யம் அவன் தேஹத்தை விட்டு வெளிவராமல், மேலும் ஆத்யாத்மிக சக்தியாக மாறுமோ அப்படிப்பட்டவனுக்கு 'ஊர்த்வ ரேதன்' என்று பெயர்.)

ஆ : கெட்ட எண்ணம், கெட்ட சொல், கெட்ட செயல், தீயவர்களின் நட்பு, திரைப்படம், தீயபுத்தகங்கள் முதலியவை ஒருவனை 'ஊர்த்வரேதன்' ஆக இருக்க விடாமல் தடுக்கலாம். ஆகவே இவை கட்டாயமாகத் தவிர்க்கப்பட வேண்டும். உடலிலிருக்கும் அதிக அளவு உஷ்ணமும் ஒருவனை ஊர்த்வரேதனாக இருக்க விடாமல் செய்யலாம். அது இங்கு சொன்னதுபோல் உடல் சம்பந்தப்பட்ட காரணமாக இருந்தால், அதிக உஷ்ணத்தைக் குறைக்க பார்லி வேக வைத்த தண்ணீரைச் சாப்பிட்டு வரலாம். சில உடற்பயிற்சிகளும் எப்போதும் தேவை. கனவுகளில் கெட்ட எண்ணம் தோன்றினால், அது ஒருவனது மனதின் கெட்ட நிலையைக் குறிக்கும். விழிப்பு நிலையிலேயே கெட்ட எண்ணங்கள் வருமாயின், அது மிகவும் தீயது என்று தெரிந்து கொள்ளலாம். ஒருவன் தனது வைராக்யத்தைத் தீவிரப்படுத்திக் கொள்ள விருப்பமுடையவ னாக இருந்தால், 'எனக்கு பிரஹ்மசர்யம் மிகவும் அவசியம். இவ்வுலகி லிருக்கும் எப்பொருளிலிருந்தும் எனக்கு இன்பம் கிடைக்காது' என் பதை மனதில் பசுமரத்தாணிபோல் பதிய வைத்துக்கொள்ள வேண் டும். நாம் உட்கொள்ளும் உணவிற்கும் நம் மனநிலையை மாற்றும் நல்ல சக்தி உண்டு. பிரஹ்மசர்யத்தில் சிரத்தையுள்ளவர்கள் 'அவர்கள் உட்கொள்ளக் கூடாது' என்று தடுக்கப்பட்ட உணவு வகைகளைத் தவிர்த்துவிட வேண்டும். வெங்காயம், பூண்டு, மிகவும் உப்பான பண்டம், காரம், மாமிசம், மது, காப்பி, டீ போன்றவைகளை விட்டு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விடுதலே நல்லது. ஸர்வாங்க ஆஸனம் போன்ற ஆஸனங்கள் ஊர்த்வ ரேதனாக இருக்க விரும்பும் ஒரு பிரஹ்மசாரிக்குத் தகுந்த பலன் அளிக்கும்.

சி : *ஒருவன் ஊர்த்வரேதனாவதால் ஏதேனும் பிரயோஜனமுண்டா?*

ஆ : எப்போது ஒருவன் ஊர்த்வரேதனாவானோ, அப்போது அவனுக்கு நன்கு தியானம் வரும். ஆன்மீக வாழ்வில் வேகமாக முன்னேறும் வாய்ப்பும் கிடைக்கும்.

சி : *வைராக்யத்துடனிருந்து, காமம் இல்லாதவர்களாகவும் இருந்து எவர்கள் நைஷ்டிக பிரஹ்மசர்யத்தைக் கடைப்பிடிக்க விரும்புகிறார்களோ, அவர்களுக்கு ஆசார்யாளது ஆசிகள் உண்டா?*

ஆ : அப்படிப்பட்டவர்களுக்கு எனது ஆசிகள் எப்போதுமே உண்டு. அவர்கள்போல் பலரும் இருந்தால் நல்லது என்பதே என் கருத்து.

ஸந்யாஸி

சிஷ்யன் : *செயல்களை விட்டுவிட வேண்டுமா?*

ஆசார்யாள் : தேவைப்படாத செயல்களைச் செய்யக் கூடாது. ஆன்மீக வாழ்வில் முதலில் எல்லாச் செயல்களையும் விட்டுவிட ஒருவன் முயற்சி செய்யக் கூடாது. ஆனால், அவற்றை ஈச்வரனுக்கு அர்ப்பணிக்க வேண்டும். ஒருவனின் மனம் சுத்தம் ஆக ஆகச் செயல்கள் அவனையே விட்டுவிடும் என்பதைக் கவனிக்கலாம். எப்படி நீரில் போடப்பட்ட தேத்தங்கொட்டைப் பொடியானது நீரில் உள்ள அழுக்குகளுடன் கீழே இறங்கிவிடுமோ, அதேபோல் எல்லாச் செயல்களும் தாமாகவே மனிதனை விட்டு விலகிவிடும். அதுபோல் விலகிவிடும் காலம்தான் ஸந்யாஸம் பெறச் சரியான காலம்.

சி : *ஸந்யாஸத்தை ஞானம் பெற்றபின் எடுத்துக்கொள்ள வேண்டுமா? அல்லது அதற்கு முன் எடுத்துக்கொள்ள வேண்டுமா?*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆ : ஞானமடைந்த பிறகு எடுத்துக்கொண்ட ஸந்யாஸத்திற்கு வித்வத் ஸந்யாஸம் என்று பெயர். ஆனால் ஞானம் பெறுவதற்கு முன்பு எடுத் துக்கொள்வது விவிதிச ஸந்யாஸம் எனப்படும். இதைக்காட்டிலும் முத லில் சொன்ன வகை சிறந்தது.

சி : எந்த மனநிலைமை ஒருவனை ஸந்யாஸம் பெற்றுக் கொள்வதற்கு தகுதியுள்ளவனாக்குகிறது?

ஆ : உலகத்தை நன்கு பரீட்சை செய்த பிறகு எப்போது ஒருவன் 'எனக்கு உலகில் ஒருவிதமான இன்பமும் கிடைக்காது' என்று கருதி ஆன்மீக வாழ்வில் ஈடுபாடு கொள்கிறானோ, அதன்பின் எப்போது செயல்களை யும், அவற்றை விடுவதைப் பற்றியும், கவலையில்லாத நிலைக்கு வருவானோ, அப்போதுதான் ஸந்யாஸம் பெறத் தகுதியுள்ளவன் ஆகி றான் என்று சொல்லலாம். ஸந்யாஸம் வாங்கும் காலத்தில் ஸம த்ருஷ்டி இருக்க வேண்டும்.

சி : ஒருவன் சிறுவயதிலேயே ஸந்யாஸம் பெற்றுக் கொள்ளலாமா?

ஆ : அவனுக்குத் தீவிரமான வைராக்யமிருந்தால் பெற்றுக் கொள்ளலாம்.

''யதஹரேவ விரஜேத் ததஹரேவ ப்ரவ்ரஜேத்'

(எந்த நாளில் ஒருவனுக்குத் தீவிரமான வைராக்யம் வருகிறதோ, அந்த நாளில் அவன் ஸந்யாஸம் பெற்றுக் கொள்ளலாம்.)

சி : ஒரு ஸந்யாஸி ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் சென்று கொண்டே இருக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறது. மேலும், பிராஹ்மணர்கள் வீட்டிலிருந்துதான் பிக்ஷை பெற வேண்டுமென்று சாஸ்திரங்களிலும் கூறப்பட்டுள்ளது. அவன் பிராஹ்மணர்கள் வீடு எங்கிருக்கிறது என எப்படித் தெரிந்து கொள்வது? மேலும் தற்சமயத் தில், பிக்ஷை வாங்கிய அன்னத்திலேயே சாப்பிட முடியுமா?

ஆ : பழைய காலத்தில் அக்ரஹாரங்கள் இருந்தன. ஆகையால், சாஸ்திரங் கள் சொன்ன வழியில் வாழ்வது முடிந்தது. இக்காலத்தில் ஒரே இடத் தில் ஸந்யாஸி சிறிது நாட்களிருக்கலாம் என்று கூறலாம். ஆனால் ஒரே வீட்டில் இருந்தால், அது அவ்வளவு பொருத்தமில்லை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சி : ஸந்யாஸிகளுக்கு நியமங்கள் இருக்கின்றனவா?

ஆ : ஸந்யாஸம் வாங்கி, ஞானம் பெறாதவர்களுக்கு நியமங்கள் இருக்கின் றன. ஆனால் ஸந்யாஸம் பெற்று உத்தம கதி அடைந்தவர்களுக்கு ஒருவிதமான நியமமுமில்லை.

சி : ஒரு ஸந்யாஸிக்குச் சில நாட்களுக்கு ஆகாரம் கிடைக்கவில்லையென் றால், அவன் ஆகாரம் பெறுவதற்கு முயற்சி செய்ய வேண்டுமா, இல்லாவிட்டால் 'ஆன்மீக வாழ்வு கெட்டாலும் நான் அதைப் பெறுவ தற்கு முயற்சி செய்யமாட்டேன்' என்று இருக்க வேண்டுமா?

ஆ : எவன் தத்துவத்தைத் தெரிந்து கொண்டு, மேலும் ஸந்யாஸியாக இருக் கிறானோ அவன் ஆகாரத்தைப் பற்றியோ, மரணத்தைப் பற்றியோ கவலைப்பட வேண்டியதில்லை. ஆனால் ஒருவனுக்கு ஞானம் வர வில்லை, மேலும் ஆகாரமில்லாவிட்டால், அவனின் ஆன்மீக ஸாத னைக்கு மிகவும் இடைஞ்சல் வருமென்றால், அவன் வேண்டுமெ னில் பிக்ஷைக்காகச் சற்றே அதிகமாக முயற்சிகள் எடுத்துக் கொள்ள லாம்.

சி : சாதுர்மாஸ்யம் என்கிற பதத்திற்கு நான்கு மாதங்கள் என்றுதானே அர்த்தம்? ஆனால் தற்போது ஸந்யாஸிகள் சம்பிரதாயப்படி ஒரேயிடத் தில் இரண்டு மாதம்தானே இருக்கிறார்கள். இது சாஸ்திரங்களில் கூறப்பட்டிருக்கிறதா? இதற்கு அனுமதியும் இருக்கிறதா?

ஆ : ஆம். அனுமதியிருக்கிறது.

சி : ஸந்யாஸிகள் அஹிம்சையை மஹாவிரதமாக அனுஷ்டிக்க வேண் டுமா?

ஆ : ஆம். ஸந்யாஸிகள் எல்லாக் காலத்திலும் அஹிம்சையை அனுஷ்டிக்க வேண்டும். அவர்களுக்கு அது மஹாவிரதம்.

சி : ஸந்யாஸிகள் மற்றவர்களுக்கு ஞானத்தை உண்டாக்கச் செய்ய வேண் டுமா? அது அவர்களுக்கு விதியா?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆ : மற்றவனுக்கு ஞானம் உண்டாக்க வேண்டும் என்பது ஸந்யாஸிக்கு விதியில்லை. அவன் தானாகவே வாழ்ந்து கொண்டிருந்தாலும் பாதக மில்லை. ஆனால், மற்றொருவனுக்கு உபதேசம் செய்தானானால் அவன் குரு ஆவதற்கு தகுதி உள்ளவனாக இருப்பான்.

சி : *எவர்களெல்லாம் ஞானம் பெற்றுக் கொண்டவர்களோ, அவர்களெல் லாம் ஸந்யாஸம் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று விதியிருக்கிறதா?*

ஆ : இல்லை. இறைவனுக்கு, இவர்கள் உலகத்திலேயே இருந்தால்தான் இன்னும் அதிக நன்மை ஏற்படுமென்று தோன்றினால், அப்போது அவர்களை உலகத்திலேயே வைத்திருப்பான். ஆனால், இதன் மூலம் க்ருஹஸ்தாச்ரமம் சிறந்தது என்று நான் கூறவில்லை.

சி : *ஞானமடைந்தவன் ஸந்யாஸத்தைப் பற்றியும் கவலைப்படுவானா? ஞானமடைந்த பிறகு அவன் ஸந்யாஸ வாழ்வையும் மேற்கொள்ள வேண்டுமா?*

ஆ : அவன் முயற்சி செய்து ஸந்யாஸம் வாங்கிக்கொள்ள வேண்டுமென் பது கிடையாது. ஆனால் செயல்கள் தானாகவே அவனை விட்டு விலகிவிடும். அதனால்தான் அவன் 'வித்வத் ஸந்யாஸி' என்று அழைக் கப்படுகிறான்.

மனதை அடக்குதல்

சிஷ்யன் : *பல ஜனங்கள் தமது மனம் பத்துத் திசைகளில் ஓடுவதால் தியானம் செய்வது மிகவும் கடினமாக இருக்கிறது என்று வருத்தத்துடன் கூறுகி றார்கள். எல்லோரும் நன்கு தியானம் எப்படிச் செய்வது என்பது பற்றி ஆசார்யாள் எந்த உபதேசத்தைத் தருவார்கள்?*

ஆசார்யாள் : தியானமென்பது ஒரு ரஹஸ்யம். குருவானவர், சிஷ்யரின் தகுதியை மனதில் வைத்தே இவ்வித உபதேசத்தை அருள்வார். மனதை அடக்குவது கடினமானாலும் அதை அடக்கி விடலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சி : *சில மக்கள் மனதை அடக்குவது ஸாத்யமேயில்லை என்று கூறுகின்றனர். இப்படிப்பட்ட கூற்று பற்றி ஆசார்யாள் என்ன கருத்து தெரிவிக்கிறார்கள்?*

ஆ : மனதை அடக்குவது இயலாது எனக் கூறும் ஆசாமியிடம் நூறு ரூபாய் நோட்டுகள் அடங்கிய கட்டு ஒன்றைக் கொடு. அக்கட்டில் எவ்வளவு நோட்டுகள் இருக்கின்றன என்று தவறு வராமல் அவனை எண்ணச் சொல். அவன் அவ்வேலையை முடித்த பிறகு 'எண்ணும்போது உன் மனம் எல்லாத் திசைகளிலும் அலைந்ததா?' என்று கேட்டுப்பார். 'அலையவில்லை' என்ற பதிலே கிடைக்கும். தன் சம்பளத்தை வாங்கி எண்ணும்போது ஒருவனின் மனம் அலைந்து கொண்டிருக்குமா? இல்லையே. இதற்குக் காரணம் என்ன? இக்காரியத்தில் ஒருவிதமான தவறும் ஏற்படக்கூடாது என்கிற எண்ணம்தான். இவ்விதமான பாவனை தியானம் செய்வதிலும் இருந்தால் மனம் எதற்காக அலையப் போகிறது? கீதையில் அர்ஜுனன், மனதின் அலையும் தன்மை குறித்து,

சஞ்சலம் ஹி மன: க்ருஷ்ண ப்ரமாதி பலவத்த்ருடம் |
தஸ்யாஹம் நிக்ரஹம் மன்யே வாயோரிவ ஸுதுஷ்கரம் ||

(கிருஷ்ணா! மனம் மிகவும் சஞ்சலம் வாய்ந்ததாக இருக்கிறதே. அது பலமுடையதாகவும் இருக்கிறதே. காற்றை அடக்குவதைக் காட்டிலும் கடினமாயுள்ளதே) என்று கேட்டிருக்கிறான். அதற்கு கிருஷ்ணபரமாத்மா,

அஸம்சயம் மஹாபாஹோ மனோ
துர்நிக்ரஹம் சலம் |
அப்யாஸேன து கௌந்தேய
வைராக்யேன ச க்ருஹ்யதே ||

(சந்தேகமில்லை, குந்தியின் மகனே! இம்மனதை அடக்குவது கடினம் தான். ஆனால், அதை அப்யாஸம் மூலமாகவும், வைராக்யம் மூலமாகவும் அடக்கலாம்) என்று பதிலளித்திருக்கிறார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சி : *அப்யாஸம் என்றால் இங்கு என்ன பொருள்?*

ஆ : மனதை அடக்க மீண்டும் மீண்டும் முயற்சி செய்வதே அப்யாஸம் என்று கூறப்பட்டது.

சி : *இங்கு வைராக்யம் என்ற சொல் எக்கருத்துடன் கூறப்பட்டுள்ளது?*

ஆ : எப்போது ஒருவனுக்கு லௌகீக மற்றும் ஸ்வர்க இன்பங்களில் பற்றுதலே இல்லையோ அப்போது அவனுக்கு வைராக்யமிருக்கிறது என்று சொல்லலாம். வைராக்யம் ஆன்மீக வாழ்விற்கு ஓர் அஸ்திவாரம் போலிருக்கிறது.

சி : *வைராக்யத்தை எப்படி உண்டாக்குவது?*

ஆ : வைராக்யம் பலவிதமான வழிகளில் ஏற்படலாம். ஒருவனின் மிகப் பிடித்தமான உறவினர் யாராவது இறந்துவிட்டால், அவனுக்கு இந்த உலகத்தில் இனி ஒன்றுமே வேண்டாம் என்று அச்சமயத்தில் தோன்றலாம். ஆனால், இதுபோன்ற வைராக்யம் நிலைத்து நிற்காது. அது நிலைத்திருக்க வேண்டுமானால், அது விவேகத்திலிருந்து வந்திருக்க வேண்டும். எது ஸத் எது அஸத் என்கிற விமர்சைதான் விவேகம் எனப்படும். அந்த விவேகம் மூலமாக ஏற்படும் வைராக்யம் நிலைத்து நிற்கும். ஸத்-அஸத் விவேகம் மூலமாக வைராக்யம் ஏற்படுவது சற்றுக் கடினமாக இருக்கலாம். ஆகவே 'எந்தப் பொருளிலிருந்தும் எனக்கு இன்பமே கிடையாது' என்று எண்ணுவது சுலபமே. இதுவும் ஒருவகையான விவேகமாகும். இந்த விவேகம் மூலமாகவும் ஒருவன் வைராக்யத்தை வளர்த்துக் கொள்ளலாம்.

சி : *பொருட்களிலிருந்து இன்பமே கிடைப்பதில்லை என்று எவ்வாறு கூற முடியும்? ஒரு பொருளைச் சாப்பிட்டாலோ, ஒரு போகத்தை அனுபவித்தாலோ இன்பம் கிடைக்கிறதே!*

ஆ : இல்லை. நன்கு ஆராய்ந்தால் பொருட்களிலிருந்து இன்பம் கிடைப்பதில்லை என்பது புலனாகும். ஒரு பொருள் மற்றொரு பொருளுக்குக் காரணமாக இருக்க வேண்டுமென்றால், அங்கு 'அன்வய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வ்யதிரேகங்கள்' இருக்க வேண்டும். காரணம் உள்ளபோது காரியம் உண்டாவது அன்வயம். காரணம் இல்லாதபோது காரியமும் இல்லாதிருப்பது வ்யதிரேகம். உதாரணத்திற்கு மண்தான் பானைக்குக் காரணமென்று சொல்கிறோம். மண்ணிருந்தால் பானை இருக்கும். இது அன்வயம். மண் இல்லாமல் பானை ஏற்படுத்த முடியாது. இது வ்யதிரேகமாகும். காரிய காரணங்களிருக்க வேண்டுமென்று சொன்னால், அன்வய வ்யதிரேகங்கள் அவசியமிருக்க வேண்டும். பொருட்கள் காரணமாகவும், இன்பம் காரியமாகவும் இருக்க வேண்டுமென்று சொன்னால் இரண்டிற்குமிடையே அன்வய - வ்யதிரேகங்கள் இருக்க வேண்டும். ஆனால் அவை இல்லை. ஆகவே பொருட்கள் இன்பத்திற்குக் காரணமில்லை என்றே தெளிவாகிறது.

சி : *ஆசார்யாள் இதற்கொரு உதாரணம் தந்து விளக்குவார்களா?*

ஆ : ஒருவன் ஒரு மிட்டாய் சாப்பிடுகிறானென்று வைத்துக்கொள்வோம். இப்போது, மிட்டாய் அவனது இன்பத்திற்குக் காரணமா என்று ஆராய்வோம். மிட்டாய் அவனிடம் இருந்தாலும், அவனுக்கு அது விருப்பமில்லாவிட்டாலோ, வியாதி போன்றவைகளின் போதோ, அவனுக்கு அம்மிட்டாய் இன்பம் தருவதில்லை. ஆகவே மிட்டாய் இருக்கும்போதும் இன்பம் தராமலிருக்கிறது. அதேபோல் மிட்டாய் இல்லாத நேரங்களில் மற்றொரு அனுபவமிருந்தால் அவன், அதன் காரணமாக இன்பத்தை அனுபவிக்கிறான். ஆகவே மிட்டாயை இன்பத்திற்குக் காரணம் என்று சொல்ல முடியாது.

சி : **ஒரு பொருள் இல்லாத சமயத்தில், அவனுக்கு மற்றொரு பொருளால் இன்பம் கிடைக்கிறது. ஆகவே ஒரே ஒரு பொருள் மட்டும் தனியாகக் காரணமாகா விட்டாலும், எல்லாப் பொருட்களையும் சேர்த்துப் பார்த்தோமானால் அவை ஏன் அவனது இன்பத்திற்குக் காரணமாகக் கூடாது?**

ஆ : இதுவும் சரிவராது. ஆழ்ந்த உறக்கத்தின்போது ஒவ்வொருவனும் நன்கு சந்தோஷத்தை அனுபவிக்கிறான். உறக்கத்திலிருந்து எழுந்தவுடன் 'நான் இன்பத்துடன் நன்கு உறங்கினேன், எனக்கு அப்போது ஒன்றும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தெரியவில்லை' என்கிறான். ஆழ்ந்த உறக்கத்தின் போது ஒருவிதமான பொருளும் இருப்பதில்லை. ஆயினும், ஒருவனுக்கு இன்பம் இருக்கிறது. ஆகவே எல்லாப் பொருட்களையும் ஒருசேரக் காரணங்கள் என்றும் கூற முடியாது. ஒரு பொருள் இல்லாவிட்டாலும் இன்பம் தர மற்றொரு பொருள் உள்ளது என்றும் கூற முடியாது.

சி : *பொருட்கள் இன்பத்திற்குக் காரணமில்லை என்றாலும் ஒரு பொருள் கிடைக்கும் போது மனிதனுக்கு எவ்வாறு இன்பம் கிடைக்கிறது?*

ஆ : மனவமைதியினால்தான் கிடைக்கிறது. ஒரு பொருளை ஒருவன் விரும்பும்போது அவன் மனதில் ஆசைகள் இருப்பதால், அவன் மனம் அமைதியாய் இருப்பதில்லை. ஆகவே, அத்தருணத்தில் அது இன்பமாகவும் இருப்பதில்லை. வேண்டிய பொருள் கிடைத்தவுடன் அந்த ஆசை அடங்குகிறது. ஆதலால் மனம் அமைதி பெறுகிறது. அந்த அமைதியினால்தான் அவன் இன்பம் அனுபவிக்கிறான். இவ்வாறு நடந்து முடிந்தவுடன் அவனுக்கு மேலும் ஓர் ஆசையேற்பட்டு அவனது இன்பம் போய் விடுகிறது. அது கிடைத்தவுடன் மனவமைதி -பிறகு இன்பம் என இதுபோய்க் கொண்டிருக்கிறது. சாமான்யமாக, மனிதன் இரண்டு ஆசைகளுக்கு நடுவே இடைவெளி இருக்கிறது என்பதைக் கவனிப்பதில்லை. ஆதலால் 'அந்த இன்பம் மனவமைதியினால்தான் ஏற்படுகிறது', என்று அவன் தெரிந்து கொள்வதில்லை. மேலும், பொருட்கள்தான் இன்பத்திற்குக் காரணம் என்று தவறான எண்ணத்திற்கு வேறு ஆளாகிறான்.

சி : *ஒருவன், 'இன்பமானது மனவமைதியினால்தான் கிடைக்கும், பொருட்களினால் அல்ல' என்று தெரிந்து கொண்டால், அதன் மூலம் வைராக்யம் பெறலாமா?*

ஆ : ஆம், பெறலாம். 'பொருட்களிலிருந்து இன்பமில்லை. அவை சிறந்தவையுமில்லை', என்று எண்ணிக் கொண்டு போனால் ஒருவன் நிச்சயமாக வைராக்யம் பெறலாம். உதாரணத்திற்குப் பண ஆசையுள்ள ஒருவன் 'பணத்தைச் சம்பாதிப்பதற்குச் சிரமப்பட்டு உழைக்க வேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அதை வைத்துக் காப்பாற்றுவதும் கடினம். முடிவில், அதனாலேயும் துன்பம்' என்று எண்ணிக்கொள்ள வேண்டும். பெண்களின் மீது ஏற்பட டும் காமத்தைத் தவிர்க்க 'இவளது உடல், வெறும் ரத்தமும், மாமிசமும் நிறைந்தது' என்று கருதலாம். இதிலிருந்து அந்த மாதிரி ஆசைகளைத் தவிர்த்து மனவமைதி பெறலாம். இம்மாதிரி நல்ல எண்ணங்கள் மூலம் வைராக்யமானது ஏற்பட்டு நிலைத்து நிற்கும். வைராக்யமுள்ள மனம் தான் தியானம் செய்வதற்கு ஏற்றது. வைராக்யமுள்ளவன் முயற்சிகள் செய்து, தியானத்தின் உத்தம நிலையையும் அடையலாம்.

தியானம்

சிஷ்யன் : தியானமென்றால் என்ன?

ஆசார்யாள் : தியானம் என்றால் மனதை ஒருநிலைப்படுத்துவது எனப் பொருள். எப்போது மனம் ஒரே விஷயத்தில் கவனம் செலுத்துமோ அது தியானம் எனப்படும்.

சி : ***தியானத்தின் முக்கியப் பயனென்ன?***

ஆ : மனதை ஒருநிலைப்படுத்துவதில் பழக்கமிருந்தால், இறைவன் பக்கமே தன் மனதைச் செலுத்தி, அதைப் புனிதமாக்கி விடலாம். அதன் பிறகு குணமும், ஆகாரமும் இல்லாத ஆத்மாவின் பக்கம் அதைத் திருப்பிவிடலாம். இப்படிச் செய்வதன் மூலம், ஒருவன் தியானத்திலேயே மிக உயர்ந்த நிலையான நிர்விகல்ப ஸமாதியை அடைந்து அங்கு ஆத்ம தத்துவத்தின் அறிவையும் பெறலாம்.

சி : ***தியானம் செய்வது நன்மை பயப்பதானாலும் அதைப் பயிற்சி செய்வது மிகவும் கடினமாயிருப்பது ஏன்?***

ஆ : வேறென்ன, மனதை அடக்குவது கடினமாக இருப்பதே காரணம்.

சி : ***மனதை எவ்வாறு அடக்குவது?***

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆ : ஸ்ரீ கிருஷ்ணர் சொன்னதுபோல் அப்யாஸத்தினாலும், வைராக்யத்தினாலும் மனதை அடக்கலாம்.

சி : *தியானத்திற்குத் தடைகளாக எவையெல்லாம் இருக்கின்றன?*

ஆ : நீ, தியானம் செய்யும்போது உள்ள தடைகளைப் பற்றிக் கேட்கிறாயா? அல்லது மற்ற சமயங்களில் ஏற்படும் தடைகளைப் பற்றிக் கேட்கிறாயா?

சி : *தியானம் செய்யும் வேளையில் ஒருவன் ஸமாதியை அடையவிடாமல் தடுக்கும் தடைகளைப் பற்றிக் கேட்கிறேன்.*

ஆ : தடைகளில் முதலாவது விக்ஷேபம். அதாவது மனம் கண்ட திசைகளில் ஓடிக் கொண்டிருக்கும். இதுதான் முதல் தடை. இரண்டாவது என்னவென்றால், விக்ஷேபமில்லாவிட்டாலும், தூக்கம் போல் மனம் ஒருவித ஜடத்தன்மையை அடைவதாகும். இவ்வாறு இருப்பினும் அது மோசம்தான். தூக்கம்போல் ஜடத்தன்மை ஏற்பட்டால் ஒருவன் உத்தம நிலைமையை அடையமாட்டான். ஸகஷாயம் என்ற நிலை மூன்றாவது தடையாகும். அந்த நிலையில் விக்ஷேபமுமிருக்காது. மேலும் மனம் ஜடமாகவும் இருக்காது. அங்கே ஒருவிதமான இன்பமிருந்தாலும், ஆசையின் விதை நாசமடைவதில்லை. மேலும், அந்நிலை ஸமாதியைப் போலிருக்காது. இந்நிலையிலும் ஒருவன் கவனத்தோடு இருக்க வேண்டும். இவை எல்லாவற்றையும் மனதில் வைத்துத்தான் கௌடபாதர்,

லயே ஸம்போதயேச்சித்தம் விக்ஷிப்தம் சமயேத்புன:।
ஸகஷாயம் விஜானீயாத்ஸமப்ராப்தம் ந சாலயேத்॥

(தூக்கத்தில் மனம் இருந்தால், அதை எழுப்ப வேண்டும். பொருட்களில் விக்ஷேபம் அடைந்தால், அதை அமைதிப்படுத்த வேண்டும். ஆசையின் வேருடனிருந்தால் அதைத் தெரிந்துகொள்ள வேண்டும். சமநிலையிலிருந்தால் அதை அசையாமல் விட்டுவிட வேண்டும்.) என்று கூறியிருக்கிறார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சி : *விக்ஷேபத்திலிருந்து மனதை எப்படி அடக்குவது?*

ஆ : நாம் எதை தியானம் செய்ய வேண்டுமோ அதன் மேலேயே மனதை மீண்டும் மீண்டும் திருப்ப வேண்டும். வைராக்யம் அதிகமாக ஆக இந்த விக்ஷேபம் குறைந்து கொண்டு வரும். தியானம் செய்யும் வேளையில் தியானம்தான் அவசியம் என்று பாவித்துச் செய்ய வேண்டும். தியானம் செய்யக்கூடிய உருவமோ, சப்தமோ உண்மையாகவே அங்கு இருக்கிறது என்று பாவனை செய்து கொண்டால், அது தியானத்திற்கு உதவியாக இருக்கும்.

சி : *மனமானது ஜடமான நிலையை அடைந்து அதன் மூலம் பாதிக்கப்பட்டால் அதற்கு என்ன செய்ய வேண்டும்?*

ஆ : கவனித்துப் பார்த்தால், மனம் தற்போது ஜடமாகிக் கொண்டிருக்கிறது, தூக்கத்தின் பக்கம் செல்கிறது என்று ஒருவன் தெரிந்து கொள்ளலாம். அப்படித் தெரியும் வேளையில், முயற்சி செய்து, மனம் தூக்கம் போல் இருப்பதைத் தவிர்க்கலாம். இதற்காக செய்கின்ற ஜபத்தை, இன்னும் தீவிரமாகச் செய்து கொண்டு வரலாம். அவ்வாறு செய்தால் மனம் மீண்டும் சாதாரண நிலைக்குத் திரும்பி விடும். என்ன செய்தாலும் மனம் ஜடத்தன்மையான லயத்திலேயே சென்று கொண்டிருந்தால், சற்று நேரம் எழுந்து நடந்து விட்டு மீண்டும் தியானத்திற்கு அமரலாம். சில சமயங்களில் மனதிற்குச் சற்று நேரம் ஓய்வு தேவைப்படும். இது போன்ற சமயங்களில் வலுக்கட்டாயமாக மனதை தியானத்திற்கு ஈடுபடுத்தக் கூடாது. சற்று நேரத்திற்குப் பிறகே தியானத்திற்கு அமர வேண்டும். இல்லாவிடில், மனதிற்குக் கஷ்டமேற்படும். இதற்காக சோம்பேறித்தனம் காரணமாக மனம் முக்கால்வாசி நேரங்களிலும் தியானத்தில் ஈடுபடுவதில்லை என்றால், அப்போது அதை அவசியம் ஈடுபடச் செய்து பழகிக்கொள்ள வேண்டும்.

சி : *தியானம் செய்யும்போது ஜபம் செய்வது தேவையா?*

ஆ : ஸகுண உபாஸனை செய்யும்போது முதன்முதலில் ஓரளவுக்கு ஜபம் செய்வது தேவை என்றே சொல்லலாம். மனதை ஒருநிலைப்படுத்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஜபம் பெரிதும் உதவுகிறது. மனமானது எப்போது தியானம் செய்யப்படும் உருவத்தில் ஒன்றி விட்டதோ அப்போது ஜபம் தானாகவே நின்றுவிடும். ஆகவே நாம் ஜபம் செய்வதை முயற்சியுடன் நிறுத்தத் தேவையில்லை.

சி : *ஓர் உருவத்தின் மேல் எவ்வாறு தியானம் செய்வது?*

ஆ : தியானத்தைப் பற்றி ஒவ்வொருவனுக்கும் தனித்தனியாகத்தான் கூற வேண்டும். எல்லோருக்கும் ஒரே போல் நியமங்களைக் கூற முடியாது. நீ கேட்டதற்காக ஒரு முறையைச் சொல்கிறேன். ஒருவனது இஷ்ட தேவதையை அவன் தன் உள்ளத்தில் தாமரை மீது அமர்ந்திருப்பதாக தியானம் செய்து வரலாம். அந்த ரூபத்திலேயே அவன் கவனம் செலுத்துவது கடினமானால் முதலில் தனக்கு முன்பு, தன் இஷ்ட தேவதையின் சித்திரத்தை வைத்துக்கொள்ள வேண்டும். அப்படத்தையே நோக்கியவாறு சிறிது நேரம் ஜபம் செய்து கொண்டிருக்க வேண்டும். அதற்குப் பிறகு கண்களை மூடி, படத்திலுள்ள தேவதையை அங்கு பார்ப்பதாகத் தியானம் செய்ய முயல வேண்டும். சற்று நேரம் வரை மனம் அலையாமல் நிற்கலாம். ஆனால் மனம் அலைய ஆரம்பித்துவிட்டது என்றால் கண்களைத் திறந்து மீண்டும் அச்சித்திரத்தைப் பார்த்துக் கொள்ளலாம். பிறகு மீண்டும் கண்களை மூடி தியானம் செய்ய வேண்டும். இதுபோல் முயற்சி செய்து கொண்டு போனால், தேவதையின் உருவம் படத்தைப் பார்க்காமலேயே மனதில் நின்றுவிடும். இங்கு நான் சொன்னது தியானத்தின் ஒரு முறை. இவ்வாறுதான் அனைவரும் செய்ய வேண்டுமென்று அர்த்தமில்லை. பதஞ்ஜலி மஹரிஷி தனது யோக ஸூத்ரத்தில்,

யதாபிமதத்யானாத்வா

(எப்படிப் பிடிக்குமோ, அப்படித் தியானம் செய்து கொள்ளலாம்) என்றார். ஸகுண தியானம் மனதை ஒருநிலைப்படுத்த உதவுகிறது. எந்த இஷ்ட தேவதையின் உருவத்தில் மனம் ஒன்றுமோ, அதிலேயே தியானம் செய்யலாம். சப்தத்தின் மீதும் தியானம் செய்வது மற்றொரு வகை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குருவானவர், தனது சிஷ்யனுக்கு எது சரி என்று தீர்மானித்து அதற்கேற்ப உபதேசிப்பார்.

சி : *உடல் நலம் சரியில்லாத சமயங்களில் தியானம் செய்தல் தவறா?*

ஆ : அது உடல்நிலையைப் பொருத்து இருக்கிறது. தியானத்தில் உயர்ந்த நிலையை அடைந்தவர்களால் எப்போது வேண்டுமானாலும், தியானத்தைச் செய்ய முடியும். ஆனால், அதைப் பயிற்சி செய்து கொண்டிருக்கும் நிலையில் உள்ளவர்கள், தமது உடல் நிலையைப் பொருத்து தியானம் செய்யலாம். தியானம் எவ்வளவு நேரம் செய்கிறோமோ அவ்வளவுக்கு அது நல்லது. அதற்காக மனத்திற்குச் சிரமம் உண்டாகும் வகையில் செய்யக் கூடாது. தியானம் செய்வதில் நிபுணர்களாய் இருப்பவர்கள், மணிக்கணக்காகச் செய்யலாம். ஆனால் தியானமே வராதவன் தானும் ஆறு மணி நேரம் உட்காருகிறேன் என்றால், அது கடைசியில் அவனுக்கு வெறுப்பைத்தான் தரும். மேலும் தலைவலியோ வேறு வலியோ உண்டாக்கக்கூடும்.

சி : *நிர்குண தியானத்தை எவ்வாறு செய்வது?*

ஆ : நிர்குண தியானம் செய்யும் பொழுது உருவத்தையோ சப்தத்தையோ உபயோகப்படுத்த வேண்டிய தேவையில்லை. ஆன்மீக வாழ்வில் உயர்ந்த நிலையை அடைந்தவர்களுக்கு நிர்குண தியானம் மிகவும் பொருத்தமானது. எதற்கு உருவமும் ஸகுணமும் பயன்படுத்துவதில்லையோ அதுவே நிர்குண தியானம் எனப்படும். நிர்குண தியானம், தியானத்திலேயே உயர்ந்த நிலையான நிர்விகல்ப ஸமாதிக்குக் கொண்டுவிடும். எப்படிச் செய்ய வேண்டும் என்பதை இங்கேயும் ஒருவிதமாகச் சொல்ல முடியாது. இதற்கு ஒரு முறை என்னவென்றால், முதலில் மனதில் தோன்றும் எண்ணங்களை 'எனக்கும் இந்த எண்ணங்களுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை' என்று அவைகள் தோன்றி மறைவதைப் பார்த்துக் கொண்டிருப்பது. இதன் மூலம் மன எண்ணங்களுக்கும் தனக்கும் சம்பந்தமில்லை என்ற பாவனை ஏற்படும். இப்படி ஏற்பட்டால், மனதில் தோன்றும் எண்ணங்கள் தாமாகவே அடங்கிவிடும். மற்றொரு க்ரமம் என்னவென்றால், தான் ஸச்சிதானந்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வடிவான ஆத்மா என்று கருதுவது. இன்னொரு க்ரமம் என்னவென்றால், வலுக்கட்டாயமாக அனைத்து எண்ணங்களையும் அடக்கி வைத்துத் தான் ஸச்சிதானந்த வடிவான ஆத்மா என்று எண்ணுவது. இது போன்ற நிர்குண தியானம் தொடங்கும் காலத்தில் உடலின் ஞாபகம் போய்விடும். பிறகு எண்ணங்களுக்கும் தனக்கும் சம்பந்தமில்லை என்று எண்ணங்களை அடக்கிவிட்டால் உத்தமமான நிலையை அடையலாம்.

சி : *சில சமயம் தியானம் செய்யும்போது உடலில் துடிப்பு ஏற்படுகிறது. இதற்குக் காரணமென்ன?*

ஆ : சாமான்யமாக உடலில் பலமில்லை என்று அர்த்தம். இல்லாவிட்டால், உடலில் விசேஷமான சக்திகளின் அம்சம் தெரிகிறது எனப் பொருள். குண்டலினி சக்தியின் ப்ரபாவம் என்ற காரணமாகவும் இருக்கலாம். ஆதலால் அதைப்பற்றிக் கவலைப்படாமல் தியானத்தைச் செய்து கொண்டே போகலாம்.

சி : *தியானம் எம்மாதிரி இடத்தில் செய்ய வேண்டும்?*

ஆ : எங்கு சப்தங்கள் இல்லையோ அங்கு தியானம் செய்ய வேண்டும்.

சி : *ஏதாவது ஆஸனத்தில் அமர வேண்டும் என்ற தேவையிருக்கிறதா?*

ஆ : ஆஸனத்தில் அமருவது நல்லது என்றே கூறலாம். கிருஷ்ண பகவானே கீதையில்,

சைலாஜின குசோத்தரம்

எனக் கூறுகிறார். தர்ப்பையாலான ஆஸனத்தின் மேல் மான்தோலை விரித்து அதன்மேல் துணியை விரித்து - இவ்வாறு செய்யப்பட்ட ஆஸனத்தில் அமருதல் நல்லது. தியானம் செய்யும்பொழுது முதுகும், கழுத்தும் நிமிர்ந்து இருக்க வேண்டும். அதை மட்டும் கவனித்துக் கொள்ள வேண்டும்.

சி : *பலர் சிரத்தையுடன் தியானத்தை விரும்புகிறார்கள். ஆனாலும், அவர்களால் தியானத்தை ஒழுங்காகச் செய்ய முடிவதில்லையே?*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆ : அவர்கள் தியானத்தை மிகவும் நேசிக்கிறார்கள் என்று தோன்றலாம். ஆனால், உண்மையிலேயே அப்படித்தானா? முக்கால்வாசிப் பேர்களின் விஷயத்தில் 'இல்லை' என்பதே பதிலாகும். அவர்களின் வாழ்க்கையைச் சற்று ஆராய்ந்து பார்த்தால் தியானத்திற்கு முக்கியமான ஸ்தானம் அளிக்கப்படுவதில்லை என்று தெரியும். அவர்களின் வாழ்வில் தூக்கம், உணவு, அலுவலகம், தேர்வு போன்றவைகளுக்கு தியானத்தைக் காட்டிலும் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கும். அலுவலகத்திற்கு நேரமாகி விட்டால் தியானத்தின் கதி அவ்வளவுதான். மேலும், அவர்கள் தியானத்திற்கென அமரும்போதும், 'இப்போது எனக்கு வேறோர் எண்ணமும் தேவையில்லை. லோகத்தில் என் உடலுக்குச் சம்பந்தப்பட்டதாய் இருந்தாலும், சம்பந்தப்படாததாய் இருந்தாலும், எது வேண்டுமானாலும் நடக்கட்டும். எனக்கு இப்போது தியானம்தான் தேவை' என்ற எண்ணத்துடன் அமருவதில்லை. இதைத்தவிர முற்பிறவியில் தியானத்தை அதிகமாகச் செய்திருக்காதவர்களுக்கு இப்பிறவியில் தியானம் கடினமாக இருக்கிறது. அதேபோல் முற்பிறவியில் தியானத்தை நன்கு பயிற்சி செய்தவர்களுக்குத் தற்போது தியானம் வரும். முதல் முறை ஆற்றில் இறங்கும் ஒருவனுக்கு நீச்சலடிப்பது மிகவும் கடினம். ஆனால் பழகப் பழக அது சகஜமாகி விடும். அதே போல் தான் இங்கும்.

சி : *தியானத்திற்கு அமரும்போது 'இப்போது நான் எந்த ஒரு லௌகிக கவலைக்கும், யோசனைக்கும் இடங் கொடுக்கப் போவதில்லை' என்று மனதில் தீர்மானத்துடன் இருப்பது தியானத்திற்கு உதவுமா?*

ஆ : ஆம், உதவும்.

சி : *தீவிரமான வைராக்யமுள்ளவனுக்கு லௌகிக யோசனைகளை மறப்பது சுலபமாக இருக்க வேண்டுமல்லவா? சிலருக்குத் தீவிரமான வைராக்யமிருப்பதைக் காண்கிறோம். ஆனால், அதேசமயம் அவர்களால்கூட நன்கு தியானம் செய்ய முடிவதில்லையே! இதற்கு என்ன காரணம் என்று ஆசார்யாள் தெளிவுபடுத்துவார்களா?*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆ : சாமான்யமாக, வைராக்யம் அதிகமாகப் பெற்றிருப்பவர்களுக்கு தியானம் சுலபமாகவே வரும். சிலபேர், தாம் முற்பிறவிகளில் நன்கு தியானத்தைப் பயிற்சி செய்யாத காரணத்தினால், தற்போது தியானம் செய்ய முடிவதில்லை என்று கூறலாம்.

சி : தியானம் செய்யும் முயற்சியில் ஒருவன் மீண்டும் மீண்டும் தோல்வியையே அடைந்து கொண்டிருந்தால், அவனுக்கு உற்சாகம் போய் வெறுப்பு ஏற்படாதா?

ஆ : ஒருவன் ஆன்மீக ஸாதனைகளின் போது வெறுப்பு உண்டாக இடங்கொடுப்பது தனது வழியில் தானே தடைக்கல்லாக நிற்பதைப் போலாகும். மிகவும் அல்பமான ஒரு பட்டத்தைப் பெறுவதற்காக, பல வருடங்கள் கல்லூரி முதலியவைகளுக்குச் சென்று படிக்க வேண்டி வருகிறது. சாதாரணமான ஒரு லௌகீக விஷயத்திலேயே பல வருடங்களுக்கு முயற்சி தேவைப்படுகிறதென்றால், மிகவும் ஸூக்ஷ்மமாகவும், உத்தமமாகவும் இருக்கும் தியானத்தைப் பெறுவதற்குச் செய்ய வேண்டிய முயற்சிகளைப்பற்றி என்ன சொல்ல வேண்டியிருக்கிறது? பட்டம் பெறுவதற்காக செய்யும் முயற்சிகளில் ஒரு சிறு பகுதியைக்கூட தியானத்திற்காக மக்கள் செய்யாவிட்டாலும், அதை செய்யும்போது வெறுப்பு வேறு ஏற்படுகிறது என்று கூறுகிறார்கள். இது எவ்வளவுக்கு நியாயம் என்று நீயே பார்த்துக் கொள்ளலாம். பதஞ்சலி மஹரிஷி தமது யோக ஸூத்ரங்களில்,

ஸது தீர்ககாலநைரந்தர்ய
ஸத்காராஸேவிதோ த்ருடபூமி:

'நீண்ட காலம் விடாமல் சிரத்தையுடன் முயற்சி செய்தால், அந்த உத்தமமானதும் ஸ்திரமானதுமான நிலையைப் பெறலாம்' என்று கூறியிருக்கிறார். சில நாட்களிலேயோ சில மாதங்களிலேயோ ஒருவன் தியானம் வரப்பெறலாம் என்றால் பதஞ்சலி இதுபோன்று கூறியிருக்க மாட்டார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சி : *நன்கு தியானம் வரப்பெறுபவர்களுக்கும் சில கஷ்டங்கள் இருக்கிறதே. அவர்களுக்குச் சில காலங்களில் தியானம் மிகவும் விசேஷமாக வருகிறது. சில சமயங்களில் அவ்வளவு நன்றாக வருவதில்லை என்று கூறுகிறார்கள். எப்போதும் நன்கு தியானம் வருவதற்கு என்ன செய்ய வேண்டும்?*

ஆ : உடல் நலமின்மை, உணவு நியமங்கள் இல்லாமல் இருப்பது, சோம்பேறித்தனம், கவலைகள், ஆசைகள் முதலியவை தியானத்திற்குத் தடைகளாக இருக்கின்றன. ஆகவே, இத்தடைகளை நாமே முயன்று நீக்கிக் கொண்டால், தியானம் நன்கு வரும். சிறிது காலத்திற்குச் சரியாக வரவில்லையென்றால், பிரச்னையை மறந்துவிட்டு முயற்சிகளை மேலும் மேற்கொள்ளலாம். ஆனால், ஏதாவது ஒரு விசேஷமான தடையினால்தான் தியானம் கெடுகிறதென்றால், அதை குருவின் உபதேசத்தின்படி முயற்சி செய்து, நீக்கிக்கொள்ள வேண்டும். தினமும், ஸூர்யோதயத்திற்கு முன்பும், ஸூர்யாஸ்தமனத்திற்குப் பின்பும் மனம் இயற்கையாகவே அமைதியுடன் இருக்கும் என்பதைக் கருத்தில் கொண்டு அம்மாதிரி சமயங்களில் தியானம் செய்வது நல்லது.

சி : *காமங்களை அடக்குவதற்கு தியானம் மட்டும் போதுமா?*

ஆ : தியானத்தின் உத்தமமான நிலையான ஸமாதி எவர்களுக்கு வருகிறதோ அவர்கள் வெறும் தியானம் மூலமாகவே ஆசைகளை அழித்து விடலாம். ஆனால் மற்றவர்களுக்கு தியானம் ஒன்று மட்டும் போதாது. தியானம் செய்யாத நேரங்களைத் தவிர மற்ற நேரங்களில் லௌகீக ஸம்ஸ்காரங்கள் ஏற்படுவதால், இவை தியானத்தின்போது உண்டாகும் ஸம்ஸ்காரங்களை மறைத்து விடுகின்றன. ஆகவே அந்த சமயங்களிலும் 'பொருட்களிலிருந்து இன்பம் கிடைக்காது' என்று தோஷத்ருஷ்டி கொண்டு நோக்குவது வைராக்யத்தை மிகவும் உண்டாக்குகிறது. தினந்தோறும் சாஸ்திரப் புத்தகங்களைப் படித்து, அவைகளில் கூறப்பட்ட கருத்துக்களைச் சிந்திப்பது காமங்களை வெல்வதற்கு மிகவும் உதவியளிக்கிறது. மஹான்களின் ஸஹவாசமும் ஆசையை வெல்வதற்கு மிகவும் நல்லது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நிர்விகல்ப ஸமாதி

சிஷ்யன் : *எப்போது ஒருவன் நிர்விகல்ப ஸமாதியை அடைகின்றானோ அப்போது மூச்சுக் காற்றின் சேஷ்டை முழுவதும் அடங்கி விடுமா?*

ஆசார்யாள் : இல்லை, நுண்ணியமாகப் பிராணத்தின் சேஷ்டை இருக்கும்.

சி : *நிர்விகல்ப ஸமாதியின் லக்ஷணம் என்ன?*

ஆ : பார்க்கிறவன், பார்க்கப்படுவது, பார்வை இவைகளில் வித்யாசமில்லாதிருப்பதுதான் விசேஷமான லக்ஷணம். நிர்விகல்ப ஸமாதியில் ஆத்ம தத்துவம் தெளிவாகத் தெரியும். மேலும் பேரின்ப அனுபவமிருக்கும்.

சி : *ஸமாதியில் உண்மையான பேரின்ப அனுபவமிருக்குமா அல்லது துக்கம் மட்டும் இல்லாமல் இருக்குமா?*

ஆ : நிர்விகல்ப ஸமாதியில் பேரின்ப அனுபவம்தான் விசேஷமாக இருக்கும், துக்கமில்லாமல் இருப்பதொன்றுமட்டுமில்லை. ஜட ஸமாதியிலும் ஆத்மாவின் இன்பமிருக்கும். ஆனால், இந்த அளவிற்குத் தெரியாது.

சி : *நிர்விகல்ப ஸமாதியில் அகண்டாகார வ்ருத்தி (மன எண்ணம்) இருக்கிறதென்று கேள்விப்பட்டேன். பார்க்கிறவன், பார்க்கப்படுவது, பார்வை என்ற பேதம் இல்லையென்று ஆசார்யாளே சொன்னீர்கள். இப்படியென்றால் அகண்டாகார வ்ருத்தியென்னும் மன எண்ணமிருக்கிறது என்னும் அறிவு ஸமாதியில் இருக்குமா?*

ஆ : இல்லை. எப்போது ஒருவன் நிர்விகல்ப ஸமாதியில் இருக்கிறானோ, அப்போது அவனுக்கு அகண்டாகார வ்ருத்தி இருக்கிறதென்று தெரியாது.

சி : *அப்படியென்றால் அகண்டாகார வ்ருத்தி, நிர்விகல்ப ஸமாதியின் போது இருந்தது என்று எவ்வாறு கூறுவது?*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆ : அனுமானத்தினாலும் சாஸ்திர உபதேசங்களாலும் ஒருவன் தெரிந்து கொள்ளலாம். ஏதாவது ஒரு ஞாபகம் ஏற்பட வேண்டுமென்றால், அதற்கு முன்பு ஓரனுபவம் இருந்திருக்க வேண்டும். நிர்விகல்ப ஸமாதி யிலிருந்து மனம் இறங்கும்பொழுது, 'முன்பு பேரின்பத்தை நான் அனு பவித்தேன்' என்ற ஞாபகம் இருக்கிறது. ஞாபகம் இருக்க வேண்டுமா னால், அதற்கொரு அனுபவம் இருந்திருக்க வேண்டும். மனம் சம்பந் தப்பட்ட அனுபவம் இருக்க வேண்டுமென்பதால், அது ஒரு எண்ண மாக, (வ்ருத்தியாக) இருந்திருக்க வேண்டும். அந்த வ்ருத்திதான் அகண்டாகார வ்ருத்தி எனப்படும்.

சி : மனதில் ஓர் எண்ணம் ஏற்படுகிறதென்றால், அதற்கொரு விஷயம் தேவை. அகண்டாகார வ்ருத்தியின் விஷயம் என்ன?

ஆ : ஆத்மா.

சி : நான் புரிந்து கொண்ட அளவிற்கு ஒரு பொருளைப் பார்க்க வேண்டு மென்றால், அப்போது இந்திரியத்துடன் மனம் வெளிப் பொருளின் உருவத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறது. அதற்குப் பிறகுதான் அதைப் பற்றிய ஞானம் ஏற்படுகிறது. கனவிலும் இப்படித்தான் என்று கேள் விப்பட்டேன். ஆனால், இங்கு மனமே பொருள் வடிவாக மாறுகிறது. இந்திரியங்கள் தேவையில்லை என்று தெரிகிறது. ஆதலால் ஜாக்ரத்தி லும் (விழிப்பு நிலை), ஸ்வப்னத்திலும் (கனவு) மனதின் வ்ருத்திதான் பொருள் வடிவாக மாறுகிறது. ஆசார்யாள், அகண்டாகார வ்ருத்தியி னால் ஆத்மாதான் க்ரஹிக்கப்படுகிறது என்று கூறினார்கள். ஆத்மா விற்கு உருவமோ இல்லையாதலால் அது வ்ருத்தியின் விஷயமாக எப்படி ஆக முடியும்?

ஆ : அப்படிக் கூறுவது உண்மைதான். எப்போது மனம் ஒரு பொருளைக் க்ரஹிக்கிறதோ அப்போது அந்த மனதின் வ்ருத்தி பொருள் வடிவாகத் தான் மாறுகிறது. இங்கும் அதேபோல்தான் என்று சொல்ல முடியாது. அகண்டாகார வ்ருத்தி ஆத்மாவை க்ரஹிக்கிறது என்று சொன்னால், அப்போது மனம் மிகவும் பரிசுத்தமானதால், அதை ப்ரஹ்மத்தைக் காட்டிலும் வேறென்று சொல்ல முடியாது. அந்த சமயத்தில் மனம் ஸ்படிகத்தைப் போலாகிவிடுகிறது. அதில் ஆத்மாவின் ஜோதி தெளி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வாகத் தெரிகிறது. எப்படி ஒரு சிவந்த பூவை ஒரு ஸ்படிகத்தின் மூலம் பார்த்தோமானால், அந்த ஸ்படிகமும் சிவப்பாகத் தெரியுமோ, அப்ப டியே ஆத்மாவின் தன்மையும் தெளிவாக அங்குத் தெரியும். இந்த அகண்டாகார வ்ருத்திதான் அக்ஞானத்தைப் போக்குகிறது.

சி : *நிர்விகல்ப ஸமாதியின் ஓர் அனுபவம் மட்டும் ப்ரஹ்ம ஞானம் பெறப் போதுமா?*

ஆ : சாமான்யமாக போதாது. நிர்விகல்ப ஸமாதியின் போது பரம்பொருளின் அனுபவமிருக்கும். அதிலிருந்து கீழிறங்கிய பின் அவ்வனுபவம் சிறிது நேரம் கழித்து மறைய ஆரம்பிக்கும். ஆனால், கீழிறங்கிய பின் அனுபவ மிருக்கும் காலத்தில், எல்லாமே ஆத்மாவாகவே தெரியும். ஆத்மாவைக் காட்டிலும் வேறு ஒன்றுமிருப்பதாகவே தோன்றாது. பொருத்தமான உதாரணம் கூற வேண்டுமானால், 'நான் ஒரு பெரிய கடலாயிருக்கி றேன். என்னிடத்திலேயே உலகமென்னும் நுரை ஏற்படுகிறது' என்பது போலத் தோன்றும். அனுபவத்தில்தான் இதைப் புரிந்துகொள்ள முடி யுமே தவிர வெறும் உதாரணம் தந்து முழுவதும் விளக்க முடியாது. மறுபடியும் மறுபடியும் ஒருவன் நிர்விகல்ப ஸமாதியின் அனுபவத் தைப் பெற்றானானால் அவனது ஞானம் ஸ்திரமாகிவிடும். ஞானம் ஸ்திரமான பிறகு மனம் நாசமடைந்து அவன் ஜீவன்முக்தனாகி விடு வான்.

சி : *நிர்விகல்ப ஸமாதியடைந்த பிறகும் ஒருவன் அதிலிருந்து கீழிறங்கு வானா?*

ஆ : ஆம், பிராரப்தம் தீரவில்லையென்றால் நிர்விகல்ப ஸமாதியிலிருந்தும் கீழிறங்கத்தான் செய்வான். யோக சாஸ்திரத்திலும், வாஸிஷ்டத்திலும் இதற்குப் பலவிதமான த்ருஷ்டாந்தங்களை நாம் காணலாம்.

சி : *நிர்விகல்ப ஸமாதி பெறாமலே ஒருவன் ஞானம் பெற முடியுமா?*

ஆ : தனது ஸ்வரூபத்தைப் பற்றி தெரிந்துகொள்வதுதானே ஞானம். விசா ரம் மூலமாக, நிர்விகல்ப ஸமாதி பெறாமலும் ஞானம் பெறலாம். ஆனால் நிர்விகல்ப ஸமாதியென்பது ஒரு விசேஷமான வழி. ஆயி னும், அது ஒரே வழி என்று கூறுவது பொருத்தமாகாது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சி : *நிர்விகல்ப ஸமாதியின் போது தனது உடலைப் பற்றியோ சுற்றுப்புறங் களைப் பற்றியோ ஏதேனும் அறிவு இருக்குமா?*

ஆ : இல்லவேயில்லை.

சி : *ஒருவனை நிர்விகல்ப ஸமாதியிலிருந்து எழுப்ப முடியுமா?*

ஆ : முக்கால்வாசி சமயங்களிலும், கஷ்டப்பட்டுதான் எழுப்ப முடியும். சில சமயங்களில் எழுப்பவே முடியாது என்பது போலாகி விடும்.

சி : *நிர்விகல்ப ஸமாதியில் எவ்வளவு காலம் இருக்க வேண்டும் என்பதை ஒருவனால் நியமனம் செய்துகொள்ள முடியுமா?*

ஆ : பழகிப் போனால் அவ்வாறு செய்யலாம். ஸமாதிக்குச் செல்வதற்கு முன் இதுபோன்ற ஒரு ஸங்கல்பத்தை ஏற்படுத்திக் கொண்டால், பின் னால் முன் நினைத்த காலத்திற்குப் பின் இறங்கி விடலாம். உதாரணத் திற்கு ஒரு மணி நேரத்திற்குப் பிறகு பூஜைக்கு செல்லப் போகிறேன் என நினைத்துக் கொண்டால் அவன் ஸமாதியில் சரியாக 1 மணி நேரம் இருந்து பிறகு ஸமாதி கலைந்து செல்ல முடியும்.

சி : *நிர்விகல்ப ஸமாதியை அடையும்போது எம்மாதிரி அனுபவமிருக்கு மென்பதை ஆசார்யாள் சற்று விளக்குவார்களா?*

ஆ : மிகவும் தெளிவான வர்ணனையைக் கொடுப்பதென்பது முடியாத காரியம். ஆனால் ஒருவகையில் வர்ணனை கூறுகிறேன். முதலில் ஒருவனது உடலைப் பற்றியும், சுற்றுப்புறங்களைப் பற்றிய அறிவும் மறைந்து கொண்டிருப்பதைக் காணலாம். பிறகு மனதில் உள்ள எண் ணங்கள் மட்டுமே தெரியும். தியானம் செய்யச் செய்ய மனதில் உண் டாகும் எண்ணங்களும் மறைந்துவிடும். 'நான் ஆகாசத்தைப்போல் அளவில்லாது வளர்ந்து கொண்டு போகிறேன்' என்று ஒருவனுக்குத் தோன்றும். அச்சமயத்தில் மிக ஆனந்தமானதொரு அனுபவமிருக்கும். அதன் பிறகு ஒரு திடீர் மாறுதல் - பார்ப்பவன் - பார்க்கப்படுவது -பார்வை இந்த மூன்றிலும் வித்யாசமேயிராது. இம்மாறுதலுக்குப் பிறகு என்ன நடக்குமென்பதை வார்த்தைகளால் வர்ணிக்க இயலாது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சி : நிர்விகல்ப ஸமாதியை எப்படி அடைவது?

ஆ : சாமான்யமாக மீண்டும் மீண்டும் ஸவிகல்ப ஸமாதி அடைந்து வந்தால் ஒருவன் நிர்விகல்ப ஸமாதியை அடையலாம். ஸவிகல்ப ஸமாதியில் ஒரே ஒரு பொருளில்தான் கவனமிருக்கும்.

சி : ஸவிகல்ப ஸமாதியிலும் பார்ப்பவன், பார்க்கப்படுவது, பார்வை என்ற வித்யாசம் போய்விடுமா?

ஆ : இல்லை; இம்மாதிரி வித்யாசம் நிர்விகல்ப ஸமாதியொன்றில்தான் போகும். ஸவிகல்ப ஸமாதியென்பது, சாமான்ய தியானத்தின் உத்தம மான நிலை. அந்த சமயத்தில் ஒரே ஒரு பொருளில்தான் மனம் ஒரு நிலையாக இருக்கும். ஆனால் நிர்விகல்ப ஸமாதியில் ஆத்ம தரிசனம் ஒன்றுதானிருக்கும்.

சி : ஸவிகல்ப ஸமாதியில் கிடைக்கும் இன்பமும் நிர்விகல்ப ஸமாதியில் கிடைக்கும் இன்பம் போலிருக்குமா?

ஆ : இல்லை. நிர்விகல்ப ஸமாதியில் கிடைக்கும் இன்பம் மிக உத்தமமா னது. ஆனால் ஸவிகல்ப ஸமாதியில் கிடைக்கும் இன்பம் மற்ற பொருட்களிலிருந்து கிடைக்கும் இன்பங்களை ஒப்பிட்டுப் பார்த்தால், பேரின்பம் என்றே சொல்லலாம்.

சி : ஒருவன் நிர்விகல்ப ஸமாதியில் இருக்கும்போது கொல்லப்பட்டா னென்றால் நிச்சயமாக அவன் மோக்ஷத்தை அடைவானென்று கூற முடியுமா?

ஆ : அப்படிக் கூற முடியாது. பிராரப்தம் தீர்ந்து, ஞானம் ஸ்திரமானால்தான் மோக்ஷத்தை அடையலாம்.

சி : ஒருவன் நிர்விகல்ப ஸமாதியிலிருக்கும் போது மரணமடைந்தான் என் றால், அடுத்த பிறவியில் ஓரளவு மிகச் சுலபமாக ஞானத்தை அடைய முடியும் என்று கூற முடியுமா?

ஆ : ஆம். கூற முடியும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சி : நிர்விகல்ப ஸமாதியிலிருந்த பிறகும் ஒருவனுக்கு, ஆன்மீக வாழ்விலிருந்தும் கீழே விழ வாய்ப்பு உண்டா?

ஆ : ஆம். ஞானம் ஸ்திரமாகும் வரை கீழே விழ வாய்ப்பு உண்டு. இம்மாதிரி நடந்திருப்பதை நான் கண்டிருக்கிறேன்.

சி : மாத்திரைகள், தனக்குத்தானே ப்ரமை ஏற்படுத்துவது போன்றவற்றால் நிர்விகல்ப ஸமாதியை அடைய முடியுமா?

ஆ : இல்லை.

சி : நிர்விகல்ப ஸமாதியிலிருந்து மனம் இறங்கிய பிறகு பசி, தாகம் தெரிவதற்கு வாய்ப்பிருக்கிறதா?

ஆ : சாமான்யமாகத் தெரியாது. ஆனால் சில விசேஷமான காலங்களில் சற்று உடல் வலியோ, பசியோ தெரியலாம். இப்படித் தெரிவது அபூர்வம்.

சி : ஆசார்யாள் தமது சொந்த அனுபவத்திலிருந்து நிர்விகல்ப ஸமாதி பற்றி ஏதாவது கூறுவார்களா?

ஆ : (சிரித்துக்கொண்டே) இவ்வளவு நேரமும், சாஸ்திரத்தில் கூறப்பட்டவற்றை மட்டும் கிளி போல் ஒப்பித்துக் கொண்டிருந்தேன் என்றா நீ நினைக்கிறாய்?

நாதானுஸந்தானம்

சிஷ்யன் : நாதானுஸந்தானம் என்றால் என்ன?

ஆசார்யாள் : சாமான்யமாகச் சொல்ல வேண்டுமென்றால் அது ஒருவிதமான தியானம் ஆகும்.

சி : அதை எவ்வாறு அனுஷ்டிப்பது?

ஆ : சில முறைகள் உள்ளன. அவைகளில் ஒன்றைக் கூறுகிறேன். காதை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

யும், மூக்கையும், வாயையும் விரல்களால் மூடிக்கொள்ள வேண்டும். அப்போது உள்ளே கேட்கப்படும் சப்தத்தை கவனத்துடன் கேட்க வேண்டும்.

சி : *மூக்கையும், வாயையும் முழுவதும் மூடிக் கொண்டால் எப்படி மூச்சு விடுவது?*

ஆ : ஆம் முடியாது. மூக்கை முழுவதும் மூடிக்கொள்ள வேண்டும் என்று கூறவில்லை. தேவைப்பட்டால் சிறிது நேரம் கழித்துத் திறந்து கொள்ள லாம்.

சி : *உள்ளே உண்டாகும் சப்தத்தில் கவனம் செலுத்தினால், அதனால் ஏதா வது பிரயோஜனம் உண்டா?*

ஆ : ஆம். ஏனென்றால், மனதை ஒருநிலைப்படுத்துவது அவசியம். இதை ஓர் உருவத்தின் மூலமாகவும் செய்யலாம். இல்லாவிட்டால் ஏதாவது ஒரு சப்தத்தில் கவனம் செலுத்தியும் செய்யலாம். காதை மூடிக் கொண் டால் வெளிச் சப்தம் கேட்காது. ஆனால் உள் சப்தம் கேட்கும். ஆத லால், அதன் மீது கவனம் செலுத்தினாலும் மனம் ஒரு நிலைமையடை யும்.

சி : *உள்ளே கேட்கும் சப்தத்தின் மேல் எப்படி கவனம் செலுத்துவது?*

ஆ : எப்படி வெளிச் சப்தங்களின் மேல் கவனம் செலுத்துவோமோ அதே போல்தானே இங்கும். ஏனென்றால், உள்ளே உண்டாகும் சப்தத்தைக் காதை மூடினால் உணரலாமே!

சி : *இம்மாதிரி தியானம் செய்கையில் ஓர் உருவத்தின் மேல் கவனம் செலுத்த வேண்டுமா?*

ஆ : இல்லை. சப்தத்தில் மட்டும் கவனம் செலுத்தினால் போதும்.

சி : *சப்தத்தின் மேலேயே மனதை ஒருநிலைப்படுத்தினால் என்ன ஆகும்?*

ஆ : சிறிது சிறிதாக மனம் அதிகமாக அமைதியடைந்து வரும். வெளிச் சப்தங்களும், இடைஞ்சல்களும், மனதை ஒருநிலைப்படுத்துதலைக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கெடுக்காமலிருக்கும். ஆதலால் உள்ளே கேட்கும் சப்தம் தெளிவாக இருக்கும். காலம் செல்லச் செல்ல வெவ்வேறு விதமான சப்தங்கள் காதுக்கு உள்ளிருந்து கேட்கும். கடைசியில் எல்லாச் சப்தங்களும் போய்விட்டு, மனம் மிகவும் சாந்தமாகி விடும்.

சி : *இம்மாதிரி தியானம் செய்யும்போது ஏதாவது விசேஷமான சக்தி வெளித்தெரிவதை நாம் காணலாமா?*

ஆ : சில சமயங்களில் வெகு தூரத்தில் ஏற்படும் சப்தங்களையும் நாம் கேட்கலாம். தீவிரமான தியானம் உள்ளவனாயிருப்பவன் ஏதாவது தூரத்தில் கேட்கும் சப்தத்தைக் கேட்க விரும்பி, ஸங்கல்பம் செய்து கொண்டானானால் அச்சப்தமும் கேட்கும். ஆனால், தூரத்தில் ஒலிக்கும் சப்தங்களைக் கேட்பது போன்ற ஸித்திகளுக்கு இரையானால் அது தியானத்திற்குத்தான் ஊறு விளைவிக்கும். ஆகவே, இந்த ஸித்திகளின் பக்கம் மனதைச் சிறிதளவும் செல்லவிடக் கூடாது.

சி : *நாதானுஸந்தானம் எனப்படும் இவ்வழி, உருவத்தின் மேல் தியானம் செய்வதைக் காட்டிலும் சிறந்ததா?*

ஆ : நான் அவ்வாறு கூறவில்லையே. இது சிஷ்யனது தகுதியைப் பொருத்து இருக்கிறது. குருவும் சிலருக்கு நாதானுஸந்தானத்தையும் வேறு சிலருக்கு உருவத்தின் மீது தியானம் செய்வதையும் உபதேசம் செய்யலாம். ஆகவே இது சிஷ்யனைப் பொருத்தே இருக்கிறது.

சி : *நாதானுஸந்தானம் பயிற்சி செய்வதில், மற்ற வழிமுறைகளைக் காட்டிலும் சுலபமான விசேஷ அம்சம் ஏதேனும் உண்டா?*

ஆ : (சிரித்துக்கொண்டே) நாதானுஸந்தானம் செய்பவனுக்கு, காதுகளையும் கண்களையும் மூடிக் கொண்டால், வெளிச் சப்தமும் வெளி உருவங்களும் எவ்வாறு தெரியப் போகின்றன? ஆகவே வேண்டுமானால் இதையே ஒரு சிறப்பு அம்சமாக நீ வைத்துக் கொள்ளலாம்.

சி : *இதைச் செய்வதில் கடினமானது ஏதாவது உண்டா?*

ஆ : (சிரித்துக்கொண்டே) கைகளை, காதுகளை மூடிக் கொண்டிருப்பதற்காக நீண்ட நேரம் வைத்திருந்தால் வலிக்குமல்லவா?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சி : *நாதானுஸந்தானம் செய்வதற்கு வேறு ஏதாவது முறையிருக்கிறதா?*

ஆ : பலவிதமான முறைகளுண்டு. நான் சில பௌத்தர்களைக் கவனித்திருக்கிறேன். நீண்டநேரம் ஒலி எழுப்பக்கூடிய மணி ஒன்றைப் பயன்படுத்தி, அவர்கள் தியானம் செய்வதைப் பார்த்திருக்கிறேன். இரண்டு பேர், ஒருவருக்கு முன் ஒருவராக உட்கார்ந்து கொண்டு, ஒருவர் மணி அடிப்பார். அந்த ஓசையில் மற்றொருவர் தியானம் செய்வார். இவரது தியானம் முடிந்தபின் இவரே மணியடிக்க, மற்றொருவர் தியானம் செய்வார். இதுபோல், நாதானுஸந்தானம் செய்வதற்கும் பல வழிமுறைகள் உண்டு. நான் இங்குக் கூறியது அதில் ஒன்று.

லம்பிகா யோகம்

சிஷ்யன் : *வித்யாதீர்த்தர் தனது கடைசி காலத்தை லம்பிகா யோகத்தில் கழித்தார் எனக் கேள்விப்பட்டிருக்கிறேன். லம்பிகா யோகம் என்றால் என்ன என்பதை ஆசார்யாள் தெளிவுபடுத்துவார்களா?*

ஆசார்யாள் : சுருக்கமாகச் சொல்லப் போனால் லம்பிகா யோகத்தின்போது தலையிலுள்ள ஸஹஸ்ராரச் சக்கரத்திலிருந்து அமிர்தம் இறங்கிவரும். அந்த அமிர்தத்தின் ருசி ஏற்பட்டால் பசியும் தாகமும் போய்விடும். மேலும் நல்ல ஆரோக்யமும் இருக்கும்.

சி : *அம்மாதிரி, அமிர்தம் எப்படி இறங்கி வருகிறது?*

ஆ : ஹடயோகப் பிரயோகத்தின்படி நாக்கின் கீழ்ப்பாகத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக வெட்டிக் கொண்டு வரவேண்டும். பிறகு அவ்விடத்தில் மருந்துகள் தடவி, சில நாட்கள் சென்றபின் நாக்கின் அடிப்பாகத்தை இன்னும் சிறிது வெட்ட வேண்டும். அதேசமயம் நாக்கையும் சிறிது சிறிதாக வெளியில் இழுத்துக்கொண்டே வரவேண்டும். இவ்வாறு தொடர்ந்து சில மாதங்களுக்குச் செய்து வந்தால், நாக்கின் நீளம் அதிகமாகிக் கொண்டே வந்து, நாக்கு மிக மெல்லியதாகி விடும். அதை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வெளியில் நீட்டிப் பார்த்தால், புருவங்களுக்கு நடுவில் வரை தொடும். இப்படியிருக்கும் நாக்கை மடித்துத் தொண்டையின் பின்பக்கம் சொருகி மேல்நோக்கித் தள்ள வேண்டும். இதைச் செய்த பிறகு தியானம் செய்தால் அமிர்தம் இறங்கிவரும்.

சி : **இதுபோல் செய்வது உடலுக்கு வலியையும், ஊமைத்தன்மையையும் கொடுத்து விடாதா?**

ஆ : இம்மாதிரிச் செய்வதில் வலியில்லை என்று நிச்சயம் கூற முடியாது. ஆனால் இதைச் செய்வதன் மூலம் ஒருவன் ஊமையாகிவிடுவான் எனச் சொல்வது தவறு. இதைச் செய்த பின்னரும் குரல் தெளிவாகத் தானிருக்கும்.

சி : **இந்த அமிர்தம் ருசிப்பதற்கு எப்படியிருக்கும்? இது தலையிலிருந்து இறங்கி வருகிறது என்பது அனுபவிப்பவருக்குத் தெரியுமா?**

ஆ : அமிர்தம் ருசிகரமானது என்று சொல்லத் தேவையில்லை. அது தொண்டைக்கு இறங்கி வருகிறது என்பதை நிச்சயம் அனுபவிக்கலாமே.

சி : **அந்த அமிர்தம் இறங்கியதால் பசியும் தாகமும் ஒருவனுக்கு முழுவதுமாக நீங்கிவிடுமா?**

ஆ : எல்லாக் காலத்திற்கும் நீங்கிவிடும் என்று சொல்ல முடியாது. சற்றுக் காலத்திற்கு அவை தெரியமாட்டா. பிறகு தெரிய ஆரம்பிக்கும். அமிர்தத்தின் சக்தியுள்ள வரை உடலுக்கு உணவும் நீரும் தேவைப்படாது. நீண்ட காலம் ஒன்றும் உட்கொள்ளாததனால் ஏற்பட்ட பலஹீனமும் தெரியாது. எப்போது அந்த அமிர்தம் மிகவும் குறைவாக இருக்குமோ, அப்போது பசியும் தாகமும் நீண்டகாலம் நீங்கியிருக்காது.

சி : **இம்மாதிரி, பசியும் தாகமும் நீங்குவதற்காக நாக்கின் அடிப்பாகத்தை வெட்டிக் கொண்ட யாராவது ஒருவரை ஆசார்யாள் பார்த்திருக்கிறாரா?**

ஆ : ஆம். நான் ஒருவனைப் பார்த்திருக்கிறேன். அந்த மனிதனுக்கு நல்ல தெளிவான குரலும் இருந்தது. அவன் தன் பயிற்சியையும் காண்பித்தான். அவன் நாக்கை மடித்து மேல் பக்கம் தள்ளும்போது ஒரு விசித்திர

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மான சப்தம் எழுப்பிக் கொண்டிருந்தான். முயற்சியால் அமிர்தத்தைப் பெறுவதில் அவன் வெற்றி பெற்றிருந்தான்.

சி : ***அச்சமயத்தில் வெளிச் சப்தமோ, வெளியில் ஏற்படும் இடைஞ்சல் களோ அவனுக்கு ஏதாவது கஷ்டத்தை உண்டாக்கியிருக்குமா?***

ஆ : ஆம். விசேஷமாக ஏதாவது வெளியில் இடைஞ்சல் ஏற்பட்டிருக்குமா னால், அவனுக்கு மரணம்கூட வந்திருக்கலாம்.

சி : ***இதுபோல நாக்கை வெட்டி அமிர்தம் பெறுவதைக் காட்டிலும் ஏதா வது சுலபமான வழியில்லையா?***

ஆ : நிச்சயமாக இருக்கிறது. இதிலென்ன சந்தேகம்? நான் இப்போது கூறிய வழி ஹடயோக முறைப்படி அமிர்தம் பெறுவதுதான். சிலருக்கு பூர்வ ஜென்மாவில் செய்த தவம் காரணமாகவும், இப்பிறவியில் தியானத் தின்போது அமிர்தம் வரும். எனது ஆசார்யாள், இவ்வாறு அமிர்தம் பொழிவதைப் பற்றி என்னிடம் கூறியிருக்கிறார். அவருக்கு, புத்தகத் தில் கூறப்பட்டதோடு மட்டுமல்லாமல் அனுபவத்திலும் அது இருந்தது.

சி : ***எவ்விதமான தியானத்தின்போது இது போன்று அமிர்தம் வரும்?***

ஆ : சாமான்யமாக இது ஸகுண தியானத்தின் போது தான் நடைபெறுகிறது என்பதை நான் கவனித்திருக்கிறேன்.

சி : ***தலையிலிருந்து அமிர்தம் வரவேண்டுமென்றால், அங்கு ஏதோ ஒரு பாத்திரத்தில் அமிர்தம் இருக்க வேண்டும் என்றல்லவா தோன்றுகிறது. இது சற்றே ஆச்சர்யகரமாக இல்லையா?***

ஆ : ஆச்சர்யகரமோ இல்லையோ, அது பிரச்னை இல்லை. உண்மையான நேரடியான அனுபவமாக இருக்கிறது. ஆகவே அதுபற்றிச் சந்தேக மில்லை. மேலும் அவ்வமிர்தம் ருசிகரமாக இருப்பதோடு பசி தாகத்தி லிருந்தும் ஒருவனுக்கு விடுத்லையளிக்கிறது.

சி : ***இதுபோன்ற லம்பிகா யோகத்தை எல்லோருக்கும் உபதேசம் செய்தால் பசியால் வாடும் எண்ணற்ற மக்கள் பயனடையலாமே?***

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆ : இவ்வாறு உபதேசம் செய்வதால் பயனில்லை. யாராவது ஒருவருக்குத் தான் அமிர்தப்பொழிவு ஏற்படும்.

சி : *இதுபோல் அமிர்தப்பொழிவு ஏற்படும் மக்களிடம், வேறு ஏதாவது விசேஷமான அம்சத்தை ஆசார்யாள் கவனித்திருக்கிறார்களா?*

ஆ : கவனித்திருக்கிறேன். சிலரது தலையின் மேலிருந்து உத்தரணி அளவு நீரும் வரும். இது கண்டிப்பாக அவர்கள் அனைவருக்கும் வரவேண்டும் என்பதில்லை. ஆனால் இவ்வாறு நடைபெறுவதுமுண்டு.

சி : *எப்போதெல்லாம் தலையிலிருந்து நீர் வரும்?*

ஆ : எப்போது வேண்டுமானாலும் வரலாம். சாப்பிடும் போதும் வரலாம்.

சி : *அளவு?*

ஆ : ஏறக்குறைய ஓர் உத்தரணியளவு நீர் வரலாம்.

சி : *அந்த நீர் புனிதமான நீரா அல்லது தண்ணீர் போல் இருக்கும் வேறு ஏதாவது திரவமா?*

ஆ : (சிரித்துக்கொண்டே) சுத்தமான ஜலம்.

சி : *ஜலம் வருவதால் ஏதாவது அசௌகர்யம் ஏற்படுமா?*

ஆ : இதனால் ஒருவித அசௌகர்யமுமில்லை. இது வருகிறது என்பதை உணரும் ஒருவன், துணி கொண்டு துடைத்துவிடலாம். இல்லாவிட்டால் முகமெல்லாம் வழிந்துவிடும்.

சி : *இந்த ஜலம் வருவதற்குக் காரணம் யாது?*

ஆ : அது வருகிறது - அது அனுபவம் - அவ்வளவுதான்.

சி : *இதுபோல அமிர்தம் பெற ஆசார்யாள் முயற்சி செய்வதுண்டா?*

ஆ : நான் இதுபோன்ற ஸித்திகளில் கவனம் செலுத்துவதுமில்லை, அதைப் பெறவேண்டுமென்று நானாகவே முயற்சியொன்றும் எடுத்துக் கொள்வதுமில்லை. அதுவாகவே வரும்போது வருகிறது. ஆகவே நான் அதை உண்டாக்குவதற்கோ வராமல் தடுப்பதற்கோ ஒரு முயற்சியும் மேற்கொள்வதில்லை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சி : நாக்கின் அடிப்பாகத்தை வெட்டாவிட்டாலும் சிலருக்கு அமிர்தம் வரலாம் என்று ஆசார்யாள் குறிப்பிட்டார்கள். அப்படிப்பட்டவர்கள், மேற்கொண்டும் அமிர்தம் பெற முயற்சிகள் ஏதாவது எடுத்துக் கொள்ள முடியுமா?

ஆ : அவர்கள் தியானம் செய்கையில், நாக்கைப் பின்பக்கமாக மடித்து வைத்துக் கொண்டால், சற்றே உபயோகமாக இருக்கும். முற்பிறவியில் செய்யப்பட்ட புண்ணியச் செயல்களின் பலனாகவே அவர்களுக்குத் தற்போது அமிர்தம் கிடைக்கிறது. இவர்கள் மேற்சொன்னபடி முயற்சி செய்வது நன்மை பயக்கும்.

சி : அத்யாத்ம வாழ்க்கையில் செல்பவர்கள், பசியையும் தாகத்தையும் லம்பிகா யோகம் மூலம் அடக்க முயற்சி செய்ய வேண்டுமா? ஏனென்றால், பின்னர் தியானத்திலேயே அமர்ந்து அவர்கள் உணவைப் பற்றிய கவலையே இல்லாமல் இருக்கலாமே!

ஆ : இல்லை. இம்மாதிரி செய்யத் தேவையேயில்லை. ஆத்மஞானம் பெற்று மோக்ஷம் அடைவதே முமுக்ஷுக்களின் லக்ஷ்யம். ஸித்திகளின் பக்கம் கவனம் செலுத்தினால், அதனால் ஒருவித பயனுமில்லை. வித்யாதீர்த்தர் போன்ற மஹான்களுக்கு இது இயற்கையாகவே வந்தது. அதனால்தான் அவர்கள் இதற்கு இடங்கொடுத்தார்கள். ஆனால் ஒரு ஸாதகன் இதிலேயே காலங்கழிப்பானேயானால், அத்தனையும் வீணாகிவிடும். இது தேவையே இல்லை. ஆகவே நமது இலட்சியத்திலிருந்து மனம் திரும்பி விடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

குண்டலினி

(முன்னுரை : குண்டலினி என்றால் மேருதண்டம் எனப்படும் நமது முதுகு எலும்பின் கீழ்ப்பாகத்தில், பாம்பு வடிவாக இருக்கும் சக்திக்குப் பெயர். முதுகெலும்பில் குறிப்பிட்ட சிலவிடங்களில் சக்தி ஸ்தானங்கள் இருக்கின்றன எனக் கூறுவார்கள். இவைகளைத் தாமரை வடிவாகக் கூறுவதுண்டு. இவைகளிருக்கும் இடத்திற்கு குண்டலினி வந்தால் சக்தி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விசேஷமாக இருக்கிறது எனச் சொல்வார்கள். குண்டலினி மேருதண்டத்தின் கீழ்ப்பாகத்தில் இருப்பது சாமான்யம். சுஷும்ன நாடி என்று ஒரு நாடி இருக்கிறது. அது மூலமாகத் தலைவரைக்கும் குண்டலினி வந்தால், ஒருவன் ஸமாதி அடைந்துவிடுகிறான் என்பது ஸித்தாந்தம்.)

சிஷ்யன் : *குண்டலினியும் யோகச் சக்கரங்களும் உண்மையில் இருக்கின்றனவா?*

ஆசார்யாள் : குண்டலினியும் யோகச் சக்கரங்களும் சக்தியின் ஸ்தானங்கள். இவைகளில் தியானம் செய்தால் சக்தி விசேஷமாக வெளியில் தெரியும். ஆனால் ஸ்தூலமாக முதுகில் ஒருவிதமான தாமரையும் கிடையாது.

சி : *அப்படியானால் நாம் சொல்லும் சக்கரங்களின் வடிவங்கள் எதற்காக இருக்கின்றன?*

ஆ : நான் முன்பு சொன்னதுபோல், பொருத்தமாக சிந்தனை செய்தால் சக்தி வெளிப்படும். சாமான்யமாக ஒருவன் நீண்ட காலத்திற்கு மூச்சு விடாமலிருந்தால் செத்துப் போய் விடுவான். ஆனால் ப்ராணாயாமத்தை நன்கு தெரிந்து கொண்டால், நீண்ட காலத்திற்கு சுவாசம் விடாமலிருக்கலாம். இதுபோல் யோகச் சக்கரங்களின் மேல் தியானம் செய்து சக்திகளைப் பெற்றவர்களை நான் பார்த்திருக்கிறேன். சிலரால் கண்களினாலேயே மிகுந்த பாரத்தைத் தூக்க முடியும். இவ்வாறு நான் கேள்விப்பட்டிருக்கிறேன். இம்மாதிரி சக்திகளெல்லாம் உண்டாகலாம். உண்டாகவும் செய்கின்றன.

சி : *குண்டலினியை எழுப்பி சுஷும்ன நாடியில் போகச் செய்தால், நன்மை அடையலாம் என்று சொல்வார்கள். இந்தக் குண்டலினியை எவ்வாறு எழச் செய்வது?*

ஆ : பொருத்தமான தியானம் மூலமாகவும், ப்ராணாயாமம் மூலமாகவும் எழச் செய்யலாம்.

சி : *ப்ராணாயாமத்தை எவ்வாறு அனுஷ்டிப்பது?*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆ : பலவிதமாக ப்ராணாயாமங்கள் இருக்கின்றன. ஆதலால், குருவின் உபதேசம் பெற்றுப் பிறகு செய்வது நலம்.

சி : *சாமான்ய அனுஷ்டானத்தின் போது செய்யப்படும் சுலபமான ப்ராணா யாம முறை பற்றி ஆசார்யாள் தெளிவுபடுத்துவார்களா?*

ஆ : ப்ராணாயாமம் செய்யும்போது ஸ்திரமான ஆஸனத்தில் அமர்ந்து முதுகை நேராக வைத்துக்கொள்ள வேண்டும். வலது கையில் ஆள் காட்டி விரலையும் நடுவிரலையும் மடித்து, மோதிர விரலையும் சுண்டு விரலையும் மூக்கின் இடது துவாரத்தை மூடுவதற்கும், கட்டை விரலை மூக்கின் வலது துவாரத்தை மூடுவதற்கும் உபயோகப்படுத்த வேண்டும். ஒரு துவாரம் மூலமாகக் காற்றை இழுத்து உள்ளடக்கி, மற்றொரு துவாரத்தால் வெளிவிடுவது ஒரு ப்ராணாயாமமாகும்.

தொடர்ந்து இரண்டாவது முறை செய்தால், முதலில் காற்றை விட்ட துவாரம் மூலமாகக் காற்றை இழுக்க வேண்டும். ஆகவே சாமான்ய ப்ராணாயாமத்திற்கு மூன்று அங்கங்கள் இருக்கின்றன. அவை பூரகம், கும்பகம், ரேசகம் என்பவையாகும். காற்றை உள் இழுப்பது பூரகம், அடக்கி வைப்பது கும்பகம், வெளிவிடுவது ரேசகம். இவை சாஸ்திரங் களில் வெவ்வேறு விகிதங்களில் செய்யப்படுவதற்கும் விதிகள் இருக் கின்றன. 1:2:2 என்ற விகிதத்தில் செய்தால் கடினமாக இருக்காது. ப்ராணாயாமத்தின் விசேஷமான பலனடைவதற்குக் கும்பகம் செய்யும் போது ஜாலாந்தர ஓட்யானன மூலபந்தங்களைச் செய்ய வேண்டும். இவைகளை யோகாசனம் தெரிந்தவர்களிடம் கற்றறியலாம். பந்தங்க ளைக் குருவிடம் கற்றுக் கொள்ளாமல் செய்வது உடலுக்கு நல்லதல்ல.

சி : *காற்றை உள்ளே வைத்திருக்கும்போது வயிறு பெரிதாகும் வரையில் வைத்துக்கொள்ள வேண்டுமா?*

ஆ : கூடாது. ப்ராணாயாமம் செய்யும்போது இம்மாதிரி வயிறு பெரிதாகு மாறு வைத்துக்கொள்ளக் கூடாது. ப்ராணாயாமத்தை மிகவும் கவனத்து டன் செய்ய வேண்டும். இல்லாவிட்டால் கெட்ட பலன்தான் கிடைக்கும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சி : ஸமாதியடைந்தவன் குண்டலினி, மேல் போய்விட்டது என்று தெரிந்து கொள்வானா?

ஆ : தெரிந்துகொள்ள வேண்டும் என்று ஒருவிதமான நியமமுமில்லை. ஸமாதி அடையும்போது குண்டலினி மேல் செல்கிறது என்கிற கவன மில்லாமலும் இருக்கலாம். ஆனால் வேதாந்த மார்க்கத்தின் மூலம் ஸமாதியடைந்தவர்களுக்கு இம்மாதிரியாகலாம். ஆனால் குண்டலினி ஏறுகிறது என்பதைக் கவனிக்க வேண்டுமென்று நினைத்தால் ஒரு வன் கவனிக்கலாம். நான் இங்கு, அதை ஸஹஸ்ராரத்திற்கு அனுப்ப ப்ராணாயாமம் என்ற ஒரு வழியைக் கூறினேன். இதைப்பற்றி பல புத்தகங்கள் இருக்கின்றன. நான் எல்லாவற்றையும் இங்கு கூற வில்லை.

அமனஸ்க யோகம்

சிஷ்யன் : ஒன்றுமே செய்யாமல் 'சிவனே' என்றிருந்தாலும் சந்தோஷமாக இருப்பதை நாம் உணர்கிறோம். ஆகவே கண்களைத் திறந்திருந்தும், மனவமைதி வேண்டுமென்றால் 'சிவனே' என்று சிறிது நேரம் உட் கார்ந்து கொள்ளலாமா?

ஆசார்யாள் : சோம்பேறித்தனம் இல்லையென்றால், நிச்சயமாகச் செய்ய லாமே. யாக்ஞவல்கியரைப் போன்ற மஹான்களும் இதுபோல் செய்ய லாம் என்று சொல்லியிருக்கிறார்கள். கண்களைத் திறந்து கொண்டு உட்கார்ந்தாலும் மனம் சாந்தமாக இருப்பதற்கு 'அமனஸ்க யோகம்' என்று சாஸ்திரங்களில் கூறியிருக்கிறார்கள்.

சி : அமனஸ்க யோகம் என்றால் என்ன?

ஆ : அது மனதில் எண்ணங்கள் வராத ஒரு நிலைமை. சாதாரணமாக நாம் பலவிதமான பொருட்களைப் பற்றிச் சிந்தனை செய்து கொண்டே இருக்கிறோம். கவனித்துப் பார்த்தால், மனதில் எண்ணங்கள் தொடர்ந்து வந்து கொண்டிருப்பதைப் போல் தோன்றும். ஆனால்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உண்மையில், ஓர் எண்ணத்திற்கும் மற்றோர் எண்ணத்திற்கும் இடைவெளி இருக்கும். இம்மாதிரிக் காலங்களில் சைதன்ய வடிவாகியிருக்கும் ஆத்மா தெளிவாகத் தெரியும். இம்மாதிரிக் காலங்கள் மிகவும் சிறிதாக இருப்பதால் ஜனங்கள் ஆத்மாவின் ஸ்வரூபம் தெரிவதைக் கவனிப்பதில்லை. லகுவாக்ய வ்ருத்தியில் சங்கரர் இதற்கு ஓர் உவமானத்தையும் குறிப்பிட்டிருக்கிறார்.

முத்ராபிராவ்ருதம் ஸூத்ரம் முக்தயோர்மத்ய ஈக்ஷ்யதே |
ததா வ்ருத்திவிகல்பைச்சித் ஸ்பஷ்டாமத்யே விகல்பயோ: ||

முத்தால் செய்யப்பட்ட ஒரு மாலையில், முத்து இருக்கும் இடங்களில் கோர்க்கப்பட்டிருக்கும் நூல் தெரிவதில்லை. ஆனால் இரு முத்துகளுக்கு நடுவில் அந்த நூல் தெரிகிறது. அதேபோல் ஓர் எண்ணமிருக்கும்போது ஆத்மாவின் உருவம் தெரிவதில்லை. ஓர் எண்ணம் போய் மற்றொரு எண்ணம் வருவதற்குள் இருக்கும் நேரத்தில் அது தெரிகிறது. அவ்விரு எண்ணங்களுக்கிடையே உள்ள இடைவெளியை, அமைதியுடனிருந்து அதிகப்படுத்திக் கொண்டால் நாம் இன்பம் பெறலாம்.

சி : *இதைக் கண்களைத் திறந்து வைத்துக் கொண்டும் செய்யலாமா?*

ஆ : நான் முன்பே கூறியபடி நம் லக்ஷ்யம், மனதில் எண்ணம் வராமல் வைத்துக்கொள்வது. ஆதலால் தியானம் செய்யும் சமயத்தைத் தவிர மற்ற சமயங்களில் கண்களைத் திறப்பதால் தவறில்லை. மற்றபடி மனம் வெளிப் பொருட்கள் பக்கம் போகாமலிருந்தால் சரி. இதைச் செய்யும்போது சாந்தமாக, கவலையில்லாமல் இருக்க வேண்டும். எதையும் செய்ய வேண்டும், நினைக்க வேண்டும் என்று முயற்சி செய்யக் கூடாது. மனதில் ஏதாவது எண்ணம் தோன்றினால் அதன் பக்கமே போகாமல், அதையே நாசமாக்கிவிட வேண்டும்.

சி : *அமனஸ்க யோகத்தில் ஒருவன் முன்னுக்கு வந்து கொண்டிருக்கிறானென்று காட்ட ஏதேனும் வழியுள்ளதா?*

ஆ : ஒருவன் பெறும் மனவமைதியும் இன்பமும்தான் அவன் இவ்வழியில் நன்கு முன்னேறுகிறானென்று காட்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சி : **மனதில் எண்ணமே வராமல் செய்துகொள்வது மிகவும் கடினமல்லவா?**

ஆ : ஆம், மனதில் எண்ணமில்லாமலிருக்கும் உத்தமமான நிலைமை வருவது சற்றுக் கடினம்தான். ஆனால், மிகுந்த அளவிற்கு மனதை அமைதியாக வைத்துக்கொள்ளலாம்.

சி : **லெளகீக ஜனங்களுக்கும் மனதை அடக்கி வைக்கும் சக்தியிருக்கிறதா?**

ஆ : எல்லோரும் தூங்குவதில்லையா?

சி : **ஆம்.**

ஆ : எப்படி?

சி : **அவர்கள் படுத்துக்கொண்டு தூங்குவதற்குச் சற்று முயற்சி செய்கிறார்கள்.**

ஆ : எப்படி?

சி : **ஆசார்யாள் எதை மனதில் வைத்து இக்கேள்வியைக் கேட்டார் என்பது எனக்குப் புரியவில்லையே!**

ஆ : மக்கள் படுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதன்பின் எப்படித் தூங்குகிறார்கள்? கண்களை மூடிச் சிந்தனை செய்யாமலிருக்கிறார்கள். சற்று நேரத்தில் தூக்கம் வந்து விடுகிறது இல்லையா?

சி : **ஆமாம்.**

ஆ : தூக்கத்தின்போதுதான் நாம் பார்க்கிறோம். அனைத்து லெளகீக ஜனங்களும்கூட 'சிவனே' என்று நிம்மதியுடன் தூங்குகிறார்கள். ஆக, அவர்களும் மனதை அடக்கி வைத்துத்தானே இருக்கிறார்கள். இது நம் அறியாமையில் அல்லவா நடைபெறுகிறது?

சி : **ஆம், அப்படித்தான்.**

ஆ : ஆதலால் எல்லோரும் மனதை அடக்குகிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். ஆனால் லெளகீக ஜனங்கள் முயற்சி செய்யாமல் தமக்குத் தெரியாமலேயே அடக்குகிறார்கள். அமனஸ்க யோகத்தில் விழிப்பு நிலையில் நாம் இதை முயற்சியுடன் செய்ய வேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சி : *அமனஸ்க யோகத்தை எங்கு வேண்டுமானாலும் செய்யலாமா?*

ஆ : எங்கு வேண்டுமானாலும் செய்யலாம். ஆனால் அங்கு நன்கு அமர வசதிகள் இருக்க வேண்டும். ஓட்டப்பந்தயத்தில் ஓடிக்கொண்டிருக்கும்போது ஒருவன் இதை எப்படிச் செய்வது?

சி : *அமனஸ்க யோகம் செய்து வருகையில் ஏதாவது கெடுதல் ஏற்படுமா?*

ஆ : கெடுதலொன்றும் ஏற்படாது.

சி : *அமனஸ்க யோகம் செய்கையில் எவ்விஷயத்தில் சற்றுக் கவனத்துடன் இருக்க வேண்டும்?*

ஆ : (சிரித்துக்கொண்டே) தூங்காமலிருக்க வேண்டும். அதைத்தான் கவனத்துடன் பார்த்துக்கொள்ள வேண்டும்.

சி : *இதை எப்படிச் செய்வது?*

ஆ : சற்றுக் கவனத்துடன் இருந்தால், இம்மாதிரி ஒருவன் தூங்க மாட்டான். அமனஸ்க யோகத்தை ஒரு கவலையும் இல்லாமல் 'சிவனே' என்று உட்கார்ந்திருக்கும்போது, மனதிலுள்ள எண்ணங்களை சிறிது சிறிதாக விட்டு விட்டால் கவனம் உள்பக்கமே இருக்கும். கண் திறந்திருந்தாலும் வெளிப் பக்கம் கவனம் செல்லாது. இதனால் நாம் சந்தோஷமாக இருக்கலாம். ஆன்மீக வாழ்வில் நாம் மேல் நிலையும் அடையலாம்.

மாயை

சிஷ்யன் : *ஒருவிதமான ஒளியுமில்லாத சமயத்தில் கயிறானது பாம்பாகத் தோன்றலாம். அதேபோல்தான் பரம்பொருளும் அறியாமையினால் உலகமாகத் தோன்றுகிறது என்று புத்தகங்களில் படித்திருக்கிறேன். ஒரு கயிற்றைப் பாம்பாகக் கருத வேண்டுமென்றால் கயிற்றிலிருந்தும், பாம்பிலிருந்தும் வேறுபட்டுப் பார்ப்பவன் ஒருவன் தேவை. மேலும் ப்ரஹ்மம் உலகமாகத் தோன்றுகிறது என்றால், அங்கும் வேறு ஒரு பார்ப்பவன் தேவை. அப்படிப்பட்டவன் இல்லை. ஆதலால் அந்த உபமானம் சரியாகுமா?*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆசார்யாள் : உபமானம் மூலத்திற்கு என்றும் சமமாக முடியாது. உபமானம் மூலத்திற்குச் சமமாகி விட்டதென்றால் அதுவே மூலமாகிவிடும். பாம்பு - கயிறு என்ற உதாரணம் 'ஒரு பொருள் மற்றொரு பொருளாகத் தோன்றலாம்' எனக் காட்டுவதற்காகத்தான் இருக்கிறது. அதன் கருத்தை இதைக்காட்டிலும் வீணாக எடுத்துக்கொள்ளக் கூடாது.

சி : ஒரு கயிற்றைப் பார்த்து 'அது பாம்பு' என்ற தவறான எண்ணம் ஒருவனுக்குத் தோன்ற வேண்டுமென்றால், அவன் அந்த கயிற்றைப் பார்ப்பதற்கு முன்பே ஒரு பாம்பைப் பார்த்திருக்க வேண்டும். பாம்பை முன்னர் பார்த்திருக்காவிடில், இப்போது கயிற்றைப் பார்த்த வுடன் 'இது பாம்பு' என்ற தோற்றம் அவனுக்கு இருந்திருக்காது. அதேபோல் பரம்பொருளை உலகமாக எண்ணிக் கொள்ள வேண்டு மென்றால், ஓர் உண்மையான உலகமும் இருக்க வேண்டும். இப்படிக் கூறுவது தவறா?

ஆ : ஆம். தவறுதான். ஒரு கயிற்றைப் பாம்பாகக் கருதுவதற்குப் பாம்பைப் பற்றிய அறிவு தேவை. பாம்பைப் பற்றிய அறிவு ஏற்பட உண்மையான பாம்பு ஒன்று இருந்திருக்க வேண்டும் என்று கூறுவது சரியில்லை. உதாரணம் ஒன்று கூறுகிறேன். ஒரு மனிதன் ஒரு மரத்தை 'அது ஒரு பூதம்' எனத் தவறாகக் கருதலாம். அந்தப் பூதத்தை அவன் எப்போதோ ஒரு சமயம் தன் கனவில் பார்த்திருக்கலாம். கனவில் பார்த்த உரு வத்தை இப்போது மரத்தைப் பார்க்கும்போது கற்பனை செய்து கொள்கி றான். உண்மையில் அந்தப் பூதம் இருந்ததா? இல்லையே. ஏனெனில், அது கனவின்போது பார்க்கப்படுவது. கனவில் பார்க்கப்படுவது உண் மையாகாது என்பது எல்லோருக்கும் தெரியும். ஆகவே பாம்பைப் பற் றிய அறிவுதான் தேவையாயிருந்ததே தவிர உண்மையில் ஒரு பாம்பு தேவையில்லை. ஆகவே, இங்கும் பரம்பொருள் உலகமாகத் தோன்று வதற்கு ஒரு தவறான எண்ணமாகிய மாயைதான் காரணமாயிருக்க வேண்டுமே தவிர உண்மையான உலகம் ஒன்று தேவையில்லை.

சி : *மாயை என்பது உண்மையானதா? அப்படி மாயை என்பது ஸத்தாகவே (உண்மையாகவே) இருந்தால், ப்ரஹ்மம் அல்லது பரம்பொருள் அத்வி தீயமானது (இரண்டாவது இல்லாதது) என்று கூறுவது தவறாகும்.*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மாயை என்பது இல்லையென்று கூறினால், நாம் மாயையின் காரியங்களைப் பார்க்கிறோம். ஆகவே மாயையை அஸத் என்றும் கூற முடியாது. இது எப்படி என்று ஆசார்யாள் கூறுவார்களா?

ஆ : மாயையை 'ஸத்' என்று கூற முடியாது. ஏனென்றால், உண்மையான ஞானம் ஏற்பட்ட கணமே அது நாசமாகி விடுகிறது. எப்படி நமக்கு விழிப்பு வந்தால் கனவு மறைந்து விடுகிறதோ, அதேபோல் ப்ரஹ்ம ஞானம் மாயையை நாசம் செய்து விடுகிறது. ஆகவே இது 'ஸத்' ஆக முடியாது. இதனால் ப்ரஹ்மத்தைத் தவிர இரண்டாவதாக மாயை என்ற ஒன்று இருக்கிறதெனக் கூற முடியாது. அதேசமயம் மாயையை 'அஸத்' என்று கூற முடியாது. ஏனென்றால், அது 'அஸத்' என்று சொன்னால் உலக வடிவில் நாம் அதன் காரியங்களைப் பார்க்க முடியாது. இதனால்தான் யுக்தியை ஆதாரமாக வைத்துக்கொண்டு மாயை ஸத்துமில்லை, அஸத்துமில்லை என்று கூறப்பட்டிருக்கிறது.

சி : *ப்ரஹ்மத்தைத் தவிர மீதியெல்லாம் அஸத்யம் என்று கூறினால், வேதமும் பொய்யாகி விடாதா? வேதமே பொய்யாகி விட்டால் அதை ஆதாரமாக வைத்துள்ள அத்வைத மதமும் பொய்யாகி விடாதா?*

ஆ : அத்வைதிகள் பரம்பொருளின் த்ருஷ்டியிலிருந்து, உலகம் என்பது உண்மையில் இல்லை என்று கூறுகிறார்கள். ஆனால் லௌகீக வ்யவஹார நிலையில் உலகம் இல்லை என்று கூறுவதில்லை. உடல் உண்மையானது என்று கூறினால், அதே அளவிற்குத்தான் இவ்வுலகமும் உண்மையானது எனக் கூற வேண்டும். லௌகீக வ்யவஹார தசையில் வேதமும் உலகமும் பொய் எனக் கூறுவது தவறு. மேலும் வேதம் உண்மையாக இல்லை என்றுகூட சொன்னாலும் இவ்விடத்தில் தவறு ஏற்படாது. ஏனெனில், உண்மையாக இல்லாத ஒன்றே நமக்கு ஓர் உண்மையான பலனைத் தரலாம். உதாரணத்திற்கு நமது கனவில் ஒரு புலி நம்மைத் துரத்துவதாகக் காணலாம். அந்தப் புலி துரத்துகிறது என்பதனால் ஏற்பட்ட பயத்தினாலேயே நமக்கு விழிப்பு ஏற்பட்டு விடலாம். இங்கு பொய்யான புலி நமக்கு உண்மையானதொரு பலனை ஏற்படுத்தி விழிப்பைத் தந்தது. அதேபோல், மேலோட்டமாகப் பார்த்தால் வேதமும், உலகத்தைப் போல் பொய் என்று வைத்துக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கொண்டாலும் வேதத்தினால் ச்ரேயஸ் உண்டு என்கிற விஷயத்தில் எள்ளளவும் அவநம்பிக்கை வேண்டாம்.

சி : *உலகை நாம் கண்டு அதனை விமர்சை செய்கிறோம். 'உலகமே அஸத்யம்' என்றால் விஞ்ஞானிகள் செய்யும் ஆராய்ச்சி அனைத்துமே தவறு என்று கூறுவது சரியா?*

ஆ : உலகை நாம் கண்டு அதன் நியமங்களை விமர்சிப்பது தவறு என்று நாம் கூறவில்லை. ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். உலகத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்து 'இது இவ்வாறுதானிருக்கிறது' என்று கூற முடியாது. ஒரு வௌவால் ஒலியலைகள் மூலமாக அது பொருட்கள் இருப்பதை அறிந்து கொள்கிறது. அது காணும் உலகம் நாம் காணும் உலகத்தைக் காட்டிலும் வேறுபட்டது. அது கண்களால் உலகைப் பார்ப்பதில்லை. அதேபோல் 'X ரே' கதிர்களை நாம் பார்க்க முடியுமானால், அப்போது நாம் உலகைக் காண்பதே வேறுவிதமாக இருக்கும். இதில் எப்பார்வை சரியென்று கேட்டால், இரண்டும் சரிதான். இரண்டு விதமாகத் தெரியும் உலகமும் சரிதான். அதனால் 'உலகம் இப்படித்தான்' எனக் கூறுவது சரிவராது. ஒரு பொருளை நாம் பார்க்க வேண்டுமென்றால், நாம் எவ்விதத்தில் பார்ப்போமோ அது பார்க்கப்படுவனவற்றில் மாறுதல்களை ஏற்படுத்தக் கூடாது. ஆனால் இதுபோன்ற மாறுதல்கள் ஏற்படாத உலகை நாம் காண முடியாது. ஆகவே நாம் பார்ப்பது உண்மையான உலகம் என்று சொல்ல முடியாது. அது 'நம் மனதிற்குத் தோன்றும் உலகம்' என்றுதான் சொல்ல முடியும். ஒரு கறுப்புக் கண்ணாடி அணிந்து நாம் உலகைப் பார்த்தால், எல்லாமே கறுப்பாகத்தானே தெரியும்? இதை மனதில் கொண்டு பொருட்கள் எல்லாமே கறுப்பு என்று சொல்ல முடியாது. அதேபோல்தான் இங்கும். மனம் எவ்வாறு நமக்கு உலகைக் காட்டுகிறதோ, அதேபோல்தான் உலகை நாம் பார்க்கலாம். ஆகவே 'நான் காணும் உலகிற்கு இதெல்லாம் நியமம்' எனக் கூறலாமே தவிர 'இதுதான் உலகம், இவ்வாறு தானுள்ளது, இவையே நியமங்கள்' என்றெல்லாம் கூற முடியாது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சி : **மாயைதான் அனைத்து பந்தங்களுக்கும் காரணமாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. மாயை ஏன் இருக்கிறது?**

ஆ : ஞானியைப் பொறுத்தவரையில் மாயை என்பதே இல்லை. பரம்பொருள் ஒன்றுதான் உண்டு. ஆகவே அவனைப் பொருத்தவரையில் இக்கேள்விக்கு இடமேயில்லை. மேலும் கேள்விகளும் பதில்களும் மாயையின் உலகத்தில் தானிருக்க முடியும். யுக்தி மூலமாக நீ கேட்ட கேள்விக்கு பதில் சொல்ல முடியுமென்றால், ஒருவன் மாயையின் தன்மையைப் புரிந்து கொண்டிருக்க வேண்டும். எப்போது மாயையின் உண்மையான தன்மையை ஒருவன் புரிந்து கொள்கிறானோ, அப்போதிலிருந்தே ஞானோதயம் ஏற்பட்டு விடுவதால் பரம்பொருளான ப்ரஹ்மம் ஒன்றுதான் காணப்படும். ஆதலால் இக்கேள்விக்குச் சரியான பதிலை எதிர்பார்ப்பது நியாயமில்லை. ஏனென்றால் கேள்வியே சரியில்லை. மாயையே ஒரு பெரிய கேள்விக்குறியைப் போலிருக்கிறது. பரம்பொருள் இரண்டற்றது. ஆனால் மாயை இந்தத் தோற்றமான த்வைதத்தை உண்டாக்குகிறது. இதுதான் மாயையின் சாமர்த்தியம். ஒளி அதிகமில்லாத சமயங்களில் ஒரு கயிறு பாம்பாகத் தோன்றலாம். இதைக் கண்டு ஒருவன் 'கயிறு ஏன் பாம்பாகத் தோன்ற வேண்டும்? அவைகள் வெவ்வேறு பொருட்களல்லவா?' என்று கேட்கலாம். பதில் ஒழுங்காகக் கூற முடியுமா? இல்லை. ஏனென்றால், இதற்குக் காரணம் அறியாமை. 'அறியாமை ஏன் வந்தது?' என்ற கேள்விக்குப் பதில் கூற முடியாததால், நாம் முதல் கேள்விக்கும் சரியான பதிலைக் கூற இயலாது. அதேபோல்தான் இங்கும். எவனுக்குத் தவறான எண்ணமில்லையோ அவனுக்கு அது கயிறாகத்தான் தோன்றும். ஆகவே 'அது ஏன் பாம்பாகத் தோன்றுகிறது?' என்ற கேள்விக்கு இடமேயில்லை. எவனுக்கு தவறான எண்ணமிருக்கிறதோ, அதனால் அவனுக்கு அங்கு பாம்பாகத் தோன்றுகிறதோ, அவனிடம் 'அது ஏன் பாம்பாகத் தோன்றுகிறது?' என்று கேட்க முடியாது. ஏனென்றால், அவனைப் பொருத்தமட்டில் அது பாம்பாகத் தோன்றவில்லை. அது பாம்பேதான். மற்றொருவனின் நிலையைக் கவனிப்போம். அவன் முதலில் கயிற்றைப் பாம்பாக

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நினைத்தான். பிறகுதான் கயிறென்று தெரிந்து கொண்டான். அவனிடம் சென்று 'கயிறு ஏன் பாம்பாகத் தோன்றிற்று?' எனக் கேட்டால், 'அது என் தவறான எண்ணம்' என பதிலளிப்பான். அத்தவறான எண்ணம் ஏன் ஏற்பட்டதென்று கேட்டால், அவனாலேயும் பதில் கூற முடியாது. ஏனென்றால், இப்போது அவன் கயிற்றை மட்டுமே அங்கு காண்கிறான். ஒரு வட்டத்தின் ஆரம்பம் எங்கிருக்கிறது என்று கேட்டால், அதற்கு என்ன பதில் கூற முடியும்? கேள்வி கேட்பவன் 'வட்டத்திற்கு ஓர் ஆரம்பம் உள்ளது' என எண்ணித்தான் கேள்வி கேட்கிறான். ஆதலால் கேள்விதான் பொருத்தமில்லையே தவிர பதில் ஒழுங்காக இல்லை என்று கூற முடியாது. தவிரவும் மாயையைப் பற்றிச் சாஸ்திரங்கள் பொருத்தமான பதிலைக் கூறுவதில்லை என்றும் அர்த்தமில்லை. ஆகவே 'மாயை ஏன் உள்ளது?' என்ற கேள்விதான் சரியில்லை.

சி : ***உலகம் மாயையினால்தான் தோன்றுகிறது என்பதற்கு ஆசார்யாள் விளக்கம் கூறியருள்வார்களா?***

ஆ : நாம் ஆலமரத்தின் விதையைப் பார்க்கிறோம். அதை உடைத்துப் பார்த்தால், உள்ளே ஒன்றும் பெரிதாக இருக்காது. ஆனால் அதிலிருந்து பெரிய ஆலமரம் வளருகிறது. மேலோட்டமாகப் பார்த்தால், இது இந்திரஜாலம் போலல்லவா தோன்றுகிறது? அதுபோல மனிதனின் வீர்யத்திலிருந்து இன்னொரு மனிதன் உண்டாகி கை கால்கள் பெரிதாக வளர்ந்து, காரியங்களைச் செய்கிறான். இதைப் பார்த்தாலும் இந்திரஜாலம் போலல்லவா தெரிகிறது? இதிலிருந்து உலகம் ஒரு தோற்றம் போலத் தெரிகிறது என்றே கூற வேண்டும். மேலும், நாம் கனவில் எவ்வாறு ஓர் உலகத்தைப் பார்க்கிறோமோ அதேபோல்தான் இங்கும் காண்கிறோம். இதுவும் கனவைப்போலவேதான் இருக்கிறது என்று கூறுவோம். கனவைக் காட்டிலும் வேறு என்று சொல்வது சரியல்ல. மேலும், நாம் ஆராய்ச்சி செய்து பார்த்தாலும் எக்கேள்விக்கும் 'இது இப்படித்தான்' என்று நம்மால் கூற முடியாது. ஓரளவிற்குமேல் விசாரம் செய்ய முடியாமல் போய்விட்டு 'எனக்குத் தெரியாது' என்று கூறுதலே அவசியமாகும். இது எப்போது ஆகும்? இந்திரஜால வித்தைக்காரன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஒரு பொருளை நமக்கு முன் காட்டினானேயானால் 'அது எப்படி?' என்றால் ஓரளவிற்குமேல் விசாரம் செய்ய முடியாது. 'ஏன்' என்ற கேள்விக்கும் பதில் கிட்டாது. கனவில் ஒரு சிறிய அறையில் ஒரு பெரிய யானையைப் பார்ப்பதாக வைத்துக்கொள்வோம். அந்த அறையின் கதவுகளோ சிறியவை. இந்த யானை எப்படி வந்தது என்று ஸ்வப்னத்தில் விசாரம் செய்யத் தொடங்கினால் என்ன பதில் வரும்? 'இது வந்திருக்க முடியாது' என்றுதான் தோன்றும். ஆனால் நாம் பார்த்தோம், இந்த யானை எப்படி வந்தது என்பது எனக்குத் தெரியாது என்றே கூறுவோம். கனவை விட்டு விழித்த பிறகு 'யானை அங்கு வரவேயில்லை' என்று கூறுவோம். ஆகவே இங்கும் இப்படியேதான். ஓர் அளவிற்கு மேல் ஆராய்ந்து பார்த்தால் 'ஏன் இப்படி வந்தது?' என்பதற்கு இதுவும் மாயையோ அல்லது இந்திரஜாலத்தைப் போலோதான் இருக்கிறது என்றே கூற முடியும். யுக்திகளைக் காட்டிலும் சிறந்த சாஸ்திரமும் 'உலகம் மாயை' என்றுதான் கூறுகிறது.

மாயாம் து ப்ரக்ருதிம் வித்யாத்

(ப்ரக்ருதியை மாயை என்று தெரிந்துகொள்)

என்று கூறுவதிலிருந்து ஞானிகளின் அனுபவமும் 'உலகம் மாயை' என்பதுதானே தவிர 'ப்ரஹ்மத்தைத் தவிர உலகம் இருக்கிறது' என்பதில்லை. ஆகவே உலகம் மாயையினால்தான் தோன்றுகிறது. உண்மையில் இல்லை என்பது தீர்மானம்.

சி : ***உலகம் வெறும் தோற்றம் என்றிருக்கும்போது சாஸ்திரங்களில் ஸ்ருஷ்டியைப் பற்றி எதற்காகக் கூறப்பட்டிருக்கிறது?***

ஆ : ஒரு குழந்தை ஸூர்யனைப் பற்றிக் கேட்டால் நாமென்ன கூறுகிறோம்? ஸூர்யன் கிழக்கில் உதித்து மேற்கில் அஸ்தமிக்கிறான் என்று சொல்வோம். பூமிதான் சுற்றுகிறதே தவிர ஸூர்யன் உதயமாவதும் அஸ்தமிப்பதும் கிடையாதென்று நமக்குத் தெரியாதா என்ன? குழந்தையின் மனதின் ஆவலுக்கு ஒரு சமாதானம் ஏற்படுத்துவதற்காக ஸூர்யனே உதிக்கிறான் என்றே சொல்கிறோமல்லவா? அதேபோல்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உலகத்தைக் காண்பவனுக்கு ‘உலகம் எப்படி ஏற்பட்டது?’ எனச் சந்தேகம் ஏற்பட்டால், சாஸ்திரம் தாயார்போல் இருப்பதால், அது அவனுக்கு உலகத்தைப்பற்றிச் சற்றுக் கூறுகிறது. மேலும் படிப்படியாகக் கொண்டுபோய் உண்மையை விளக்குகிறது. ‘நேதி, நேதி’ (இது இல்லை, இது இல்லை) என்று சொல்லிப் பிறகு பரம்பொருளைப் பற்றி விளக்கம் கூறுகிறது. ஆதலால் சாஸ்திரத்தில் ஸ்ருஷ்டியைப் பற்றிக் கூறியது அறிவேற்படுவத்தற்காகவும், சமாதானம் ஏற்படுத்துவதற்காகவுமே தவிர உண்மையான வஸ்துஸ்திதியைப் பற்றியல்ல.

விழிப்பு நிலையும் ஸ்வப்ன நிலையும்

சிஷ்யன் : விழிப்பு நிலை கனவைக் காட்டிலும் வேறா?

ஆசார்யாள் : பரமார்த்த த்ருஷ்டியில் இல்லை.

சி : அப்படியென்றால் எல்லாமே மனதால் கற்பனை செய்யப்பட்டதென்று தான் பொருள் வருமா?

ஆ : ஆம்.

சி : ஆசார்யாள் சற்று விளக்கம் கூறுவார்களா?

ஆ : கனவில், கனவைப் பார்த்துக் கொண்டிருக்கும்போது மட்டும் உண்மையெனத் தோன்றும் ஓர் உலகைப் பார்க்கிறோம். அதேபோல் விழிப்பு நிலையில் ஓர் உலகைக் காண்கிறோம். இதுவும் பார்க்கும் சமயத்தில் உண்மையெனத் தோன்றுகிறது. இன்பமும் துன்பமும் விழிப்பு நிலையில் அனுபவிக்கிறோம். அதேபோல்தான் கனவிலும் அனுபவிக்கிறோம். ஆதலால் இரண்டு நிலைகளும் சமமாக இருக்கின்றன.

சி : விழிப்பு நிலையில் ஒரு புத்தகத்தை ஒரு நாள் மேஜையில் வைத்தால், அது அடுத்த நாளும் அங்கேயே இருக்கிறது. ஆனால் கனவில் ஒரு புத்தகத்தை வைத்தோம் என்றால் விழித்தவுடன் அது காணப்படுவ

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தில்லை. இந்த வித்யாசத்தை வைத்துக்கொண்டே விழிப்பு நிலை உண்மையானது, கனவு நிலை பொய்யானது என்றும் கூற முடியாதா?

ஆ : ஒரே கனவின் போதே முதலில் நீ மேஜையில் ஒரு புத்தகத்தை வைக்கிறாய் என்று உதாரணத்திற்கு வைத்துக்கொள். பிறகு அக்கனவிலேயே நீ வேறு காரியங்கள் செய்யப் போகிறாய். மீண்டும் வந்து பார்க்கும் போது அப்புத்தகம் அங்கிருக்குமா, இருக்காதா?

சி : ஆம், இருக்கும்.

ஆ : இதுவே உனது சந்தேகத்தைத் தீர்த்திருக்கும். ஏனென்றால், விழிப்பு நிலையில் ஒரு புத்தகத்தை வைத்திருந்தால், அந்நிலையிலேயே வேறொரு சமயத்தில் அப்புத்தகம் அவ்விடத்திலேயே இருக்கிறது. அதேபோல் கனவிலும், அந்த நிலையிலேயே வேறொரு சமயம், முன் வைக்கப்பட்ட இடத்திலேயே புத்தகம் இருக்கும். கனவின்போது மேஜையில் வைக்கப்பட்ட புத்தகம் விழித்தவுடன் (விழிப்பு நிலையில்) இருப்பதில்லை. அதேபோல் விழிப்பு நிலையின்போது வைக்கப்பட்ட புத்தகம் கனவின்போது மேஜையிலேயே இருப்பதாகத் தெரிவதில்லை.

சி : மற்றொரு வித்யாசமும் இருப்பதாகத் தெரிகிறதே.

ஆ : என்ன?

சி : நாம் தூங்கிக் கொண்டிருப்பதை மற்றவர்கள் பார்க்கலாம். ஆகவே நாம் படுத்துறங்கிக் கொண்டுதான் இருந்தோம் என்பதை அவர்கள் நிச்சயம் சொல்லலாம். அதனால் நாம் காணும் கனவு பொய்யானது தானே?

ஆ : ஒரு கனவில் நீ உட்கார்ந்து கொண்டிருப்பதாகக் காண்கிறாய் என்று வைத்துக்கொள்வோம். அப்போது நீ பல விஷயங்களைப் பற்றிச் சிந்தனை செய்து கொள்ளலாம். உன் கனவிலேயே நீ உட்கார்ந்து கொண்டிருக்கிறாய் என்பதைச் சிலர் பார்க்கலாம். அவர்களைப் பொறுத்தவரையில் நீ உட்கார்ந்து கொண்டிருப்பது உண்மை. ஆனால் நீ சிந்தனை செய்வது பொய், அப்படித்தானே?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சி : ஆம்.

ஆ : உண்மையிலேயே நீ அந்தக் கனவில் வந்த ஜனங்களுக்கு முன்பு உட்கார்ந்து கொண்டிருந்தாயா?

சி : இல்லையே.

ஆ : இதற்குக் காரணம், "நீ உட்கார்ந்து கொண்டிருந்தாய், உன்னை மற்ற ஜனங்கள் பார்த்துக் கொண்டிருந்தார்கள்" என்ற இரண்டும் கனவிற்குச் சேர்ந்தவை. அதேபோல்தான் இங்கும்.

சி : விழிப்பு நிலை வருடக்கணக்காக நீடிக்கிறது. ஆனால், கனவோ ஒரு சில மணிகள்தான் இருக்கிறது. இந்த வித்யாசம் இருக்கிறதே.

ஆ : இந்த யுக்தியை உபயோகப்படுத்த வேண்டுமானால், நீ ஒரு கேள்விக்கு விடையளித்தாக வேண்டும். ஒரு கனவு முப்பது நிமிடங்களும், மற்றொரு கனவு பத்து நிமிடங்களும் நீடிக்கிறதென்றால், முப்பது நிமிடம் நீடித்த கனவு, பத்து நிமிடக் கனவைவிட உண்மை என்றோ பத்து நிமிடக் கனவு, முப்பது நிமிடக் கனவைக் காட்டிலும் சற்றே பொய் என்றோ நீ கூறுவாயா?

சி : இல்லையே.

ஆ : ஆகவே நீண்ட காலம் உள்ளது என்று காரணம் காட்டி விழிப்பு நிலை கனவை விட உண்மையானது எனக் கூற முடியாது. மேலும் 'நேரம் செல்கிறது' என்பதும் மனதின் ஒரு கற்பனையே. ஒரு கனவில் ஒருவன் தான் நீண்ட நேரம் கழித்திருப்பதாக, அக்கனவின் போது நினைத்திருக்கலாம். ஆனால் விழிப்பு நிலையைப் பொறுத்தவரையில் பத்து நிமிடங்கள் மட்டுமே கழித்திருக்கலாம். ஆகவே விழிப்பு நிலையின் கால அளவு பெரிது என்ற கூற்று தவறானது. விழிப்பிலும் கனவிலும் சமயம் என்பது அந்தந்த நிலைகளில் ஏற்படும் மனக் கற்பனையேயாகும்.

சி : தாங்கள் கூறியபடியே கனவில் அனுபவிக்கும் உலகத்தைப் போல்தான் விழிப்பு நிலையிலும் இருக்கிறதென்பதை ஒப்புக்கொள்கிறேன். ஆனால் இங்கு எனக்கொரு சந்தேகம் தோன்றியுள்ளது.

ஆ : தோன்றிய சந்தேகத்தை நீ தயங்காமல் சொல்லலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சி : விழிப்பு நிலையில் நாம் அனுபவிப்பதெல்லாம் பொய் என்பது நமக்குத் தெரிவதில்லையே! அது ஏன்?

ஆ : சாதாரணமாக, நீ தூங்கும்போது கனவில் பார்ப்பது பொய் என்று தெரிகிறதா? அதாவது கனவு கண்டு கொண்டிருக்கும் போதே அக்கனவு பொய் என்பது தெரிகிறதா?

சி : இல்லை.

ஆ : கனவில் கண்டது பொய் என்பது எப்போது உனக்குத் தெரிகிறது?

சி : எப்பொழுது நான் விழிப்பு நிலைக்கு வருகிறேனோ அப்போதுதான் தெரிகிறது.

ஆ : அதேபோல் மாயையால் உண்டான இந்தப் பெரிய ஸ்வப்னத்தில் நாம் தூங்கிக் கொண்டிருக்கிறோம். எப்போது இந்தக் கனவு அகன்றுவிடுமோ அப்போதுதான் இவ்வுலகமும் பொய் என்பது நமக்குத் தெரியும்.

சி : இப்பெரிய கனவிலிருந்து எப்போது ஒருவன் விழித்துக் கொள்வான்?

ஆ : எப்போது ''ஞானோதயம் ஏற்பட்டு ஒருவன் தான் எவ்வித பந்தங்களும் இல்லாததும், பேரின்ப வடிவானதுமான ஆத்மாதான்'' என்று அறிந்து கொள்வானோ அப்போதே இப்பெரிய கனவு அகன்று விடும்.

சி : ஞானோதயம் எப்படி ஆகும்?

ஆ : எப்போது ஒருவன் தன் மனதை முழுமையாகத் தூய்மையாக்கி 'உலகம் பொய்தான், இதைப் பார்த்துக்கொண்டிருக்கும் ஆத்மாதான் நான்' என்று தீர்மானத்திற்கு வருவானோ, அப்போதுதான் இந்த ஞானோதயம் ஏற்படும்.

சி : குருவும் சாஸ்திரமும் இவ்விஷயத்தில் எந்த வகையில் பங்கு வகிக்கிறார்கள்?

ஆ : சாஸ்திரத்தின்படியுள்ள குருவின் உபதேசங்கள் தத்துவத்தின் அறிவை உண்டாக்குகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சி : *சாஸ்திரங்களும் குருவின் உபதேசங்களும் இந்தப் பொய்யான உலகிற்குத்தானே சேர்கின்றன ? இவ்வாறுள்ள நிலையில் அவை எவ்வாறு உண்மையான தத்துவத்தின் அறிவை உண்டாக்க முடியும்?*

ஆ : ஆம், இந்த உபதேசங்களும் உலகிற்குச் சேர்ந்ததுதான். ஆனாலும், இவைகளாலும் தத்துவ அறிவு ஏற்படலாம். கனவில் ஒரு புலி நம்மை துரத்துவதாகக் காண்கிறோம் என்று வைத்துக் கொள்வோம். புலி துரத்துகிறது என்ற பயத்தினால் நமக்கு விழிப்பு ஏற்படலாம். அதேபோல் சாஸ்திரங்களின் கட்டளைகளும் குருவின் உபதேசங்களும் நம்மை இப்பெரிய கனவிலிருந்து விழித்தெழும்படிச் செய்கின்றன.

சி : *அப்படியென்றால் படைப்பு என்றால் என்ன?*

ஆ : பார்வைதான் படைப்பு. பார்வையைக் காட்டிலும் வேறான படைப்பு கிடையாது. ஒரு பொருள் இருக்கிறது என்று கற்பனை செய்யும் நமது பார்வைதான் படைப்பே தவிர வேறில்லை.

சி : *அப்படியென்றால் மற்ற ஜீவன்கள் இருக்கின்றன என்று கருதுவது வீணில்லையா?*

ஆ : ஆம்.

சி : *அப்படியானால் ஈச்வரனின் நிலை எப்படி?*

ஆ : அவனும் உன் கனவில் ஓர் அம்சம்தான். உண்மையில் காரணமும் இல்லை, காரியமுமில்லை. எதுவரையில் ஒரு மனிதன் தனக்கு பந்தமுள்ளது என்று கருதுகிறானோ அதுவரையில் அவனுக்கு பந்தமிருக்கிறது. எவன் தான் விடுதலை பெற்றவன் எனக் கருதுகிறானோ அவன் விடுதலை பெற்றவன்தான். ஆதலால்தான்,

''முக்தாபிமானி முக்தோஹி பத்தோ பத்தாபிமான்யபி''

என்று கூறப்பட்டிருக்கிறது. அதாவது எவன் தன்னை முக்தன் என்று கருதிக் கொள்கிறானோ அவன் முக்தன். எவன் தனக்கு பந்தமிருக்கிறது என்று கருதுகிறானோ அவனுக்கு பந்தமுள்ளது. ஆகவே ஒருவன் தனக்கு பந்தமுள்ளது என்ற தவறான கருத்தை அகற்றிவிட வேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சி : *தனக்கு பந்தமுள்ளது என்ற தவறான எண்ணத்தை நீக்கி விடுவதே மோக்ஷத்தைக் கூடிய விரைவில் அடைய இருக்கும் ஸாதனமாகுமா?*

ஆ : ஆம். இதுவரையில் நான் த்ருஷ்டி - ஸ்ருஷ்டி வாதத்தை மனதில் வைத்து பேசிக் கொண்டிருந்தேன். ஆனால், இது பல ஜனங்களுக்குப் பொருத்தமாக இருக்காது. ஏனென்றால், அவர்களது மனம் இத்தத்துவத் தைப் புரிந்து கொள்ளும் அளவிற்கு தூய்மையாக இருக்காது. கனவு ஒன்றுதான் பொய்யானது என்று அனைவரும் ஒப்புக்கொள்வர். விழிப்பு நிலையும் பொய் என்று சொன்னால் அவர்களுக்கு பயம் ஏற்படும். சில பேருக்கு 'விழிப்பு நிலையும் கனவு போன்றிருக்கிறது' என்று சொல்வதிலிருந்து 'கனவும் உண்மை' என்றும் தோன்றலாம். ஆதலால்தான் சாஸ்திரங்கள், சாமான்யமாக த்ருஷ்டி - ஸ்ருஷ்டி வாதத் தைப் பற்றி அதிகமாகக் கூறுவதில்லை. ஒரு சிலவிடங்களிலேயே கூறுகின்றன.

சாஸ்திரமும் விஞ்ஞானமும்

சிஷ்யன் : *விஞ்ஞானத்தின் மூலமாக, பிராணிகளில் இருந்து மனிதன் உண்டானான் என்று தெரிந்து கொள்கிறோம். பல்லாயிரம் வருடங்க ளுக்கு முன் மனிதன் குகையில் வாழ்ந்து கொண்டிருந்தான். சமையல் செய்வதும் அவனுக்கு அப்போது தெரியாமலிருந்தது. இச்சமயத்தில் வேதம் எப்படி இருந்திருக்க முடியும்? மேலும் வேதத்தின் ஆக்ஞை யின்படி ஜனங்கள் எப்படி நடந்து வந்திருக்க முடியும்?*

ஆசார்யாள் : ஒரு கனவு காண்கிறாய் என்று வைத்துக்கொள்வோம். அங்கு நீ ஒரு பத்து வயது சிறுவனாய் இருப்பதாகக் காண்கிறாய் என்றால், அதற்கு முன்பு குழந்தையாய் இருந்திருக்க வேண்டுமல்லவா?

சி : *ஆம்.*

ஆ : ஸ்வப்னமானது நீ இரண்டு வயது குழந்தையாய் இருந்த நிலைமையி லிருந்து ஆரம்பித்ததா?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சி : **இல்லை. கனவு திடீரென்று நான் பத்து வயதுச் சிறுவனாய் இருக்கிறேன் என்றுதான் தொடங்குகிறது.**

ஆ : அதாவது கனவில் நீ முதலில் சிறிய பையனாக இருந்திருக்க வேண்டும் என்று கூறுவது யுக்திக்குப் பொருத்தமாயிருப்பது போலிருந்தாலும் உண்மையில் அந்த நிலைமை இருந்திருக்கவில்லை. சரிதானே?

சி : **ஆம்.**

ஆ : காலத்தை அங்கு, பின்னால் இழுப்பது பொருத்தமாக இல்லை. ஏனென்றால் கனவு திடீரென்று ஆரம்பித்தது. அதேபோல்தான் இந்த விஞ்ஞானிகளின் பதிலும் பொருத்தமாக இல்லை. இப்போது ஒரு மனிதரை ஒரு நிலைமையில் பார்க்கிறோம். 'பல வருடங்களுக்கு முன் அவன் குகையில்தான் வாழ்ந்திருக்க முடியும். ஏனென்றால், அவனுக்கு இவ்வளவு அறிவு இருந்திருக்காது' என்று யுக்தி மூலமாகச் சிலர் கூறலாம். ஆனால் எப்படி ஒரு கனவு திடீரென்று தொடங்குகிறதோ அதேபோல் (கனவைப்போல்) இவ்வுலகமும் திடீரென்று உண்டாகி விட்டது. ஆகவே, இங்கும் காலத்தைப் பின்னே இழுப்பது பொருத்தமாகாது.

சி : **விஞ்ஞானிகள், பிரகிருதியிலிருந்து உயிர் உண்டானது என்று கூறுகிறார்கள். உயிரென்பது ஜடப்பொருளின் ஒரு குணம். ஒருவிதமாகப் பொருட்கள் சேர்ந்தால் சைதன்யம் ஏற்படுகிறது என்று கூறுகிறார்கள். இதுபோன்ற அபிப்ராயம் தவறா?**

ஆ : இதுதான் சார்வாகர்களின் மதம். இது பொருத்தமான மதமேயில்லை. ஒரு விஞ்ஞானி எதற்காக 'பொருளில்தான் சைதன்யம் ஏற்படுகிறது, சைதன்யம் என்னும் தனி வஸ்து இல்லை' என்று சொல்கிறான்?

சி : **ஏனெனில், உடலிருக்கும் இடத்தில்தான் சைதன்யம் காணப்படுகிறது. உடலில்லாத இடத்தில் நாம் சைதன்யத்தைக் காண்பதில்லை.**

ஆ : இதுபோன்ற யுக்தி பொருத்தமாக இருக்காது. உதாரணம் ஒன்றை எடுத்துக்கொள்வோம். எங்கெல்லாம் ஒளியிருக்கிறதோ அங்கெல்லாம் பொருள் தெரிகிறது. ஏனெனில் ஒளியில்லாவிட்டால் பொருள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தெரியாது என்பது அனைவரும் அறிந்ததே. ஆகவே பொருள் தெரிவது ஒளியின் குணம் என்று கூறுவது சரியா?

சி : அதெப்படி பொருள் தெரிவது ஒளியின் குணமாக முடியும்? ஆக முடியாதே.

ஆ : அதாவது ஒளியிருக்கும் இடத்தில்தான் பொருள் தெரிகிறது. ஒளியில்லாத இடத்தில் பொருள் தெரியாது. ஆனாலும் பொருள் தெரிவது ஒளியின் ஒரு குணமில்லை. இதேபோல்தான் இங்கும் உடலிருக்கும் இடத்தில் சைதன்யம் தெரிகிறது. உடலில்லாத இடத்தில் சைதன்யம் தெரிவதில்லை. ஆதலால் உடலின் குணம் சைதன்யம் என்று கூறுவது மட்டும் சரியாகுமோ? அது சரியே ஆகாது. சைதன்யம் இருக்கிறது என்று தெரிவதற்கு உடல் தேவைப்படலாம். ஆனால் உடலின் குணம் சைதன்யம் என்று கூறுவது சரியில்லை. மேலும் 'பிசாசு' பற்றி சில பேர் அனுபவமே பட்டிருக்கிறார்கள். இதற்கு நமக்கிருப்பதுபோல் ஓர் உடலில்லை. ஆனால் அங்கு அறிவு இருக்கிறது. இதெல்லாம் தவிர தெய்வானுக்ரஹத்தின் மூலமாகப் பல நிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. விஞ்ஞானிகளாலும் 'இவை நடக்கவில்லை' என்று கூற முடியாது. இவை லௌகீக நியமங்களுக்கு அப்பாற்பட்டவை. ஆதலால், இதன் மூலமாக உடலைக் காட்டிலும் அதிகமான ஒரு சக்தி இருக்கிறது என்று நாம் தெரிந்து கொள்ளலாம். சாஸ்திரம் என்பது ஓர் உத்தமமான பிரமாணமாகும். நமது யுக்திக்கு ஓர் அளவு உண்டு. ஒரு யுக்தி 'சரி' என்று நமக்குச் சற்று நேரத்திற்குத் தோன்றலாம். ஆனால் நம்மைக் காட்டிலும் ஒரு புத்திமான் வந்து விளக்கம் கூறினால் நாம் முன்பு 'சரி' என்று நினைத்தது உண்மையில் 'தவறு' என்று தெரியும். ஆதலால் வெறும் யுக்தியை நம்பிக் கொண்டிருப்பது போதாது. சாஸ்திரம் என்னும் ஆதாரமும் நமக்குத் தேவைப்படுகிறது. வேதம் பகவானால் உபதேசிக்கப்பட்டது. அது மிகவும் புனிதமானது. வேதத்தில் 'உடல் வேறு, சைதன்யம் வேறு' என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆதலால் அதை நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். மேலும் ஞானிகளின் அனுபவமும் இவ்வாறுதான் இருக்கிறது. இவ்வனுபவங்கள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எல்லாம் தவறென்று கூறுவதற்கு விஞ்ஞானிகளுக்குச் சாமர்த்திய மில்லை. இதெல்லாம் இருக்கட்டும். ஒரு விஞ்ஞானியால், 'பொருளி லிருந்துதான் சைதன்யம் உண்டாயிற்று' என்பதை நிரூபிக்க முடி யுமா? முடியாது. இதுவரைக்கும் அவனால் முடியவில்லை. இனிமேல் செய்வானா என்றால் இனிமேலும் நிரூபணம் செய்ய முடியாது. ஏனெ னில், ஒரு விஞ்ஞானி அவனது ஆராய்ச்சிக் கூடத்தில் ஓர் உயிரை உண்டாக்கியதாகக் கூறுகிறானென வைத்துக்கொள்வோம். முதலி லேயே அவன் உபயோகப்படுத்தும் பொருளில் செயல்படாத நிலை யில் சைதன்யம் இருந்திருக்கவில்லை என்று எப்படி நிரூபிக்க முடி யும்? அதை நிரூபிக்கவே முடியாது. எப்படி அந்த சைதன்யம் முதலில் வெளித் தெரியாமலிருந்து அதற்குப் பிறகு வ்யக்தமாயிருக்கலாமோ, அதேபோல்தான் இங்கும் நிரூபணம் செய்ய முடியாது. ஆகையால் இதை விஞ்ஞானியால் இதுவரை நிரூபணம் செய்ய முடியவில்லை. இனிமேலும், நிரூபணம் செய்ய முடியாது. அதுபோன்ற விஞ்ஞானிக ளின் அபிப்ராயத்திற்கு நாம் அதிகமாக விலை கொடுக்க வேண்டும் என்று சொல்வது தவறு. நாம் நம் சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட வகையில்தான் ஒப்புக்கொள்ள வேண்டுமே தவிர யாரோ ஒருவன், ஒரு யுக்தியை - அதுவும் ஒரு தவறான யுக்தியை - சொல்கிறான் என்பதற்காக அதை நம்ப வேண்டும் என்று கிடையாது. விஞ்ஞானத்தி னால் பல பிரயோஜனங்கள் இருக்கின்றன. அதைப்பற்றிச் சந்தேகமே யில்லை. ஆனால், சில விஞ்ஞானிகள் எவற்றைக் கற்பனை மூலமாக வும் குயுக்தி மூலமாகவும் சொல்கிறார்களோ அவை எல்லாவற்றையும் ஒப்புக் கொள்ள வேண்டுமென்கிற தேவையில்லை. ஒருவன் விஞ்ஞா னியானதால் நாஸ்திகனாக இருக்க வேண்டும் என்றும் அர்த்தமில்லை. பல சிறந்த விஞ்ஞானிகள் ஆஸ்திகர்களாக இருந்து வந்திருக்கிறார்கள். தற்போதும் இருக்கிறார்கள். தவிர சாஸ்திரங்களை ஆராய்ந்து பார்த்தால் உடலைக் காட்டிலும் வேறான ஆத்மா இருக்கிறது என்பதற்குப் பல யுக்திகளை நாம் காணலாம். ஆகவே உடலைக் காட்டிலும் வேறானது ஆத்மா என்ற விஷயத்தில் நமக்கு ஐயமே எழக்கூடாது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பந்தத்தின் ஸ்வரூபம்

சிஷ்யன் : பந்தம் உண்மையாகவே இருக்கிறதா?

ஆசார்யாள் : இல்லை. அது உண்மையாகவே இருந்திருந்தால் ஞானோதய மான பிறகு அது எவ்வாறு இல்லாமல் போக முடியும்?

சி : யாருக்குப் பந்தம் இருக்கிறது?

ஆ : எவன் தனக்குப் பந்தமிருக்கிறது எனக் கருதுகிறானோ அவனுக்குப் பந்தம் இருக்கிறது.

சி : எவன் தனக்குப் பந்தமிருக்கிறது எனக் கருதுகிறான்? அதாவது பந்தம் தனக்கு உண்டு என்ற கருத்து யாருக்கு இருக்கிறது?

ஆ : நீயே கூறு.

சி : ஆத்மாவிற்குத்தான் வருகிறது.

ஆ : ஆத்மா ஸச்சிதானந்த வடிவமாக இருக்கிறது. அதற்கு ஒருவிதமான பந்தமோ அல்லது கட்டுப்பாடோ கிடையாது. இதுதான் சாஸ்திரங்க ளின் தீர்மானம். அது மனதிற்கும் அப்பாற்பட்டது.

சி : ஆத்மாவிற்குப் பந்தம் சேராதென்றால் மனதிற்குத் தானே பந்தமிருக்க வேண்டும்?

ஆ : மனம் ஜடமான பொருள். அதற்கு எப்படிப் பந்தம் இருக்க முடியும்? ஜடமான பொருளுக்குப் பந்தமிருப்பது ஸாத்யமில்லையே.

சி : பந்தம் ஆத்மாவிற்குமில்லை, மனதிற்குமில்லை என்றால் பந்தமென் பது எப்படித்தான் இருக்க முடியும்?

ஆ : எல்லாவிதமான கோஷ்டிகளையும் நீ யோசித்துப் பார்த்தாயா?

சி : எல்லாவற்றையும் யோசித்துப் பார்த்துவிட்டேன். ஆத்மாவும் மனமும் சேர்ந்த ஒரு கோஷ்டியைப் பற்றித்தான் யோசிக்கவில்லை. ஆனால் அதுவும் பொருத்தமில்லையே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆ : ஏன்?

சி : ஏனென்றால், ஆத்மாவின் குணம் வேறு, மனதின் குணம் வேறு. இவை எப்படிச் சேர்ந்திருக்க முடியும்?

ஆ : சூடும் ஒளியும் இரும்பின் குணங்களா?

சி : இல்லையே.

ஆ : அவை நெருப்பின் குணங்களா?

சி : ஆம்.

ஆ : ஓர் இரும்புத்துண்டை நீண்டகாலம் நெருப்பில் சுடவைத்தால் என்ன ஆகும்?

சி : இரும்புத்துண்டு வெண்மையான பளபளப்புடன் தோன்றி ஒளி வீசும். ஏனென்றால் அதற்கு அதிகமாகச் சூடு இருக்கும்.

ஆ : அது சரி, ஒளியும் சூடும் நெருப்பின் குணங்களென்று உனக்கு முன்பே தெரியவில்லையென்றால் நீ, இவைகள் சுடவைத்த இரும்பில் தெரிவ தால் அதனுடைய குணங்கள் என்றுதானே கருதுவாய்?

சி : ஆம்.

ஆ : அதேபோல் மனம் ஜடமாயிருக்கிறது. ஆத்மா சைதன்ய வடிவாகியிருக் கிறது. ஆத்மாவின் ஒளியால் மனம் ஜடமில்லாததைப் போல் தெரிகிறது. மனதினுடையதும், ஆத்மாவினுடையதுமான சேர்க்கை யான ஜீவனுக்குத்தான் பந்தம். இது ஆத்மாவுக்கு மட்டும் என்றோ, மனதிற்கு மட்டும் என்றோ இல்லை. இச்சேர்க்கைக்குத்தான் ஜீவன் என்று பெயர். உண்மையில் ஜீவன் என்னவென்றால் ஆத்மாதான். எதுவரையிலும் ஜீவன் தன் உண்மையான ஸ்வரூபத்தை மறந்து விடு கிறானோ அதுவரையிலும் பந்தத்தை அனுபவிக்கிறான். எப்போது ஜீவன் தன் உண்மையான ஸ்வரூபத்தை அறிந்து கொள்கிறானோ அப்போது மறுபிறவியிலிருந்து விடுதலை பெறுகிறான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சி : இதுபோல் ஜீவன், முக்தியை அடைகிறான் என்றால், முக்தி எப்போதும் இருக்க முடியாது. ஏனென்றால், எதற்கு ஆரம்பமிருக்கிறதோ அதற்கு முடிவுமிருக்க வேண்டுமே. ஆகவே, மோக்ஷமடைந்தாலும் அதற்கும் முடிவிருக்க வேண்டுமே?

ஆ : ஏன்?

சி : ஏனென்றால், ஆரம்பம் எதற்கு உள்ளதோ அதற்கு முடிவும் இருக்க வேண்டுமே.

ஆ : நீ இவ்விஷயத்தை மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். பந்தம் என்பது உண்மையானதொன்றுமில்லை. அது அறியாமையால்தான் ஏற்படுகிறது. எப்போது அது போய்விடுகிறதோ அப்போது ஆத்மா தன் பிரகாசத்துடன் பிரகாசிக்கிறது. ஆதலால் உண்மையான பந்தம் என்பது இல்லாததால், இந்த எதிர்ப்பு சரியாகாது. ஏனென்றால், இங்கு மோக்ஷம் என்பது ஸ்வரூபத்தைத் தெரிந்து கொண்டு அறியாமையைப் போக்கிக் கொள்வதுதான். ஆத்மாவிற்குப் புதிதாக ஒன்றை உண்டாக்கி, அதை நாம் மோக்ஷம் என்று கூறுவதில்லை.

மோக்ஷத்திற்குக் காரணம்

சிஷ்யன் : மோக்ஷத்திற்குக் காரணம் என்ன?

ஆசார்யாள் : ப்ரஹ்ம ஞானம்தான் மோக்ஷத்திற்குக் காரணம்.

ஞானாதேவ து கைவல்யம்
(ஞானத்திலிருந்துதான் மோக்ஷம் பெறலாம்)

தமேவம் வித்வான் அம்ருத இஹ பவதி,
நான்ய:பந்தா வித்யதே யனாய |

(அவனைத் தெரிந்து கொண்டால்தான் ஒருவன் மரணம் அற்றவனாகிறான். வேறு வழியில்லை.) என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன.

சி : இப்படியென்றால் கர்மா ஞானத்திற்கு நேரடியான காரணமில்லை என்றுதானே பொருளாகும்?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆ : ஆம். சாஸ்திரங்கள் இவ்விஷயத்தில் தீர்மானத்துடன் இருக்கின்றன. உதாரணத்திற்கு சாஸ்திரங்களிலேயே,

ந கர்மணா... (கர்மாவினால் இல்லை...)

என்று மோக்ஷத்தைப் பற்றிக் கூறியிருக்கிறார்கள்.

சி : ஞானம் எப்போது உண்டாகும்?

ஆ : எப்போது மனம் சுத்தமாகி, ஆசையற்றதாக இருக்குமோ அப்போது அங்கு ஞானம் உண்டாகும்.

சி : இறைவனுக்கு அர்ப்பணித்துக் கர்மா செய்வதால் மனதிற்குத் தூய்மை ஏற்படாதா?

ஆ : ஆம், தூய்மை ஏற்படும்.

சி : அப்படியென்றால் கர்மாவும் மோக்ஷத்திற்குக் காரணம் என்றுதானே கூறவேண்டும்? ஏனென்றால் கர்மாவை இறைவனுக்கு அர்ப்பணித்துச் செய்தால் மனம் புனிதமாகிறது. புனிதமான மனதில்தான் ஞானம் ஏற்படுகிறது. ஞானத்தினால்தான் மோக்ஷம் ஏற்படுகிறது. ஆதலால் கர்மா மோக்ஷத்திற்குக் காரணம் என்றுதானே கூற வேண்டும்?

ஆ : நீ தந்த காரணமே கர்மா மோக்ஷத்திற்கு நேரடியான காரணமில்லை என்று தெளிவுபடுத்துகிறது. பானைக்கு மண் காரணம் என்று எல்லோருக்கும் தெரியும். அதேபோல் பானையை எவன் செய்கிறானோ அவனும் ஒருவிதமான காரணம் என்றுதான் கூற வேண்டும். செய்தவனின் தந்தையும் காரணமா? ஏனெனில் செய்தவனின் தந்தை இல்லாமல் செய்தவன் வந்திருக்க முடியாது. அவனில்லாமல் பானை வந்திருக்க முடியாது.

சி : செய்பவனின் தந்தையைக் காரணமாகக் கூறமுடியாது. ஏனென்றால் செய்பவனின் தாத்தா, அவருக்கும் அப்பா என்று போய்க் கொண்டேயிருக்கும்.

ஆ : அதே யுக்தியை இங்கும் உபயோகப்படுத்தினால் கர்மா மோக்ஷத்திற்குக் காரணமாகாது என்பதைத் தெரிந்து கொள்ளலாம். மேலும் எது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கர்மாவினால் ஏற்படுகிறதோ அதற்கொரு முடிவும் உண்டு. ஏனென்றால் கர்மா ஒரு பலனைக் கொடுக்கத் தொடங்குகிறதென்றால் அங்கு ஒரு தொடங்கும் காலமிருக்கிறது. எது தொடங்குகிறதோ அதற்கு முடிவிருக்க வேண்டும். ஆதலால் மோக்ஷம் கர்மாவினால் ஏற்பட்டால் அது நித்யமாக முடியாது. ஆனால் மோக்ஷம் நித்யமென்றுதான் சாஸ்திரங்கள் கூறுகின்றன. அது நிலை பெறாதது என்று ஒரு சாஸ்திரமும் கூறுவதில்லை. யுக்திக்கும் அது பொருத்தமாக இல்லை. ஆதலால் ஞானம்தான் மோக்ஷத்திற்கு நேரடியான காரணம் என்று தெரிந்து கொள்ள வேண்டும்.

அத்வைத நூல்களில் பலவிதமான கருத்துக்கள்

சிஷ்யன் : அத்வைத நூல்களிலேயே நாம் பலவிதமான கருத்துக்களைக் காணலாம். உதாரணத்திற்குப் 'பஞ்சதசி' என்னும் நூலில் ஜீவன், அவித்யையில் சைதன்யத்தின் ஒரு பிரதிபிம்பம் என்று படித்திருக்கிறேன். மேலும் சில நூல்களில் அவித்யை மூலமாகத் தெரியும் ப்ரஹ்மத்தை ஜீவன் என்று கூறுகிறார்கள். சில நூல்கள் 'பலவிதமாக ஜீவன்கள்' இருக்கிறார்கள் என்று கூறுகின்றன. மற்ற சில 'ஒரே ஜீவன்தான்' என்று கூறுகின்றன. இதுபோன்ற கருத்து வேற்றுமைகளுக்குக் காரணமென்ன?

ஆசார்யாள் : எவ்வகையில் கங்கை கடலில் போய்ச் சேர்வதற்கு முன் பலவிதமாகப் பிரிந்திருக்கிறதோ, அதேபோல் சாஸ்திரங்களில் இருந்தும், சங்கரபகவத்பாதாளிடமிருந்தும் வெளிவந்த அத்வைதம் பலவிதமாகப் பிரிந்திருக்கிறது. ஆனால் எல்லா அத்வைத நூல்களும் பரம்பொருளை ஒரேவிதமாகத்தான் வர்ணிக்கின்றன. உலகைக் குறித்து மட்டும் வெவ்வேறான கருத்துக்கள் காணப்படுகின்றன. ஆனால் கீழ்க்காணும் கருத்தில் அத்வைதிகள் ஒருமித்த கருத்தையே கொண்டு உள்ளனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ப்ரஹ்ம ஸத்யம் ஜகன் மித்யா ஜீவோ ப்ரஹ்மைவ நாபர:

(ப்ரஹ்மம் உண்மை, உலகம் மித்யை, ஜீவன் ப்ரஹ்மம்தான், வேறில்லை.) மேலும், ஞானம்தான் மோக்ஷத்திற்குக் காரணமென்றும் அத்வைதிகள் எல்லோரும் ஒப்புக்கொள்கின்றனர். உத்தமமான அதிகாரியான எவன் தன் மனதைப் பரம்பொருளிடம் வைப்பதற்கு சாமர்த்திய முள்ளவனாக இருக்கிறானோ அப்படிப்பட்டவனுக்கு 'உலகம் ஒரு ஸ்வப்னத்தைப் போலிருக்கிறது' என்று கூறினால் சுலபமாக தத்துவம் புரியும். இப்படிப்பட்டவனுக்கு ஏக ஜீவ வாதம் கூறலாம். அதுதான் சாஸ்திரமும் கூறுகிறது. மற்ற ஜனங்களுக்கு இம்மாதிரிக் கூறினால் கஷ்டம் ஏற்படலாம். ஆகவே அவர்களுக்கு அனேக ஜீவ வாதம் (பல ஜீவன்கள் உள்ளனர்) என்ற வாதம்தான் பொருத்தமாக இருக்கும். வெவ்வேறு அதிகாரிகளுக்குத் தக்கவாறு வெவ்வேறு கருத்துக்கள் இருக்கின்றனவே தவிர, தத்துவத்தை வேறு விதமாக வர்ணிப்ப தற்கோ, தத்துவத்தை அடையும் ஞானம் வேறு என்று சொல்வதற்கோ வரவில்லை. சுரேச்வராச்சார்யரே இக்கருத்தை தெளிவுபடுத்திக் கூறி யிருக்கிறார். எந்த மார்க்கத்தின் மூலமாக ஒருவன் அந்தராத்மாவின் அறிவைப் `பெறலாமோ அந்த மார்க்கத்தைச் சரியென்று தெரிந்து கொள்ள வேண்டும். மேலும், இதுபோன்ற ஸன்மார்க்கங்கள், 'இவ்வ ளவு அவ்வளவென்று கணக்கில் எண்ண முடியாது' என்று கூறியிருக் கிறார். ஆதலால் அத்வைத தத்துவம் என்பது ஒன்றுதான். ஆனால் அதை ஸாதகர்களுக்குப் பொருத்தமான வகையில் கூற வேண்டு மென்ற கருத்துடன் பல ஆசார்யர்கள் வெவ்வேறு விதமாக அதே தத்துவத்தைக் கூறியிருக்கிறார்கள். அவ்வளவுதான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஞானி

சிஷ்யன் : ஞானி புண்ணியத்தையும் பாவத்தையும் கடந்தவனா?

ஆசார்யாள் : ஆம்.

சி : அப்படியென்றால் ஞானிக்கு ஒருவிதமான புண்ணியமும், பாவமும் ஏற்படாது என்பதனால் அவன் எப்படி வேண்டுமானாலும் நடந்து கொள்ளலாமா?

ஆ : ஞானி அவ்வாறு, சாதாரணமாக நடந்து கொள்ள மாட்டான். ஞானம் பெறுவதற்கு முன்பு அவன் மனம் மிகவும் புனிதமாக இருந்திருக்க வேண்டும். இதே நிலை ஞானத்தை அடைந்த பிறகும் இருக்கும். ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா, 'ஓர் உத்தமமான பக்தன் ஏதாவது ஒரு சமயம் ஒரு தவறு செய்தால், அதனால் அவன் பாதிக்கப்படுவதில்லை' என்று கூறியிருக்கிறார். இதிலிருந்து பக்தனானவன் எப்போதும் தவறுகளாகச் செய்து கொண்டு போக வேண்டும் என்று அர்த்தமில்லை. ஞானி மற்றவர்களுக்கு 'ஆதர்ச புருஷன்' (எடுத்துக்காட்டு) போலிருக்கிறான். சுரேச்வராச்சார்யர் 'ஞானி எப்படி வேண்டுமானாலும் நடந்து கொண்டால் அவனுக்கும் ஒரு நாய்க்கும் என்ன வேறுபாடு?' எனக் கூறியிருக்கிறார். அதாவது ஞானி தவறிழைத்தால் அவனைப் பொறுத் தவரையில் அது ஒன்றும் பாதிக்காது. ஆனால் அப்படிப்பட்ட ஞானிக்கு, மற்றவர்களுக்கு வழிகாட்டுவதற்கும், குருவாக இருப்பதற்கும் தகுதியில்லை.

சி : ஞானிக்காக அவர் இறந்த பிறகு சிரார்த்தம் செய்ய வேண்டுமா?

ஆ : ஆம். அவர் ஸந்யாஸம் பெறாமலிருந்தால் அவரது புதல்வர்கள் சிரார்த்தம் செய்ய வேண்டும். ஸந்யாஸம் பெற்றவராய் இருந்தால், அவருக்காக ஆராதனை செய்ய வேண்டும்.

சி : ஞானிக்குத்தான் மறுபிறவியே கிடையாதே, அப்படியிருக்கும்போது சிரார்த்தம் செய்வதால் என்ன பிரயோஜனம்?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆ : யாருக்குப் பிரயோஜனம்?

சி : *ஞானிக்கு.*

ஆ : ஞானியைப் பொறுத்தவரையில் பிரயோஜனமொன்றுமில்லை.

சி : *அப்படியென்றால் சிரார்த்தம் எதற்காகச் செய்யப்பட வேண்டும்?*

ஆ : உறவினர்களின் கடமை எங்கு போய்விட்டது?

சி : *ஆசார்யாள் சற்று விளக்குவார்களா?*

ஆ : ஞானியைப் பொறுத்தவரையிலும், சிரார்த்தம் செய்வதால், அவனுக்கு ஒருவிதமான பிரயோஜனமுமில்லை. ஆனால் உறவினர்களுக்குக் கடமையிருக்கிறது. ஒருவன் ஞானியானான் என்ற காரணத்திற்காக அவனது உறவினர்களின் கடமையொன்றும் விட்டுப் போவதில்லை. சாஸ்திரங்கள், எந்தச் செயல்களை அவர்களைச் செய்யச் சொல்கின்றனவோ, அவைகளை அவர்கள் செய்யத்தான் வேண்டும். ஆகவே ஞானிக்கும் சிரார்த்தம் செய்யப்பட வேண்டும்.

சி : *எவரை நாம் ஞானி என்று கருத வேண்டும்?*

ஆ : எவருக்கு 'நான், உடல், மனம் போன்றவைகளில்லை. ஆனால் நான் ஸச்சிதானந்த வடிவாகி இருக்கும் பரம்பொருள்தான்' என்கிற அறிவு, அனுபவம் மூலமாக இருக்கிறதோ அவரைத்தான் ஞானி என்று கூறுவோம்.

சி : *ஞானிக்கு 'உடலிருக்கிறது' என்ற அறிவு இருக்குமா?*

ஆ : ஒரு ஞானி தன்னுடைய ஸ்வரூபத்தை அறிந்து கொண்டவன். அவன் மனதில் துக்கம், சுகம் முதலியவைகள், மற்றவர்களின் மனத்தில் இருப்பதைப் போலிருப்பதற்கு வாய்ப்பு உண்டு. ஆனால் மனம் முழுவதாக பரிசுத்தமானதால் அவற்றினால் அவன் பாதிக்கப்படுவதில்லை. உவமானம் கூற வேண்டுமாயின், ஒரு விதையை வறுத்துவிட்டுப் பின் அதை பூமியில் இட்டால், அது முளைவிட்டு மரமாகாது. ஆனால் அதைச் சாப்பிடலாம். அதேபோல் ஞானத்தின் ப்ரபாவத்தினால்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஞானியின் மனதும் நாசமாகிவிட்டது. அது பார்ப்பதற்கு மனதைப் போலிருக்கலாம். ஆனால் மறுபிறவியைக் கொடுக்குமாறு அதனால் கர்மாக்களைச் செய்ய முடியாது.

சி : *ஞானிகளும் சுக துக்கங்களை அனுபவிப்பதை நாம் பார்க்கிறோமே?*

ஆ : ஒரு சக்கரம் இருக்கிறதென்று வைத்துக்கொள்வோம். ஒருவன் தன் கைகளால் அச்சக்கரத்தைச் சுற்றிக் கொண்டிருக்கிறான். சற்று நேரத்திற்குப் பிறகு சக்கரத்திலிருந்து அவன் தன் கையை எடுத்துவிட்டால் சக்கரம் சிறிது சுற்றி விட்டு பிறகுதான் நிற்கும். அதேபோல்தான் இங்கும் பிராரப்தம், ஞானியின் உடலுக்குக் காரணமாகி இருக்கிறது. ஞானம் வந்த பிறகு உடலுடன் சம்பந்தம் போய்விட்டாலும், அதில் அபிமானம் போய்விட்டாலும், அந்தப் பிராரப்தம் நீங்கும் வரையில், உடல் செயலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது. ஆதலால் பார்ப்பவனை மனதில் வைத்துக்கொண்டு சொன்னால் 'ஆகாமி' மற்றும் 'ஸஞ்சித கர்மாக்கள்' (பிற்காலத்தில் பலன் தரும் கர்மாக்கள்) அழிந்து விடுகின்றன. பிராரப்தம் அழிவதில்லை. அதை அனுபவிப்பதன் மூலம்தான் அது அழிவடைகிறது. ஆனால் ஞானியின் பார்வையில் இருந்து அவனுக்குப் பிராரப்தமுமில்லை, உடலுமில்லை, மனமுமில்லை. தன் ஸ்வரூபத்தின் அறிவு ஒன்று மட்டும்தான் இருக்கிறது.

சி : *ஜாக்ரத், ஸ்வப்ன, ஸுஷுப்தியாகிய மூன்று நிலைகளிலும் தன் ஸ்வரூபத்தை அவன் தெரிந்து கொண்டிருப்பானா?*

ஆ : ஆம், அவன் எல்லா நிலைகளிலும் தன் ஸ்வரூபத்தைத் தெரிந்து கொண்டிருப்பான்.

சி : *அவன் பிரபஞ்சத்தைப் பார்க்கும்போது எவ்விதமான அறிவு ஏற்படும்?*

ஆ : 'எதுவும் தன்னைக்காட்டிலும் வேறில்லை. ஆத்மாவைக் காட்டிலும் வேறான உண்மையான பிரபஞ்சமில்லை' என்கிற அறிவு எப்போதும் இருக்கும்.

சி : *ஞானிகளுக்கு எதற்கு கருணையிருக்கிறது?*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆ : ஞானம் பெறுவதற்கு முன் அவர்கள் மனம் மிகவும் பரிசுத்தமாக இருந்திருக்கும். மனம் பரிசுத்தமான பிறகுதான் ஞானம் வருகிறது. ஞானம் வந்த பிறகு அந்த கருணை தற்போது விசேஷமாக இருக்கிறது. அவன் தனக்காக என்றிருக்கலாம். ஆனால் ஞானியின் உடலும் மனதும் மற்றவர்களுக்காகத்தான் இருக்கிறது என்றே கூற வேண்டும். அவர்களுக்கு எந்த ஒரு செயலினாலும் ஒன்றும் அடைய வேண்டியதில்லை. அவர்கள் அடைய வேண்டியதை அடைந்து விட்டதால், எப்போதும் திருப்தியுடன் இருப்பவர்கள். ஆதலால், அவர்களுடைய வாழ்க்கை எப்போதும் மற்றவர்களின் நன்மைக்காகவே இருக்கிறது என்று சொல்லலாம்.

சி : *ஞானிகளும் பகவான் விஷயத்தில் பக்தி செலுத்தலாமா?*

ஆ : எப்போது ஒரு ஞானி மூச்சு விடலாம், விடுகின்றானென்று ஒப்புக் கொள்கிறோமோ, இறைவன் விஷயத்தில் பக்தி வைப்பதில் மட்டும் என்ன சந்தேகம்? இறைவனின் மஹிமை மிக உத்தமமானது. அவனது மஹிமை அளவற்றது. ஆகவே ஞானியின் மனமும் இறைவனைப் போற்றலாம். அதனால் அவன் 'தன்' ஸ்வரூபத்தை அறியவில்லை என்று அர்த்தமில்லை. தத்துவத்தை அறிந்து அவன் இருந்தாலும் உடலும் மனதும் இறைவன் விஷயத்தில் ஈடுபாட்டுடன் இருக்கலாம். பாகவதத்தில்,

ஆத்மா ராமாச்ச முனயோ நிர்க்ரந்தா அப்யுருக்ரமே
குர்வந்த்யஹேதுகீம் பக்திம் இத்தம் பூதகுணோ ஹரி:

(ஆத்மாராமமாக ஒருவிதமான பற்றுதலும் இல்லாத முனிகளும் இறைவன் விஷயத்தில் அளவில்லாத பக்தியை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இது இறைவனின் குணங்களின் மஹிமையேயாகும்.) என்று கேள்விப்படுகிறோம்.

சி : *ஒரு ஞானி அல்லது ஜீவன்முக்தன் இறந்த பிறகு எந்த லோகத்திற்குச் செல்வான்?*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆ : அவன் எந்த லோகத்திற்கும் போகமாட்டான். எப்போதும் ப்ரஹ்ம வடிவாகியிருப்பான். இறந்த பிறகு அவனை விதேஹமுக்தன் என்று கூறுவோம். சாஸ்திரங்கள், ஞானமடைந்தவன் ப்ரஹ்மமாகவே இருக்கிறான் என்றே தெளிவுபடுத்துகின்றன. அதாவது ஞானமடைந்தவன் சாகா நிலையை அடைகிறான். இங்கேயே ப்ரஹ்மத்தை அனுபவிக்கிறான். இறந்த பிறகு அவன் ப்ரஹ்மத்தை விட்டு வெளிச் செல்வதில்லை. ப்ரஹ்மத்திலேயே இருந்து ப்ரஹ்மமாகவே இருக்கிறான் என்று அவை கூறுகின்றன.

சி : *ஞானி ஸமாதியை விரும்புவானா? அதில் அவன் அமர வேண்டும் என்று தேவையுள்ளதா?*

ஆ : ஞானி ஸமாதியை அடைய வேண்டுமென்றோ வேண்டாமென்றோ இல்லை. ஸமாதியோ, தியானமோ மனதின் நிலைகள். அவன் அவைகளுக்கெல்லாம் அப்பாற்பட்டவன். எந்த அளவிற்கு அவன் ஸமாதியில் அமருவானோ, படிப்படியாக அவனை ஒருவனில் ஒருவன் உயர்ந்தவன் என்று கூறுவோம். இது சாஸ்திரங்களின் சொற்படி பார்ப்பவனைப் பொறுத்தவரையிலும் இருக்கலாம். அதாவது பார்ப்பவனைப் பொறுத்தவரையில் ஞானிகளில் 'இவன் உயர்ந்த ஞானி' என்பது போன்ற வித்யாசம் இருக்கலாம். ஆனால் ஞானிகளைப் பொறுத்தவரையில் பேதம் கிடையாது. வ்யவஹாரங்களில் ஈடுபாடு வைத்திருக்கும் ஞானிக்கு 'ப்ரஹ்மவித்' என்று பெயர். ஒரு ஞானி ஸமாதிக்குச் செல்லும் பழக்கமிருந்தால், அதிலிருந்து தானாகவே எழுந்துவர முடியுமென்றால் அவனுக்கு 'ப்ரஹ்மவித்வர' என்று பெயர். மற்றவர்கள் முயற்சியால்தான் அவனை ஸமாதியிலிருந்து எழுப்ப முடியும் என்றால் அவனுக்கு 'ப்ரஹ்மவித்வரீயான்' என்று பெயர். 'பிரஹ்மவித்வரிஷ்டர்' என்பவர் ஸமாதிக்குச் சென்றால், அவர் என்றுமே எழுந்து வரமாட்டார். அப்படியே அவர் உடலானது நசிந்துவிடும். ப்ரஹ்மவித்வரிஷ்டருக்குப் பிராரப்தம் மிகச் சிறந்ததாக இருப்பதால், அவரே பார்ப்பவரைப் பொறுத்தவரையில் உத்தமமானவர். ஆனால் ஞானிகளைப் பொறுத்தவரையில் இவ்விதமான வேற்றுமையே கிடையாது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சி : *செயல்களில் ஈடுபட்டால் ஞானிகளுக்கும் சுகதுக்க அனுபவம் இருக்குமா?*

ஆ : ஆம், வலி போன்றவைகளை அவர்களும் அனுபவிப்பார்கள். ஆனால் அவர்கள் மனம் பரிசுத்தமானதால் இவற்றையெல்லாம் இலட்சியம் செய்யாது. உதாரணத்திற்குப் போர் வீரன் ஒருவனது நிலையை எடுத்துக் கொள்வோம். அவன் மேல் குண்டுகள் பாய்ந்து கொண்டிருந்தாலும், அவன் சுடுவதை நிறுத்துவதில்லை. அதேபோல்தான் ஞானியும், மற்றொருவன் துக்கம் ஏற்படுத்தினாலும் மனதில் கலக்கத்திற்கு இடங் கொடுக்க மாட்டான். அவன் மனதில் ஸ்வரூபத்தைப் பற்றிய அறிவு ஏற்பட்டிருக்கும். ஏனென்றால், ஞானியின் மனதில் ஒரு முறையாவது அகண்டாகார வ்ருத்தியென்பது ஏற்பட்டிருக்கும். ஆதலால், ஞானியின் மனதைப் பொறுத்தவரையிலும், அது துன்பத்தைப் பொறுத்துக் கொள்ளுமாறுதானிருக்கும். அதேபோல் சுகத்திலும் அவன் மனதில் அதிகமாக சந்தோஷம் வர இடம் கொடுக்க மாட்டான். ஏனென்றால், உலகமெல்லாம் வெறும் தோற்றமென்று மனதாலும் அவனுக்குத் தெரியும்.

சி : *ஞானிகளுக்குக் கனவுகள் ஏற்படலாமா?*

ஆ : ஏன் ஏற்படக்கூடாது? ஏற்படலாமே. எப்படி விழிப்பு நிலையில் பிரபஞ்சத்தைப் பார்க்கிறானோ அதேபோல் கனவையும் 'உலகம் பொய்' என்றே பார்த்துக் கொண்டு காணலாமே. இப்படித்தான் ஏற்படுகிறது, ஏற்பட வேண்டும் என்ற நியமமில்லாவிட்டாலும், நான் இருக்கும் நிலைமையைச் சொன்னேன்.

சி : *ஞானியாவதில் என்ன பிரயோஜனம்?*

ஆ : ஞானமடைந்தால் ஒருவன் ஜீவன்முக்தனாகலாம். அதனால் எல்லா விதமான பந்தங்களிலிருந்தும் விடுதலை பெறலாம். பேரின்பத்தை அடையலாம். மறுபிறவி என்பது அவனுக்கு வரவே வராது. அவன் அடைய வேண்டியதை அடைந்தவனாகிறான். இதைக் காட்டிலும் அதிகமாக என்ன சொல்ல வேண்டியிருக்கிறது? வேதத்திலேயே,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பித்யதே ஹ்ருதயக்ரந்தி: சித்யந்தே ஸர்வசம்சயா:|

க்ஷீயந்தே சாஸ்யகர்மாணி தஸ்மின் த்ருஷ்டே பராவரே||

என்று சொல்லப்பட்டிருக்கிறது. ‘காரண வடிவாகி, காரிய வடிவாகி இருக்கும் பரம்பொருளைக் கண்டவுடன் உள்ளத்தின் முடிச்சுகள் அறுத்தெறியப்படுகின்றன. அவனது சந்தேகங்கள் எல்லாம் தீர்கின் றன. அவனின் கர்மாக்கள் எல்லாம் முடிவு பெறுகின்றன’ என்று கூறப் பட்டிருக்கிறது. ஜீவன்முக்தி நிலைதான் மனிதன் அடைய வேண்டிய வற்றில் எல்லாம் தலைசிறந்த நிலை.

சி : *இரண்டு ஜீவன்முக்தர்கள் வெவ்வேறு விதமாக உபதேசம் செய்வதற்கு என்ன காரணம்?*

ஆ : ஜீவன்முக்தன் ‘தான் ஆத்மா’ என்று தெரிந்து கொண்டிருப்பவன். ப்ரஹ்ம ஞான விஷயத்தில் கருத்து வேற்றுமையில்லாவிட்டாலும், ஞானம் பெறுவதற்கு முன்னர் வெவ்வேறு ஸாதனைகளை ஒருவன் ஏற்றுக் கொண்டிருக்கலாம். அதன்படியே மற்றவர்களுக்கும் உபதேசம் தரலாம். சிஷ்யனின் தகுதியை மனதில் வைத்தும் உபதேசம் தரலாம். மேற்கொண்டு ஒரு ஞானி ஒரு சிஷ்யனுக்கு ஒருவிதமாக உபதேசம் செய்யலாம். மற்றொரு ஞானி மற்றொரு சிஷ்யனுக்கு வேறு மாதிரி உபதேசம் செய்யலாம். இதனால் ‘இவன் சொல்வது சரி, இவன் சொல் வது தவறு’ என்று விசாரம் செய்யத் தேவையில்லை. அவன் ஜீவன்முக் தனாக இருந்தால், சிஷ்யனை நல்வழிக்குக் கொண்டு செல்வான். இதைத் தவிர ஞானியின் மனதும் வெவ்வேறுதானே. ஆகவே வெவ் வேறு வகையில் அவர்கள் உபதேசம் தரலாமே. இங்கு எது சரி, எது சரியில்லை என்பதை நாம் விசாரம் செய்ய வேண்டியதில்லை. ஓர் உபதேசம் சாஸ்திரத்திற்கு ஒப்புதலாயிருந்தால் அது சரி, இல்லாவிட் டால் அது சரியில்லை. அவ்வளவுதான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸித்திகள்

சிஷ்யன் : ஞானிகளுக்கு எப்போதும் எல்லா விதமான ஸித்திகளும் இருக்குமா?

ஆசார்யாள் : இல்லை. ஒரு ஞானியின் பிராரப்தம் அவ்வாறிருந்தால் அவனிடம் ஸித்திகளை நாம் காணலாம். ஞானி விரும்பினால் எந்த ஸித்தியை வேண்டுமானாலும் பெறலாம். ஆனால் அவ்வாறு ஆசை ஏற்படுமா என்பது கேள்விக்குரிய விஷயம்.

சி : ஸித்திகள், ஒருவன் அத்யாத்ம வாழ்வில் மேல்நிலை அடைந்ததைக் குறிக்கின்றனவா?

ஆ : இல்லவேயில்லை. ஸித்திகள், சில மூலிகைகளினாலும், சில துர்தேவதைகளின் உபாஸனையாலும் கிடைக்கலாம்.

சி : ஞானியானவன், ஸித்திகளினால் எந்த விஷயத்திலாவது பாதிக்கப்படுகிறானா?

ஆ : இல்லை. அவனுக்கு ஸித்திகளில் சிறிதளவும் கவனமில்லை. ஸித்திகள் வரப்பெறலாம், அல்லது வராமலிருக்கலாம். ஆனால் அதைப்பற்றி ஒரு ஞானி கவலைப்படுவதேயில்லை.

சி : இந்திரஜாலத்தின் மூலம் காண்பது எல்லாமே ப்ரமை என்று சொல்ல முடியுமா? அல்லது இவை வேறு சக்தியினால் ஏற்படுகின்றனவா?

ஆ : சாமான்யமாக கைகளாலோ மறைமுகமாகவோ ஏதாவது செய்தால் அது இந்திரஜாலம் ஆகும். சில சமயங்களில் விசேஷமான சக்தியினாலும் இவையெல்லாம் ஏற்படலாம்.

சி : சில ஜனங்கள் மஞ்சட்காமாலை போன்ற வியாதிகளை சுலபமாகக் குணப்படுத்துகிறார்கள். உதாரணத்திற்கு ஒரு பாத்திரத்தில் ஜலத்தை வைத்து அதில் ஏதோ செய்தவுடன் நீர் மஞ்சளாகி விடுகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நோயாளியின் கண் சரியாகி வியாதியும் அகலுகிறது. இம்மாதிரி பல அபூர்வ நிகழ்ச்சிகள் எவ்வாறு நடக்கின்றன?

ஆ : வேறு வகையில் நடைபெறலாம் என்றாலும் சாமான்யமாக அவை மந்திரம் மூலமாக நடைபெறுகின்றன. இதுபோல் குணப்படுத்துபவர் கள் பொதுவாகப் பணமொன்றும் வாங்கிக் கொள்வதில்லை. ஒரு சேவையாகத்தான் இதைச் செய்துகொண்டு வருகிறார்கள். நான் பார்த்த அளவில், மற்ற ஜனங்களுக்கு இவர்கள் அம்முறையை உபதே சம் செய்தால் அந்த மந்திரங்களின் சக்தி போய்விடுகிறது.

சி : அப்படியென்றால் அவர்கள் எப்படி மற்ற மக்களுக்குச் சொல்லிக் கொடுக்கிறார்கள்?

ஆ : அவர்கள் சாமான்யமாகத் தம் புதல்வர்களுக்கோ, சிஷ்யர்களுக்கோ சொல்லிக் கொடுத்து விட்டு, தாம் அவ்வாறு செய்வதை விட்டு விடுகி றார்கள்.

சி : சில சமயங்களில் படத்திலிருந்து விபூதி விழுவதையும், வேறு சில விசேஷமான நிகழ்ச்சிகளையும் நாம் காண்கிறோம். இவை எதனால் ஏற்படுகின்றன என்று ஆசார்யாள் சொல்லுவார்களா?

ஆ : சில சமயங்களில் ஏதாவது க்ஷுத்ர தேவதையின் ப்ரபாவத்தினால் இம்மாதிரி ஏற்படலாம். மற்ற சமயங்களில் ஒருவனின் ஸங்கல்பத்தி னால் ஏற்படலாம். இதைத் தவிர ஒரு முக்கியமான காரணமும் இருக்கிறது. சில சமயங்களில் இறைவன் தான் இருக்கிறேன் என்று காட்டுவதற்காக இம்மாதிரி ஏதாவதொன்றைச் செய்யலாம்.

★★★★★★★★

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தமது 13வது வயதில் உபநயனமாகி, 14வது வயதில் துறவறம் பூண்டு, யோகத்தின் மிக உயர்ந்த நிலையான நிர்விகல்ப ஸமாதியை 20 வயதிற்குள் அடைந்து, இந்நூற்றாண்டின் தலை சிறந்த ஜீவன்முக்தராக விளங்கியவர் **ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள்.** தக்ஷிணாம்னாய சிருங்கேரி ஸ்ரீ சாராதா பீடத்தின் 35வது பீடாதிபதியான இவர் 35 ஆண்டுகள் (1954 - 1989) சிறப்பாக இப்பீடத்தை அலங்கரித்து அதற்கு மிகுந்த பெருமையைத் தேடித் தந்தார். யோகம், தர்க்கம், சாஸ்திரம், வேதாந்தம், ஆகிய துறைகளில் ஆழ்ந்த அறிவும், பூர்ண அனுபவமும் பெற்று, ஒப்பற்ற பண்டிதராய்த் திகழ்ந்தார். கருணையின் உருவமாம் நமது ஜகத்குருவின் அருள் மழையில் திளைத்த பக்தர்கள் எண்ணற்றவர்கள். அரிய கருத்தையும், பெரிய தத்துவத்தையும் எளிய நடையில் கூறிப் புரிய வைக்கும் ஆற்றல் கொண்டவர் இம்மஹான். சாஸ்திர தர்மங்கள், கர்மானுஷ்டானங்கள், பக்தி, தியான யோகம், வேதாந்தம் போன்ற பல்வேறு விஷயங்களில் வெவ்வேறு தருணங்களில் தமது பக்தர்களுக்கு ஏற்பட்ட சந்தேகங்களுக்கு நமது ஜகத்குரு விளக்கியருளிய பல அரிய அறிவுரைகளே இந்தப் புத்தகத்தில் தொகுக்கப்பட்டுள்ளன.